# TNPSC தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் - டிசம்பர் 2023

www.tnpscthervupettagam.com






















SHANKAR IAS ACADEMY™
SINCE 2004
Best Academy for Civil Services Exam Coaching

Plot No. 1742, I Foor, 18th Main Road,
Anna Nagar, Chennai - 600 040.
Phone - 044-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

TNPSC துளிகள்............12
தமிழ்நாடு செய்திகள்............27
தமிழ்நாட்டின் யானை இறப்பு தணிக்கை கட்டமைப்பு............27
அயோத்தி தாச பண்டிதர் சிலை............27
முதல் பிரிவு கல்வி நிறுவனமாக மதராஸ் பல்கலைக்கழகம்............27
R. வைஷாலி – தமிழ்நாட்டைச் சேர்ந்த சதுரங்க வீராங்கனை............28
ஸ்பர்ஷ் பாரதி............28
2023 ஆம் ஆண்டில் தமிழகத்தில் மின்சாரத் தேவை............29
கல்கி சுப்பிரமணியம்............30
மிக்சாங் புயல்............30
இம்பேடியன்ஸ் கருப்புசாமி............31
பிபின் ராவத் நினைவு சின்னம்............31
சென்னைப் படுகை திட்டத்திற்கான ஒருங்கிணைந்த நகர்ப்புற வெள்ள மேலாண்மை நடவடிக்கைகள்............32
2023 ஆம் ஆண்டில் சென்னையில் மழையின் அளவு............32
உயர்நீதிமன்றத்திற்கான சட்ட அதிகாரிகள் நியமனம்............33
காவேரி நதிப் பல்லுயிர்ப் பெருக்கம் மற்றும் நீரியல் நிலை............34
தமிழ்நாடு அன்லிமிடெட் 2023............35
தமிழகத்தின் சொந்த வரி வருவாய் 2023............35
தமிழ்நாட்டிற்கான அந்நிய நேரடி முதலீடு............36
தமிழகப் பத்திர வெளியீடுகளில் நிலுவையில் உள்ள தொகைகள்............37
மக்களுடன் முதல்வர் திட்டம்............38
2023 ஆம் ஆண்டில் தென் தமிழகத்தில் பதிவான வரலாறு காணாத மழை............38
தண்டனை அடிப்படையிலான தகுதி நீக்கம்............39
தமிழ்நாடு மாநிலத்தின் சொந்த வரி வருவாய்ப் பாதிப்புகள்............39
எண்ணூர் சிற்றோடை எண்ணெய் கசிவு 2023............40
1923 ஆம் ஆண்டு மழைப் பொழிவு............41
6வது கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகள்............41
பருவநிலை நெகிழ்திறனுடன் கூடிய நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்............42
முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட முக வடிவமைப்பு பதிய அமைப்புகள்............43
திரட்டப்படும் தொழிலாளர்களுக்கான நல வாரியம்............43
தேசியச் செய்திகள்............44
PIDF திட்டத்தின் கீழ் பிரதான் மந்திரி விஸ்வகர்மா............44
கட்டாய உயர் அழுத்த உயிரி எரிவாயு கலப்பு நிர்ணயம்............44
இந்தியப் பெருங்கடல் சூரை மீன் ஆணையம்............45
நொய்டா சர்வதேச விமான நிலையம்............45

6Eskai ........ 46
விரைவு சிறப்பு நீதிமன்றம் (FTSCs) ........ 46
UNLF அமைதி ஒப்பந்தம் ........ 47
பிரதான் மந்திரி ஜஞ்சதி ஆதிவாசி நியாய மகா அபியான் ........ 48
MAHASAGAR முன்னெடுப்பு ........ 49
இந்தியாவின் முதல் பெண் அதிகாரத்துவ இராணுவ உதவியாளர் ........ 49
ஆயுஷ்மான் ஆரோக்கிய மந்திர் ........ 49
மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு ஆளில்லா விமானங்கள் வழங்கும் திட்டம் ........ 50
PMGKAY திட்டம் மேலும் 5 ஆண்டுகளுக்கு நீட்டிப்பு ........ 51
கிராம் மஞ்சித்ரா ........ 51
கஜராஜ் அமைப்பு ........ 52
அக்னிவீர்வாயு (மகளிர்) ........ 52
பல்கலைக்கழக வேந்தராக ஆளுநரின் பங்கு ........ 52
இந்தியாவில் பாம்புக்கடி பாதிப்புகள் ........ 53
MILAN பயிற்சி 2024 ........ 54
புதிய தபால் அலுவலக மசோதா – 2023 ........ 54
உலகின் முதல் கையடக்க அல்லது இடம்பெயரும் மருத்துவமனை ........ 55
கர்பா நடனம் ........ 56
வழக்கறிஞர்கள் (திருத்தம்) மசோதா, 2023 ........ 56
தேசிய வர்த்தகர்கள் நல வாரியத்தின் முதல் கூட்டம் ........ 57
5வது உலகளாவிய ஆயுர்வேத விழா ........ 58
காஷ்மீருக்கான மசோதாக்கள் 2023 ........ 58
அமேசான் மற்றும் IWAI ........ 59
மிகப் பெரிய வட்டவடிவ இருப்புப்பாதை ........ 60
ஆம்ப்ளிஃபி 2.0 ........ 60
CERT- தகவல் அறியும் உரிமைச் சட்டம் ........ 61
முக்கியக் கனிமத் தொகுதிகளின் முதல் ஏலம் ........ 62
சூர்ய நூதன் ........ 63
GIAN திட்டம் ........ 63
தன்னார்வ நெறிமுறைகள் ........ 64
ஒப்பந்தம் சாராத நிறுவனங்கள் மீதான நடுவண் ஒப்பந்தம் ........ 64
இந்தியக் கலை, கட்டிடக்கலை மற்றும் வடிவமைப்பு கண்காட்சி (IAADB) 2023 ........ 65
PAC சங்கங்களுக்கான மாதிரி துணை விதிகள் ........ 65
கரும்புச்சாறு மற்றும் எத்தனால் உற்பத்தி ........ 66
சட்டப் பிரிவு 370 மீதான உச்ச நீதிமன்றத் தீர்ப்பு ........ 67
மஹுவா மொய்த்ரா வெளியேற்றம் ........ 68
உண்மையறியும் மற்றும் நல்லிணக்க ஆணையம் ........ 69
கரண் சிங்கின் 1949 பிரகடனம் ........ 70
வனச் சான்றிதழ் திட்டம் ........ 70

பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்களில் பூஜை ..... 71
2024 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலுக்கான கூடுதல் நிதி ..... 72
நிலக்கரி ஆலைகளில் உமிழ்வுக் கட்டுப்பாட்டுத் தொழில்நுட்பத்தினை பயன்படுத்துதல் ..... 73
அண்டார்டிகா திட்டப் பயணம் ..... 74
மகளிர் வேலைவாய்ப்பின்மை விகிதத்தில் நிலவும் சரிவுப் போக்கு ..... 74
இந்தியாவின் இலகுரக வாகனச் சந்தை ..... 75
தலைமை தேர்தல் ஆணையர் நியமனம் ..... 75
ஜம்மு & காஷ்மீர் மற்றும் புதுச்சேரியில் பெண்கள் இட ஒதுக்கீட்டுக்கான மசோதாக்கள் ..... 76
2029 ஆம் ஆண்டில் பெண் வாக்காளர்கள் ..... 77
மின்னணு மூலத் தரவுப் பரிமாற்ற அமைப்பு (EODES) ..... 78
ஆளில்லா விமானத் தொழில்நுட்பச் செயல்விளக்கம் ..... 78
பாஷினி செயற்கை நுண்ணறிவு செயற்கருவி ..... 79
மாநிலங்களுக்கிடையேயான தளவாடப் போக்குவரத்தினை எளிதாக்குதல் 2023 ..... 79
தொலைத்தொடர்பு மசோதா, 2023 ..... 80
தேசியப் புவி அறிவியல் தரவு களஞ்சியத் தளம் ..... 81
காக்ரபார் அணுமின் நிலையம் அலகு 4 ..... 81
ஆர்க்டிக் நோக்கிய இந்தியாவின் முதல் குளிர்கால ஆய்வுப் பயணம் ..... 82
முக்கிய கனிமங்கள் குறித்த ஆய்வுகளை விரைவுபடுத்துவதற்கான திட்டம் ..... 83
‘குழந்தை’ என்ற வரையறையில் தெளிவின்மை ..... 83
பாரதிய நியாய சன்ஹிதாவின் கீழ் மருத்துவர்கள் ..... 84
இரத்தம் சார்ந்த குறைபாடுகள் உள்ளவர்களுக்கான இட ஒதுக்கீடு ..... 85
நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்கள் பதிவு மசோதா, 2023 ..... 86
PRAYAS திட்டம் ..... 87
2023 ஆம் ஆண்டில் CAG தணிக்கைகள் ..... 87
நம்பிக்கை சாராத, உறுதிப்படுத்துதல் சார்ந்த சரிபார்ப்பு ..... 88
YUVAi முன்னெடுப்பு ..... 88
GPAI புது டெல்லி பிரகடனம் ..... 89
BRAHMA-2D: உள்நாட்டு நதி மாதிரி ..... 89
INS இம்பால் கப்பலை படையில் இணைப்பு ..... 90
மாநிலங்களுக்கான வரிப் பகிர்வு 2023 ..... 90
RAMP திட்டம் ..... 91
தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்கள் ..... 92
கர்மயோகி திட்டத்தின் விரிவாக்கப்பட்ட பதிப்பு ..... 92
இந்தியத் திறன்கள் அறிக்கை 2024 ..... 93
**சர்வதேசச் செய்திகள் ..... 94**
வடிவமைப்பின் அடிப்படையில் பாதுகாப்பான செயற்கை நுண்ணறிவு அமைப்புகள் ..... 94
புவிவெப்ப ஆற்றல் சார்ந்த தனிப்பட்ட மின் உற்பத்தி ஆலை (IPP) ..... 94
2023 ஆம் ஆண்டில் புதிய நிலக்கரி ஆலை கட்டுமானம் – சீனா ..... 95
சர்வதேச கடல்சார் அமைப்பு – இந்தியா ..... 95

பாரீஸ் மன்றம் ..... 96
ஐநா அமைதிப்படை அமைச்சர்கள் கூட்டம் 2023 ..... 96
சர்வதேசப் பருத்தி ஆலோசனைக் குழு ..... 97
2023 ஆம் ஆண்டு மெராபி எரிமலை வெடிப்பு ..... 98
கோடெக்ஸ் அலிமென்டேரியஸ் குழு 2023 ..... 98
AIGIF ..... 99
ஐநா சாசனத்தின் பிரிவு 99 ..... 99
WRC 23 - துபாய், UAE ..... 100
2023 ஆம் ஆண்டின் உலகின் சக்திவாய்ந்த 100 பெண்கள் ..... 100
WHO குளோபல் மருத்துவப் பரிசோதனை மன்றம் ..... 101
ஒரே மாகாணம், ஒரே கொள்கை ..... 101
இத்தாலி மற்றும் BRI ..... 102
யுனெஸ்கோ நிர்வாகக் குழுவின் துணைத் தலைவர் ..... 102
செயற்கை நுண்ணறிவு கூட்டணி ..... 103
உலக சுகாதார அமைப்பின் சமூக இணைப்பு ஆணையம் (2024-2026) ..... 104
எஸ்சிகிபோ பகுதி ..... 104
அனைவருக்குமான முன் எச்சரிக்கைகள் 2027 ..... 105
ஷிடாவான் அணுமின் நிலையம் ..... 106
ஐரோப்பிய ஒன்றியத்தின் செயற்கை நுண்ணறிவு விதிகள் ..... 107
91வது இன்டர்போல் பொதுச் சபை ..... 107
பசுமைப் பயணம் 2050 திட்டம் ..... 108
ஸ்டோர்ம் மேக்கர்ஸ் II நடவடிக்கை ..... 108
2023 ஆம் ஆண்டில் உலகின் முன்னணி அபினி உற்பத்தி ..... 109
மாலியில் ஐ நா சபையின் அமைதிப்படை விலக்கம் ..... 110
செயற்கை நுண்ணறிவு நுட்பத்தினை ஒழுங்குமுறைப்படுத்தச் செய்வதற்கான கட்டமைப்பு ..... 110
இரண்டு மரபணு சிகிச்சை முறைகளுக்கு ஒப்புதல் – அமெரிக்கா ..... 110
ரஷ்யாவின் புதிய அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்கள் ..... 111
காட்டெருமை வளங்காப்பிற்கு அச்சுறுத்தல் ..... 111
மாதவிடாய் நிறுத்த நிலைக்கான மருந்து வியோசா - ஐக்கியப் பேரரசு ..... 112
சால்டன் கடலில் லித்தியம் இருப்பு ..... 112
சீனாவில் நிலநடுக்கம் ..... 113
கெலேபு சீர்மிகு நகரத் திட்டம் ..... 113
நோமா நோய் ..... 114
சர்வதேச ஒட்டகங்கள் ஆண்டு ..... 115
கோவிட்-19 வைரசின் JN.1 மாற்றுரு ..... 115
நூற்றாண்டில் ஏற்பட்ட மிகப்பெரிய வெள்ளம் – வடக்கு குயின்ஸ்லாந்து ..... 116
எகிப்து நாட்டின் புதிய அதிபர் ..... 116
ப்ராஸ்பெரிட்டி கார்டியன் நடவடிக்கை ..... 117
புலம்பெயர்வு மற்றும் தஞ்சம் தொடர்பான ஐரோப்பிய ஒன்றியத்தின் புதிய ஒப்பந்தம் ..... 118

அங்கோலா மற்றும் OPEC ........ 118
அர்ஜென்டினா லித்தியம் கனிமத் தொகுதிகளில் இந்தியா ........ 119
பொருளாதாரச் செய்திகள் ........ 120
புதிய முறைசார் வேலைவாய்ப்புகள் ........ 120
வெனிசுலா கச்சா எண்ணெய் இறக்குமதி ........ 120
16வது நிதி ஆணையத்திற்கான மதிப்பீட்டு வரையறைகள் (2026-2031)........ 121
2023 ஆம் ஆண்டில் புதிய முறைசார் வேலைவாய்ப்புகள் குறைவு ........ 122
'Build for Bharat' முயற்சி ........ 122
நெகிழிக் கழிவுகளைக் குறைப்பதற்கான தேசிய வட்டாரப் பொருளாதாரச் சாலை வரைபடம் ........ 123
முதலீட்டாளர் இடர் குறைப்பு அணுகல் (IRRA) தளம் ........ 123
UPI கட்டண வரம்பு ........ 124
புத்தொழில் நிறுவனங்கள் நிதி ........ 124
உலகளாவியப் பணப் பரிமாற்றம் 2023 ........ 125
மாநிலங்களுக்கான நிகர கடன் வரம்புகள் 2023 ........ 126
2023 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வேளாண்மையின் பங்கு ........ 127
2024 ஆம் நிதியாண்டின் இலக்கைத் தவற உள்ள பங்கு முதலீட்டு விலக்கல் ........ 127
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ........ 128
செவ்வாய்க் கிரகத்தில் சுழல் காற்று ........ 128
மபெல்லா தடுப்பூசி ........ 129
ஊடுகதிர் முனைவாக்கமானி செயற்கைக்கோள் ........ 129
JT60SA – ஜப்பான் ........ 130
HD110067 ........ 131
INS சந்தாயக் ........ 131
ASW குறைவான ஆழம் கொண்ட பகுதியில் இயங்கும் நீர்வழி வாகனங்கள் (CSL) திட்டம் ........ 132
அணுசக்தி ஈர்ப்பு குண்டுகள் ........ 132
செயற்கை நுண்ணறிவு மாதிரி ஜெமினி ........ 133
ஆதித்யா சூரியக் காற்று துகள் பரிசோதனை (ASPEX) ........ 133
ஜாமூனின் மரபணு வரிசைமுறை ........ 134
குறுகிய தூர வரம்புடைய கடற்படைக் கப்பல் எதிர்ப்பு ஏவுகணை (NASM-SR) ........ 135
புரட்சிகரமான புவிசார் வரைபடமாக்கல் நுட்பம் ........ 135
இந்தியாவில் கொசு மீன்களின் தாக்கம் ........ 136
ஜனன்எஸ் இம்பால் ........ 137
அரிய நோய்களைக் குணப்படுத்தும் இனம்சார் மருந்துகள் ........ 137
எதிர் பருப்பொருள் ஈர்ப்பு விசைக்கு உட்படுதல் ........ 138
"ஒலி எழுப்பும்" பிளாஸ்மா அலைகள் ........ 139
WASP-17b ........ 139
மரபுத் திரி செல்களால் ஆன குரங்கு ........ 140
போன்டஸ் கண்டத்தட்டு ........ 141
நிலவில் சாலைகள் ........ 142

சனிக் கோளின் வளையங்கள் மறைவு ..... 142
AMRIT தொழில்நுட்பம் ..... 143
நாசாவின் DSOC அமைப்பின் முதல் ஒளி மூலமான தரவுப் பரிமாற்றம் ..... 144
அண்டத்திற்கு வெளியே அமைந்த கருந்துளையிலிருந்து முனைவாக்க உமிழ்வுகள் ..... 145
தொலைதூரக் கோள்களின் வளிமண்டலத்தில் குவார்ட்ஸ் படிகங்கள் ..... 145
பிரகாச மாறுநிலை ஆய்வு கருவி (BTSbot) ..... 146
லாக்பிட் 3.0 ..... 147
என்செலடஸ் துணைக்கோளில் ஹைட்ரஜன் சயனைடு ..... 147
க்ருத்ரிம் செயற்கை நுண்ணறிவு ..... 148
பாறைகளில் காணப்படும் பெரிய அளவிலான படிவு இடைவெளி ..... 149
TEMPO செயற்கைக்கோள் ..... 150
செவ்வாய்க் கிரகத்தில் எரிமலை செயல்பாடுகள் ..... 150
அசாதாரண நைட்ரஜன் - 9 உட்கரு ..... 151
பொருட்களின் ஆய்விற்கான விளக்க வரைபட வலையமைப்புகள் ..... 152
பூமியின் முதன்மை E அடுக்கு ..... 152
அபோபிஸுக்கான திட்டம் ..... 153
**சுற்றுச்சூழல் செய்திகள் ..... 154**
பர்தா வனவிலங்கு சரணாலயம் ..... 154
ஐரோப்பாவில் அச்சுறுத்தல் நிலையில் உள்ள மகரந்தச் சேர்க்கை இனங்களுக்கான IUCN அமைப்பின் விரிவான வளங்காப்பு செயல் திட்டங்கள் ..... 155
2023 ஆம் ஆண்டில் இந்தியாவில் உமிழ்வு நிலை ..... 156
தாமோ புலிகள் காப்பகம் ..... 157
அங்கீகரிக்கப்பட்ட மற்றும் ஈடு செய்யும் காடு வளர்ப்பு (ACA) திட்டம் ..... 158
பாரதத்திற்கான "உயிரிப் பார்வை" ..... 158
“மியாவாக்கி” தோட்ட வளர்ப்பு முறை ..... 159
இந்தியாவின் நிலத்தடி நீரில் ஆர்சனிக் மற்றும் ஃபுளூரைடு மாசுபாடு ..... 160
இந்தியா 2023: தீவிர வானிலை நிகழ்வுகளின் மதிப்பீடு ..... 161
UNFCCC COP 28 உச்சி மாநாடு ..... 162
இந்தியாவில் ஆரம்பகால சீமைச் சுண்ணாம்புத் தன்மை உடைய (புவியியல் கால அளவின் ஒரு வயது) சுறாமீன் புதைபடிவங்கள் ..... 162
A23a ..... 163
விர்ஜின் அட்லாண்டிக் விமானம் ..... 164
மேனிஸ் மிஸ்டீரியா ..... 164
டோடோ பறவை (ராப்பஸ் குக்குல்லாட்டஸ்) ..... 165
கிழக்குத் தொடர்ச்சி மலையின் இயற்கை விளக்க மையம் ..... 165
சாய்கா மறிமான் ..... 166
லோரைனோசொரஸ் (ப்ளையோசர்) ..... 167
இமயமலைப் பகுதியின் பருவநிலையில் தூசுப் படலங்களின் தாக்கம் ..... 167
இமயமலை பள்ளத்தாக்குக் காற்று ..... 168
வகாயாமா சோர்யு ..... 168

கார்பன் சேகரிப்பில் ஆல்காக்களின் பங்கு ........ 169
பருவநிலை தொடர் விளைவு: தொலைத்தொடர்புகளை ஆய்வு செய்தல் ........ 170
ஆர்க்டிக் மதிப்பீட்டு அறிக்கை 2023 ........ 171
சம் சால்மன் மீனின் இடம்பெயர்வு ........ 172
அருகி வரும் வௌவால் இனங்கள் ........ 172
சென்னையில் ப்ளூ டிராகன்கள் ........ 173
பாப்பாத்தி சோலை ........ 173
உலகளாவிய தூசு உமிழ்வுகளில் மனித நடவடிக்கைகளின் தாக்கம் ........ 174
குதிக்கும் சிலந்திகளின் புதிய இனங்கள் ........ 175
டால்ஃபபஸின் ஸ்டார்கேசர் ........ 176
உணவு உற்பத்தியில் புதைபடிவ எரிபொருள் பயன்பாடு ........ 176
உலகின் மிகச்சிறிய கோரைப்பல் தவளை ........ 177
சின்னார் வனவிலங்கு சரணாலயத்தில் யூரேசிய நீர்நாய் ........ 177
செல்ஃபிங் சிண்ட்ரோம் ........ 178
2023 ஆம் ஆண்டு 204 புலிகளின் இழப்பு ........ 179
**அறிக்கைகள் மற்றும் குறியீடுகள் ........ 180**
உலக மலேரியா அறிக்கை 2023 ........ 180
நகர்ப்புறத் திட்டமிடல் மற்றும் மேம்பாடு பற்றிய இந்திய உள்கட்டமைப்பு அறிக்கை 2023 ........ 181
2022 ஆம் ஆண்டில் இந்தியாவில் நிகழ்ந்த குற்றங்கள் ........ 181
விவசாயிகள் தற்கொலைகள் பற்றிய NCRB தரவு 2022 ........ 183
இந்தியாவில் விபத்து மரணங்கள் மற்றும் தற்கொலைகள் (ADSI) 2022 அறிக்கை ........ 184
முன்னேறு நோக்குள்ள தொகுதி திட்டத்தின் ABP முதலாவது முன்னேறு நோக்குள்ள கழிமுகங்கள் பகுதி தரவரிசை ........ 185
UNAIDS உலக எய்ட்ஸ் தின அறிக்கை 2023 ........ 185
உலகளாவிய காலநிலை 2011-2020: ஒரு தசாப்த முடுக்கம் ........ 186
மாநிலக் கல்விசார் சாதனை மதிப்பீடு (SEAS) 2023 ........ 187
வெப்பமண்டல ஈர நிலங்களின் (வெட் டிராபிக்ஸ்) நிலை குறித்த அறிக்கை 2023 ........ 187
மாறும் நிலை கொண்ட நிலத்தடி நீர் ஆதார மதிப்பீட்டு அறிக்கை 2023 ........ 188
2023 ஆம் ஆண்டிற்கான ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவன (SIPRI) அறிக்கை ........ 188
2023 ஆம் ஆண்டிற்கான உலக எண்மப் போட்டித் தன்மை தரவரிசை ........ 189
Q3 2023 மெர்காம் இந்தியா மேற்கூரை சூரிய ஒளி மின்தகடு அறிக்கை ........ 189
உலக வானிலை அமைப்பின் 2023 ஆம் ஆண்டிற்கான உலக காலநிலை அறிக்கையின் தற்காலிகப் பதிப்பு ........ 190
QS அமைப்பின் உலகப் பல்கலைக்கழக நிலைத்தன்மை தரவரிசை 2024 ........ 190
பருவநிலை மாற்றச் செயல்திறன் குறியீடு (CCPI) 2024 ........ 191
உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து குறித்த பிராந்திய கண்ணோட்டம் 2023 ........ 192
உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து பற்றிய ஆப்பிரிக்கா பிராந்திய கண்ணோட்ட அறிக்கை ........ 193
உலகளாவிய சாலைப் பாதுகாப்பு நிலை குறித்த அறிக்கை 2023 ........ 193
சர்வதேச கடன் அறிக்கை ........ 194
மெர்சர் குழுமத்தின் வாழ்க்கைத் தரக் குறியீடு 2023 ........ 195

படுகொலை பற்றிய உலகளாவிய ஆய்வறிக்கை 2023 ..... 196
கற்கரி வகை நிலக்கரி இறக்குமதி 2023 ..... 196
மாநிலச் செய்திகள் ..... 197
உறுப்பு மாற்று சிகிச்சை பெற்றவர்களுக்கான விளையாட்டு போட்டிகள் ..... 197
ரேவந்த் ரெட்டி ..... 197
மாநிலத் தேர்தல்கள் 2023 ..... 198
உத்தரகாண்ட் - புவிசார் குறியீடு பெற்ற பொருட்கள் ..... 198
புதிய மிசோரம் முதல்வர் ..... 199
மொத்தக் கருவுறுதல் விகிதம் – கேரளா ..... 199
சத்தீஸ்கரின் புதிய முதல்வர் ..... 200
4E வேவ் இயக்கம் ..... 200
மோகன் யாதவ் – மத்தியப் பிரதேச மாநில முதல்வர் ..... 201
24வது ஹார்ன்பில் திருவிழா ..... 201
ராஜஸ்தான் மாநிலத்தின் புதிய முதல்வர் ..... 202
பான்னி புல்வெளியில் இனப்பெருக்க மையம் ..... 202
பங்கோலகா வனவிலங்குச் சரணாலயத்தில் புலி ..... 203
உணவு கலப்படம் தொடர்பான வழக்குகள் ..... 203
மணிப்பூரில் மதுபானம் அறிமுகம் ..... 204
ஜார்க்கண்ட் மாநில வாசிகள் மசோதா ..... 204
இந்தியாவில் கரும்புலிகள் ..... 205
இந்தியாவின் முதல் கைரோகாப்டர் வான் சுற்றுலா ..... 206
இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவு நகரம் ..... 206
பணி புரிய மிகவும் விருப்பமான மாநிலம் ..... 207
சூரிய சக்தி பூங்கா திட்டம் ..... 207
பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ..... 208
தேசிய உலோகவியலாளர் விருது 2022 ..... 208
நான்சென் விருது ..... 208
மாற்றுத்திறனாளிகளுக்கான அதிகாரமளித்தலுக்கான 2023 ஆம் ஆண்டு தேசிய விருதுகள் ..... 208
‘ஹம்ப் WWII’ அருங்காட்சியகம் ..... 209
ஃபோர்ப்ஸ் ஆசியா இதழின் மனிதவினப் பற்று நாயகர்கள் பட்டியல் ..... 209
சுற்றுலா விருதுகள் 2024 ..... 209
வி.ஆர்.லலிதாம்பிகா – கேரளா ..... 210
சுகந்தி சுந்தரராஜ் ..... 210
இந்திய இணைய ஆளுமை மன்றம் 2023 ..... 210
2023 ஆம் ஆண்டு ISSA விஷன் ஜீரோ விருது ..... 210
சஃபீனா ஹுசைன் ..... 211
மலேசியாவில் AIGIF மன்றத்தின் 4வது பதிப்பு ..... 211
54வது சர்வதேசத் திரைப்பட விழா - கோவா ..... 212
12வது வருடாந்திர REX CONCLiVE விழா ..... 212

2023 ஆம் ஆண்டு REACH மாற்றத்தினை ஏற்படுத்தும் புதுமையாளர் விருது ....... 213
இந்திரா காந்தி அமைதி பரிசு 2023 ....... 213
UNIDROIT நிறுவனத்தின் நிர்வாகக் குழு ....... 214
அறிவியல் மற்றும் புதுமை மேலாண்மைக்கான 2023 ஆம் ஆண்டு ஃபாலிங் வால்ஸ் பரிசு ....... 214
ஷேக் நவாஃப் அல்-அஹ்மத் அல்-ஜாபர் அல்-சபா ....... 215
சாகித்ய அகாடமி விருதுகள் 2023 ....... 215
யுனைடெட் எர்த் அமேசானியா பரிசு ....... 216
M.S. வீரராகவன் ....... 216
யுனெஸ்கோ அமைப்பின் 2023 ஆம் ஆண்டு பிரிக்ஸ் வெர்செய்ல்ஸ் விருது ....... 216
யுனெஸ்கோ அமைப்பின் ஆசிய-பசிபிக் விருதுகள் 2023 ....... 217
தேமுதிக நிறுவனர் விஜயகாந்த் ....... 218

**விளையாட்டுச் செய்திகள் ....... 218**

13வது ஹாக்கி இந்தியா மூத்தோர் ஆடவர் தேசிய சாம்பியன்ஷிப் போட்டி 2023 ....... 218
17 வயதிற்குட்பட்டோருக்கான FIFA உலகக் கோப்பை போட்டி 2023 ....... 218
கேலோ இந்தியா பாரா விளையாட்டுப் போட்டிகள் 2023 ....... 219
79வது தேசிய ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் போட்டி - சென்னை ....... 219
படைப்பிரிவுகளுக்கு இடையேயான கடல்சார் பாய்மரக் கப்பல் பந்தயம் 2023 ....... 220
ITF உலக வாகையர் ....... 220
கேலோ இந்தியா மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டிகள் 2023 ....... 221
தேசிய விளையாட்டு விருதுகள் 2023 ....... 221
FIH ஹாக்கி நட்சத்திர விருதுகள் 2023 ....... 222

**முக்கிய தினங்கள் ....... 223**

தேசிய மாணாக்கர் படை (NCC) – 75வது ஆண்டுவிழா ....... 223
உலக எய்ட்ஸ் தினம் 2023 – டிசம்பர் 01 ....... 224
தேசிய மாசுக் கட்டுப்பாட்டு தினம் 2023 – டிசம்பர் 02 ....... 224
அடிமைத்தனத்தை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் 2023 – டிசம்பர் 02 ....... 224
நாகாலாந்து மாநில தினம் 2023 – டிசம்பர் 01 ....... 225
உலக மாற்றுத்திறனாளிகள் தினம் அல்லது சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் 2023 – டிசம்பர் 03 ....... 225
உலக கணினி கல்வியறிவு தினம் 2023 – டிசம்பர் 02 ....... 226
இந்தியக் கடற்படை தினம் 2023 – டிசம்பர் 04 ....... 226
சர்வதேச வங்கிகள் தினம் 2023 – டிசம்பர் 04 ....... 227
சர்வதேச சிவிங்கிப் புலிகள் தினம் 2023 – டிசம்பர் 04 ....... 227
உலக மண் தினம் 2023 – டிசம்பர் 05 ....... 227
சர்வதேச தன்னார்வலர் தினம் 2023 – டிசம்பர் 05 ....... 228
UNCTAD இணைய வர்த்தக வாரம் 2023 – டிசம்பர் 04 முதல் 08 வரை ....... 228
தேசிய நுண்ணலை கனலடுப்பு தினம் 2023 – டிசம்பர் 06 ....... 228
மகாபரிநிர்வான் திவாஸ் ....... 229
ஆயுதப் படைகளின் கொடி நாள் 2023 – டிசம்பர் 07 ....... 229

சர்வதேசப் பொது விமானப் போக்குவரத்து தினம் 2023 – டிசம்பர் 07 ........ 229
சார்க் அமைப்பின் சாசன தினம் - டிசம்பர் 08 ........ 230
சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினம் - டிசம்பர் 09 ........ 230
இனப்படுகொலையால் பாதிக்கப்பட்டோரின் சர்வதேச நினைவு மற்றும் மரியாதை செலுத்து தினம் - டிசம்பர் 09 ........ 230
மனித உரிமைகள் தினம் - டிசம்பர் 10 ........ 231
நோபல் பரிசு தினம் - டிசம்பர் 10 ........ 231
யுனிசெஃப் அமைப்பின் உருவாக்க தினம் - டிசம்பர் 11 ........ 232
சர்வதேச மலை தினம் - டிசம்பர் 11 ........ 232
பொது சுகாதாரச் சேவை வழங்கீடு தினம் - டிசம்பர் 12 ........ 233
சர்வதேச நடுநிலைமை தினம் - டிசம்பர் 12 ........ 233
தேசிய எரிசக்திப் பாதுகாப்பு தினம் - டிசம்பர் 14 ........ 233
விஜய் திவாஸ் - டிசம்பர் 16 ........ 234
பாலியல் தொழிலாளர்களுக்கு எதிரான வன்முறையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான சர்வதேச தினம் - டிசம்பர் 17 ........ 234
இந்தியாவில் சிறுபான்மையினர் உரிமை தினம் - டிசம்பர் 18 ........ 235
சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினம் - டிசம்பர் 18 ........ 236
அரபு மொழி தினம் - டிசம்பர் 18 ........ 236
கோவா மாநில விடுதலை தினம் - டிசம்பர் 19 ........ 236
சர்வதேச மனித ஒற்றுமை தினம் – டிசம்பர் 20 ........ 237
தேசிய கணித தினம் – டிசம்பர் 22 ........ 237
குளிர்கால நீண்ட இரவு நாள் – டிசம்பர் 21 ........ 238
தேசிய கிசான் திவாஸ் – டிசம்பர் 23 ........ 238
தேசிய நுகர்வோர் உரிமைகள் தினம் – டிசம்பர் 24 ........ 239
சர்வதேசப் பல்லுயிர்த்தன்மை தினம் - டிசம்பர் 29 ........ 240

**இதரச் செய்திகள் ........ 240**

பாம்ப்பே நோய் ........ 240
யானை எண்டோதெலியோட்ரோபிக் ஹெர்பெஸ் வைரஸ் ........ 241
DRESS நோய் ........ 242
இந்தியாவின் 2023 ஆம் ஆண்டு கூகுள் தேடல்கள் ........ 242
செயிண்ட்-பெலெக் பலகை ........ 243
அகராதிகளின் 2023 ஆம் ஆண்டிற்கான சிறந்த சொற்கள் ........ 244
புற்றுநோய்க்கான அக்டோசைட் மாத்திரைகள் ........ 244
இந்தியாவின் முதல் சோடியம் அயனி மின்கல தொழில்நுட்பம் ........ 244
கைபேசி பயன்பாடு மற்றும் விந்தணு எண்ணிக்கை ........ 245
கவரிமா வளர்ப்பிற்கான பழமையான சான்றுகள் ........ 245
ஜாய்நகர் மோவா ........ 246
ஆண்ட்ரியாமெலோ குகை ........ 247
உலகின் பழமையான அறியப்பட்ட கோட்டை ........ 247
பண்டைய கால எரிமலை வெடிப்புகளிலிருந்து உருவான மாபெரும் படிவுகள் ........ 248

பன்னிறம் கொண்ட அடர் மேகங்கள் ........ 249
ஆழ்கடலில் உள்ள பெரும்பல் சுறாவின் பல் ........ 249
ஆரோக்கியத்தின் மீது தனிமை நிலையின் தாக்கம் ........ 250
இந்தியாவின் இணைய சங்கேதப் பண உடைமைப் பட்டியல் 2023........ 251

# TNPSC துளிகள்

- சித்திப்பேட்டை மாவட்டத்தின் புருக்பள்ளி எனுமிடத்தில் முப்பரிமாண அச்சிடல் தொழில்நுட்ப முறையில் கட்டமைக்கப்பட்ட உலகின் முதல் கோவிலை தெலுங்கானா அரசு திறந்து வைத்துள்ளது.
- டாடா ஆலோசனை சேவை வழங்கீட்டு நிறுவனமானது (TCS), ஸ்பெயின் நாட்டில் சேவை வழங்கல் தரம் மற்றும் வணிகப் போட்டித்தன்மையில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.
- G20 அமைப்பு நாடுகளின் தலைவர்கள் உச்சி மாநாட்டின் போது உலகளாவிய எண்ணிமப் பொது உள்கட்டமைப்பினை மேம்படுத்துவதற்காக சமூக தாக்க நிதியின் உருவாக்கத்தினை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டு உலக எண்ணிமப் பொது உள்கட்டமைப்பு களஞ்சியம் மற்றும் சமூக தாக்க நிதியம் ஆகியவை தொடங்கப்பட்டன.
- இராணுவ மருத்துவப் படை அதிகாரி கர்னல் சுனிதா B.S., டெல்லி இராணுவக் குடியிருப்புப் பகுதியின், ஆயுதப் படை மாற்று மையத்தில் படைத் தளபதியாகப் பொறுப்பேற்ற முதல் பெண் என்ற பெருமையைப் பெற்று உள்ளார்.
- சூர்ய கிரண் எனப்படும் 17வது கூட்டு இராணுவப் பயிற்சியில் நேபாளம் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் இராணுவங்கள் உத்தரகாண்டில் பித்தோர்கார்ஹியில் பங்கேற்கின்றன.
- இந்தியக் கடலோரக் காவல்படையானது, 9வது தேசிய அளவிலான மாசுபாடு எதிர் நடவடிக்கை பயிற்சியினை (NATPOLREX-IX) குஜராத்தில் நடத்தியது.
- இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறையின் பங்குதாரர்கள் கழகம் (அசோசெம்) ஏற்பாடு செய்த 4வது பன்முகத்தன்மை மற்றும் உள்ளார்ந்த சிறப்பு விருதுகள் மற்றும் மாநாட்டில் REC லிமிடெட் நிறுவனமானது, "பன்முகத் தன்மை மற்றும் உள்ளார்ந்த தன்மை கொண்ட கொள்கைகளுக்கான சிறந்த வேலைவாய்ப்பு வழங்குநர்" என்ற விருதைப் பெற்றுள்ளது.
- பிரணாப் முகர்ஜியின் மகளான ஷர்மிஷ்தா முகர்ஜி ''Pranab, My Father: A Daughter Remembers' என்ற தலைப்பிலான புத்தகத்தினை எழுதியுள்ளார்.
- இண்டிகோ ஏர்லைன்ஸ் நிறுவனமானது, அதன் வாடிக்கையாளர் சேவை அனுபவத்தை மேம்படுத்துவதற்காக 6Eskai எனப்படும் செயற்கை நுண்ணறிவு செயலி சார்ந்த உரையாடு மென்பொருளினை அறிமுகப் படுத்தி உள்ளது.
- இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறைக் கூட்டமைப்பின் (FICCI) 2023-24 ஆம் ஆண்டிற்கான தலைவராக அனிஷ் ஷா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- கத்தாரின் தோஹா நகரில் நடைபெற்ற ISSF உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் (2023) ஆடவருக்கான 25 மீட்டர் விரைவு சுழல் துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் இந்தியத் துப்பாக்கி சுடுதல் வீரர் அனிஷ் பன்வாலா வெண்கலப் பதக்கத்தினை வென்றுள்ளார்.
  - ISSF உலகக் கோப்பை இறுதிப் போட்டியின் வரலாற்றில் ஆடவருக்கான 25 மீட்டர் விரைவு சுழல் துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் இந்தியாவிற்கு கிடைத்த முதல் பதக்கம் இதுவாகும்.
- கடற்படைக்காக கொச்சின் கப்பல் கட்டும் நிறுவனத்தினால் கட்டமைக்கப்பட்டு வரும் ஆழமற்ற நீரில் இயங்கும் வகையிலான எட்டு நீர்மூழ்கி எதிர்ப்புப் போர் கப்பல் தொடரின் முதல் மூன்று கப்பல்கள் கடற்படையில் இணைக்கப்பட்டன.
  - இந்தக் கப்பல்களுக்கு ஐஎன்எஸ் மாஹே, ஐஎன்எஸ் மல்வான் மற்றும் ஐஎன்எஸ் மங்ரோல் எனப் பெயரிடப்பட உள்ளது.

- 28வது பங்குதாரர்கள் மாநாடு அல்லது COP-28 உறுப்பினர் நாடுகளானது, ஏற்கனவே பருவநிலை மாற்றத்தைக் கையாண்டு வரும் நாடுகளுக்கு இழப்பீடு வழங்குவதற்காக இழப்பு மற்றும் சேத (L&D) நிதியை செயல்படுத்துவதற்கு ஒப்புக் கொண்டுள்ளன.
- BMJ இதழில் வெளியிடப்பட்ட அழகு விளம்பரப் பணி குறித்த ஆய்வின்படி, இந்தியாவில் பதிவான 2.18 மில்லியன் உயிரிழப்புகளுக்கு (ஆண்டிற்கு) அனைத்து மூலங்களில் இருந்து வரும் வெளிப்புற காற்று மாசுபாடு தான் காரணமாக உள்ளது.
  - தொழில்துறை, மின் உற்பத்தி மற்றும் போக்குவரத்து ஆகியவற்றில் புதைபடிவ எரிபொருட்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் காற்று மாசுபாடு ஆனது உலகளவில் ஆண்டிற்கு 5.1 மில்லியன் கூடுதல் இறப்புகளுக்கு காரணமாகிறது என்று இந்த ஆராய்ச்சி கண்டறிந்துள்ளது.
- பண்ணை மற்றும் சேவைத் துறைகள் மற்றும் நுகர்வோர் செலவினங்கள் ஆகியவற்றின் வளர்ச்சியில் நிலையான வீழ்ச்சி இருந்தபோதிலும், தேசியப் புள்ளியியல் அலுவலகத்தின் மதிப்பீட்டின்படி, 2023 ஆம் ஆண்டு ஜூலை-செப்டம்பர் மாதம் வரையான காலாண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி எதிர்பார்த்ததை விட 7.6% அதிகரித்துள்ளது.
- முன்னாள் அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஹென்றி கிஸ்ஸிங்கர் தனது 100வது வயதில் காலமானார்.
  - வியட்நாம் போரின் போது கம்போடியா மீது நிகழ்த்தப்பட்ட அமெரிக்காவின் குண்டு வீச்சு, 1973 ஆம் ஆண்டு சிலி இராணுவ சதியில் அமெரிக்காவின் ஈடுபாடு, அர்ஜென்டினாவின் இராணுவ ஆட்சிக்கு அமெரிக்காவின் மறைமுக ஆதரவு மற்றும் முக்கியமாக 1971 ஆம் ஆண்டு வங்காளதேச விடுதலைப் போரின் போது பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அளித்த ஆதரவு ஆகியவற்றின் பின்னணியில் அவரும் ஒருவராக இருந்தார்.
- ஒரினச் சேர்க்கை திருமணத்தினை அங்கீகரித்த முதல் தெற்காசிய நாடாக நேபாளம் மாறியுள்ளது.
  - ஆசியாவில் ஒரினச் சேர்க்கை திருமணத்தினைச் சட்டப்பூர்வமாக்கிய ஒரே நாடு தாய்வான் ஆகும்.
- கேரளாவின் பொறுப்புணர்வுமிகு சுற்றுலா (RT) திட்டம் ஆனது, ஐக்கிய நாடுகள் சபையின் உலகச் சுற்றுலா அமைப்பின் (UNWTO) உலகளாவிய நேர்வு ஆய்வுகள் பட்டியலில் இடம் பெற்றுள்ளது.
  - மகாராஷ்டிராவின் தடோபா-அந்தாரி புலிகள் காப்பகத் திட்டம் ஆனது இந்தப் பட்டியலில் இடம் பெற்ற இந்தியத் திட்டம் ஆகும்.
- துபாயின் நிலப்பரப்பில் 10% வரையிலான பரப்பில் அமைந்துள்ள அல் மர்மூம் பாலைவனப் பாதுகாப்புக் காப்பகம் ஐக்கிய அரபு அமீரகத்தின் மிகப்பெரிய எல்லைகள் இல்லாத இயற்கை காப்புப் பகுதியாகும்.
  - இது மணல் நிறைந்த நிலப்பரப்புகளை கண்டு களிக்கவும், மணல் குன்றுகள் வழியாக சைக்கிள் ஓட்டுதல் சாகசங்களை மேற்கொள்ளவும், வனத்தில் உல்லாசப் பயணங்கள் மேற்கொள்ளவும் பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்குகிறது.
- இந்திய வனவியல் ஆராய்ச்சி மற்றும் கல்வி சபையின் முதல் பெண் தலைமை இயக்குநராக காஞ்சன் தேவி பொறுப்பேற்றுள்ளார்.
  - 1986 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டதும், இந்தியாவில் வனவியல் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ள மிகப்பெரிய அமைப்புமான

இந்திய வனவியல் ஆராய்ச்சி மற்றும் கல்விச் சபையானது மத்திய சுற்றுச்சூழல், வன மற்றும் பருவநிலை மாற்றத் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.

- கேப்டன் கீதிகா கௌல், உலகின் மிக உயரமான இடத்தில் அமைந்த போர்க்களமான சியாச்சின் பகுதியில் பணியமர்த்தப்பட்ட முதல் பெண் மருத்துவ அதிகாரி என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
    - சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு அதே பகுதியில், பொறியாளர்கள் பிரிவிலிருந்து கேப்டன் சிவா சௌஹான் நியமிக்கப் பட்டதற்கு அடுத்ததாக இந்த நியமனம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- மும்பையைச் சேர்ந்த படைத்தளபதி பிரெர்னா தியோஸ்டேல் INS சென்னை என்ற கடற்படை போர்க் கப்பலின் முதல் துணைநிலை தளபதியாக பொறுப்பேற்க உள்ளார்.
    - அவர் டுபோலெவ் Tu-142 என்ற கடல் சார் உளவு விமானம் மற்றும் P8I எனப்படும் மற்றொரு கடல் சார் உளவு விமானம் ஆகியவற்றின் முதல் பெண் கண்காணிப்பாளர் ஆவார்.
- அமெரிக்காவின் முதல் பெண் உச்சநீதிமன்ற நீதிபதியான சாண்ட்ரா டே ஓ'கானர் அவரது 93 வது வயதில் காலமானார்.
    - அவர் 1981 ஆம் ஆண்டில், அமெரிக்க உச்சநீதிமன்றத்தின் நீதிபதியாக நியமிக்கப் படுவதற்கு அதிபர் ரொனால்ட் ரீகனால் பரிந்துரைக்கப்பட்டார்.
- அமெரிக்கா மற்றும் மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறவுள்ள 2024 ஆம் ஆண்டு ஆடவர் T20 உலகக் கோப்பைப் போட்டிக்கு ஆப்பிரிக்காவின் உகாண்டா அணி முதன் முறையாக தகுதி பெற்றுள்ளது.
    - இப்போட்டியில் முதன்முறையாக 20 அணிகள் பங்கு பெற உள்ளன.
- அக்சதா கிருஷ்ணமூர்த்தி என்பவர் நாசாவில் பணிபுரியும் பெண் அறிவியலாளர் ஆவார்.
    - மார்ஸ் சுற்றுக்கலனை இயக்கிய முதல் இந்தியக் குடிமகள் என்ற பெருமையை இவர் பெற்றுள்ளார்.
- சைபர் பாதுகாப்பு நிறுவனமானது Promon FjordPhantom என்ற புதிய தீம்பொருள் அல்லது பாதுகாப்பற்ற விவரங்களை அடையாளம் காணும் மென்பொருளை கண்டறிந்து ள்ளது.
    - இது விவரங்கள் கண்டறிதல் மற்றும் இலக்குப் பயன்பாடுகளைத் தவிர்த்தல் ஆகியவற்றுக்காக வேண்டி மெய்நிகராக்கத்தைப் பயன்படுத்துகிற ஒரு புதிய தீம்பொருளாகும்.
- 'காட்டு ஓக்ரா' என்ற புதிய தாவர இனத்தினை இந்திய வேளாண் ஆராய்ச்சி மன்றத்தின் (ICAR) விஞ்ஞானி ஒருவர் சமீபத்தில் கண்டுபிடித்தார்.
    - ஒடிசாவில் அமைந்துள்ள கியோஞ்சர் மாவட்டத்தில் உள்ள ஈரமான இலையுதிர் காடுகளில் இது கண்டுபிடிக்கப்பட்டது.
- சிறந்தப் பாதுகாப்பு அமைப்பிற்கானப் புத்தாக்கம் (iDEX) என்ற பாதுகாப்புத் துறையின் முதன்மையான முன்னெடுப்பானது அதன் 300வது ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன் மூலம் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளது.
- நன்ஹே ஃபரிஸ்டே என்பது தொலைந்து போன அல்லது தங்களது குடும்பங்களை விட்டு பிரிந்த குழந்தைகளை மீண்டும் அவர்களுடன் இணைப்பதற்காக இரயில்வே பாதுகாப்புப் படை (RPF) மேற்கொண்ட ஒரு முன்னெடுப்பு ஆகும்.

- ஊபர் நிறுவனம் தனது உலகளாவிய முதன்மையான மின்சார வாகன வாடகைச் சேவையான ஊபர் கிரீன் சேவையை கர்நாடகாவின் பெங்களூருவில் தொடங்குவதாக அறிவித்துள்ளது.
  - மும்பையில் ஏற்கனவே இயங்கி வரும் ஊபர் க்ரீன் வசதியை அடுத்து இரண்டாவது சேவையை இது குறிக்கிறது.
- ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகப் பதிப்பகமானது Z எனும் எழுத்தின் தலைமுறையில் மொழியியல் தேர்வுகளைப் பிரதிபலிக்கிற "ரிஸ்" (Rizz) என்ற வார்த்தையினை இந்த ஆண்டின் சிறந்த வார்த்தையாக வெளியிட்டுள்ளது.
  - இது மற்றொரு நபரை ஈர்க்கும் அல்லது கவர்ந்திழுக்கும் ஒருவரின் திறனை விவரிக்கப் பயன்படுத்தப்படும் சொல் ஆகும்.
- இந்தியாவில் ரூ.6 லட்சம் கோடி அளவிற்குச் சந்தை மூலதனத்தினைத் தாண்டிய 8வது நிறுவனமாக பார்தி ஏர்டெல் மாறியுள்ளது.
  - ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ், டிசிஎஸ், எச்டிஎஃப்சி வங்கி, ஐசிஐசிஐ வங்கி, எச்யுஎல் (இந்துஸ்தான் யுனிலீவர் லிமிடெட்), இன்ஃபோசிஸ் மற்றும் ஐடிசி (இந்தியப் புகையிலை நிறுவனம் / India Tobacco Company) ஆகியவை இதர மற்ற நிறுவனங்கள் ஆகும்.
- பஜாஜ் குழுமமானது சந்தை மூலதனத்தில் ரூ.10 லட்சம் கோடியைக் கடந்த ஐந்தாவது வணிக நிறுவனமாக மாறியுள்ளது.
  - முன்னதாக, டாடா குழுமம், முகேஷ் அம்பானி குழுமம் (ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ்), ஹெச்டிஎஃப்சி வங்கி மற்றும் அதானி குழுமம் ஆகியவை இந்த மைல்கல்லை எட்டியுள்ளன.
- 6வது உலகப் பேரிடர் மேலாண்மை மாநாடானது உத்தரகண்ட் மாநிலத்திலுள்ள டேராடூனில் 'காலநிலை நடவடிக்கையை வலுப்படுத்துதல்' என்ற தலைப்பில் நடைபெற்றது.
  - ஐக்கிய நாடுகள் அமைப்புகளுக்கு வெளியே நடைபெறும் பேரிடர் மேலாண்மை குறித்த மிகப்பெரிய உலகளாவிய மாநாடாக இது உருவெடுத்துள்ளது.
- டாடா மோட்டார்ஸ் தனது நான்காவது பதிவு செய்யப்பட்ட வாகனக் கழிவு (ஸ்கிராப்பிங்) வசதியை (RVSF) சண்டிகரில் திறந்துள்ளது.
  - டாடா மோட்டார்ஸ் ஏற்கனவே ஜெய்ப்பூர், புவனேஷ்வர் மற்றும் சூரத் ஆகிய இடங்களில் மூன்று RVSFகளைக் கொண்டுள்ளது.
- அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கி வரும் காப்பீட்டு நிறுவனங்களான MetLife மற்றும் Prudential Financial Inc ஆகியவற்றைப் பின்னுக்குத் தள்ளி LIC நிறுவனம் (503$ பில்லியன் கையிருப்பு) 2022 ஆம் ஆண்டில் உலகின் நான்காவது பெரிய காப்பீட்டு நிறுவனமாக மாறியுள்ளது.
  - முதல் மூன்று காப்பீட்டாளர்கள் நிறுவனங்களாவன அலையன்ஸ் SE (ஜெர்மனி), சீனா ஆயுள் காப்பீடு மற்றும் நிப்பான் ஆயுள் காப்பீடு (ஜப்பான்) ஆகியவை ஆகும்.
- டெய்லர் ஸ்விஃப்ட் என்ற அமெரிக்கப் பெண் பாடகி-பாடலாசிரியர், டைம்ஸ் இதழின் 2023 ஆம் ஆண்டிற்கான சிறந்த நபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- டைம்ஸ் இதழின் 2023 ஆம் ஆண்டிற்கான சிறந்தத் தடகள வீரராக அர்ஜென்டினாவின் கால்பந்து வீரர் லியோனல் மெஸ்ஸி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

- மெஸ்ஸி எட்டாவது முறையாக 2023 ஆம் ஆண்டிற்கான Ballon d'Or விருதை வென்ற பிறகு இச்சாதனை பதிவானது நீடித்துள்ளது.

❖ உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத், சஹரன்பூரில் நாட்டின் முதல் சிறப்பு தொலைத் தொடர்பு மையத்தை நிறுவுவதற்கு ஒப்புதல் அளித்துள்ளார்.

- இது ரூர்க்கியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் சஹாரன்பூர் என்ற வளாகத்தில் அமைந்துள்ளது.

❖ இந்தியக் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள், ஒடிசாவின் சம்பல்பூரில் உள்ள பிரம்மா குமாரி அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட 'புதிய இந்தியாவிற்கான புதிய கல்வி' என்ற பிரச்சாரத்தைத் தொடங்கி வைத்தார்.

- இந்தப் பிரச்சாரம் ஆனது, மாணவர்கள் மத்தியில் சிறந்த சமுதாயத்திற்கான ஒரு நல்லுணர்வினை உயர்த்துவதற்கும், அதன் விழுமியங்களை நன்கு வளர்ப்பதற்கும் வேண்டி திட்டமிடப்பட்டுள்ளது.

❖ ஒலிம்பிக் பதக்கம் வென்ற M. ஸ்ரீசங்கர் (நீளம் தாண்டுதல்) கேரளாவின் சிறந்த விளையாட்டு வீரராக விளங்குவதற்காக வேண்டி மதிப்புமிக்க 35வது ஜிம்மி ஜார்ஜ் அறக்கட்டளை விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

- ஜிம்மி ஜார்ஜ் அறக்கட்டளை விருது என்பது கேரளாவின் விளையாட்டுச் சமூகத்தில் வழங்கப்படும் ஒரு சிறப்புமிக்க அங்கீகாரம் ஆகும்.

❖ சவுதி அரேபியாவின் ரியாத் நகரில் ஆசிய மாற்றுத் திறனாளிகளுக்கான ஒலிம்பிக் குழுவினால் நடத்தப்பட்ட (APC) நான்காவது ஆசிய விருதுகள் விழாவில், ஜம்மு மற்றும் காஷ்மீரைச் சேர்ந்த இந்திய மாற்றுத் திறனாளி வில்வித்தை வீராங்கனை ஷீதல் தேவிக்கு சிறந்த இளையோர் தடகள வீராங்கனை பட்டம் வழங்கப்பட்டது.

- ஆசிய மாற்றுத் திறனாளிகளுக்கான ஒலிம்பிக் குழுவினால் (APC) ஏற்பாடு செய்யப் பட்ட ஆசிய விருதுகள் விழாவானது, ஆசிய மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்கள் மற்றும் அதிகாரிகளின் வெகு சிறந்த சாதனைகளைக் கௌரவிக்கும் விழாவாகும்.

❖ ஆந்திரப் பிரதேசத்திலுள்ள விஜயவாடா ரயில் நிலையத்திற்கு சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் சுற்றுச்சூழல் நட்பு நடைமுறைகளுக்காகவும் அதன் அர்ப்பணிப்புக்காகவும் இந்தியாவின் பசுமைக் கட்டிடக் மன்றமானது அதன் (IGBC) மதிப்புமிக்க பிளாட்டினம் மதிப்பீட்டினை வழங்கியுள்ளது.

- இது நிலையான நிலைய வசதி, சுகாதார வசதி, உடல்நலம் பேணுதல் மற்றும் துப்புரவு வசதி, ஆற்றல் திறன்பாடு, நீர் திறன், சூட்டிகை மற்றும் பசுமை முயற்சிகள் மற்றும் புதுமை மற்றும் மேம்பாடு உள்ளிட்ட ஆறு சுற்றுச்சூழல் வகைகளை அடிப்படையாகக் கொண்டது.

❖ மின்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் மஹாரத்னா பொதுத்துறை நிறுவனமான இந்திய மின்சாரக் கட்டமைப்பு கழக நிறுவனத்திற்கு (PGCIL) 2023 ஆம் ஆண்டிற்கான மதிப்புமிக்க SKOCH தங்க விருதானது வழங்கப்பட்டுள்ளது.

- 2023 ஆம் ஆண்டு SKOCK Gold Award என்பது சிறந்தப் பங்களிப்புகள் மற்றும் தொழில் நுட்ப முன்னேற்றங்களை அங்கீகரிக்கிறது.

❖ மேகாலயாவின் லகடாங் மஞ்சளுக்கு மதிப்புமிக்க புவிசார் குறியீடு (ஜிஐ) வழங்கப் பட்டுள்ளது.

- மேலும் மேகாலயாவின் காரோ டக்மாண்டா (பாரம்பரிய உடை), லர்னாய் மட்பாண்டங்கள் மற்றும் காரோ சுபிட்சி (மதுபானம்) ஆகிய இதர மூன்று பொருட்களுக்கும் இக்குறியீடு வழங்கப் பட்டுள்ளன.

❖ தனி சோதனைப் பெட்டகங்களில் வைத்து மின்னணு உபகரணங்களைப் பாதுகாப்பு சோதனைக்கு உட்படுத்தும் முறையை நீக்கிய இந்தியாவின் முதல் விமான நிலையம் பெங்களூரு விமான நிலையம் ஆகும்.

- கெம்பகவுடா சர்வதேச விமான நிலையமானது, தானியங்கிப் பெட்டக சோதனை அமைப்பு மற்றும் முழு உடல் ஊடுருவல் ஆய்வுக் கருவியுடன் ஒருங்கிணைக்கப் பட்ட CTX இயந்திரங்களைப் பயணிகள் மத்தியில் சோதனை செய்யத் தொடங்கி உள்ளது.

❖ ஹம்ஃபெஸ்ட் இந்தியா 2023 மாநாடானது, குஜராத் மாநிலம் அகமதாபாத் நகரில் தகவல் தொடர்பு துறை இணை அமைச்சர் தேவுசின் சவுஹானால் தொடங்கி வைக்கப் பட்டது.

- பயில்முறை வானொலி ஆர்வலர்களுக்கு இது ஒரு விரிவான தளமாக செயல் படுகிறது.

❖ பார்தி குழுமத்தின் ஆதரவுப் பெற்ற OneWeb India நிறுவனம், இந்தியாவில் வணிக ரீதியான செயற்கைக்கோள் அகலப் பட்டை அலைவரிசை சேவைகளைத் தொடங்கச் செய்வதற்கு வேண்டி IN-SPACe அமைப்பிடமிருந்து அங்கீகாரம் பெற்றுள்ளது.

- இந்தியாவில் இந்த அனுமதிகளைப் பெற்ற முதல் நிறுவனமாகவும் இந்தியாவின் ஒரே செயற்கைக் கோள் அகலப் பட்டை அலைவரிசை சேவை வழங்குநராகவும் இது உள்ளது.

❖ இந்திய நாடாளுமன்றத்தின் கீழவையானது 2023 ஆம் ஆண்டு மத்தியப் பல்கலைக் கழகங்கள் (திருத்தம்) மசோதாவினை நிறைவேற்றியுள்ளது.

- இந்த மசோதாவின் முதன்மை நோக்கமானது, தெலுங்கானாவில் 'சம்மக்கா சரக்கா மத்தியப் பழங்குடியினர் பல்கலைக்கழகத்தினை' அமைப்பதாகும்.

❖ பஞ்சாப் மாநிலத்தினைப் பூர்வீகமாக கொண்ட எழுத்தாளர் மீரா சந்த் (81), மாநிலத்தின் மிகவும் மதிப்புமிக்க கலை விருதான கலாச்சாரப் பதக்கத்தை பெற்ற மூன்று சிங்கப்பூர் நாட்டவர்களில் ஒருவர் ஆவார்.

- அவர் நாவலாசிரியர் சுசென் கிறிஸ்டின் லிம் மற்றும் அனுபவமிக்க மலேசிய நடனக் கலைஞர் ஒஸ்மான் அப்துல் ஹமித் ஆகியோருடன் இந்தப் பதக்கத்தினைப் பகிர்ந்து கொண்டார்.

❖ துபாயில் நடைபெற்ற பருவநிலை உச்சி மாநாட்டில் 28வது பங்குதாரர்கள் மாநாட்டில் (COP28), பீகார் மாநில அரசானது அதன் ஜல்-ஜீவன்-ஹரியாலி அபியானின் கீழ் மேற்கொள்ளப்பட்ட காடுகள் வளர்ப்பு முன்னெடுப்புகளுக்காக வேண்டி உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.

❖ ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் மற்றும் இந்திய சீரம் நிறுவனம் ஆகியவற்றினால் உருவாக்கப்பட்ட R21/மேட்ரிக்ஸ்-M என்ற மலேரியா நோய்க்கான தடுப்பூசியினைப் பயன்படுத்துவதற்கு உலக சுகாதார அமைப்பு அனுமதியளித்துள்ளது.

- முன்னதாக RTS,S/AS01 தடுப்பூசி 2021 ஆம் ஆண்டில் உலக சுகாதார அமைப்பின் அனுமதியைப் பெற்றது.

❖ மத்திய உள்துறை அமைச்சகம் ஆனது, மேரா கௌன் மேரி தரோஹர் என்ற ஒரு தனித்துவமான முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது.

   - 29 மாநிலங்கள் மற்றும் ஏழு ஒன்றியப் பிரதேசங்களில் அமைந்துள்ள இந்தியாவின் 6.5 லட்சம் கிராமங்களை கலாச்சார ரீதியாக வரைபடமாக்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

- லாஸ் வேகாஸ் மற்றும் லாஸ் ஏஞ்சல்ஸ் ஆகிய நகரங்களை இணைக்கும் அதிவேக இரயில் சேவை திட்டம் குறித்த அறிவிப்பினை அமெரிக்க அதிபர் வெளியிட்டுள்ளார்.
   - இது லாஸ் ஏஞ்சல்ஸ் மற்றும் லாஸ் வேகாஸ் இடையேயான பயண நேரத்தை ஏழு மணி நேரத்தில் இருந்து வெறும் மூன்று மணி நேரமாக குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தென்மேற்கு சீனாவின் சிச்சுவான் மாகாணத்தில் 2,400 மீட்டர் ஆழத்தில் அமைக்கப் பட்ட இயற்பியல் ஆய்வகம் ஆனது, கரும்பொருள் எனப்படும் கண்ணுக்குத் தெரியாத பொருளைப் பற்றிய ஆய்வினை மேற்கொள்வதற்காக செயல்படத் தொடங்கியுள்ளது.
   - இதுவே உலகின் மிக ஆழத்தில் அமைந்த மற்றும் மிகப்பெரிய நிலத்தடி ஆய்வகம் ஆகும்.
- இந்தியாவின் அந்நியச் செலாவணி இருப்பானது, சுமார் நான்கு மாத இடைவெளிக்குப் பிறகு 604 பில்லியன் டாலராக அதிகரித்துள்ளது.
   - அந்நியச் செலாவணி இருப்பு இந்த ஆண்டு ஆகஸ்ட் 11 அன்று $600 பில்லியன் மதிப்பிற்கு மேல் இருந்தது.
- ஃபெடரல் வங்கியானது, தி பேங்கர் என்ற பத்திரிக்கையின் "ஆண்டின் சிறந்த வங்கி (இந்தியா)" என்ற பட்டத்தினைப் பெற்றுள்ளது.
- மோசமான காற்றுத் தரத்துடன், பாகிஸ்தானின் லாகூர் நகரம் உலகளாவிய மாசுக் குறியீட்டில் முதலிடம் பிடித்தது.
- தேசியத் தூய்மை கங்கை மற்றும் மிசிசிப்பி நதி நகரங்கள் மற்றும் சிறு நகரங்கள் இயக்கம் (MRCTI) ஆனது துபாயில் நடைபெற்று வரும் 28வது பங்குதாரர்கள் மாநாட்டில் பொது நோக்கத்திற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
   - நகர்ப்புற நதி மேலாண்மை தொடர்பான பிரச்சனைகளில் ஒத்துழைப்பு வழங்கச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ITC லிமிடெட் நிறுவனமானது, பிரிட்டிஷ் அமெரிக்கப் புகையிலை நிறுவனத்தை (BAT) விஞ்சி உலகின் மூன்றாவது மதிப்பு மிக்க புகையிலைத் தயாரிப்பு நிறுவனமாக மாறியது.
- இந்திய சமூக ஆர்வலரான நிகில் டே, அமெரிக்க வெளியுறவுத் துறையினால் சர்வதேச ஊழல் எதிர்ப்பு வாகையராக அறிவிக்கப்பட்டுள்ளார்.
- 'மார்னிங் கன்சல்ட்' எனப்படும் அமெரிக்காவைச் சேர்ந்த ஆலோசனை வழங்கீட்டு நிறுவனத்தின் கூற்றுப் படி, பிரதமர் நரேந்திர மோடி 76 சதவீத ஆதரவு மதிப்பீட்டுடன் உலகின் மிகவும் பிரபலமான தலைவராக தனது இடத்தைத் தக்க வைத்துக் கொண்டு உள்ளார்.
   - அவரைத் தொடர்ந்து மெக்சிகோ அதிபர் ஆண்ட்ரேஸ் மானுவல் லோபஸ் ஒப்ராடோர் மற்றும் சுவிட்சர்லாந்து அதிபர் அலைன் பெர்செட் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.
- சென்னை மற்றும் கான்பூரில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகங்கள் மற்றும் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பிரிவு ஆகியவற்றினால் இணைந்து உருவாக்கப்பட்ட 5G RAN தொழில் நுட்பமானது மேம்படுத்தல் மற்றும் வணிகரீதியான பயன்பாடுகளுக்காக ஒரு இந்திய தொழில்நுட்ப நிறுவனத்திடம் அதிகாரப்பூர்வமாக ஒப்படைக்கப்பட்டது.

- VINBAX-2023 என்ற 4வது கூட்டு இராணுவப் பயிற்சியில் பங்கேற்பதற்காக இந்திய ஆயுதப் படைக் குழு வியட்நாமின் ஹனோய் நகரைச் சென்றடைந்தது.
- விலங்குகள் மற்றும் மனித உரிமைகளுக்கும் இடையிலான ஒரு தொடர்பை எடுத்துக் காட்டும் வகையில், ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 10 ஆம் தேதியன்று சர்வதேச விலங்கு உரிமைகள் தினம் அனுசரிக்கப் படுகிறது.
- ஃப்பெட்எக்ஸ் எக்ஸ்பிரஸ் நிறுவனமானது, திறன்மிகு மற்றும் நிலையான விநியோகச் சங்கிலிகளுக்கான சிறப்பு மையத்தை அமைப்பதற்காக மெட்ராஸ்-இந்திய தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்துடன் இணைந்து செயல்படுகிறது.
- ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் பொதுச் செயலாளர் பான் கி மூன் மற்றும் மூன்று புகழ்பெற்ற அரசு முறை அதிகாரிகளுக்கு, வருடாந்திர 'தீபாவளி பவர் ஆஃப் ஒன் விருது' விழாவில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.
  - இந்த மதிப்புமிக்க விழாவானது, பெரும்பாலும் 'அரசு முறை அதிகாரிகளுக்கான ஆஸ்கார் விருதுகள்' என்று அழைக்கப்படுகின்றது.
- நாராயண் சேவா சன்ஸ்தானின் தலைவர் பிரசாந்த் அகர்வாலுக்கு, இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களால் 'சிறந்த ஆளுமை - மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரமளித்தல்' என்ற மதிப்புமிக்க தேசிய விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.
- மெர்காம் கேப்பிட்டல் குழுமத்தின் சமீபத்தியத் தரவரிசையில், உலகின் மிகப் பெரிய அளவில் சூரிய சக்தி ஒளி மின்னழுத்தத் தகடுகளைத் தயாரிக்கும் அதானி பசுமை எரிசக்தி நிறுவனம் உலகளவில் இரண்டாவது இடத்தில் உள்ளது.
- பழம்பெரும் நடிகர் கபீர் பேடிக்கு, 'ஆர்டர் ஆஃப் மெரிட்' எனப்படும் இத்தாலி நாட்டின் உயரிய குடிமை விருது வழங்கப்பட்டது.
- 33வது வியாஸ் சம்மான் (2023) விருதானது, புகழ்பெற்ற இந்தி-எழுத்தாளர் புஷ்பா பாரதிக்கு வழங்கப்பட உள்ளது.
  - இந்த விருதானது, கடந்த 10 ஆண்டுகளில் இந்தியக் குடிமகன் ஒருவரால் வெளியிடப் பட்ட சிறந்த இந்தி மொழி இலக்கியப் படைப்புக்கு ஆண்டுதோறும் வழங்கப் படுகிறது.
- தெலுங்கானா மாநிலத்தில் உள்ள சிறுமிகள், பெண்கள் மற்றும் திருநர்கள் என அனைத்து வயதுடையவர்களும் TSRTC பேருந்துகளில் இலவசமாகப் பயணிக்க அனுமதிக்கும் மகா லட்சுமி திட்டத்தை தெலுங்கானா அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
- தமிழர்களின் கலாச்சாரச் சின்னமாக கருதப்படும் திருவள்ளுவர் சிலையானது பிரான்சு நாட்டின் செர்ஜி நகரில் திறக்கப்பட்டுள்ளது.
- மும்பையைச் சேர்ந்த பேராசிரியை சவிதா லாடேஜ், வேதியியல் கல்விக்கான அவரது பங்களிப்புகளை அங்கீகரிக்கும் வகையில், வேதியியலுக்கான ராயல் சங்கத்தின் கல்விக்கான நைஹோம் பரிசின் வெற்றியாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.
- தேசிய அனல் மின் கழகம் (NTPC) ஆனது பிராண்டன் ஹால் குழுமத்தின் 2023 ஆம் ஆண்டு தொழில்நுட்ப விருது விழாவில் இரண்டு வெள்ளி விருதுகளை வென்றுள்ளது.
- பர்ராகுடா எனப்படுகின்ற சூரிய சக்தியில் இயங்கும், இந்தியாவின் அதிவேக மின்சார படகானது கேரளாவின் ஆலப்புழாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இந்தியாவைச் சேர்ந்த லியாண்டர் பயஸ் மற்றும் ஒரு ஒளிபரப்பாளரும் புகழ்மிக்க விளம்பரதாரருமான விஜய் அமிர்தராஜ் ஆகியோர் சர்வதேச டென்னிஸ் புகழ் மன்றத்தில் சேர்க்கப் பட்ட முதல் ஆசிய ஆண்கள் என்ற பெருமையினைப் பெற்று உள்ளனர்.

- இந்த இருவரோடு சேர்த்து, புகழ்பெற்ற பத்திரிகையாளரும் எழுத்தாளருமான ரிச்சர்ட் எவன்ஸ் என்பவரும் டென்னிஸ் போட்டிப் பிரிவின் உயர் சிறப்பு மன்றத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

- ❖ சர்வதேச நிதிக் கழகம் (IFC) ஆனது, 2023 ஆம் ஆண்டு நிதி நிறுவனங்களுக்கான பருவ நிலை மதிப்பீட்டு (CAFI) தளத்தின் பருவநிலை அறிக்கையிடலுக்கான விருதுகளில் மிக சிறந்த செயல் திறன் கொண்ட நிறுவனமாக ஃபெடரல் வங்கியை அங்கீகரித்துள்ளது.
- ❖ பொது விமானப் போக்குவரத்து இயக்குனரகம் ஆனது, அயோத்தியின் மரியாதை புர்ஷோத்தம் ஸ்ரீ ராம் சர்வதேச விமான நிலையத்திற்கு வானூர்தி தள உரிமத்தை வழங்கியுள்ளது.
- ❖ ஒருங்கிணைந்த உலக மல்யுத்த (UWW) அமைப்பானது, 2023 ஆம் ஆண்டின் மகளிர் எழுச்சி நாயகியாக இந்தியாவின் ஆன்டிம் பங்கலை தேர்ந்தெடுத்துள்ளது.
- ❖ ஐக்கியப் பேரரசின் 2023 ஆம் ஆண்டிற்கான உலகின் சிறந்த 50 ஆசியப் பிரபலங்கள் பட்டியலில் இடம் பெற்ற முதல் 50 ஆசியப் பிரபலங்கள் பட்டியலில் ஷாருக்கான் முதலிடத்தில் உள்ளார், மேலும் அவரைத் தொடர்ந்து ஆலியா பட் மற்றும் பிரியங்கா சோப்ரா இடம் பெற்றுள்ளனர்.
- ❖ இந்திய விண்வெளித் துறையானது, 2035 ஆம் ஆண்டிற்குள் பாரதிய அந்தரிக்ஷா நிலையத்தை (இந்திய விண்வெளி நிலையம்) உருவாக்க திட்டமிட்டுள்ளது.
- ❖ தேசியப் புத்தக அறக்கட்டளையினால் புனேவில் ஏற்பாடு செய்யப்பட்ட 3,066 பேர் பங்கேற்புடன் நடைபெற்ற மிகப்பெரிய வாசிப்பு நிகழ்ச்சி கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.
  - இதற்கு முன்னதாக இதே போன்ற சாதனையானது, சீனாவில் ஒரே நேரத்தில் 2,884 வாசகர்கள் கொண்டு நிகழ்த்தப்பட்டது.
- ❖ ஸெப்டோ செயலியின் நிறுவனர்களான கைவல்யா வோஹ்ரா (21) மற்றும் ஆதித் பாலிச்சா (22) ஆகிய இளம் தொழில்முனைவோர்கள் ஹுருன் இந்தியா நிறுவனத்தின் 30 வயதிற்குட்பட்ட 100 முன்னணி தொழில்முனைவோர் பட்டியலில் (2023) முன்னணி இடங்களைப் பெற்றுள்ளனர்.
- ❖ ஐக்கிய நாடுகள் சபையின் மேம்பாட்டுத் திட்ட அமைப்பு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்ட அமைப்பு ஆகியவற்றின் கூட்டு முன்னெடுப்பான எல்லைகள் கடந்த வரி ஆய்வாளர்கள் (TIWB) திட்டம் ஆனது செயிண்ட் லூசியாவில் ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
  - இந்தியா அதன் பங்குதார நிர்வாக அமைப்பாகத் தேர்ந்தெடுக்கப் பட்டதை அடுத்து, இந்தத் திட்டத்திற்கான வரி நிபுணர்களை வழங்க உள்ளது.
- ❖ ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 15 ஆம் தேதியன்று சர்வதேச தேயிலை தினம் ஆனது கொண்டாடப் படுகிறது.
  - 2005 ஆம் ஆண்டில் முதல் சர்வதேச தேயிலை ஒப்பந்தம் கையெழுத்தானதை நினைவு கூரும் வகையில் மே 21 ஆம் தேதியும் சர்வதேச தேயிலை தினமாக அனுசரிக்கப் படுகிறது.
- ❖ மத்திய நிலக்கரித் துறை அமைச்சகம் ஆனது, ஜார்க்கண்ட் மாநிலத்தின் லதேஹர் மாவட்டத்தில் உள்ள வடக்கு தாடு (மேற்கு பகுதி) நிலக்கரித் தொகுதியை நெய்வேலி லிக்னைட் கழகம் இந்தியா லிமிடெட் நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்துள்ளது.

   - தாடு 434.65 மில்லியன் டன்கள் நிலக்கரி இருப்புக்களைக் கொண்டுள்ள நிலையில், மேலும் அதன் உச்ச கட்டத் திறன் ஆண்டிற்கு மூன்று மில்லியன் டன்கள் ஆகும்.

- இந்திய விமானப் படை நடத்திய அஸ்ட்ராசக்தி பயிற்சியின் போது நிலத்திலிருந்து வானில் பாய்ந்து தாக்கும் (SAM) ஆகாஷ் ஏவுகணை அமைப்பு ஆனது ஈடுபட்டு ஒரே நேரத்தில் நான்கு ஆளில்லா விமானங்களை அழித்தது.
- "உலகின் மிகப்பெரிய பணியிடம்" என்று அழைக்கப்படும் சூரத் வைர வர்த்தக மையத்தினை (SDB) இந்தியப் பிரதமர் அவர்கள் குஜராத்தில் திறந்து வைத்தார்.
- கோடக் மஹிந்திரா வங்கி லிமிடெட் நிறுவனத்துடன் இணைந்து கான்பூரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் (IIT) இந்தியாவின் முதலாவது முழுமையாக ஒருங்கிணைக்கப் பட்ட நிலைத்தன்மை கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது.
- சமூகப் பங்குச் சந்தைகளில் (SSE) பட்டியலிடப்பட்ட முதல் நிறுவனமாக SGBS உன்னதி அறக்கட்டளை மாறியுள்ளது.
- ரியல் விஷன் ஹோம்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர், டாக்டர் ஸ்ரீனிவாஸ் நாயக் தாராவத், டெல்லியில் நடைபெற்ற 5வது தேசிய மாநாட்டில் AASRAA அமைப்பின் 2023 ஆம் ஆண்டு தொலைநோக்கு மிக்கத் தலைவர் என்ற விருது வழங்கி கௌரவிக்கப் பட்டார்.
- மிச்சிகன் மாகாணத்தினைச் சேர்ந்த மருத்துவ மாணவி ரிஜுல் மைனி, சமீபத்தில் நியூ ஜெர்சியில் நடைபெற்ற 2023 ஆம் ஆண்டு அமெரிக்க இந்திய அழகிப் போட்டியில் பட்டத்தை வென்றார்.
   - சலோனி ராம்மோகன் மற்றும் சினேகா நம்பியார் ஆகியோர் முறையே பதின்ம வயது அழகி மற்றும் இந்திய அமெரிக்க திருமதி அழகிப் பட்டங்களைப் பெற்றனர்.
- ரியோ டின்டோ எனப்படுகின்ற ஒரு முன்னணி உலகளாவியச் சுரங்க மற்றும் மூலப் பொருட்கள் நிறுவனமானது, தனது 150வது ஆண்டு நிறைவை இந்திய அஞ்சல் துறை சிறப்பு அஞ்சல் தலை அறிமுகத்துடன் கொண்டாடியது.
- இந்தியாவின் முன்னணி ரோபோ தொழில்நுட்ப நிறுவனங்களில் ஒன்றான கேரளாவைச் சேர்ந்த ஜென்ரோபோடிக் இன்னோவேசன்ஸ் என்ற நிறுவனத்தின் நிறுவனர்கள், மதிப்புமிக்க 'ஃபோர்ப்ஸ் இதழின் 30 வயதிற்குட்பட்ட 30 முன்னணி தொழில் முனைவோர்கள் - ஆசியா 2023' பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.
- தி வீக் இதழின் ஹன்சா ஆராய்ச்சி 2023 அறிக்கையின், 'சிறந்த எழுச்சி பெறும் பல் நோக்கு மருத்துவமனை' பிரிவில் கேரளாவின் கொச்சியில் அமைந்துள்ள ஆஸ்டர் மெட்சிட்டி முதல் இடத்தைப் பெற்றுள்ளது.
- இரண்டாவது காசி தமிழ் சங்கமானது, வாரணாசியில் உள்ள 'நமோ காட்' என்னும் இடத்தில் தொடங்கப்பட்டது.
   - பண்டைய நகரமான காசிக்கும் தென் மாநிலமான தமிழ்நாட்டிற்கும் இடையே உள்ள உணர்ச்சிப்பூர்வ மற்றும் ஆக்கப்பூர்வமான உறவுகளை வலுப்படுத்தும் ஒரு தளமாக இந்நிகழ்வு அமைந்தது.
- வாரணாசியில் அமைக்கப்பட்டுள்ள உலகின் மிகப்பெரிய தியான மையத்தினை பிரதமர் அவர்கள் திறந்து வைத்தார்.
- தாய்லாந்தில் அமைந்த பெரும்பாலும் ஆய்வு செய்யப்படாத பகுதியில் 10 புதிய வகை ட்ரைலோபைட் (முக்கூற்று உடல் தொல்லுயிரி) இனங்களை புவியியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

- இந்த அழிந்துபோன கடல் வாழ் உயிரினங்கள் 490 மில்லியன் ஆண்டுகளாக மறைந்து காணப் பட்டன என்பதோடு, இவை கேம்ப்ரியன் காலத்தின் பிற் பகுதியில் இருந்த விலங்கினங்கள் குறித்த புதிய தகவல் வரைபடத்தை உருவாக்க அறிவியலாளர்களுக்கு உதவுகின்றன.

❖ ஹரியானா அணியானது, விஜய் ஹசாரே கோப்பைப் போட்டியில் (2023) ராஜஸ்தான் அணியை வென்று தனது முதல் கோப்பையைக் கைப்பற்றி வரலாறு படைத்துள்ளது.

- இது முதலில் ரஞ்சி ஒரு நாள் கிரிக்கெட் கோப்பை என்று அறியப் பட்டது.

❖ 2023 ஆம் ஆண்டு பல்வேறு மாநிலங்களுக்கு இடையேயான தளவாடப் பரிமாற்றத்தினை எளிதாக்குதல் (LEADS) தரவரிசையில் கடலோர மாநிலங்கள் குழுவில் தமிழ்நாடு மாநிலம் சிறந்த செயல்திறன் மிக்கதாக அங்கீகரிக்கப் பட்டு உள்ளது.

❖ இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையமானது, சாலைகளில் உள்ள அலகுகளுக்கு அனுப்பும் தகவலை மேம்படுத்தும் வகையில், உடனடி உதவிக்காக மேற்கொள்ளப் படும் அவசர அழைப்புகளுக்கு விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்வதை உறுதி செய்வதற்காக ERS என்ற கைபேசிச் செயலியை அறிமுகப் படுத்தியுள்ளது.

❖ இலங்கையில் உள்ள பாதுகாப்புச் சேவைகள் படைப்பிரிவு மற்றும் பணியாளர் கல்லூரியில் படைப் பிரிவு மற்றும் பணியாளர்கள் கல்விப் படிப்பினை மேற்கொண்டு வரும் மூன்று இந்திய ஆயுதப்படைகளைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு அவர்களின் சிறந்தச் செயல்பாட்டிற்காக 'Golden Owl' விருது வழங்கப்பட்டுள்ளது.

- விமானப்படை, இராணுவம் மற்றும் கடற்படைப் பிரிவுகளில் வெளிநாட்டு மாணவ (பயில்நிலை) நிலை அதிகாரிகளில் அந்த மூன்று அதிகாரிகளும் முறையே முதல் இடத்தைப் பிடித்தனர்.

❖ ரியல் விஷன் ஹோம்ஸ் நிறுவனத்தின் தலைவர், டாக்டர் ஸ்ரீனிவாஸ் நாயக் தாராவத், இலங்கையின் கொழும்பு நகரில் நடைபெற்ற G20 அமைப்பின் முன்னெடுப்பு உச்சி மாநாட்டில் குளோபல் ஐகான் விருதினைப் பெற்றார்.

❖ ஆப்கானிஸ்தான் பெண்கள் திறன் மேம்பாட்டு மையத்திற்கு சர்வதேசப் பாலினச் சமத்துவப் பரிசானது வழங்கப்பட்டுள்ளது.

- இது ஆப்கானிஸ்தானில் பெண்களின் உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் செயல்பட்டு வருகிறது.

❖ மைக்ரோசாப்ட் நிறுவனமானது 2.7 பில்லியன் அளவுருக்கள் கொண்ட மற்றும் பை-1.5 என்ற மாதிரியின் மேம்படுத்தப்பட்ட பதிப்பான, பை-2 என்ற ஒரு புதிய சிறிய மொழி மாதிரியை வெளியிட்டுள்ளது.

❖ அசென்ச்சர் நிறுவனம் ஆனது, வணிக மேம்படுத்தலுக்காக மேம்பட்ட செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கான நிறுவனத்தின் ஒரு பரந்த உத்தியின் ஒரு பகுதியாக பெங்களூரு நகரில் ஓர் ஆக்கமிக்க செயற்கை நுண்ணறிவு தொழிற்கூடத்தினைத் தொடங்கியுள்ளது.

❖ கம்பிவட இணைப்பு சாராத திட்டமிடல் மற்றும் ஒருங்கிணைப்பு பிரிவு (WPC) மற்றும் கம்பிவட இணைப்பு சாராதக் கண்காணிப்பு அமைப்பு (WMO) ஆகியவை 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 19 ஆம் தேதியன்று சர்வதேச கண்காணிப்பு நிலைய (IMS) தினத்தைக் கொண்டாடுகின்றன.

- உலக சுகாதார அமைப்பின் பிராந்திய (தென்-கிழக்கு ஆசியா) இயக்குனர் டாக்டர் பூனம் கேத்ரபால் சிங்கிற்கு, நாட்டிற்கு அவர் ஆற்றிய சிறப்பானச் சேவைகளுக்காக பூடானின் தேசிய தகுதி சார் (ஆர்டர் ஆஃப் மெரிட்) தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது.
    - அவர் உலக சுகாதார அமைப்பின் தென்கிழக்கு ஆசியப் பிராந்தியத்தின் முதல் பெண் பிராந்திய இயக்குனர் ஆவார்.
- இண்டிகோ விமான நிறுவனம் ஆனது, ஓராண்டில் 100 மில்லியன் பயணிகளை ஏற்றிச் சென்ற முதல் இந்திய விமான நிறுவனம் என்ற வரலாற்றினைப் படைத்துள்ளது.
- சர்வதேச நாணய நிதியம் ஆனது, 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வரையிலான காலப்பகுதியில் இந்தியாவின் பரிமாற்ற விகித நிலையை "மாறுநிலை" வீதம் என்ற நிலையில் இருந்து "நிலைப்படுத்தப்பட்ட வீதம்" என மறுவகைப்படுத்தியுள்ளது.
- தொட்டுணர முடியாத கலாச்சாரப் பாரம்பரியத்தை பாதுகாப்பதற்கான யுனெஸ்கோ அமைப்பின் அரசுகளுக்கிடையேயான குழுவின் 18வது அமர்வு ஆனது (2024) போட்ஸ்வானா குடியரசின் கசானே நகரில் நடைபெற உள்ளது.
- உயர்கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சராக ராஜகண்ணப்பன் நியமிக்கப் பட்டுள்ளார்.
- ராபின் மின்ஸ், இந்தியன் பிரீமியர் லீக் (IPL) போட்டியில் பங்கேற்கும் முதல் பழங்குடியின கிரிக்கெட் வீரர் என்ற வரலாற்றினைப் படைத்துள்ளார்.
- 2022 ஆம் ஆண்டில் புலிகளின் தாக்குதல்களால் நாட்டில் மொத்தம் 112 உயிரிழப்புகள் ஏற்பட்டதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- கிரிஸ் கோபாலகிருஷ்ணன், N. தயாசிந்து மற்றும் கிருஷ்ணன் நாராயணன் ஆகியோரால் எழுதப்பட்ட The IT Story of India மற்றும் T.N. ஹரி மற்றும் பாலா ஸ்ரீநிவாசா ஆகியோர் இணைந்து எழுதிய Winning Middle India: The Story of India's New-Age Entrepreneurs ஆகிய புத்தகங்களுக்கு 2023 ஆம் ஆண்டு கஜா கேபிடல் வணிக புத்தகப் பரிசு வழங்கப் பட்டுள்ளது.
- USV பிரைவேட் லிமிடெட் நிறுவனம் மற்றும் பயோஜெனோமிக்ஸ் நிறுவனம் ஆகியவை இணைந்து, இன்சுலின் அஸ்பார்ட் என்ற மருந்தின் உயிரி கட்டமைப்பினை ஒத்த வகையிலான INSUQUICK எனப்படும் இந்தியாவின் முதல் உயிரி ஒத்த மருந்தினை அறிமுகப்படுத்துவதாக அறிவித்துள்ளன.
    - இது நீரிழிவு நோயாளிகளுக்கு இந்த மருந்திற்கான அணுகலை மேம்படுத்தும்.
- ஐக்கிய நாடுகள் சபையின் ஊழலுக்கு எதிரான உடன்படிக்கையின் 20வது ஆண்டு நிறைவை 2023 ஆம் ஆண்டானது குறிக்கிறது.
    - 2003 ஆம் ஆண்டு டிசம்பர் 09 ஆம் தேதியில் மெக்சிகோ நகரில் கையெழுத்திடப் பட்ட இந்த உடன்படிக்கையானது சட்டப்பூர்வமாகப் பிணைக்கும் பலதரப்பு சர்வதேச ஊழல் எதிர்ப்பு ஒப்பந்தமாகும்.
- கௌஹாத்தியில் நடைபெற்ற 75வது மாநிலங்களுக்கு மற்றும் மண்டலங்களுக்கு இடையேயான பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டியில் (2023), மஹாராஷ்டிரா அணி மகளிர் பிரிவிலும் மற்றும் இந்திய விமான நிலைய ஆணைய அணி (AAI) ஆடவர் பிரிவிலும் பட்டத்தை வென்றது.
- இந்தியாவின் மொத்தக் கடன் அல்லது சந்தையில் வர்த்தகம் செய்யப்படும் மொத்த நிலுவையில் உள்ள பத்திரங்களின் மதிப்பு செப்டம்பர் மாதம் வரையான காலாண்டில் 2.47 டிரில்லியன் டாலர் (ரூ. 205 லட்சம் கோடி) ஆக உயர்ந்துள்ளது.

- சர்வதேச மேசைப் பந்தாட்ட கூட்டமைப்பின் (ITTF) அறக்கட்டளையின் நிர்வாகக் குழு உறுப்பினராக இணைக்கப்பட்ட முதல் இந்தியர் என்ற பெருமையை விட்டா டானி பெற்றுள்ளார்.
- கவிஞர் மற்றும் விமர்சகர் சுக்ரிதா பால் குமாரின் ''Salt & Pepper: Selected Poems' என்ற புத்தகத்திற்காக அவருக்கு 6வது ரவீந்திரநாத் தாகூர் இலக்கியப் பரிசு வழங்கப் பட்டு உள்ளது.
- தேசிய அனல் மின் கழகத்தின் கண்ட்டி அனல் மின் நிலையம் ஆனது "தொழில்துறை நீர் பயன்பாட்டுத் திறன்" பிரிவில் 11வது FICCI நீர் விருதினை வென்றுள்ளது.
- இந்தியப் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மேம்பாட்டு முகமையின் (IREDA) தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் பிரதீப் குமார் தாஸ் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக 'ஆண்டின் சிறந்த தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்' விருதைப் பெற்றுள்ளார்.
- தேசிய மகளிர் ஆணையத்தின் முன்னாள் தலைவரும் பத்ம பூஷன் விருது பெற்றவருமான டாக்டர் V. மோகினி கிரி சமீபத்தில் காலமானார்.
  - 1971 ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்திய-பாகிஸ்தான் போருக்குப் பிறகு, இவர் 1972 ஆம் ஆண்டில் போரினால் கைம்பெண் நிலைமைக்குத் தள்ளப்பட்டவர்கள் என்ற சங்கத்தைத் தொடங்கினார்.
- சணல் உற்பத்தி விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை மற்றும் வேளாண்மை பற்றிய முக்கிய தகவல்களை வழங்குவதற்காக வேண்டி ஜவுளி அமைச்சகம் ஆனது, "பாத்-மித்ரோ" என்ற கைபேசி செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்திற்கு (இஸ்ரோ) அதன் மிக சமீபத்திய சந்திரனுக்கான சந்திரயான்-3 திட்டத்தின் குறிப்பிடத்தக்க வெற்றிக்காக லீஃப் எரிக்சன் லூனார் பரிசு வழங்கப்பட்டுள்ளது.
  - இஸ்ரோ இந்த விருதைப் பெறுவது இதுவே முதல் முறையாகும்.
- நாடாளுமன்ற வளாகத்தின் பாதுகாப்பிற்காக மத்திய தொழில் பாதுகாப்புப் படையை (CISF) பணியமர்த்துவதற்கு மத்திய உள்துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.
- பிரான்சு நாட்டு அதிபர் இம்மானுவேல் மேக்ரான் இந்திய நாட்டின் 75வது குடியரசு தின விழாவிற்கான தலைமை விருந்தினராகப் பங்கேற்க உள்ளார்.
- 2023 ஆம் ஆண்டு ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான் (மென்பொருள்) போட்டியின் மாபெரும் இறுதிப் போட்டியானது போபாலில் IES தொழில்நுட்பக் கல்லூரியின் தலைமை மையத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நிலையில், இதில் IES கல்லூரியின் 'Go Green' அணி வெற்றி பெற்றது.
  - ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான் (SIH) என்பது கல்வி அமைச்சகத்தின் புத்தாக்கப் பிரிவு மேற்கொண்ட நாடு தழுவிய முன்னெடுப்பு ஆகும்.
- 2023 ஆம் ஆண்டு சர்வதேச கீதா மஹோத்சவமானது ஹரியானாவின் குருக்ஷேத்திரம் என்ற இடத்தில் நடைபெற்றது.
- 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டிற்கான சாஸ்த்ரா-ராமானுஜன் விருதுகள் முறையே, பெர்க்லியில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் கணிதவியலாளர்களான யுன்கிங் டாங் மற்றும் ருயிசியாங் ஜாங் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.
- ஷேக் மிஷால் அல் அஹ்மத் அல் ஜாபர் அல் சபா குவைத்தின் புதிய அமீராக அரசியலமைப்பு சார்ந்த பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

- கொலராடோ மாநில உச்ச நீதிமன்றமானது 2021 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் நாடாளுமன்றக் கட்டிடத்தின் மீது தனது ஆதரவாளர்கள் மேற்கொண்ட தாக்குதலில் முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப் கொண்டிருந்த பங்கு காரணமாக அடுத்த ஆண்டு அமெரிக்க அதிபர் தேர்தலில் பங்கு பெறுவதிலிருந்து அவரைத் தகுதி நீக்கம் செய்தது.
- சர்வதேச கூடைப்பந்து கூட்டமைப்பு (FIBA) ஆனது முதல் உலக கூடைப்பந்து தினத்தை 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 21 ஆம் தேதியன்று கொண்டாடுகிறது.
- உலக சுகாதார அமைப்பானது, ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தினால் உருவாக்கப் பட்டு, இந்திய சீரம் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட R21/Matrix-M என்ற மலேரியா தடுப்பூசியை அதன் முன் அங்கீகாரம் பெற்ற தடுப்பூசிகளின் பட்டியலில் சேர்த்து உள்ளது.
- இன்வெஸ்ட் இந்தியா முகமையானது, 27வது உலக முதலீட்டு மாநாட்டினை (WIC) புது டெல்லியில் நடத்தியது.
    - இந்த ஆண்டின் மாநாடானது, “முதலீட்டாளர்களுக்கு அதிகாரமளித்தல்: முதலீட்டு ஊக்குவிப்பு முகமைகள் எதிர்கால வளர்ச்சிக்கு முன்னோடியாக திகழ்தல்” என்ற கருத்துருவுடன் நடைபெற்றது.
- நாட்டின் இளையோர்களுக்கு, விக்சித் பாரத் @2047 என்ற தொலை நோக்குத் திட்டத்திற்கான தங்களது கருத்தாக்கங்களைப் பங்களிப்பதற்காக ஒரு தளத்தினை வழங்குவதற்காக ‘விக்சித் பாரத் @2047: இளையோர்களின் குரல்’ என்ற முன்னெடுப்பு தொடங்கப்பட்டுள்ளது.
    - விக்சித் பாரத் @2047 என்பது சுதந்திரம் பெற்றதன் 100வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் 2047 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவை ஒரு வளர்ச்சியடைந்த நாடாக மாற்றுவதற்கான தொலைநோக்குத் திட்டமாகும்.
- அனைத்து நிலைகளிலும் தொற்றுநோய்கள் குறித்த விழிப்புணர்வை பொது மக்களுக்கு ஏற்படுத்துவதற்கும், எதிர்காலத்தில் ஏற்பட உள்ள பல்வேறு பெருந் தொற்றுகளுக்காகத் தயாராகுவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் டிசம்பர் 27 ஆம் தேதியன்று சர்வதேச தொற்றுநோய்த் தயார்நிலை தினம் அனுசரிக்கப் படுகிறது.
- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள் பாரதிய நியாய சன்ஹிதா, பாரதிய நாகரிக் சுரக்சா சன்ஹிதா மற்றும் பாரதிய சாக்சய சட்டம் ஆகிய மூன்று புதிய சட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளார்.
    - இந்தியத் தண்டனைச் சட்டம், குற்றவியல் நடைமுறைச் சட்டம் மற்றும் 1872 ஆம் ஆண்டு இந்தியச் சாட்சியச் சட்டம் ஆகியவற்றிற்கு மாற்றாக அவை அமைய உள்ளன.
- இந்தியாவின் சுரங்க அமைச்சகம் ஆனது, 9 மாநிலங்களில் உள்ள 22 முக்கியமான கனிமத் தொகுதிகளை இனி மேற்கொள்ளப்பட வேண்டி உள்ள ஏலத்தில் ஈடுபடுத்த அங்கீகாரம் அளித்துள்ளது.
    - இந்தத் தொகுதிகள் கோபால்ட், டைட்டானியம், காலியம், வெனடியம், டங்ஸ்டன், லித்தியம் மற்றும் அருமண் தனிம இருப்புக்களைக் கொண்டிருக்கின்றன.
- இன்டஸ்இன்ட் வங்கியானது, ‘இன்டஸ்இன்ட் வங்கி இ ஸ்வர்ணா’ எனப்படும் இந்தியாவின் முதல் பெருநிறுவன கடன் அட்டைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
- மும்பையின் வான்கடே மைதானத்தில் நடைபெற்ற மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணியானது ஆஸ்திரேலிய அணியை வீழ்த்தி தனது முதல் வெற்றியைப் பெற்றது.

- 1977 ஆம் ஆண்டில் ஆஸ்திரேலிய அணியுடன் முதல்முறையாக மோதிய பிறகு நடைபெற்ற 11 டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணி பெற்ற முதல் வெற்றி இது ஆகும்.

❖ நிதி ஆயோக் அமைப்பானது சர்வதேச மேம்பாட்டு ஆராய்ச்சி மையம் (IDRC) மற்றும் உலகளாவிய மேம்பாட்டு வலையமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து, 'உலகளாவியப் பொருளாதாரத்திற்கான பசுமை மற்றும் நிலையான மேம்பாட்டு செயல்பட்டு நிரல்' என்ற அறிக்கையினை வெளியிட்டுள்ளது.

❖ 2023 ஆம் ஆண்டிற்கான மதிப்புமிக்க தேசிய எரிசக்தி வளங்காப்பு விருதானது க்ராம்ப்டன் க்ரீவ்ஸ் கன்ஸ்யூமர் எலக்ட்ரிக்கல்ஸ் லிமிடெட் (CGCEL) என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

- அந்த நிறுவனத்தின் நீர்த் தொட்டி வகை சூடேற்றிச் சாதனங்கள், 2023 ஆம் ஆண்டிற்கான அதிக ஆற்றல் சேமிப்புத் திறன் மிக்க சாதனம் என்ற பிரிவில் இந்த விருதினை பெற்றது.

❖ 2023 ஆம் ஆண்டில் உலக அளவில் இந்தியா அழியாத அடையாளத்தினைப் பதித்த பத்து அசாதாரண தருணங்களை படம்பிடித்த காணொளியினை இந்திய அரசு வெளியிட்டுள்ளது.

- அதில் சந்திரயான் 3 விண்கலத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க தரையிறக்கம், இணைய வழி எண்மவழி பணம் செலுத்துதல் நுட்பத்தில் முன்னணி மற்றும் சூரத்தில் திறக்கப்பட்ட உலகின் மிகப்பெரிய அலுவலக கட்டிடம் ஆகியவை அடங்கும்.

❖ இந்தியப் பெருங்கடல் கடற்படை கருத்தரங்கின் (IONS) 8வது தலைவர்கள் கூட்டமானது (CoC) தாய்லாந்திலுள்ள பாங்காக் நகரில் அந்த நாட்டின் கடற் படையான ராயல் தாய் கடற்படையால் நடத்தப்பட்டது.

❖ இந்தியாவின் முன்னாள் பிரதமரான அடல் பிஹாரி வாஜ்பாய் அவர்களின் பிறந்த நாளான டிசம்பர் 25 ஆம் தேதியானது, 2014 ஆம் ஆண்டு முதல் "நல்லாட்சி தினமாக" அனுசரிக்கப்படுகிறது.

❖ 1705 ஆம் ஆண்டில் சீக்கிய மதத்தின் 10வது குருவான குரு கோவிந்த் சிங் அவர்களின் இரண்டு ஆண் குழந்தைகளின் மிகப் பெரும் தியாகத்தை நினைவு கூரும் வகையில் டிசம்பர் 26 ஆம் தேதியானது வீர் பால் திவாஸ் என்ற தினமாக அனுசரிக்கப் படுகிறது.

❖ அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு அமைப்பான நாசாவானது, ஒரு குடுவையில் செய்தி என்ற பிரச்சாரத்தைத் தொடங்கி அதன் மூலம் யூரோபா கிளிப்பர் என்ற திட்டத்திற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு கவிதையுடன் வியாழனின் நிலவுக்கு பயணிக்கும் தங்கள் பெயர்களை அனுப்ப பொதுமக்களுக்கு அழைப்பு விடுத்து உள்ளது.

❖ இந்த ஆண்டின் நவம்பர் மாத நிலவரத்தின் படி 10.4 ஜிகாவாட் சூரியஒளி சக்தியினை, கூரையில் அமைக்கப்பட்ட சூரிய மின்சக்தி தகடுகள் மூலம் பெற்று குஜராத் மாநிலமானது முதலிடத்தில் உள்ளது.

❖ பிரதமர் மோடியின் தனிப்பட்ட யூடியூப் பக்கமானது இரண்டு கோடி அளவிற்கு சந்தா தாரர்களை எட்டியுள்ளது.

- தனிப்பட்ட யூடியூப் பக்கத்தில் இரண்டு கோடி சந்தாதாரர்களை எட்டிய முதல் உலகத் தலைவர் இந்தியப் பிரதமர் ஆவார்.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாட்டின் யானை இறப்பு தணிக்கை கட்டமைப்பு

- இந்த கட்டமைப்பானது, வனத்துறையின் யானை இறப்பு தணிக்கை கட்டமைப்பிலிருந்து 2022 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- தமிழ்நாட்டில், யானைகளானது முதுமை மற்றும் பட்டினியால் இறப்பதை விட மின்சாரம் தாக்கி இறப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளது.
- 2010 ஆம் ஆண்டு முதல் 1,505 யானை இறப்புகள் பதிவாகியுள்ள நிலையில், அவற்றில் 159 அல்லது மொத்த இறப்புகளில் 10.5% மனித நடவடிக்கைகளால் ஏற்படுகின்றன என்று தரவுகள் வெளிப்படுத்துகின்றன.
- வன விலங்குகளில் சுமார் 50 ஆண்டுகள் ஆயுட்காலத்துடன் 22 ஆண்டுகள் என்ற ஒரு தலைமுறையுடன் நீண்ட காலம் வாழும் பாலூட்டிகளில் யானைகள் ஒன்றாகும்.

## அயோத்தி தாச பண்டிதர் சிலை

- சென்னை காந்தி மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள சாதி ஒழிப்புப் போராளி அயோத்தி தாச பண்டிதர் அவர்களின் சிலையைத் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.
- அப்போதைய மதராஸ் மாகாணத்தில், தேனாம்பேட்டை-ஆயிரம் விளக்கு பகுதியில் 1845 ஆம் ஆண்டு மே 20 ஆம் தேதியன்று அயோத்தி தாசர் பிறந்தார்.
- அவர் தமிழ், ஆங்கிலம், பாலி மற்றும் சமஸ்கிருதம் ஆகிய மொழிகளை கற்றவர் ஆவார்.
- தமிழன், திராவிடன் ஆகிய சொற்களை அரசியல் அடையாளமாக உருவாக்கிய முதல் நபர் ஆவார்.
- அயோத்தி தாச பண்டிதர் "திராவிடப் பேரொளி" மற்றும் 'தென்னிந்தியாவின் சமூகச் சீர்திருத்தங்களின் தந்தை' என்றும் அழைக்கப்படுகிறார்.
- அவர் 1885 ஆம் ஆண்டு ஜான் ரத்தினத்துடன் இணைந்து திராவிட பாண்டியன் என்ற இதழைத் தொடங்கினார்.
- 1907 ஆம் ஆண்டு 'ஒரு பைசா தமிழன்' என்ற தமிழ்ப் பத்திரிகையைத் தொடங்கினார்.
- அவர் 1898 ஆம் ஆண்டில், சென்னையில் 'சாக்கிய புத்த சங்கத்தை' நிறுவினார்.
- 1891 ஆம் ஆண்டில் திராவிட மகாஜன சபையையும் 1876 ஆம் ஆண்டில் அத்வைதானாந்த சபையையும் தொடங்கினார்.

## முதல் பிரிவு கல்வி நிறுவனமாக மதராஸ் பல்கலைக்கழகம்

- தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகாரச் சபையின் சமீபத்திய அங்கீகார வழங்கீட்டு சுற்றில், இந்தப் பல்கலைக்கழகம் 3.59 மதிப்பெண்களைப் பெற்ற நிலையில், இது முன்னதாக பெற்ற 3.32 என்ற மதிப்பெண்ணில் இருந்து பெற்ற ஒரு சமீபத்திய முன்னேற்றம் ஆகும்.
- பல்கலைக்கழக மானியக் குழுவானது, சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு ஒரு தரப் படுத்தப் பட்ட தன்னாட்சிக்கான ஒழுங்குமுறையைக் கொண்டு வந்தது.

- இந்த அங்கீகாரத்தின் முக்கிய நன்மை என்னவென்றால், முதல் பிரிவு பல்கலைக் கழகங்கள் ஆனது பல்கலைக்கழக மானியக் குழுவின் அனுமதியின்றி தனது கல்வித் திட்டங்களைத் தொடங்கலாம் என்பதோடு, மேலும் அது குறித்த அறிக்கையினைப் பல்கலைக்கழக மானியக் குழுவிற்கு மட்டுமே தெரிவிக்க வேண்டும்.
- பல்கலைக்கழக மானியக் குழுவின் (தரப்படுத்தப்பட்ட தன்னாட்சி ஒழுங்கு முறைகளை வழங்குவதற்கான பல்கலைக்கழகங்களின் வகைப்பாடு) 2018 ஆம் ஆண்டு குழுவானது, நாடு முழுவதும் உள்ள 60 நிறுவனங்களை முதல் பிரிவு கல்வி நிறுவனங்களாக அங்கீகரித்துள்ளது.

## R. வைஷாலி – தமிழ்நாட்டைச் சேர்ந்த சதுரங்க வீராங்கனை



- இந்தியாவில் கிராண்ட்மாஸ்டர் (GM) பட்டத்தைப் பெற்ற மூன்றாவது பெண்மணி என்ற பெருமையை இவர் பெற்றுள்ளார்.
- ஸ்பெயின் நாட்டில் நடைபெற்று வரும் லோபிரேகாட் ஓபன் போட்டியின் போது, 2,500 எலோ புள்ளிகளைப் பெற வேண்டும் என்ற இறுதி நிலைத் தகுதி நிபந்தனையினை அவர் நிறைவு செய்தார்.
- அவரது இளைய சகோதரர் R. பிரக்ஞானந்தா 2018 ஆம் ஆண்டில், அவரது 12 வயதில் கிராண்ட்மாஸ்டர் பட்டத்தைப் பெற்றார்.
- கிராண்ட்மாஸ்டர் பட்டத்தினைப் பெற்ற முதல் சகோதர-சகோதரி ஜோடியாக வைஷாலி மற்றும் பிரக்ஞானந்தா வரலாறு படைத்துள்ளனர்.
- கோனேரு ஹம்பி கிராண்ட்மாஸ்டர் பட்டத்தினை வென்ற முதல் இளம் நபர் ஆவார்.
- 2002 ஆம் ஆண்டில் அவரது 15வது வயதில் கிராண்ட்மாஸ்டர் பட்டத்தினை வென்று உலகின் மிக இளம் பெண் கிராண்ட்மாஸ்டர் வீராங்கனை என்ற பெருமையை அவர் பெற்றார்.
- மற்றொரு இந்திய பெண் கிராண்ட்மாஸ்டர் துரோணவல்லி ஹரிகா ஆவார்.

## ஸ்பர்ஷ் பாரதி


- ஸ்பர்ஷ் பாரதி என்பது சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் பேராசிரியரால் உருவாக்கப்பட்ட பாரதி எழுத்து வடிவின் ஒரு துணைப் பகுதியாகும்.
- இந்த 'இந்திய பிரெய்லி' எழுத்து முறையை இந்திய மொழிகளில் பயன்படுத்த இயலும்.

- அசல் பிரெய்லியில், ஒவ்வொரு சொல்லும் ஆறு புள்ளிகளுக்குள் பொருந்தும் வகையில் உள்ளது.
- ஆனால் ஸ்பர்ஷ் பாரதி எழுத்து வடிவம் ஆனது கோடுகள் மற்றும் புள்ளிகள் கொண்ட கலப்பு முறையைப் பயன்படுத்துகிறது.
- ஸ்பர்ஷ் பாரதி உள்ளுணர்வால் அறியப்படுகின்ற, காட்சி வடிவ எழுத்து வடிவமாகும்.




### 2023 ஆம் ஆண்டில் தமிழகத்தில் மின்சாரத் தேவை


- இந்த ஆண்டு ஜனவரி முதல் அக்டோபர் மாதம் வரையிலான 10 மாத காலப்பகுதியில் தமிழகத்தின் எரிசக்தி தேவையானது 7.5 சதவீதத்திற்கும் அதிகமாக அதிகரித்துள்ளது.
- தமிழக மாநிலத்தில் நுகரப்படும் எரிசக்தியில் நான்கில் ஒரு பங்கு நுகர்வினைக் கொண்ட சென்னை நகரத்தின் எரிசக்தித் தேவையானது 8 சதவீதத்திற்கும் அதிகமாக அதிகரித்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.
- எரிசக்தி நுகர்வானது தமிழக மாநிலத்தில் 6.38 சதவீதமும், சென்னை மாநகரில் 7.76 சதவீதமும் அதிகரித்துள்ளது.



## கல்கி சுப்பிரமணியம்

- திருநர்கள் ஆர்வலர் கல்கி சுப்பிரமணியம் அவர்கள், தேசிய திருநர்கள் சபையின் தெற்குப் பிராந்தியத்தின் பிரதிநிதியாக அறிவிக்கப்பட்டுள்ளார்.
- மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் இக்குழுவின் பதவி வழித் தலைவராக உள்ளார்.
- ஷ்ரத்தா A. ஜோஷி (மேற்குப் பிராந்தியம்), சோபா தாகூர் (வடக்குப் பிராந்தியம்), வித்யா (கிழக்குப் பிராந்தியம்) மற்றும் ரித்துபர்னா நியோக் (வடகிழக்குப் பிராந்தியம்) ஆகியோர் இக்குழுவில் இடம் பெற்றுள்ள இதர திருநர் பிரதிநிதிகள் ஆவர்.
- அபினா அஹர், ரவீணா பரிஹா, சாதனா மிஸ்ரா, அபர்ணா லலிங்கர், மற்றும் கிதி தாதனி ஆகிய ஐந்து வல்லுநர்களும் இந்தக் குழுவில் உள்ளனர்.

## மிக்சாங் புயல்




- இதற்கு மியான்மர் நாட்டினால் பெயரிடப் பட்டது.
- இந்திய வானிலை ஆய்வு மையம் மிக்சாங் ஆந்திரப் பிரதேச கடற்கரையைக் கடக்கும் வரை ‘வெப்ப மண்டலப் புயலாக’ (காற்றின் வேகம் மணிக்கு 62 கி.மீ. முதல் 87 கி.மீ. வரை) இருக்கும் என்று ஆரம்பத்தில் கணித்திருந்தது.
- ஆனால் பின்னர், அது ஒரு ‘தீவிர’ புயலின் தீவிரத்தினைக் கொண்டிருக்கும் என்று கணித்தது (காற்றின் வேகம் மணிக்கு 88 கி.மீ. முதல் 166 கி.மீ. வரை).
- இது பாபட்லா என்னுமிடத்திற்கு அருகில் தெற்கு ஆந்திரப் பிரதேசக் கடற்கரையைக் கடந்து சென்றது.
- இப்பகுதி ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள நெல்லூர் மற்றும் மசூலிப்பட்டினம் ஆகிய நகரங்களுக்கு இடையே உள்ளது.
- ஆந்திரக் கடற்கரையை கடந்த பிறகு, இந்த புயல் தொடர்ந்து வடமேற்கு திசையில் தெற்கு ஒடிசாவை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- இந்திய வானிலை ஆய்வு மையம் ஆனது அப்பகுதியில் 'ஆரஞ்சு' நிற எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது
- தட்பவெப்பவியல் ரீதியாக, வங்காள விரிகுடா மற்றும் அரபிக்கடலை உள்ளடக்கிய வட இந்தியப் பெருங்கடல் பகுதியில் ஒவ்வோர் ஆண்டும் சுமார் ஐந்து புயல்கள் உருவாகின்றன.
- இவற்றில் சராசரியாக நான்கு புயல்கள் வங்காள விரிகுடாவிலும், ஒன்று அரபிக் கடலிலும் உருவாகின்றன.

## இம்பேடியன்ஸ் கருப்புசாமி



- தமிழ்நாட்டின் களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகத்தில் இருந்து புதிய தாவர இனத்தை இந்தியத் தாவரவியல் ஆய்வு அமைப்பின் (BSI) ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- தென்னிந்திய ஆஞ்சியோஸ்பெர்ம்களின் வகை பிரிப்பில் மிகவும் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பிற்காக டாக்டர் எஸ் கருப்புசாமி (மதுரா கல்லூரி, தமிழ்நாடு) என்பவரின் பெயர் இதற்கு இடப்பட்டது.
- இம்பேடியன்ஸ் என்பது உலகளவில் 1,000க்கும் மேற்பட்ட இனங்களைக் கொண்ட ஒரு பரவலான பேரினம் என்ற நிலையில், அதில் இந்தியாவில் 280க்கும் மேற்பட்ட இனங்கள் காணப்படுகின்றன.
- இது வெப்பமண்டல ஆப்பிரிக்கா, மடகாஸ்கர், இந்தியா, இலங்கை மற்றும் சீனாவில் பரவலாக உள்ளது.
- தற்போது புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட இனம் அறியப்பட்ட அனைத்து வகையான இம்பேடியன்களிலிருந்தும் வேறுபடுகின்றன.
- இது இம்பேடியன்ஸ் பைகார்னிஸ் இனத்தை ஒத்ததாக உள்ளது, ஆனால் இலை அளவு, பூக்களின் எண்ணிக்கை, நீளம் மற்றும் பூ அளவு ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபடுகிறது.

## பிபின் ராவத் நினைவு சின்னம்


- தமிழ்நாட்டின் குன்னூரில் உள்ள நஞ்சப்ப சத்திரத்தில் ஸ்மிருத்திகா என்ற நினைவு கல் நிறுவப்பட்டது.
- இது, 2021 ஆம் ஆண்டில் அப்போதையப் பாதுகாப்புப் படைகளின் (சிடிஎஸ்) தலைமைத் தளபதி ஜெனரல் பிபின் ராவத் மற்றும் 13 பேருடன் சென்ற ஹெலிகாப்டர் விபத்துக்குள்ளாகி இறந்த தளம் ஆகும்.

- இது ஊட்டியின் வெலிங்டனில் உள்ள மதராஸ் படைப்பிரிவு மையத்தால் கட்டப்பட்டது.



## சென்னைப் படுகை திட்டத்திற்கான ஒருங்கிணைந்த நகர்ப்புற வெள்ள மேலாண்மை நடவடிக்கைகள்

- தேசியப் பேரிடர் தணிப்பு நிதியின் (NDMF) கீழ் சென்னைக்கான ஒரு லட்சிய நகர்ப்புற வெள்ளத் தணிப்பு திட்டத்தை மத்திய அரசு அனுமதித்துள்ளது.
- சென்னையில் ஏற்பட்ட பெருவெள்ளத்திற்குப் பிறகு, நகர்ப்புற வெள்ளத்தைச் சமாளிக்கும் இந்தியாவின் முதல் திட்டம் இதுவாகும்.




## 2023 ஆம் ஆண்டில் சென்னையில் மழையின் அளவு

- 2015 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மழை மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளப் பெருக்கிற்குப் பிறகு, 2023 ஆம் ஆண்டில் சென்னையில் அதிக அளவு மழை பெய்து உள்ளது.
- 2023 டிசம்பர் 2 மற்றும் 4 ஆகிய தேதிகளுக்கு இடையில் நுங்கம்பாக்கம் மற்றும் மீனம்பாக்கம் மழைக் கண்காணிப்பு மையங்களில் 53 செமீ மற்றும் 52 செமீ மழை பதிவாகியுள்ளது.
- டிசம்பர் 3 முதல் 5 வரை சென்னையில் மொத்தம் 46 செ.மீ மழை பதிவாகியுள்ளது.

- டிசம்பர் 1, 2015 அன்று, 24 மணி நேரத்தில் 494 மிமீ மழை பெய்ததால், நகரம் பெரும் வெள்ளத்தில் மூழ்கியது.
- டிசம்பர் 2, 2015 அன்று சென்னை நகரம் பேரிடர் மண்டலமாக அறிவிக்கப்பட்டது.
- 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், நகரம் ஒட்டு மொத்தமாக 1049.3 மிமீ மழையைப் பெற்ற நிலையில், இது 1918 ஆம் ஆண்டிற்குப் பிறகு பெறப்பட்ட அதிகபட்ச மழை ஆகும்.

**Top 24hrs Rainfall in Chennai City (Nungambakkam)**

| S.N | Date | 24 hrs Rainfall in mm |
|---|---|---|
| 1 | 21st October,1846 | 550 |
| 2 | 24th October 1857 | 460 |
| 3 | 25th November 1976 | 452 |
| 4 | 14th June 1996 | 347 |
| 5 | 13th November 1985 | 329 |
| 6 | 2nd December **2015** | 294 |
| 7 | 17th February 1964 | 294 |
| 8 | 22nd October 1969 | 280 |
| 9 | 27th October 2005 | 273 |
| 10 | 10th December 1901 | 262 |
| 11 | 12th November 1985 | 249 |
| 12 | 16th November **2015** | 247 |
| 13 | 13th November 1984 | 246 |
| 14 | 22nd May 1952 | 244 |
| 15 | 5th December **2023** | 238 |
| 16 | 16th November 1922 | 236 |
| 17 | 3rd December 2005 | 234 |
| 18 | 28th October 1902 | 233 |
| 19 | 4th December **2023** | 230 |
| 20 | 7th November **2021** | 215 |
| 21 | 17th May 1943 | 215 |
| 22 | 26th December 1978 | 203 |
| 23 | 31st December **2021** | 201 |

## உயர்நீதிமன்றத்திற்கான சட்ட அதிகாரிகள் நியமனம்

- சட்ட அதிகாரிகளின் நியமனங்களுக்கு தகுதி மட்டுமே ஒரே தேர்வு முறையாக இருக்க வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் கூறியுள்ளது.
- அத்தகைய நியமனங்களில் கிடைமட்ட/ செங்குத்து இடஒதுக்கீடு விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டியதில்லை.
- மிகவும் திறன் வாய்ந்த, தகுதியுள்ள மற்றும் திறன் மிக்க வழக்கறிஞர்களை மட்டுமே நீதிமன்றங்களில் அரசின் சார்பாக வாதிடுவதற்கு என்று நியமிப்பதற்கு அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது.
- அரசாங்கத்திற்கும் சட்ட அதிகாரிக்கும் இடையிலான உறவு ஒரு முதலாளி மற்றும் பணியாள் இடையேயான தொடர்பு போன்றதல்ல, அது முற்றிலும் தொழில்முறை சார்ந்ததாகும்.

- அரசாங்கத்தினால் பணியமர்த்தப்பட்ட சட்ட அதிகாரிகள் ஒரு குடிமை சார்ந்தப் பதவியை வகிக்காததால், அரசியலமைப்பின் 16(4) வது சட்டப் பிரிவு அவர்களுக்குப் பொருந்தாது.

**SCs, STs & OBCs IN LOWER JUDICIARY**

| States | SC Judges | % of total | ST Judges | % of total | OBCs | % of total | Total working strength |
|---|---|---|---|---|---|---|---|
| MP | 183 | 14 | 192 | 14 | 186 | 14 | 1,328 |
| Delhi | 37 | 8 | 06 | 1.24 | NA | NA | 482 |
| Odisha | 65 | 15 | 90 | 20 | 45 | 10 | 441 |
| Punjab | 91 | 23 | Nil | Nil | 56 | 14 | 398 |
| Chhattisgarh | 59 | 15 | 97 | 25 | 72 | 18 | 395 |
| Haryana | 70 | 20 | Nil | Nil | 52 | 15 | 348 |
| Assam | 13 | 7 | 20 | 12 | NA | NA | 174 |
| Jharkhand | 17 | 11 | 47 | 31 | 26 | 17 | 153 |
| Himachal | 20 | 14 | 06 | 4 | 08 | 5 | 148 |
| Tripura | 08 | 10 | 14 | 17 | NA | NA | 83 |
| Sikkim | NIL | NIL | 06 | 26 | 12 | 52 | 23 |
| Total | 563 | 14 | 478 | 12 | 457 | 12 | 3,973 |

## காவேரி நதிப் பல்லுயிர்ப் பெருக்கம் மற்றும் நீரியல் நிலை




- பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் கல்விக் கழகத்தின் (IISc) அறிவியலாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் "காவிரி நதி: நில பயன்பாட்டு இயக்கவியல், பல்லுயிர்ப் பெருக்கம் மற்றும் நீரியல் நிலை" என்ற தலைப்பிலான கட்டுரையினை வெளியிட்டு உள்ளனர்.
- 1965 முதல் 2016 ஆம் ஆண்டு வரையிலான 50 ஆண்டுகளில் காவிரிப் படுகையில் சுமார் 12,850 சதுர கிலோமீட்டர் நிலப்பரப்பில் காணப்பட்ட இயற்கைத் தாவரங்கள் அழிந்து விட்டன.

- காவிரி நதிப் படுகையில் அமைந்த மற்ற மாநிலங்களை விட கர்நாடக மாநிலம் அதிகளவிலான நிலப்பரப்பை இழந்துள்ளது.
- கர்நாடகம் இழந்துள்ள நிலப்பரப்பு, மொத்தமாக அழிந்த நிலப்பரப்புகளின் நான்கில் மூன்று பங்காகும் என்ற நிலையில், அழிந்த நிலப்பரப்புகளில் தமிழ்நாட்டில் அமைந்த பகுதிகளின் பங்கு ஐந்தில் ஒரு பங்காகும்.
- இந்த ஆண்டுகளில் இயற்கைத் தாவரங்களின் பரப்பளவு சுமார் 46% குறைந்துள்ளது.
- அடர்ந்தத் தாவரப் பரவலின் குறைவு அளவு 35% (6,123 சதுர கிமீ) மற்றும் சிதைந்த தாவரப் பரவல் 63% (6,727 சதுர கிமீ) ஆகும்.
- 1928 ஆம் ஆண்டில் 6,556 சதுர கிலோமீட்டராக இருந்த நீர்ப்பாசனப் பரப்பளவு தற்போது 20,233 சதுர கிலோமீட்டராக உயர்ந்துள்ளது.
- கர்நாடகாவில் 1,193 சதுர கி.மீ ஆக இருந்த நீர்ப்பாசனப் பரப்பளவு 8,497 சதுர கி.மீ. ஆக உயர்ந்துள்ளதால் இரு மாநிலங்களுக்கும் தண்ணீர்த் தேவை அதிகரித்துள்ளது.

## தமிழ்நாடு அன்லிமிடெட் 2023

- ‘தமிழ்நாடு அன்லிமிடெட்’ என்பது வழிகாட்டுதல் தமிழ்நாடு முகமையுடன் இணைந்து தி இந்து பத்திரிக்கை நிறுவனம் ஏற்பாடு செய்த ஒரு நாள் அளவிலான உச்சிமாநாடு ஆகும்.
- இது தமிழ்நாட்டை ஒரு விரும்பத்தகு வளர்ச்சி சார் இடமாக உருவாக்குவதில் பல்வேறு துறைகளின் திறனை எடுத்துக் காட்டுகிறது.
- தமிழ்நாட்டில் உள்ள எட்டு மாவட்டங்கள் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) சுமார் 50% பங்கினைக் கொண்டுள்ளன.
- இதனுடன் ஒப்பிடுகையில், கர்நாடகா மற்றும் மகாராஷ்டிராவில் உள்ள இரண்டு முதல் மூன்று மாவட்டங்கள் அந்தந்த மாநிலங்களின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் பெரும் பகுதியைப் பங்களிக்கின்றன.
- தமிழ்நாட்டின் 50% நகரமயமாக்கலுக்கு 15 மாவட்டங்கள் பங்களித்துள்ளன.
- ஓசூர் மண்டலமானது மின்சார வாகன மையமாகவும் தூத்துக்குடி பசுமை ஹைட்ரஜன் மையமாகவும் உருபெற உள்ளன.

## தமிழகத்தின் சொந்த வரி வருவாய் 2023



**Looking up**

The State derives its own revenue, called State's own tax revenue (SOTR), from various components, including excise duty on liquor. SOTR accounts for 70% of Tamil Nadu's total revenue

State's own tax revenue (in ₹ crore)

| | September 2020 | September 2019 | Change in % |
|---|---|---|---|
| State Goods and Services Tax | 3,219.03 | 2,997.84 | 7.4 |
| Stamp and registration fees | 1,102.09 | 978.65 | 12.6 |
| Land revenue | 17.16 | 4.27 | 301.87 |
| Taxes on sales, trade, etc. | 3,887.20 | 3,764.06 | 3.27 |
| Excise duties | 712.74 | 595.74 | 19.64 |
| **Total** | **8,938.22** | **8,340.56** | **7.2** |

SOURCE: COMPTROLLER AND AUDITOR GENERAL (CAG)



- இந்திய ரிசர்வ் வங்கி, 'மாநில நிதி: 2023-24 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை ஆய்வு' என்ற தலைப்பிலான ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- தமிழகத்தின் ஒட்டுமொத்த வரி வருவாயில், மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் (SOTR) பங்களிப்பு நிலையாக 70 சதவீதத்திற்கு மேல் உள்ளது.
- இந்தத் தரவுகளின்படி, சரக்கு மற்றும் சேவை வரி அறிமுகத்திற்கு முந்தைய கால கட்டமான 2015-16 ஆம் ஆண்டு முதல் 2016-17 ஆம் ஆண்டு வரையிலான கால கட்டத்தில் தமிழ்நாட்டின் மொத்த வரி வருவாயில் 78.8% மாநிலத்தின் சொந்த வரி வருவாய் ஆகும்.
- 2018-19 முதல் 2019-20 ஆம் ஆண்டு வரையிலான சரக்கு மற்றும் சேவை வரி அறிமுகத்திற்கு பிந்தைய மற்றும் கோவிட் பெருந்தொற்றிற்கு முந்தைய கால கட்டத்தில் மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் பங்கு 79.1% ஆக இருந்தது.
- கோவிட் பெருந்தொற்றிற்கு பின், மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் பங்கு 78.9% ஆக இருந்தது.
- ஹரியானா, மகாராஷ்டிரா, தெலுங்கானா, தமிழ்நாடு, குஜராத், கர்நாடகா, கேரளா மற்றும் பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் மொத்த வரி வருவாயில் 70 சதவீதத்திற்கும் அதிகமாக SOTR உள்ளது.
- பீகார் மற்றும் ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களில் இது 50 சதவீதத்திற்கும் குறைவு ஆகும்.
- உத்தரப் பிரதேசத்தின் மொத்த வரி வருவாயில் SOTR பங்கு 45.6% முதல் 54% வரை இருந்தது, அதே சமயம் மத்தியப் பிரதேசத்தின் மொத்த வரி வருவாயில் SOTR பங்கு 50 முதல் 51% வரை ஆகும்.


## தமிழ்நாட்டிற்கான அந்நிய நேரடி முதலீடு

- 2019 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரையிலான காலக்கட்டத்தில் இருந்து கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒட்டு மொத்த அந்நிய நேரடி முதலீடு (FDI) சுமார் 10 பில்லியன் டாலரை எட்டியுள்ளது.
- நடப்பு நிதியாண்டின் செப்டம்பர் மாதம் வரை, 1.3 பில்லியன் டாலர் மதிப்பிலான அந்நிய நேரடி முதலீடு அம்மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- 2022-23 ஆம் நிதியாண்டில், இம்மாநிலத்தில் 2.17 பில்லியன் டாலர் மதிப்பிலான அந்நிய நேரடி முதலீடு மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் இது முந்தைய ஆண்டில் மேற் கொள்ளப்பட்ட 3 பில்லியன் டாலரை விடக் குறைவு ஆகும்.
- 2019 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் மற்றும் 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஆகியவற்றிற்கு இடைப்பட்ட காலத்தில் அந்நிய நேரடி முதலீட்டை ஈர்ப்பதில் மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் குஜராத் ஆகியவற்றைத் தொடர்ந்து தமிழ்நாடு மாநிலம் நான்காவது இடத்தில் உள்ளது.
- தமிழ்நாடு மாநிலத்திற்கு அடுத்தபடியாக ஹரியானா மற்றும் தெலுங்கானா ஆகிய சிறிய மாநிலங்கள் இடம் பெற்றுள்ளன.
- தமிழ்நாடு உலகளாவிய முதலீட்டாளர்கள் சந்திப்பானது 2024 ஆம் ஆண்டு ஜனவரி 07 மற்றும் 08 தேதிகளில் சென்னையில் நடைபெற உள்ளது.

| State | FDI inflow in $ b (Oct 2019 to Sept 2023) |
|---|---|
| Maharashtra | 61.92 |
| Karnataka | 47.30 |
| Gujarat | 34.16 |
| Tamil Nadu | 9.85 |
| Haryana | 8.79 |
| Telangana | 5.92 |

## தமிழகப் பத்திர வெளியீடுகளில் நிலுவையில் உள்ள தொகைகள்


- பத்திரங்கள் வெளியிடுவதன் மூலம் திரட்டப்பட்ட நிதியில், 2023 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் தமிழ்நாடு மாநிலத்தில் சுமார் 5.38 லட்சம் கோடி ரூபாய் நிலுவையில் உள்ளது.
- இதில் சுமார் 38.5%, அதாவது 2.07 லட்சம் கோடி ரூபாய் நிலுவைத் தொகைகள் 1 முதல் 5 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டியவை ஆகும்.
- நிலுவைத் தொகையில் 28.6% ஆனது 5 முதல் 10 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டியவை ஆகும்.
- 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் இறுதியில் பத்திரங்கள் வெளியிடப்பட்டதில் இருந்து உருவான நிலுவைக் கடனில், 16.4% ஆனது 20 ஆண்டுகளுக்குப் பிறகு நிறைவு காலத்தினை அடைகிற வேளையில் 9.7% ஆனது 10 முதல் 20 ஆண்டுகளுக்குள் மற்றும் 6.9% ஆனது ஓராண்டிற்குள் அதன் நிறைவுக் காலத்தினை அடைகிறது.
- 2023 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில், மொத்த நிலுவைத் தொகை 7.41 லட்சம் கோடி ரூபாயாக இருந்தது.



## மக்களுடன் முதல்வர் திட்டம்

- தமிழக முதல்வர் அவர்கள், 'மக்களுடன் முதல்வர்' திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- மக்கள் தாக்கல் செய்யும் குறைகள் அல்லது மனுக்களை 30 நாட்களுக்குள் தரமான முறையில் தீர்த்து வைப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மாநிலத்தில் உள்ள 38 மாவட்டங்களிலும் பல்வேறு துறைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பான மனுக்களைச் சேகரிப்பதற்காக கட்டம் வாரியாக சிறப்பு முகாம்கள் இதன் படி நடத்தப் படும்.
- முதல் கட்டமாக மழையால் பாதிக்கப்பட்ட சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.

## 2023 ஆம் ஆண்டில் தென் தமிழகத்தில் பதிவான வரலாறு காணாத மழை



| South Tamil Nadu | Rainfall recorded (in cm) |
|---|---|
| Kayalpattinam (dist. Thoothukudi) | 95 |
| Tiruchendur (dist. Thoothukudi) | 69 |
| Srivailkuntam (dist. Thoothukudi) | 62 |
| Moolaikaraipatti (dist. Tirunelveli) | 62 |
| Manjolai (dist. Tirunelveli) | 55 |

We are there to Alert and Aware you.

- தமிழகத்தின் தென் மாவட்டங்களில் 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 17 ஆம் தேதியன்று வரலாறு காணாத அளவிலான மழைப்பொழிவு பதிவானது.
- 39 பகுதிகளில் மிக அதிக மழை பெய்துள்ளது.
- தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டினத்தில் 95 சென்டிமீட்டர் மழை பதிவாகியுள்ளது.
- தூத்துக்குடி மாவட்டத்தில் திருச்செந்தூர் மற்றும் ஸ்ரீவைகுண்டம் ஆகிய பகுதிகளில் முறையே 69 செ.மீ மற்றும் 62 செ.மீ மழை பதிவாகியுள்ளது.
- திருநெல்வேலி மாவட்டம் மாஞ்சோலையில் 55 சென்டிமீட்டரும், மூலைக்கரைப் பட்டியில் 61 சென்டிமீட்டரும் மழை பதிவாகியுள்ளன.
- 1992 ஆம் ஆண்டில் காக்காச்சியில் (மாஞ்சோலை) 96.5 சென்டிமீட்டர் மழை பதிவானதற்குப் பிறகு இரண்டாவது அதிக மழைப்பொழிவு இந்த ஆண்டில் பதிவாகி உள்ளது.
- 21 சென்டிமீட்டருக்கு மேல் மற்றும் அதற்கு மேற்பட்ட மழைப்பொழிவு ஆனது மிகவும் கனமழை என்று வகைப்படுத்தப்படுகிறது.
- 12 முதல் 20 சென்டிமீட்டர் வரையிலான மழைப்பொழிவு அதி கனமழை எனவும், 7 முதல் 11 சென்டிமீட்டர் வரையிலான மழைப்பொழிவு கனமழை எனவும் விவரிக்கப் படுகிறது.

## தண்டனை அடிப்படையிலான தகுதி நீக்கம்

- பல்வேறு சொத்துக் குவிப்பு வழக்குகளுள் ஒன்றில் தமிழக உயர்கல்வி அமைச்சர் K.பொன்முடியை குற்றவாளி என சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 8(1)வது பிரிவின் படி, ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்ட ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு அந்தக் குற்றத்திற்கான தண்டனையாக அபராதம் மட்டுமே நிர்ணயிக்கப்பட்டு இருந்தால், அந்தக் குற்றம் நிரூபிக்கப்பட்ட நாளிலிருந்து ஆறு ஆண்டுகளுக்கு அவர் தகுதி நீக்கம் செய்யப்பட வேண்டும்.
- அதே நேரத்தில், ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஏதேனும் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டால், அவர் குற்றம் நிரூபிக்கப்பட்ட நாளிலிருந்து அவரது முழு சிறைவாசம் முடிந்து விடுதலை செய்யப்பட்ட நாளிலிருந்து மேலும் ஆறு ஆண்டுகள் வரையிலும் தகுதி நீக்கம் செய்யப்பட வேண்டும்.
- தண்டனை நிறுத்தப்படுதல் அல்லது குற்றமற்றவர் என்று நிரூபிக்கப்பட்டால் மட்டுமே அந்த தகுதி நீக்கம் தவிர்க்கப்படும்.
- கடந்த 10 ஆண்டுகளில் தகுதி நீக்கத்தை எதிர்கொள்ளும் மூன்றாவது தமிழக சட்ட மன்ற உறுப்பினர் இவர் ஆவார்.
- 2014 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் தகுதி நீக்கம் செய்யப்பட்ட முதல் சட்டமன்ற உறுப்பினர் ஜெயலலிதா ஆவார், அவரைத் தொடர்ந்து முன்னாள் விளையாட்டு மற்றும் இளையோர் நலத்துறை அமைச்சர் P. பாலகிருஷ்ணா ரெட்டி தகுதி நீக்கம் (2019) செய்யப்பட்டார்.

**WHAT THE REPRESENTATION OF THE PEOPLE ACT SAYS**

**SECTION 8(1)** A person convicted for promoting enmity between different groups, rape, terrorist acts, insulting national flag etc stands disqualified for six years on mere conviction.

**SECTION 8(2)** A person convicted for hoarding, dowry offences etc. incurs disqualification if he is sentenced to at least six months for the offences. The bar continues for six years after release from jail.

**SECTION 8(3)** A person convicted of any other offence incurs disqualification if he is sentenced to an imprisonment of not less than two years. The disqualification continues till six years after release.

**SECTION 8(4)** Protects sitting MPs and MLAs from being disqualification under the above provisions. If they file an appeal within three months, they can continue as a member of the House till the completion of the term or till the decision on appeal, whichever is earlier.

## தமிழ்நாடு மாநிலத்தின் சொந்த வரி வருவாய்ப் பாதிப்புகள்

- மொத்த வருவாயில் 70 சதவீதத்திற்கும் மேலான பங்கினை அளிக்கும் தமிழகத்தின் சொந்த வரி வருவாய் ஆனது, சென்னை மற்றும் தென் மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தால் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது.
- நிதிநிலை அறிக்கை மதிப்பீட்டின்படி, 2023-24 ஆம் ஆண்டிற்கான மாநிலத்தின் சொந்த வரி வருவாய் (SOTR) 1,81,182 கோடி ரூபாயாக இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- இது 2022-23 ஆம் ஆண்டில் இருந்த அளவை விட 20.61% வளர்ச்சியாகும்.
- தமிழ்நாட்டின் மொத்த வருவாயில் 78.9% SOTR ஆகும்.

- 2023-24 ஆம் ஆண்டில் இதுவரையில் (2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வரை), தமிழகத்தின் சொந்த வரி வருவாய் 84,930.9 கோடி ரூபாயாக இருந்தது.
- இது நிதிநிலை அறிக்கை மதிப்பீட்டில் சுமார் 46.88% ஆகும்.

**A substantial rise**

The tax collection in Tamil Nadu has increased by over 50% in the first quarter of fiscal 2023

| | Q1 2023 | Q1 2022 | % change |
|---|---|---|---|
| State Goods and Services Tax | 13692.84 | 9224.11 | 48.4 |
| Stamps and Registration Fees | 4457.95 | 2314.46 | 92.6 |
| Land Revenue | 58.46 | 38.07 | 53.5 |
| Taxes on Sales, Trade etc | 13119.24 | 9484.81 | 38.3 |
| State Excise Duties | 2594.55 | 1199.23 | 116.3 |
| **Total** | **33923.04** | **22260.68** | **52.3** |

(IN ₹ CRORE) SOURCE: COMPTROLLER AND AUDITOR GENERAL OF INDIA

## எண்ணூர் சிற்றோடை எண்ணெய் கசிவு 2023

- சென்னை பெட்ரோலியக் கழக (CPCL) நிறுவனத்தில் இருந்து பெருமளவில் எண்ணெய் கசிவு ஏற்பட்டதால், பக்கிங்ஹாம் கால்வாய் மற்றும் எண்ணூர் சிற்றோடை (சிறுகுடா) பகுதியில் எண்ணெய் படலம் பரவியது.
- கொசத்தலையார் ஆற்றின் ஒரு பகுதியான எண்ணூர் சிற்றோடை, IVவது கடலோர ஒழுங்குமுறை மண்டலம் ஆக வரையறுக்கப்பட்டுள்ளது.
- CPCL நிறுவனத்தில் போதிய கழிவு நீர் மேலாண்மை இல்லாததால், மிக்ஜாங்க் புயலால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் போது எண்ணெய் கலந்த நீர் வெளியானது.
- 1958 ஆம் ஆண்டு வணிகக் கப்பல் சட்டத்தின் 356J வது பிரிவு ஆனது ஒரு கப்பல் நிர்ணயிக்கப் பட்ட விதிகளைப் பூர்த்தி செய்யவில்லை என்பதன் அடிப்படையில் அதனை மாசினை ஏற்படுத்தும் கப்பல் என்று அறிவித்து அதன் உரிமையாளருக்கு அறிக்கை அனுப்பும் அதிகாரத்தினை மத்திய அரசிற்கு வழங்குகிறது.
- அதே சட்டத்தின் 356K என்ற பிரிவானது, 356J என்ற ஒரு பிரிவின் கீழ் ஒரு தனிநபருக்கு அறிக்கை அனுப்பப்பட்ட பிறகு, அதற்கு இணங்கத் தவறினால், மத்திய அரசு அந்த நபரைக் குற்றவாளியாக அறிவிக்க முடியும் என்று கூறுகிறது.



## 1923 ஆம் ஆண்டு மழைப் பொழிவு

A HUNDRED YEARS AGO DECEMBER 20, 1923

### Madura floods

Madura, Dec. 19: There have been heavy floods in Tambaraparani river for the last four days. Besides, a few big tanks in the district have breached. Portions of Tinnevelly town, Sanniasigramam, Kailasapuram, Veeraraghavapuram, Sindupundurai are 3 to 5 feet under water. Tinnevelly bridge Srivaikuntam, Tiruchendur, Alwartirunagari, and some other Railway stations have been under water for the last three days. Station records, staff quarters, and property have all been washed away. Srivaikuntam Railway Station is surrounded by water to the extent of about four miles on both sides. All communications beyond Srivaikuntam have been cut off. Several telegraph posts have been washed away and the railway lines have sunk into earth. From Tenkasi upto Trivandrum the Railway line is unimpaired.


- 1923 ஆம் ஆண்டு தாமிரபரணியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு திருநெல்வேலியில் இரண்டு நாட்களில் 42.3 சென்டி மீட்டருக்கு மேல் பெய்த மழையால் ஏற்பட்டதாகும்.
- இந்த மழைப்பொழிவு தற்போது தென் தமிழகம் எதிர்கொண்டதைப் போன்ற அதே சேதத்தை திருநெல்வேலிக்கும் ஏற்படுத்தியுள்ளது.
- ஏறக்குறைய இதே காலக்கட்டத்தில், ஒரு நூற்றாண்டுக்கு முன், ஸ்ரீவைகுண்டம் இரயில் நிலையம் மற்றும் இதர நிலையங்கள் நான்கு நாட்கள் வெள்ளத்தில் மூழ்கின.
- 1923 ஆம் ஆண்டில் திருநெல்வேலி மற்றும் கடையம் ஆகிய பகுதிகளில் ஒரு வாரத்தில் முறையே 44.2 செ.மீ மற்றும் 43.4 செ.மீ மழை பெய்துள்ளது.
- இதேபோல், பாளையங்கோட்டை (37.8 செ.மீ.), தென்காசி (37.2 செ.மீ.) ஆகிய இடங்களில் கனமழை பெய்துள்ளது.
- இந்த ஆண்டு டிசம்பர் 17 மற்றும் டிசம்பர் 18 ஆகிய தேதிகளில் காயல்பட்டினத்தில் சுமார் 118 செ.மீ மழை பெய்துள்ளது.
- குலசேகரப்பட்டினத்தில் 1901 மற்றும் 1970 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 44 முறை 10 செ.மீ. அல்லது அதற்கு மேற்பட்ட அளவிலான மழை பதிவாகியுள்ளது.
- இதேபோல், திருச்செந்தூரில் 1914 முதல் 1970 ஆம் ஆண்டு வரையிலான காலக் கட்டத்தில் 47 முறை 10 செ.மீ. அளவிலான மழை பதிவாகியுள்ளது.

## 6வது கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகள்

- 6வது கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகள் ஆனது, 2024 ஆம் ஆண்டு ஜனவரி 19 முதல் 31 ஆம் தேதி வரை தமிழ்நாட்டில் நடைபெற உள்ளது.

- மத்திய இளையோர் விவகாரம் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் மற்றும் தமிழக விளையாட்டுத் துறை அமைச்சர் ஆகியோர் இணைந்து சென்னையில் நடைபெற உள்ள 6வது கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிக்கான உருவச் சின்னத்தை வெளியிட்டனர்.
- 6வது கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிக்கான அதிகாரப்பூர்வ முத்திரைச் சின்னம், சின்னம் பதித்த ஆடை, சுடர் மற்றும் கருப்பொருள் கொண்ட பாடல் ஆகியவையும் இந்த விழாவில் வெளியிடப்பட்டன.
- இந்த விளையாட்டுப் போட்டிகளின் உருவச் சின்னம் வீரமங்கை வேலு நாச்சியார் ஆகும்.
- இந்த விளையாட்டுப் போட்டிகளில் முதன்முறையாக ஸ்குவாஷ் போட்டி சேர்க்கப்பட உள்ளது.

## பருவநிலை நெகிழ்திறனுடன் கூடிய நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்




- உலக வங்கியின் நிர்வாக இயக்குநர்கள் குழுவானது, 300 மில்லியன் டாலர் மதிப்பிலான தமிழ்நாடு பருவநிலை நெகிழ்திறனுடன் கூடிய நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இது நகரங்களில் வாழும் சுமார் 2 மில்லியன் மக்களுக்கு தண்ணீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் சேவைகளுக்கான சிறந்த அணுகலை வழங்கும்.
- இது 21 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (ULBs) தங்கள் சேவை வழங்கீட்டு முறைகளை மேம்படுத்தவும், நுகர்வோருக்குத் தரமான மற்றும் திறன் மிக்க நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சேவைகளை வழங்கவும் உதவும்.

- சர்வதேச மறுக்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு வங்கி ஆனது, தொழில்நுட்ப உதவியை வழங்குவதோடு, திட்டத்திற்கான பலன்களை அடைவதற்காக நேரடியாக நிதி வழங்குவதற்கு முதலீடுகள் சார்ந்த திட்ட நிதியளித்தல் வசதியுடன் (IPF) சேர்த்து, பலன் சார்ந்து தொடங்கப்படும் திட்டங்களுக்கு நிதியளித்தல் வசதியை (PforR) பயன்படுத்த உள்ளது.
- இந்தத் திட்டத்திற்கு வழங்கப்படும் கடனானது 32 ஆண்டுகள் நிறைவு காலம் மற்றும் 7 ஆண்டுகள் சலுகைக் காலத்தினை கொண்டுள்ளது.

## முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட முக வடிவமைப்பு பதிய அமைப்புகள்



- சென்னையின் இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனம் ஆனது, கறுப்பு பூஞ்சைத் தொற்றினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்காக முப்பரிமாண முறையில் அச்சிடப் பட்ட முக வடிவமைப்பு பதிய அமைப்புகளை உருவாக்கியுள்ளது.
- இந்த நிலையானது, கோவிட்-19 பாதிப்பு கொண்ட நோயாளிகள், கட்டுப்பாடற்ற நீரிழிவு நோயாளிகள், HIV/AIDS மற்றும் பிற மருத்துவ பாதிப்புகள் ஆகியவற்றில் பரவலாக உள்ளது.
- மியூகோர்மைகோசிஸ் என்றும் அழைக்கப்படுகின்ற கறுப்பு பூஞ்சைத் தொற்று நோய் ஆனது, பாதிக்கப்பட்ட நபர் அவர்களின் முக வடிவமைப்பு அம்சங்களை இழக்க நேரிடும் என்பதால் மோசமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது.
- பெருந்தொற்று காலத்திற்குப் பிறகு இந்தியாவில் சுமார் 60,000 மியூகோர்மைகோசிஸ் பாதிப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- இந்த நோயினால் கடுமையாக பாதிக்கப்பட்ட நபர்களில், இந்தப் பூஞ்சையானது முகத்தின் திசுக்களில் ஊடுருவி, முக கட்டமைப்பு அழுகல் மற்றும் சிதைவை ஏற்படுத்துகிறது.

## திரட்டப்படும் தொழிலாளர்களுக்கான நல வாரியம்

- தமிழ்நாடு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையானது, பணித்தளம் அடிப்படையில் இணையதளம் மூலம் திரட்டப்படும் தொழிலாளர்களுக்கான நல வாரியத்தினை அமைத்துள்ளது.
- இது நிகழ்நிலையில் உணவு விநியோகம் மற்றும் வாடகை ஊர்தி திரட்டிகள் உள்ளிட்ட மின் வணிகச் சேவைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு சேவை செய்யும் பணிகளை மேற்கொள்ளும்.
- இந்த நல வாரியத்தில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட அளவில் தொழிலாளர்கள் பதிவு செய்வார்கள் என தொழிலாளர் துறை எதிர்பார்க்கிறது.




# தேசியச் செய்திகள்

## PIDF திட்டத்தின் கீழ் பிரதான் மந்திரி விஸ்வகர்மா

- கொடுப்பனவு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (PIDF) திட்டத்தின் கீழ் பிரதான் மந்திரி விஸ்வகர்மா திட்டத்தினை சேர்க்க இந்திய ரிசர்வ் வங்கி முடிவு செய்துள்ளது.
- இது அந்தத் திட்டம் அமலில் உள்ள காலத்தை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிக்கிறது.
- PIDF திட்டம், நேரடி விற்பனை மைய இயந்திரம் (PoS), விரைவு தகவல் (QR) குறியீடுகள் போன்ற கட்டண ஏற்பு உள்கட்டமைப்புகளை மூன்றாம் நிலை முதல் ஆறாம் நிலை மையங்கள், வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் ஜம்மு & காஷ்மீர் மற்றும் லடாக் ஒன்றியப் பிரதேசங்களில் பயன்படுத்த ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- பிரதான் மந்திரி விஸ்வகர்மா திட்டம் ஆனது, கைவினைஞர்களுக்கு வழங்கப்படும் கடன்களுக்கு 8% வரை மானியம் வழங்குவதற்காக முன்மொழியப்பட்டது.

## கட்டாய உயர் அழுத்த உயிரி எரிவாயு கலப்பு நிர்ணயம்

- உயர் அழுத்தத்தில் நிரப்பப்பட்ட உயிரி எரிவாயுவை (CBG) நகர எரிவாயு விநியோகம் (CGD) துறையின் போக்குவரத்து மற்றும் உள்நாட்டுப் பிரிவுகளில் படிப்படியாக கட்டாயமாகக் கலப்பு செய்வதற்கான செயல் திட்டத்தினை மத்திய அரசு அறிவித்து உள்ளது.
- இந்த முடிவானது, உயர் அழுத்தத்தில் நிரப்பப்பட்ட உயிரி எரிவாயுவின் உற்பத்தி மற்றும் நுகர்வை அதிகரிக்கும் என்று அரசு எதிர்பார்த்துள்ளது.

- மொத்த உயர் அழுத்தத்தில் நிரப்பப்பட்ட இயற்கை எரிவாயு மற்றும் உள்நாட்டு குழாய் வழி இயற்கை எரிவாயு நுகர்வில் 2026 ஆம் நிதியாண்டிற்கு 1 சதவிகிதம், 2027 ஆம் நிதியாண்டிற்கு 3 சதவிகிதம் மற்றும் 2028 ஆம் நிதியாண்டிற்கு 4 சதவிகிதமும் என்ற விகிதத்தில் கட்டாயக் கலப்பு விகிதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- 2029 ஆம் நிதியாண்டிலிருந்து 5 சதவிகிதம் கலப்பு விகிதம் கட்டாயமாக்கப்பட உள்ளது.




## இந்தியப் பெருங்கடல் சூரை மீன் ஆணையம்

- மீன்வளத்துறை, மீன்வளத்துறை, கால்நடை வளர்ப்பு மற்றும் பால்வள அமைச்சகம் ஆனது, இந்தியப் பெருங்கடல் சூரை மீன் ஆணையத்தின் (IOTC) தரவு சேகரிப்பு மற்றும் புள்ளியியல் (WPDCS19) தொடர்பான 19வது பணிக்குழுவை அமைத்து வருகிறது.
- இது இந்தியப் பெருங்கடல் சூரை மீன் ஆணையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு, இந்தியாவின் மீன்வளத் துறையால் நடத்தப்படும் ஒரு முக்கிய சந்திப்பு ஆகும்.
- இது உலகம் முழுவதிலும் உள்ள சூரை மீன்வளத் துறையில் புகழ்பெற்ற அறிவியலாளர்கள் மற்றும் நிபுணர்களை ஒன்றிணைக்கும்.
- IOTC தற்போது 31 ஒப்பந்த நாடுகளையும், லைபீரியா மற்றும் செனகல் ஆகிய இரண்டு ஒத்துழைப்பு சார்ந்த ஒப்பந்தம் சாரா நாடுகளையும் கொண்டுள்ளது.
- சூரை மீன் வர்த்தகம் மட்டும், வருடாந்திர வர்த்தக மதிப்பில் 41 பில்லியன் டாலர் (2018 ஆம் ஆண்டில்) மதிப்பினை கொண்டுள்ளது.

## நொய்டா சர்வதேச விமான நிலையம்

- நொய்டா சர்வதேச விமான நிலையத்தில் இருந்து விமான சேவைகளைத் தொடங்கும் முதல் விமான நிறுவனம் என்ற பெருமையை இண்டிகோ பெற உள்ளது.
- 2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள் அதன் செயல்பாடுகளைத் தொடங்க திட்டமிடப் பட்டு உள்ளது.

- இதற்கு முன்னர் எந்தவொரு மேம்பாடும் இல்லாத பகுதியில் உருவாக்கப்பட்ட இந்த விமான நிலையம் ஆனது, மேற்கு உத்தரப் பிரதேசத்தின் கௌதம் புத்த நகர் மாவட்டத்தில் உள்ள ஜேவார் பகுதியில் டெல்லியில் இருந்து சுமார் 75 கிமீ தொலைவில் அமைந்துள்ளது.
- இது இரண்டாவது சர்வதேச மற்றும் ஒட்டு மொத்தச் செயல்பாட்டிற்கான வணிக விமான நிலையமாகவும், தேசிய தலைநகரப் பிராந்தியத்தில் (NCR) அமைந்த மூன்றாவது விமான நிலையமாகவும் இருக்கும்.

## 6Eskai





- இண்டிகோ நிறுவனத்தின் வாடிக்கையாளர்களுக்கு விமான முன்பதிவு செய்ய உதவுவதற்காக '6Eskai' எனப்படும் செயற்கை நுண்ணறிவு உரையாடு மென்பொருள் ஒன்றினை அந்நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த செயற்கை நுண்ணறிவு உரையாடு மென்பொருள் ஆனது, வியக்கத்தக்க 1.7 டிரில்லியன் அளவுருக்களைக் கொண்டுள்ளதோடு, இது மேலும் பலதரப்பட்ட பொதுவான கேள்விகளுக்கு பதிலளிக்க வழி வகை செய்கிறது.
- இது வாடிக்கையாளர் சேவை முகவரின் 75% பணிச்சுமையைக் குறைப்பதன் மூலம், அதன் செயல்திறன் மற்றும் பயன்திறனை வெளிப்படுத்துகிறது.
- முன்பதிவுப் பயணம் முழுவதும், வாடிக்கையாளருக்கு வழிகாட்டுவதற்காக இயல்பான மொழி உரையாடல்களையே இந்த மென்பொருள் பயன்படுத்துகிறது.

## விரைவு சிறப்பு நீதிமன்றம் (FTSCs)

- 01.04.2023 முதல் 31.03.2026 வரை நிதிசார் தாக்கத்தினை கருத்தில் கொண்டு, விரைவு சிறப்பு நீதிமன்ற (FTSCs) திட்டத்தினை மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டமாக (CSS) தொடர மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- 'பேட்டி பச்சாவோ பேட்டி பதாவோ' திட்டம் போன்ற பல முன்னெடுப்புகள் மூலம் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதில் அரசாங்கத்தின் அசைக்க முடியாத முன்னுரிமையானது வெளிப்படையாகத் தெரிகிறது.
- பிரத்தியேக நீதிமன்றங்களாக வடிவமைக்கப்பட்டுள்ள விரைவு சிறப்பு நீதிமன்றங்கள் ஆனது, பாலியல் குற்றவாளிகளுக்கான தடுப்பு காவல் கட்டமைப்பை வலுப்படுத்தும் அதே வேளையில், பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவான நிவாரணம் வழங்குவதையும் விரைவான நீதி வழங்குவதை உறுதி செய்யும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.




## UNLF அமைதி ஒப்பந்தம்



**PAMBEI'S CLAIMS**

A list of 'successful major strikes' provided by the UNLF, against 'Indian Occupational Forces'

- **Nov. 23, 2009:** 5 security personnel killed in Chandel
- **Oct. 31, 2009:** 7 Assam Rifles personnel killed in Chandel
- **April 14, 2009:** 14 Assam Rifles personnel killed in Ukhrul
- **March 15, 2008:** More than 10 Assam Rifles jawans killed at T. Minnou, 5km west of Moreh
- **Jan. 20, 2006:** Several security personnel killed in Parbung and Tipaimukh sub-division
- **Jan. 3, 2006:** More than 10 Assam Rifles personnel killed in Tamenglong
- **Oct. 22, 2005:** 10 security personnel killed in Jiribam
- **Dec. 9, 2004:** 12 Rashtriya Rifles personnel killed in Churachandpur. On the same day, five other personnel killed in Chandel
- **Nov. 13, 2004:** More than 6 security personnel killed in Singhat sub-division
- **July 28, 2004:** 3 Assam Rifles personnel killed at Mahadev Hill, Namthilok on the Imphal-Ukhrul Road


UNLF chairman Khundongbam Pambei

- **Oct. 21, 2003:** 5 security personnel killed when a column of Garhwal Rifles team attacked a UNLF mobile task force area
- **Nov. 20, 2002:** 7 CRPF jawans killed in Churachandpur
- **Oct. 3, 1999:** 8 CRPF personnel killed at Tonsen Lamkhai
- **Feb. 13, 1999:** 9 Rashtriya Rifles personnel killed in Imphal
- **Nov. 1, 1997:** 10 CRPF personnel killed at Ehou Bazar, Sadar Hills
- **June 7, 1997:** 7 CRPF jawans killed in Bishnupur
- **Nov. 15, 1991:** 5 CRPF jawans killed in Lamdan, Tamenglong

- மத்திய அரசு மற்றும் மணிப்பூர் அரசு ஆகியவை ஐக்கிய தேசிய விடுதலை முன்னணியுடனான (UNLF) அமைதி ஒப்பந்தத்தில் வெற்றிகரமாக கையெழுத்து இட்டுள்ளன.
- மணிப்பூரில் உள்ள பள்ளத்தாக்குப் பகுதியில் அமைந்த பழமையான ஆயுதக் குழுவாக UNLF அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- அனைத்து சட்டவிரோத நடவடிக்கைகளையும் கைவிட்டு, பிரதான நடவடிக்கைகளை மேற்கொள்வதை நோக்கி திரும்புவதற்கு இது உறுதிபூண்டுள்ளது.
- அரசியலமைப்பு கட்டமைப்பிற்குள் அமைதியான தீர்மானத்தை மேற்கொள்வதை இந்த ஒப்பந்தம் வலியுறுத்துகிறது.
- குறிப்பாக, UNLF ஆனது ஆயுதமேந்திய மெய்தெய் கிளர்ச்சியாளர்களை உள்ளடக்கி உள்ள நிலையில் அவர்களில் பலர் மியான்மரில் உள்ளனர்.

## பிரதான் மந்திரி ஜஞ்சதி ஆதிவாசி நியாய மகா அபியான்

- மத்திய அமைச்சரவை பிரதான் மந்திரி ஜன்ஜாதி ஆதிவாசி நியாய மகா அபியான் (PM-JANMAN) திட்டத்தினை அங்கீகரித்துள்ளது.
- இது எளிதில் பாதிக்கப்படக்கூடிய பழங்குடியினக் குழுக்கள் (PVTGs) எதிர்கொள்ளும் சவால்களைச் சமாளிப்பதற்கான ஒரு விரிவான முன்னெடுப்பு ஆகும்.
- 18 மாநிலங்கள் மற்றும் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவு ஒன்றியப் பிரதேசம் ஆகியவற்றில் வாழும் 75 சமூகங்கள் எளிதில் பாதிக்கப்படக் கூடிய பழங்குடியினக் குழுக்களாக (PVTGs) அடையாளம் காணப்பட்டுள்ளன.
- பழங்குடியினர் விவகார அமைச்சகம் உட்பட ஒன்பது அமைச்சகங்களின் 11 முக்கியத் திட்டங்களை செயல்படுத்துவதை இது நோக்கமாக கொண்டுள்ளது.



## MAHASAGAR முன்னெடுப்பு

- இது இந்தியக் கடற்படையினால் மேற்கொள்ளப்பட்ட இந்தியப் பெருங்கடல் பகுதியில் (IOR) செயல் திறன் மிக்க பாதுகாப்பு மற்றும் வளர்ச்சியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட உயர்நிலை மெய்நிகர் தொடர்பு அமைப்பு ஆகும்.
- இது MAHASAGAR என்பது இந்தியப் பெருங்கடல் பகுதியில் அனைவருக்குமான செயல் திறன் மிக்கப் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கான கடல்சார் தலைமைகள் என்று பொருள்படும்.
- இது வங்காளதேசம், கொமொரோஸ், கென்யா, மடகாஸ்கர், மாலத்தீவுகள், மொரிஷியஸ், மொசாம்பிக், செய்செல்ஸ், இலங்கை மற்றும் தான்சானியா ஆகிய நாடுகளின் தலைவர்களுடன் ஈடுபட்டுள்ளது.
- "பரந்த கடல்" என்று பொருள்படும் MAHASAGAR, இந்தியக் கடற்படையின் பாதுகாப்பு விரிவாக்க முன்னெடுப்பின் சாராம்சத்தைக் கொண்டுள்ளது.
- பேச்சுவார்த்தை மற்றும் ஒத்துழைப்பிற்கான ஒரு தளமாகச் செயல்படுகின்ற இது இந்திய அரசாங்கத்தின் SAGAR திட்டத்தின்' பிராந்தியத்தில் உள்ள அனைவருக்குமான பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி'– என்ற தொலைநோக்கத்தின் ஒரு உறுதிப்பாட்டினைப் பிரதிபலிக்கிறது.
- இதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட கருத்துரு, "பொதுவான சவால்களை எதிர் கொள்ளச் செய்வதற்கான கூட்டு கடல்சார் அணுகுமுறை" என்பதாகும்.

## இந்தியாவின் முதல் பெண் அதிகாரத்துவ இராணுவ உதவியாளர்



- படைத் தலைவர் மனிஷா பதி, இந்திய ஆயுதப் படையிலிருந்து இந்தியாவின் முதல் பெண் அதிகாரத்துவ இராணுவ உதவியாளர் (ADC) என்ற பதவியில் நியமிக்கப்பட்டு உள்ளார்.
- அவர் இந்திய விமானப்படையின் 2015 ஆம் ஆண்டு பணிக் குழுவினைச் சேர்ந்த புகழ்பெற்ற அதிகாரி ஆவார்.
- இது பாலினம் சார்ந்த விதிமுறைகளை உடைத்து, பல்வேறு துறைகளில் பெண்கள் பங்காற்றும் சிறப்பை வெளிப்படுத்துகின்ற வகையில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனையினைக் குறிக்கிறது.

## ஆயுஷ்மான் ஆரோக்கிய மந்திர்

- தற்போதுள்ள ஆயுஷ்மான் பாரத் சுகாதார மற்றும் நல மையங்களை (AB-HWCs) 'ஆரோக்யம் பர்மம் தானம்' என்ற அடையாள முழக்கத்துடன் 'ஆயுஷ்மான் ஆரோக்கிய மந்திர்' என மறுபெயரிட மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

- ஆயுஷ்மான் பாரத் தேர்ந்தெடுக்கப்பட்ட சுகாதாரப் பாதுகாப்பிலிருந்து முழு அளவிலான சேவைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ள இது தடுப்பு, உடல் நல மேம்பாடு, குணப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் நோய்த்தடுப்பு சிகிச்சை ஆகியவற்றை உள்ளடக்கியது.
- இது இரண்டு கூறுகளை உள்ளடக்கியது.

*முதல் கூறு*

- சமூக அளவில் ஆரோக்கியம் மற்றும் பரந்த அளவிலான சேவைகளை வழங்கும் நோக்கில் இலவச விரிவான ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பிற்காக 1,50,000 சுகாதாரம் மற்றும் நல மையங்கள் (HWCs) உருவாக்கம்.


*இரண்டாவது கூறு*

- பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா (PM-JAY) திட்டமானது, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை சிகிச்சைக்காக 10 கோடிக்கும் அதிகமான வறிய குடும்பங்களுக்கு ஆண்டிற்கு 5 லட்சம் ரூபாய் வரையான சுகாதாரக் காப்பீட்டினை வழங்குகிறது.
- சுகாதாரம் மற்றும் நல மையங்கள் ஆனது தொற்றாத நோய்கள், நோய்த்தடுப்பு மற்றும் மறுவாழ்வு சிகிச்சை, வாய்வழி, கண் மற்றும் காது, மூக்கு மற்றும் தொண்டை சிகிச்சை, மனநல ஆதரவு மற்றும் அவசரநிலை மற்றும் அதிர்ச்சிக்கான ஆரம்ப கட்ட சிகிச்சை, இலவச அத்தியாவசிய மருந்துகள் மற்றும் நோயறிதல்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய விரிவான சேவைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

## மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு ஆளில்லா விமானங்கள் வழங்கும் திட்டம்

- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், விக்சித் பாரத் சங்கல்ப் யாத்ராவின் பயனாளிகளுடன் உரை நிகழ்த்திய போது 'நமோ ட்ரோன் திதி' என்ற திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- வேளாண்மை நோக்கங்களுக்காக விவசாயிகளுக்கு வாடகை சேவைகளை வழங்கச் செய்வதற்காக 2024-25 முதல் 2025-2026 ஆம் ஆண்டு வரையிலான காலக் கட்டத்தில் 15,000 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு (SHGs) ஆளில்லா விமானங்களை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஆளில்லா விமானங்கள் மற்றும் அதன் துணைக் கருவிகள்/ அதன் துணை உபகரண கட்டணங்களுக்கான அதிகபட்சமாக ரூ.8 லட்சம் வரையான செலவில் 80% நிதி மத்திய அரசின் நிதி உதவி மூலம் வழங்கப்படுகிறது.
- இத்திட்டம் ஆனது மகளிர் சுய உதவிக் குழுக்களை (SHGs) மேம்படுத்தவும், வேளாண் துறையில் ஆளில்லா விமானச் சேவைகள் மூலம் புதிய தொழில்நுட்பங்களைக் கொண்டு வரவும் முயல்கிறது.
- மானிய விலையில் மருந்துகளை விற்கும் ஜன் ஔஷதி கேந்திராக்களின் எண்ணிக்கையை 10,000லிருந்து 25,000 ஆக உயர்த்தும் முன்னெடுப்பினையும் இந்த நிகழ்ச்சியில் பிரதமர் மோடி அவர்கள் தொடங்கி வைத்தார்.
- ஜார்க்கண்ட் மாநிலத்தின் தியோகர், எய்ம்ஸ் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள 10,000வது ஜன் ஔஷதி கேந்திராவைப் பிரதமர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

## PMGKAY திட்டம் மேலும் 5 ஆண்டுகளுக்கு நீட்டிப்பு




- ❖ பிரதான் மந்திரி கரிப் கல்யாண் அன்ன யோஜனா திட்டத்தின் கீழ் 2028 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு 81 கோடி மக்களுக்கு இலவச ரேஷன் பொருட்கள் வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- ❖ இத்திட்டத்திற்கான இலக்காக நிர்ணயிக்கப்பட்ட மக்களுக்கு உணவு தானியங்களின் அணுகல், அவற்றின் மலிவான விலை மற்றும் அவை சுலபமாக கிடைக்கப் பெற செய்தல் ஆகியவற்றினை உறுதி செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ PMGKAY திட்டமானது, பெருந்தொற்றினால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்வதற்காக முதலில் 2020 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- ❖ இந்தத் திட்டத்தின் கீழ், தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் (NFSA) கீழ் மானிய விலையில் வழங்கப்படும் உணவு தானியத்துடன் சேர்த்து, ஒரு பயனாளிக்கு மாதம் 5 கிலோ இலவச உணவு தானியங்களை வழங்கப்படுகிறது.
- ❖ 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாத நிலவரப்படி, PMGKAY திட்டமானது தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டு, ஒரு வருடத்திற்கு இலவச ரேஷன் பொருட்களை வழங்குகிறது.
- ❖ PMGKAY திட்டத்தின் கீழ் அந்தியோதயா குடும்பங்களுக்கு 35 கிலோ அரிசி மற்றும் கோதுமை வழங்குவதற்கான பொருளாதாரச் செலவை மத்திய அரசே ஏற்கிறது.

## கிராம் மஞ்சித்ரா

- ❖ பஞ்சாயத்து ராஜ் அமைச்சகமானது, "கிராம் மஞ்சித்ரா" எனப்படும் புவியிடஞ்சார்ந்த தகவல் முறைமை செயலி மற்றும் "mActionSoft" எனப்படும் கைபேசி செயலி போன்ற செயற்கருவிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ இது கிராமப் பஞ்சாயத்து அமைப்புகளை மேம்படுத்துவதையும், அடிமட்ட அளவிலான இடஞ்சார்ந்த திட்டமிடலை மேம்படுத்துவதையும் மற்றும் செயல் முறையில் தீவிரமான பங்கேற்பை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இந்த கருவிகள் புவி-இடஞ்சார்ந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மேம்பாட்டுப் பணிகளைக் காட்சிப்படுத்துவதற்கும், திட்டமிடுவதற்குமான ஒரு ஒருங்கிணைந்தத் தளத்தை வழங்குகின்றன.
- ❖ கிராம் மஞ்சித்ரா செயலி ஆனது, ஒற்றை மற்றும் ஒருங்கிணைந்த புவி-இடஞ்சார்ந்த தளமாக செயல்படுகிறது.

## கஜராஜ் அமைப்பு



- இந்திய ரயில்வே நிர்வாகமானது, "கஜராஜ் அமைப்பை" நிறுவியதன் மூலம் வன விலங்கு வளங்காப்பில் ஒரு முன்னோடியான முயற்சியைத் தொடங்கியுள்ளது.
- இது ஒரு செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான தீர்வு அமைப்பு ஆகும்.
- இது தண்டவாளத்தில் யானைகள் இருப்பதைப் பற்றி இரயில் எஞ்சின் ஓட்டுநர்களுக்கு சரியான நேரத்தில் எச்சரிக்கைகளை வழங்கும்.
- இரயில்வே நிர்வாகமானது அசாம், மேற்கு வங்காளம், ஒடிசா, கேரளா, ஜார்க்கண்ட் மற்றும் சத்தீஸ்கர் மற்றும் தமிழ்நாடு ஆகிய இடங்களில் இந்த அமைப்பை நிறுவ உள்ளது.
- ஊடுருவல் கண்டறிதல் அமைப்பு (IDS) என்பது வடகிழக்குப் பிராந்திய இரயில்வே நிர்வாகத்தினால் (NFR) 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

## அக்னிவீர்வாயு (மகளிர்)

- இந்திய விமானப்படையானது (IAF) முதன்முறையாக மகளிர் அக்னிவீர்வாயு (மகளிர்) வீராங்கனைகளை தனது அதிகாரி சாராத படைப்பிரிவில் சேர்த்துள்ளது.
- கர்நாடகாவின் பெலகாவியில் உள்ள வான்படை வீரர்கள் பயிற்சிப் பள்ளியில் இருந்து மொத்தம் 153 அக்னிவீர்வாயு (பெண்கள்) வீராங்கனைகள் பட்டம் பெற்றனர்.
- இந்திய இராணுவம் ஆனது தற்போது இராணுவக் காவல் படையில் உள்ள அதிகாரிகள் தர வரிசைக்கு (PBOR) கீழ் உள்ள பதவிகளில் மட்டுமே மகளிரைப் பணியமர்த்தினாலும், அது விரைவில் மற்ற பிரிவுகளிலும் பெண்களுக்கு வாய்ப்புகளை வழங்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- குறுகிய கால இளைஞர் ஆட்சேர்ப்புத் திட்டமான அக்னிபாத் திட்டத்தின் கீழ், இராணுவப் பிரிவுகளில் அக்னிவீரர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## பல்கலைக்கழக வேந்தராக ஆளுநரின் பங்கு

- சமீபத்தில், இந்திய தலைமை நீதிபதி D.Y. சந்திரசூட் அவர்கள் தலைமையிலான உச்ச நீதிமன்ற அமர்வானது, வேந்தராக செயல்படும் ஆளுநர், அமைச்சர்கள் குழுவின் உதவி மற்றும் ஆலோசனைக்கு கட்டுப்படமாட்டார் என்றும், அவரது தனிப்பட்ட திறனின் அடிப்படையில் மட்டுமே செயல்படுவார் என்றும் மீண்டும் உறுதிப்படுத்தி உள்ளது.
- கேரளாவின் கண்ணூர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் நியமனத்தினைப் பின்னணியாகக் கொண்டு இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

- ❖ மாநிலச் சட்டமன்றத்தால் உருவாக்கப்பட்ட பெரும்பாலான மாநில அரசுப் பல்கலைக் கழகங்களின் வேந்தராக ஆளுநர் நியமிக்கப்பட்டுள்ளார்.
- ❖ ஒரு வேந்தராக செயல்படும் போது கொண்டுள்ள அதிகாரங்கள் ஆனது, மாநில ஆளுநராக செயல்படும் போது கொண்டுள்ள அதிகாரங்கள் மற்றும் கடமைகளைச் செயல்படுத்துவதில் எந்தத் தொடர்பும் கொண்டிருக்கவில்லை.
- ❖ 2022 ஆம் ஆண்டில், மேற்கு வங்காள மாநில அரசானது ஆளுநருக்குப் பதிலாக முதலமைச்சரை வேந்தராக நியமிக்க முயன்றது, அதே நேரத்தில் தமிழ்நாடு அரசானது துணைவேந்தரை நியமிக்கும் அதிகாரத்தை மாநில அரசாங்கத்திற்கு மாற்ற முயன்றது.
- ❖ 1981 ஆம் ஆண்டு ஹர்த்வாரி லால், ரோஹ்தக் தரப்பினருக்கு எதிரான G.D. தபசே வழக்கின் (சண்டிகர்) தீர்ப்பில், "ஆளுநர் பல்கலைக்கழகத்தின் பதவி வழி வேந்தராவார். மேலும் அவரது பதவியின் அடிப்படையில் அவர் அமைச்சர்கள் குழுவின் உதவி மற்றும் ஆலோசனைக்கு கட்டுப்பட்டுச் செயல்பட வேண்டிய கட்டாயம் இல்லை" என்று உயர்நீதிமன்றம் கூறியது.


Escalating row

Amid the rising conflict with Governor **Arif Mohammed Khan,** the Kerala Cabinet decides to remove him as Chancellor of State universities


**THE ORDINANCE:** State Cabinet resolves to request the Governor himself to promulgate an ordinance removing him from the position

**THE IMPACT:** The Governor will be divested of his powers as Chancellor and will be kept away from all aspects of university governance

**THE STATE'S REASONING:** M.M. Punchhi Commission had recommended that States desist from burdening Governors with the Chancellor's role

## இந்தியாவில் பாம்புக்கடி பாதிப்புகள்

- ❖ உலகில் பாம்புக்கடியால் ஏற்படும் உயிரிழப்புகளில் இந்தியா அதிகப் பங்கினை கொண்டுள்ள நிலையில் இதில் பெரும்பாலான பாதிப்புகள் கிராமப்புற இந்தியாவில் பதிவாகியுள்ளன.
- ❖ தவிர்க்கக்கூடிய உயிரிழப்புகள் வலையமைப்பு (AND) என்ற அமைப்பானது, ஒடிசாவின் கிராமத்தில் பாம்புக்கடியில் இருந்து உயிர்காக்கும் தீர்வுகளைக் கண்டறிவதற்காக ஒரு மையத்தை அமைத்துள்ளது.
- ❖ AND என்பது இயற்கையான ஆபத்துகளில் இருந்து மனித உயிரிழப்புகளைத் தவிர்க்க முயலும் ஒரு உலகளாவிய உறுப்பினர் சார் வலையமைப்பாகும்.
- ❖ 2015 ஆம் ஆண்டில், 2030 ஆம் ஆண்டில் உயிரிழப்புகளைப் பாதியாகக் குறைப்பதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் செண்டாய் கட்டமைப்புடன் சேர்த்து, தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கான உலக சுகாதார அமைப்பின் பாம்புக்கடி விசமேற்ற உத்திக்கு இந்தியா ஒப்புதல் அளித்தது.




## MILAN பயிற்சி 2024

- அடுத்த MILAN பயிற்சியானது 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நடைபெற உள்ளது.
- இது இந்தியக் கடற்படையால் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் பலதரப்பு கடற்படைப் பயிற்சி ஆகும்.
- இது முதலில் இந்தியாவின் “கிழக்கு நாடுகளுக்கு ஏற்ற கொள்கைகளை வகுத்தல் திட்டம்” என்ற கொள்கைக்கு ஏற்ப உருவாக்கப்பட்டது.
- இதன் முதல் பயிற்சியானது 1995 ஆம் ஆண்டில் நடைபெற்றது.
- இது இந்தியாவின் மிகப்பெரிய கடற்படைப் பயிற்சியாகும்.
- முந்தைய MILAN பயிற்சி ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப்பட்டினத்தில் நடைபெற்றது.

## புதிய தபால் அலுவலக மசோதா – 2023

- 125 ஆண்டுகள் பழமையான 1898 ஆம் ஆண்டின் இந்திய அஞ்சல் அலுவலகச் சட்டத்திற்கு மாற்றான அஞ்சல் அலுவலக மசோதாவை மாநிலங்களவை நிறைவேற்றியது.
- இது மத்திய அரசின் பங்கை மறுவரையறை செய்து தபால் சேவைகள் இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கிறது.
- இந்திய அஞ்சல் துறையின் தலைவராக பொது தபால் சேவைகள் இயக்குநர் ஒருவர் நியமிக்கப்படுவார்.
- இது அஞ்சல்களில் அரசின் இடைமறிப்பு, பொறுப்பு விலக்குகள் மற்றும் சில குற்றங்கள் மற்றும் அபராதங்களை நீக்குதல் போன்ற முக்கிய அம்சங்களைக் கொண்டுள்ளது.

- நாட்டின் பாதுகாப்பு மற்றும் பொது ஒழுங்கு உள்ளிட்ட குறிப்பிட்ட காரணங்களுக்காக இந்திய அஞ்சல் சேவை மூலம் அனுப்பப்படும் சில கடிதங்களை அரசாங்கம் இடை மறிக்கலாம்.
- தகவல் தொடர்புத் துறை அமைச்சகத்தின் அஞ்சல் துறையின் கீழ் புது தில்லியை தலைமையகமாகக் கொண்டு இந்திய அஞ்சலகச் சேவை செயல்படுகிறது.
- இது 1854 ஆம் ஆண்டில் டல்ஹவுசி பிரபுவால் அரசின் சேவையாக உருவாக்கப்பட்டது.
- 2014 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் சுமார் 5,000 புதிய அலுவலகங்கள் திறக்கப்பட்ட நிலையில், தபால் நிலையங்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.




## உலகின் முதல் கையடக்க அல்லது இடம்பெயரும் மருத்துவமனை




- ஆரோக்யா மைத்ரி எய்ட் கியூப் என்பது உலகின் முதல் கையடக்க மருத்துவமனையாகும்.
- இது ஹரியானா மாநிலத்திலுள்ள குருகிராமில் சமீபத்தில் அறிமுகம் செய்யப்பட்டது.
- இது BHISHM (சஹ்யோக் ஹிதா மற்றும் மைத்ரிக்கான பாரத் ஹெல்த் முன்முயற்சி) என்ற திட்டத்தின் கீழ் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டது.
- இதில் அத்தியாவசிய மருத்துவ உபகரணங்கள் மற்றும் பொருட்கள் உள்ள ஒரு மருத்துவமனையை விமானத்தில் ஏற்றி சென்று 72 கனசதுரங்களாக இணைக்கலாம்.
- இந்த மருத்துவமனையின் மூலம் இயற்கைப் பேரழிவுகள் அல்லது நெருக்கடிகளின் போது 48 மணி நேரத்திற்குல் 200 உயிர் பிழைத்தவர்களை ஆதரிக்க முடியும்.
- "ஆரோக்ய மைத்ரி கியூப்" என்பது "ஆரோக்ய மைத்ரி" திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- இயற்கைப் பேரழிவுகள் அல்லது மனிதாபிமான நெருக்கடிகளால் பாதிக்கப்பட்ட எந்தவொரு வளரும் நாட்டிற்கும் அத்தியாவசிய மருத்துவப் பொருட்களை வழங்குவதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## கர்பா நடனம்


- இந்தியாவின் கர்பா நடனம் ஆனது சமீபத்தில் தொட்டுணர முடியாத மகத்தான கலாச்சாரப் பாரம்பரியங்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.
- யுனெஸ்கோ அமைப்பின் தொட்டுணர முடியாத மகத்தான கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கான அரசுகளுக்கிடையேயான குழுவால் இது அறிவிக்கப் பட்டது.
- இது குஜராத் மாநிலம் முழுவதும் உள்ள கலைஞர்களால் நிகழ்த்தப்படும் சடங்கு சார்ந்த மற்றும் பக்தி சார் நடனமாகும்.
- யுனெஸ்கோ பட்டியலில் இடம் பிடித்த இந்தியாவின் 15வது கலாச்சார அம்சம் குஜராத்தின் கர்பா நடனமாகும்.
- கடைசியாக, கொல்கத்தாவின் துர்கா பூஜை ஆனது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இப்பட்டியலில் சேர்க்கப்பட்டது.
- தொட்டுணர முடியாத மகத்தான கலாச்சாரப் பாரம்பரியம் (ICH) என்பது வாய்வழி மரபுகள், கலை நிகழ்ச்சிகள், சமூக நடைமுறைகள், சடங்குகள், பண்டிகை நிகழ்வுகள், இயற்கை மற்றும் பிரபஞ்சம் பற்றிய தகவல்கள் மற்றும் நடைமுறைகள் அல்லது பாரம்பரிய கைவினைகளை உற்பத்தி செய்வதற்கான திறனறிவு மற்றும் திறன்களை உள்ளடக்கியது ஆகும்.




## வழக்கறிஞர்கள் (திருத்தம்) மசோதா, 2023

- இந்த மசோதாவானது, தற்போது 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மக்களவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- இது 1961 ஆம் ஆண்டு வழக்கறிஞர்கள் சட்டத்தினைத் திருத்தியமைக்கிறது.
- இது 1879 ஆம் ஆண்டு சட்டப் பயிற்சியாளர்கள் சட்டத்தின் கீழ் உள்ள வாடிக்கை பிடிப்பு தொடர்பான சில பிரிவுகளை இந்த மசோதா ரத்து செய்கிறது.
- 1961 ஆம் ஆண்டு சட்டமானது, சட்டப் பயிற்சியாளர்கள் தொடர்பான சட்டத்தை ஒருங்கிணைத்து வழக்கறிஞர் கழகம் மற்றும் அகில இந்திய வழக்கறிஞர் கழகம் ஆகியவற்றினை உருவாக்குகிறது.

- இந்தப் புதிய மசோதாவானது, ஒரே சட்டத்தின் மூலம் சட்டத் தொழிலை ஒழுங்குபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்பதோடு வாடிக்கைப் பிடிப்பு என்ற முறையையும் ஒழிக்க முயல்கிறது.
- ஒவ்வொரு உயர் நீதிமன்றமும், மாவட்ட நீதிபதியும், அமர்வு நீதிபதியும், மாவட்ட ஆட்சியரும், வருவாய் அதிகாரியும் (மாவட்ட ஆட்சியர் பதவிக்கு மேல் நிலையில் உள்ளவர்கள்) வாடிக்கைப் பிடிப்பு குறித்தப் பட்டியலை உருவாக்கி வெளியிடலாம் என்று இந்த மசோதா கூறுகிறது.
- வாடிக்கை பிடிப்பு என்பது ஒரு நபர் என்பவர்,
  - எந்தவொரு கட்டணத்திற்கும் ஈடாக தொழில்ரீதியிலான ஒரு சட்ட நடைமுறையில் ஈடுபடுவதற்கு முயலுகின்ற ஒரு சட்ட நிபுணரைப் பணியில் அமர்த்தச் செய்கின்ற முறையை முன்மொழிவார்,
  - அல்லது (ii) சிவில் அல்லது குற்றவியல் நீதிமன்றங்கள், வருவாய்-அலுவலகங்கள் அல்லது இரயில் நிலையங்கள் போன்ற இடங்களுக்கு இது போன்ற வேலை வாய்ப்பைப் பெற அடிக்கடி செல்வார் என்பதைக் குறிக்கிறது.




## தேசிய வர்த்தகர்கள் நல வாரியத்தின் முதல் கூட்டம்





- தேசிய வர்த்தகர்கள் நல வாரியத்தின் (NTWB) முதல் கூட்டம் ஆனது தொழில்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையால் (DPIIT) புது டெல்லியில் கூட்டப் பட்டது.
- இந்த வாரியமும் அதன் உறுப்பினர்களும் வர்த்தகர்களுக்குரிய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் முக்கியப் பங்காற்றுகின்றனர்.

## 5வது உலகளாவிய ஆயுர்வேத விழா

- கேரளாவின் திருவனந்தபுரத்தில் 5வது உலகளாவிய ஆயுர்வேத விழாவை துணைக் குடியரசுத் தலைவர் ஜக்தீப் தன்கர் தொடங்கி வைத்தார்.
- இந்த ஆண்டிற்கான கருப்பொருள், 'உடல்நலத்தில் வளர்ந்து வரும் சவால்கள் மற்றும் ஆயுர்வேத மறுமலர்ச்சி' என்பதாகும்.
- ஆயுர்வேத மருத்துவச் சுற்றுலா தொடர்பான இந்தியாவின் முதல் பிரத்தியேக வணிக நிறுவனங்களுக்கிடையேயான (B2B) சந்திப்பையும் இது உள்ளடக்கியது.

## காஷ்மீருக்கான மசோதாக்கள் 2023




- ஜம்மு காஷ்மீர் மறுசீரமைப்பு (திருத்தம்) மசோதா, 2023 மற்றும் ஜம்மு காஷ்மீர் இடஒதுக்கீடு (திருத்தம்) மசோதா, 2023 ஆகிய இரண்டு மசோதாக்களை மக்களவை நிறைவேற்றியுள்ளது.
- மறுசீரமைப்பு மசோதா வரவிருக்கும் 114 இடங்களைக் கொண்ட ஜம்மு மற்றும் காஷ்மீர் சட்டமன்ற அவையில் "காஷ்மீரில் குடியேறியவர்கள், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் (PoK) மற்றும் பழங்குடியினருக்கு" இடங்களை ஒதுக்க முயல்கிறது.
- ஜம்மு-காஷ்மீரில் உள்ள சட்டமன்றத்தில் ஆரம்பத்தில் 100 உறுப்பினர்கள் இருந்த நிலையில், இதில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீருக்கான (PoK) உறுப்பினர்கள் 24 பேர் உள்ளனர்.
- 1988 ஆம் ஆண்டில், இந்த இடங்கள் 111 ஆக அதிகரிக்கப்பட்டது.
- இந்த 24 இடங்கள் அவையின் குறைந்தபட்ச வருகைக்கான கணக்கீட்டில் பரிசீலிக்கப் படுவதில்லை.
- இது லடாக்கிற்கான நான்கு இடங்கள் உட்பட மொத்தம் 87 இடங்களில் போட்டியிட வைக்கிறது.
- 2020 ஆம் ஆண்டில் எல்லை நிர்ணயத்திற்குப் பிறகு, PoK பகுதிக்கான இடங்கள் உட்பட மொத்த இடங்கள் 114 ஆக உயர்ந்தது.
- சட்டசபைக்கு 5 உறுப்பினர்களை நியமிக்க மாநில ஆளுநருக்கு அதிகாரம் உள்ளது.

- இவர்களில் இருவர் பெண்கள், ஒருவர் காஷ்மீரில் குடியேறியவர் மற்றும் ஒருவர் PoK பகுதியைச் சேர்ந்தவர் என்ற நிபந்தனைக்கு உட்பட்டது ஆகும்.
- ஜம்மு காஷ்மீர் மாநிலத்தை ஜம்மு காஷ்மீர் (சட்டமன்றத்துடன் கூடியது) மற்றும் லடாக் (சட்டமன்றம் இல்லாமல்) எனும் இரு ஒன்றியப் பிரதேசங்களாக மறுசீரமைக்க ஜம்மு காஷ்மீர் மறுசீரமைப்பு சட்டம், 2019 அதிகாரம் வழங்குகிறது.
- தற்போது முதன்முறையாகப் பழங்குடியினருக்கு 9 உறுப்பினர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்க முயல்கிறது.
- புதிய இடஒதுக்கீடு மசோதாவானது, ஜம்மு காஷ்மீர் இடஒதுக்கீடு சட்டம், 2004 என்ற சட்டத்தில் உள்ள "நலிந்த மற்றும் பின்தங்கிய வகுப்பினர்" என்ற சொல்லை "பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்" என்று மாற்றுகிறது.

## அமேசான் மற்றும் IWAI

- இந்திய உள்நாட்டு நீர்வழிகள் ஆணையம் (IWAI) மற்றும் அமேசான் தனியார் விற்பனை சேவை லிமிடெட் நிறுவனம் (Amazon) ஆகியவை ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டுள்ளன.
- இது உள்நாட்டு நீர்வழிகள் - குறிப்பாக கங்கை நதியைப் பயன்படுத்துகின்ற (தேசிய நீர்வழி 1) - மூலமான சரக்குப் போக்குவரத்து மற்றும் வாடிக்கையாளர் ஏற்றுமதி மற்றும் பொருட்களைக் கொண்டு செல்வதை மேம்படுத்தச் செய்வதில் கவனம் செலுத்துகிறது.
- இந்தக் கூட்டாண்மையானது, இரயில், விமானம், நீர் மற்றும் நிலம் உள்ளிட்ட நாட்டின் அனைத்து வகையான போக்குவரத்து முறைகளையும் பயன்படுத்துவதற்கு அமேசான் நிறுவனத்திற்கு அனுமதி வழங்குகிறது.
- மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகம் ஆனது, 2047 ஆம் ஆண்டு அம்ரித் கால் தொலைநோக்குத் திட்டத்தின் படி, 2030 ஆம் ஆண்டளவில் உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்தைக் கணிசமாக அதிகரிக்கவும், 2047 ஆம் ஆண்டிற்குள் 500 மில்லியன் மெட்ரிக் டன் அளவை (MMT) மிஞ்சுவதற்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



- 2047 ஆம் ஆண்டிற்குள், செயல்பாட்டில் உள்ள நீர்வழிகளின் எண்ணிக்கை 50 என்ற அளவை விஞ்சும் நோக்கத்துடன், 2030 ஆம் ஆண்டிற்குள் செயல்பாட்டில் உள்ள நீர் வழிகளின் எண்ணிக்கையை 23 என்ற அளவிற்கு அதிகரிக்கும் இலக்கும் இந்தத் திட்டத்தில் அடங்கும்.

## மிகப் பெரிய வட்டவடிவ இருப்புப்பாதை

- பெங்களூரில் இந்தியாவின் மிகப்பெரிய வட்டவடிவ இருப்புப் பாதையானது அமைக்கப் பட உள்ளது.
- இந்த வட்டவடிவ இருப்புப்பாதையின் மொத்த நீளம் 288 கி.மீ ஆகும்.
- சென்னையிலுள்ள வட்டவடிவ இருப்புப் பாதையினைப் பின்னுக்குத் தள்ளி இந்த நிலையினை இந்த இருப்புப் பாதை அடையும்.
- சென்னை வட்டவடிவ இருப்புப் பாதையின் நீளம் 235 கி.மீ ஆகும்.




## ஆம்ப்ளிஃபி 2.0

- இந்தியாவில் உள்ள மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் ஆம்ப்லிஃபி 2.0 (வாழக்கூடிய, உள்ளடக்கிய மற்றும் எதிர்காலத்திற்குத் தயாராக உள்ள நகர்ப்புற இந்தியாவுக்கான மதிப்பீடு மற்றும் கண்காணிப்புத் தளம்) எனும் தளத்தைத் தொடங்கியுள்ளது.
- நாடு முழுவதும் உள்ள நகரங்களில் இருந்து மூலத் தரவை மையப்படுத்தவும் நெறிப்படுத்தவும் இது தொடங்கியுள்ளது.
- இது இறுதியில் 4,000 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தரவை உள்ளடக்கியதாக இருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இது ஏற்கனவே மொத்த டீசல் நுகர்வு, நீர் தரச் சோதனை, ஆண்டு சுகாதாரச் செலவு, குடிசைப்பகுதி மக்கள் தொகைப் புள்ளிவிவரங்கள் மற்றும் சாலை விபத்து இறப்புகள் போன்ற பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய பல தகவல்களை வழங்குகிறது.




**CERT- தகவல் அறியும் உரிமைச் சட்டம்**




- ❖ பணியாளர் மற்றும் பயிற்சித் துறை (DoPT), 2005 ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் வரம்பில் இருந்து இந்தியக் கணினி அவசரநிலைப் பதிலெதிர்ப்புக் குழுவிற்கு (CERT-In) விலக்கு அளிக்கும் அறிவிப்பைச் சமீபத்தில் வெளியிட்டுள்ளது.
- ❖ இனி 2005 ஆம் ஆண்டின் RTI சட்டத்தின் எல்லைக்கு வெளியே செயல்படும் CERT-In அமைப்பானது அதன் செயல்பாடுகள் மற்றும் செயல்பாடுகள் பற்றிய முக்கியத தகவல்களுக்கான பொதுமக்களின் அணுகலைக் கட்டுப்படுத்துகிறது.
- ❖ இருப்பினும், ஊழல் மற்றும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் தொடர்பான தகவல்களுக்கு அந்த துணைப் பிரிவு பொருந்தாது.
- ❖ புலனாய்வுப் பணியகம், வருவாய்ப் புலனாய்வு இயக்குநரகம், அமலாக்கத் துறை இயக்குநரகம், போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பணியகம் மற்றும் பிற முக்கிய உளவுத்துறை மற்றும் பாதுகாப்பு அமைப்புக்கள் தகவல் அறியும் உரிமைச் சட்ட வரம்பில் இருந்து விலக்கப்பட்டுள்ளன.
- ❖ CERT-In என்பது அச்சுறுத்தல் (ஹேக்கிங்) மற்றும் சட்ட விரோதப் பயன்பாடு (ஃபிஷிங்) போன்ற இணையப் பாதுகாப்பு அச்சுறுத்தல்களைக் கையாள்வதற்கான தேசிய அளவிலான முதன்மை நிறுவனம் ஆகும்.
- ❖ இது மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.

## முக்கியக் கனிமத் தொகுதிகளின் முதல் ஏலம்

| Sl No | Block Name | State | Commodity | ML/ CL* |
|---|---|---|---|---|
| 1 | Chutia-Nauhatta Glauconite Block | Bihar | Potash | CL |
| 2 | Pipradih-Bhurwa Glauconite Block | Bihar | Potash | CL |
| 3 | Genjana Ni, Cr & PGE Block | Bihar | Nickel, Platinum Group Elements and Chromium | CL |
| 4 | Kundol Nickel and Chromium Block | Gujarat | Nickel & Chromium | CL |
| 5 | Muskaniya-Gareriatola-Barwari Potash Block | Jharkhand | Potash | CL |
| 6 | Dudhiasol East Nickel and Copper Block | Odisha | Nickel and Copper | ML |
| 7 | Babja Graphite and Manganese Block | Odisha | Graphite and Manganese | ML |
| 8 | Biarapalli Graphite and Manganese Block | Odisha | Graphite and Manganese | ML |
| 9 | Akharkata Graphite Block | Odisha | Graphite | CL |
| 10 | Vellakal Central (Segment-A) Molybdenum Block | Tamil Nadu | Molybdenum | CL |
| 11 | Nochchipatti Molybednum Block | Tamil Nadu | Molybdenum | CL |
| 12 | Velampatti North A & B Molybdenum Block | Tamil Nadu | Molybdenum | CL |
| 13 | Kurunjakulam Graphite Block | Tamil Nadu | Graphite | CL |
| 14 | Iluppakudi Graphite Block | Tamil Nadu | Graphite | CL |
| 15 | Mannadipatti Central Molybdenum Block | Tamil Nadu | Molybdenum | CL |
| 16 | Marudipatti (Central) Molybdenum Block | Tamil Nadu | Molybdenum | ML |
| 17 | Kurchha Glauconite Block | Uttar Pradesh | Potash | CL |
| 18 | Pahadi Kalan - Gora Kalan Phosphorite Block | Uttar Pradesh | Phosphorite | CL |
| 19 | Salal-Haimna Lithium, Titanium and Bauxite (Aluminous Laterite) Block | UT: Jammu and Kashmir | Lithium, Titanium and Bauxite (Aluminous Laterite) | CL |
| 20 | Katghora Lithium and REE Block | Chhattisgarh | Lithium and Rare Earth Elements | CL |

- இந்தியாவில் முதன்முறையாக முக்கிய மற்றும் மூலோபயக் கனிமங்களை ஏலம் விடுவதற்கான செயல்முறையானது மத்திய அரசால் தொடங்கப்பட்டுள்ளது.
- மத்திய அரசானது 1957 ஆம் ஆண்டு சுரங்கம் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டத்தினை (MMDR) 2023 ஆம் ஆண்டு MMDR திருத்தச் சட்டம் மூலம் திருத்தியமைத்துள்ளது.
- இதன் கீழ், 24 முக்கிய மற்றும் மூலோபயக் கனிமங்கள் 1957 ஆம் ஆண்டு MMDR சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.
- மேலும், திருத்தப்பட்ட இந்த சட்டமானது இந்த கனிமங்களின் தொகுதிகளை ஏலம் விட மத்திய அரசுக்கு அதிகாரம் அளித்துள்ளது.
- இந்தத் தொகுதிகளின் ஏலத்தின் மூலம் சம்பந்தப்பட்ட மாநில அரசுகளுக்கு வருவாய் கிடைக்கும்.
- அவை பீகார், சத்தீஸ்கர், குஜராத், ஜார்க்கண்ட், ஒடிசா, தமிழ்நாடு, உத்தரப்பிரதேசம் மற்றும் ஜம்மு & காஷ்மீர் முழுவதும் அமைந்துள்ளன.
- இந்தியாவில் ஜம்மு & காஷ்மீர் மற்றும் சத்தீஸ்கர் என இரண்டு இடங்களில் லித்தியம் படிவு தொகுதிகள் உள்ளன.
- முதன்முறையாக லித்தியம் தாது சுரங்க உரிமைகள் தனியாருக்கு ஏலம் விடப்பட்டு உள்ளது.

- எனினும் தனது செயல்பாடுகளைத் தொடங்குவதற்கு முன், உரிமதாரர் வனம் மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த அனுமதிகள், கிராம சபை ஒப்புதல் மற்றும் பிற உள்ளிட்ட 15 ஒப்புதல்கள் மற்றும் அனுமதிகளை தனியார் நிறுவனங்கள் பெற வேண்டும்.
- தற்போதைய நிலவரப்படி, லித்தியம், நிக்கல் மற்றும் தாமிரத்திற்காக பெருமளவில் இறக்குமதியையே இந்தியா பெரிதும் சார்ந்துள்ளது.

## சூர்ய நூதன்




- இந்தியன் எண்ணெய் உற்பத்திக் கழக நிறுவனமானது, சூர்ய நூதன் என்ற பெயரில் ஓர் இடத்தில் நிலையாகப் பொருத்தப்பட்ட வகையிலான, மீள் மின்னேற்றம் செய்யக் கூடிய மற்றும் வீட்டிற்குள் பயன்படுத்தும் சமையல் அடுப்பு ஒன்றினை அறிமுகம் செய்துள்ளது.
- சமையல் அடுப்பு மீதான பயன்பாட்டினை ஊக்குவிப்பதற்காக இந்தியன் எண்ணெய் உற்பத்திக் கழக நிறுவனம் மற்றும் EKI எனர்ஜி ஆகிய நிறுவனங்கள் ஒப்பந்தம் மேற் கொண்டுள்ளன.
- உணவு சமைப்பதற்காக சூரிய சக்தியைப் பயன்படுத்துகின்ற இந்த அடுப்பினை எப்பொழுதும் சமையலறையில் வைத்தவாறே உபயோகிக்க முடியும்.
- ஒரு முறை கொள்முதல் செலவு மற்றும் எந்தவொரு பராமரிப்பு செலவினமும் இல்லாத இந்த அடுப்பு ஆனது, புதைபடிவ எரிபொருட்களுக்கு ஒரு மாற்றாக கருதப்படுகிறது.

## GIAN திட்டம்





- கல்விசார் வலையமைப்புகளின் உலகளாவிய முன்னெடுப்பின் (GIAN) நான்காவது கட்டத்தை மீண்டும் தொடங்க கல்வி அமைச்சகம் தயாராகி வருகிறது.

- GIAN தொடங்கப்பட்டதில் இருந்து வெளிநாட்டு ஆசிரியர்களின் பயணம் மற்றும் மதிப்பூதியத்தை ஆதரிப்பதற்காக குறைந்தபட்சம் 126 கோடி ரூபாயை மத்திய அரசு செலவிட்டுள்ளது.
- இந்தியாவிற்கு வருகை தந்த கல்வியாளர்களில் 41.4% (668) பேர் அமெரிக்க நாட்டினைச் சேர்ந்தவர்கள் ஆவர்.
- மீதமுள்ளவர்கள் ஐக்கியப் பேரரசு (143), ஜெர்மனி (93), கனடா (89), பிரான்சு (56), இத்தாலி (58), நோர்டிக் நாடுகள் (47), சீனா, ஜப்பான் மற்றும் தாய்வான் (63), ஆசியான் (42) மற்றும் பிற (259) நாடுகளைச் சேர்ந்த நிபுணர்கள் ஆவர்.
- இதன் மூலம் 72,000 இந்திய மாணவர்கள் நேரடியாக பயனடைந்தனர்.

## தன்னார்வ நெறிமுறைகள்

- இந்தியாவில் உள்ள நான்கு முன்னணி கணினி விளையாட்டு தயாரிப்பு அமைப்புகள் ஆனது இயங்கலை வழியான விளையாட்டுகளின் இடைத்தரகு அமைப்புகளுக்கான தன்னார்வ நெறிமுறைக் குறியீட்டில் கையெழுத்திட்டுள்ளன.
- இது பயனர் பாதுகாப்பை மையமாகக் கொண்டு "பாதுகாப்பான, நம்பகமான மற்றும் பொறுப்பு மிக்க" விளையாட்டுத் துறையை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (MeitY) ஆனது 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், 2021 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பச் சட்டத்தில் மேற் கொள்ளப் பட்ட விளையாட்டு தொடர்பான திருத்தங்களை தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற் கொள்ளப் பட்டுள்ளது.

## ஒப்பந்தம் சாராத நிறுவனங்கள் மீதான நடுவண் ஒப்பந்தம்




- 'நிறுவனங்கள் குழுமம்' கோட்பாட்டில் கையொப்பமிடாத நிறுவனங்களும் நடுவண் ஒப்பந்தத்தின் கீழ் கட்டுப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- இந்தக் கோட்பாட்டில் கையழுத்திடாத நிறுவனமானாலும், ஒப்பந்தத்தில் ஒரு அங்கத்தினராக இருக்கின்ற, நிறுவனங்கள் குழுமத்தின் உறுப்பினராக இருக்கும் ஒரு நிறுவனம் இந்த நடுவண் ஒப்பந்தத்திற்கு உட்பட வேண்டும் என்று அக்கோட்பாடு கூறுகிறது.

- 1996 ஆம் ஆண்டு நடுவண் சட்டத்தின் 7வது பிரிவுடன் சேர்த்து பார்க்கையில், 2(1)(h) என்ற சட்டப் பிரிவின் கீழ் "அங்கத்தினர்" என்பதன் வரையறை இதில் கையொப்பம் இட்ட மற்றும் கையொப்பமிடாத அங்கத்தினர் ஆகிய இரண்டும் அடங்கும்.

## இந்தியக் கலை, கட்டிடக்கலை மற்றும் வடிவமைப்பு கண்காட்சி (IAADB) 2023





- இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் முதலாவது இந்திய கலை, கட்டிடக் கலை மற்றும் வடிவமைப்பு கண்காட்சியானது (IAADB) (2023) புது டெல்லியில் தொடங்கப் பட்டது.
- கொல்கத்தா, டெல்லி, மும்பை, அகமதாபாத் மற்றும் வாரணாசி ஆகிய ஐந்து முக்கிய நகரங்களில் அருங்காட்சியகங்களைப் புத்துயிர் பெறச் செய்வதற்காகவும் கலாச்சார இடங்களை மேம்படுத்துவதற்காகவும் என்று மேற்கொள்ளப்படும் நாடு தழுவிய ஒரு பிரச்சாரத்துடன் இந்த முன்னெடுப்பு இணைக்கப்பட்டுள்ளது.
- கொச்சி-முசிரிஸ் கண்காட்சியானது 2012 ஆம் ஆண்டில் கேரளாவில் நடைபெற்றது.
- பீகார் அருங்காட்சியக கண்காட்சியானது 2021 ஆம் ஆண்டில் பாட்னாவில் தொடங்கப் பட்டது.


## PAC சங்கங்களுக்கான மாதிரி துணை விதிகள்

- கூட்டுறவு அமைச்சகம் ஆனது, முதன்மை வேளாண் கடன் சங்கங்களை (PAC) புத்துயிர் பெறச் செய்யும் நோக்கில் மாதிரி துணை விதிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த மாதிரி விதிகள், அடிமட்ட நிலையில் உள்ள முதன்மை வேளாண் கடன் சங்கங்களின் செயல்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கான வழிகாட்டுதல்கள் அல்லது ஒழுங்குமுறைகளின் தொகுப்பாகும்.
- மாதிரி விதிகளை ஏற்றுக் கொள்வதன் மூலம், முதன்மை வேளாண் கடன் சங்கங்கள் பல்சேவை வழங்கீட்டு மையங்களாக செயல்பட முடிவதோடு, அவற்றின் செயல்பாட்டுத் திறன், வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்த செய்யவும், கிராமப்புறங்களில் வேளாண் கடன்கள் மற்றும் பல்வேறு கடன் சாரா சேவைகளை வழங்க முடியும்.

- PACS என்பது மூன்று அடுக்கு கூட்டுறவு கடன் கட்டமைப்பில் கடைநிலை அமைப்பாக செயல்படுகின்ற கிராம அளவிலான கூட்டுறவு கடன் சங்கங்கள் ஆகும்.
- நாட்டில் 1.02 லட்சம் முதன்மை வேளாண் கடன் சங்கங்கள் உள்ளன.
- மகாராஷ்டிராவில் அதிகபட்சமாக 20,897 முதன்மை வேளாண் கடன் சங்கங்கள் உள்ள நிலையில் அதில் 11,326 PACS நஷ்டத்தில் இயங்குகின்றன.




## கரும்புச்சாறு மற்றும் எத்தனால் உற்பத்தி




- 2023-24 ஆம் விநியோக ஆண்டில் எத்தனால் உற்பத்திக்காக 'கரும்புச்சாறு மற்றும் சர்க்கரை பாகு'வைப் பயன்படுத்த மத்திய அரசு தடை செய்துள்ளது.
- உள்நாட்டு நுகர்வுக்குப் போதுமான சர்க்கரை இருப்பைப் பேணுவதற்கும், சர்க்கரை விலையைக் கட்டுக்குள் வைத்திருப்பதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இருப்பினும் 2023-24 ஆம் ஆண்டில் எத்தனால் உற்பத்திக்காக கரும்பு உபப் பொருளான 'B வகை சர்க்கரை கழிவுப் பாகினை' பயன்படுத்த அரசாங்கம் அனுமதித்துள்ளது.
- கச்சா எண்ணெய் இறக்குமதியைச் சார்ந்திருப்பதைக் குறைக்கச் செய்வதற்கான அரசாங்கத்தின் முயற்சியின் ஒரு பகுதியாக எத்தனால் என்ற நிறமற்றத் திரவம், எரிபொருளுடன் கலக்கப் படுகிறது.

## சட்டப் பிரிவு 370 மீதான உச்ச நீதிமன்றத் தீர்ப்பு




- இந்தியத் தலைமை நீதிபதி தலைமையிலான அரசியலமைப்பு அமர்வானது, 2019 ஆம் ஆண்டில், 370வது சட்டப் பிரிவை ரத்து செய்த மத்திய அரசின் முடிவை ஒருமனதாக உறுதி செய்தது.
- அரசியலமைப்பின் 370வது சட்டப் பிரிவானது, ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலத்திற்குச் சிறப்பு அந்தஸ்தை வழங்கியது.
- 370வது சட்டப் பிரிவு சுதேச அரசிலிருந்து இந்திய மாநிலமாக மாறுவது தொடர்பான விதிகளை மட்டுமே கொண்ட சட்ட விதி என்றும் தலைமை நீதிபதி குறிப்பிட்டார்.
- ஜம்மு மற்றும் காஷ்மீர் இந்தியாவுடன் ஒருங்கிணைந்த பிறகு எந்தவொரு உள் இறையாண்மையையும் தக்க வைத்துக் கொள்ளவில்லை என்றும், இந்திய அரசியலமைப்பினை அந்த மாநிலத்திற்குப் பயன்படுத்துவதற்கு மாநில அரசாங்கத்தின் ஒப்புதல் தேவையில்லை என்றும் நீதிமன்றம் கூறியது.
- மேலும், லடாக் ஒன்றியப் பிரதேசமாக பிரிக்கப் பட்டதையும் இந்த சட்டப் பிரிவு உறுதி செய்தது.
- 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் தேதிக்குள் ஜம்மு மற்றும் காஷ்மீர் சட்டப் பேரவைக்குத் தேர்தல் நடத்த நடவடிக்கை எடுக்குமாறு இந்திய தேர்தல் ஆணையத்துக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

### *சிறப்பு அந்தஸ்தின் பின்னணி*

- இந்திய அரசியலமைப்பின் 370வது சட்டப் பிரிவின் கீழ் ஜம்மு மற்றும் காஷ்மீர் சிறப்பு அந்தஸ்தை பெற்றது.
- இந்தச் சட்டப் பிரிவானது, இது ஒரு தற்காலிக அந்தஸ்து என்றும், குடியரசுத் தலைவர் அதற்கான பொது அறிவிப்பை வெளியிட்டால் அது செயல்படாமல் போய்விடும் என்றும் குறிப்பிடுகிறது.
- எனினும், அதற்கு முன், ஜம்மு காஷ்மீர் அரசியலமைப்புச் சபையின் பரிந்துரை அவசியம் ஆகும்.
- 370வது சட்டப்பிரிவின் விளைவாக, ஜம்மு காஷ்மீர் அதன் சொந்த அரசியலமைப்பைக் கொண்டிருந்தது.
- மாநில அரசு ஒப்புதல் அளிக்காத வரை, நாடாளுமன்றத்தால் இயற்றப்படும் அனைத்துச் சட்டங்களும் அந்த மாநில அரசுக்குப் பொருந்தாது.
- 1954 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (ஜம்மு மற்றும் காஷ்மீரில் செயல்படுத்துதல்) ஆணையானது ஜம்மு மற்றும் காஷ்மீருக்கு பொருந்தும் சட்ட விதிகள் மற்றும் விதிமுறைகளை பட்டியலிடுகிறது.
- மேலும், அரசியலமைப்பின் 35Aவது சட்டப் பிரிவின் கீழ் சட்ட விதிவிலக்குகள் தொகுப்பையும் குடியரசுத் தலைவர் பட்டியலிட்டார்.
- இந்த 35A சட்டப் பிரிவானது, இந்திய அரசியலமைப்பில் இடம்பெறவில்லை. மாறாக இது ஜம்மு & காஷ்மீர் அரசியலமைப்பில் மட்டுமே இடம் பெற்றுள்ளது.
- 1954 ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் ஆணையானது ஜம்மு மற்றும் காஷ்மீருக்கான ஸ்தாபக சட்ட ஆவணத்தை அமைத்தது.
- 35A சட்டப்பிரிவு ஆனது வெளியாட்கள் அப்பகுதியில் சொத்து வாங்குவதைத் தடை செய்தல் மற்றும் காஷ்மீர் பகுதியைச் சாராதவர்களைத் திருமணம் செய்து கொள்ளும் பெண்கள் தங்கள் சொத்து உரிமைகளை இழத்தல் போன்ற அந்த மாநிலத்தின் பல பிரத்தியேகச் சட்டங்களைப் பாதுகாத்தது.

## மஹுவா மொய்த்ரா வெளியேற்றம்

- நெறிமுறைக் குழுவின் பரிந்துரையின் பேரில் திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் மஹுவா மொய்த்ரா மக்களவையில் இருந்து வெளியேற்றப்பட்டார்.
- பாராளுமன்றத்தில் அரசாங்கத்தை விமர்சித்து கேள்விகள் கேட்டதற்காக கோடிக் கணக்கில் பணம் மற்றும் பரிசுகள் உட்பட லஞ்சம் பெற்றதாக குற்றம் சாட்டப்பட்டார்.
- பாராளுமன்ற விவகார அமைச்சர் இவரின் "நெறிமுறையற்ற நடத்தைக்காக" அவரை வெளியேற்றுவதற்கான ஒரு தீர்மானத்தை முன்வைத்த நிலையில் குரல் வாக்கெடுப்பு மூலம் அது ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- மக்களவையில், அதிகாரிகள், ஊடகங்கள் அல்லது மற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது பாராளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பும் புகார்களைச் சிறப்புரிமைக் குழு மதிப்பாய்வு செய்கிறது.
- மக்களவையின் சட்டமியற்றுபவர்களுக்கு எதிரான சாமானியர்களின் புகார்களை விசாரிக்கும் ஒரே குழு நெறிமுறைக் குழுவாகும்.

- திருமதி மொய்த்ரா தான் மக்களவையில் இருந்து வெளியேற்றப்பட்டதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் முறையீடு செய்துள்ளார்.
- அரசியலமைப்புச் சட்டத்தின் 122வது சட்டப் பிரிவு, நாடாளுமன்றத்தில் நடக்கும் நடவடிக்கைகள் மீது முறையீடு செய்வதற்கு விலக்கு அளித்தாலும், அவர் சில சட்ட உரிமைகளை இதற்காகப் பயன்படுத்த முடியும்.
- நெறிமுறைக் குழுவானது பாராளுமன்ற உறுப்பினர்களின் நெறிமுறையற்ற நடத்தை களை விசாரிக்கச் செய்றது, ஆனால் நெறிமுறையற்ற நடத்தை என்பது யாதென பாராளுமன்ற விதிகளால் வரையறுக்கப்படவில்லை.
- 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், 11 பாராளுமன்ற உறுப்பினர்கள் – மக்களவையில் இருந்து 10 பேர் மற்றும் மாநிலங்களவையில் இருந்து ஒருவர் – குறை தீர்ப்பிற்கு லஞ்சம் பெற்ற குற்றம் காரணமாக வெளியேற்றப் பட்டனர்.




## உண்மையறியும் மற்றும் நல்லிணக்க ஆணையம்

- நீதிபதி சஞ்சய் கிஷன் கௌல் "நடுநிலையான உண்மையறியும் மற்றும் நல்லிணக்க ஆணையத்தினை" அமைப்பதற்குப் பரிந்துரைத்துள்ளார்.
- இது 'உண்மை மற்றும் நீதி ஆணையம்' அல்லது 'உண்மை ஆணையம்' என்றும் அழைக்கப் படுகிறது.
- இது ஒரு அரசு அல்லது சில சமயங்களில் அரசு சார்பற்றத் தரப்பினர்கள் அல்லது சில போராளிகள் செய்த தவறுகளை ஒப்புக் கொள்வது மட்டுமல்லாமல் அது குறித்து வெளிப்படுத்துவதற்குமான ஒரு அதிகாரப்பூர்வ நெறிமுறையாகும் என்பதால் கடந்த கால மோதல்கள் தீர்க்கப்பட்டு அதற்கான தீர்வு காணப்படும்.
- 1980 ஆம் ஆண்டுகளில் இருந்து ஜம்மு மற்றும் காஷ்மீரில் அரசு மற்றும் அரசு சாரா தரப்பினர்களால் நடத்தப்பட்ட மனித உரிமை மீறல்களை விசாரித்து அது குறித்து அறிக்கை அளிப்பதையும் நல்லிணக்கத்திற்கான நடவடிக்கைகளை பரிந்துரைக்கச் செய்வதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உகாண்டா (1974) மற்றும் கென்யா (2009) ஆகிய முந்தைய உண்மை ஆணையங்கள் நன்கு அறியப்பட்டவையாகும்.

- தென்னாப்பிரிக்காவில், அதிபர் நெல்சன் மண்டேலாவால் அமைக்கப்பட்ட முதலாவது நிறவெறிக்குப் பிந்தைய அரசாங்கம் ஆனது 1995 ஆம் ஆண்டில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணையத்தினை நிறுவியது.

## கரண் சிங்கின் 1949 பிரகடனம்

- 1949 ஆம் ஆண்டு நவம்பர் 25 ஆம் தேதியன்று, யுவராஜ் கரண் சிங் அவர்களால் ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கான பிரகடனம் வெளியிடப்பட்டது.
- இந்தப் பிரகடனம் வெளியிடப்பட்டவுடன், இணைப்பு ஒப்பந்தத்தின் 8வது பத்தி, அதன் சட்டப்பூர்வத் தாக்கங்களை இழந்தது.
- 1949 ஆம் ஆண்டு பிரகடனம் ஆனது, ஜம்மு மற்றும் காஷ்மீர் அதன் இறையாண்மை கொண்ட ஆட்சியாளர் மூலம் இந்தியாவிடம் தனது இறையாண்மையை முழுமையாக ஒப்படைத்ததைப் பிரதிபலிக்கிறது.
- கரண் சிங்கின் பிரகடனமானது அதுவரை ஜம்மு & காஷ்மீர் மற்றும் இந்திய அரசு ஆகியவற்றுக்கு இடையேயான அரசியலமைப்பு உறவை நிர்வகித்து வந்த 1935 ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டம் ரத்து செய்யப்படும் என்று கூறியது.

### ACCESSION AND AFTER

**OCT 26, 1947:** Following the invasion by tribesmen supported by Pak army, Maharaja Hari Singh sought Indian assistance, eventually leading him to sign Instrument of Accession (IoA).

**MAY 27, 1949:** Constituent Assembly of India cleared draft Article 370, as per the terms in the IoA.

**MAY 1, 1951:** Dr Karan Singh issued a proclamation convening the Constituent Assembly for the State.

**1952:** Delhi Agreement between Sheikh Abdullah and Prime Minister Jawaharlal Nehru expanded the relationship between India and J&K.


**MAY 15, 1954:** Art. 35A introduced through a Presidential Order to protect laws passed by state legislature regarding permanent residents.

**NOV 17, 1957:** Constitution of State of J&K adopted; came into force on Jan 26, 1958.


## வனச் சான்றிதழ் திட்டம்

- இந்தத் தேசிய வனச் சான்றிதழ் திட்டமானது, நாட்டில் நிலையான வன மேலாண்மை மற்றும் வேளாண் காடுகளை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட தன்னார்வ மூன்றாம் தரப்பு சான்றிதழை வழங்குகிறது.
- இந்த் திட்டத்தில் வன மேலாண்மைச் சான்றிதழ், வன மேலாண்மைக்கு அப்பாற்பட்ட மரங்களுக்கான சான்றிதழ் மற்றும் பாதுகாப்புத் தொடரமைப்பு சான்றிதழ் ஆகியவை அடங்கும்.
- இது தங்கள் செயல்பாடுகளில் பொறுப்புமிகு வன மேலாண்மை மற்றும் வேளாண் காடு வளர்ப்பு நடைமுறைகளை கடைபிடிக்கும் பல்வேறு நிறுவனங்களுக்குச் சந்தை சார் ஊக்க மானியங்களை வழங்குகிறது.

- வன மேலாண்மைச் சான்றிதழானது 8 அளவுருக்கள், 69 குறிகாட்டிகள் மற்றும் 254 சரி பார்ப்பு விதிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய இந்திய வன மேலாண்மை தரநிலையை அடிப்படையாகக் கொண்டது.
- இது 2023 ஆம் ஆண்டு தேசியப் பணித் திட்டக் குறியீட்டின் ஒருங்கிணைந்த பகுதி ஆகும்.
- வன மேலாண்மைக்கு அப்பாற்பட்டு அமைந்த மரங்கள் என்ற தனித் தரநிலையானது, தற்போது புதிதாக தொடங்கப்பட்ட இந்திய வனம் மற்றும் மரச் சான்றிதழ் திட்டத்தின் ஒரு பகுதியாக அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.





## பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்களில் பூஜை



- இந்தியத் தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்ட, சமய முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னங்களில் பூஜை மற்றும் பல்வேறு வழிபாடுகளை மேற்கொள்வதற்கு அனுமதிக்கச் செய்வதற்கான பல்வேறு சாத்தியக் கூறுகள் குறித்து ஆய்வு செய்யப் பாராளுமன்றக் குழுவானது அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது.
- மத்திய அரசினால் பாதுகாக்கப்பட்ட 3,693 நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல் பொருள் தளங்கள் இந்தியத் தொல்லியல் துறையால் பராமரிக்கப் படுகின்றன.
- அதில், நான்கில் ஒரு பங்கிற்கு (820) சற்று குறைவானவையே வழிபாட்டுத் தலங்கள் ஆகும்.
- மீதமுள்ளவை எந்தவொரு செயல்பாடுகளும் மேற்கொள்ளப்படாத நிலையில் நினைவு சின்னங்களாகக் கருதப் படுகின்றன என்பதால் அங்கு புதிய சமயச் சடங்குகளைத் தொடங்கவோ அல்லது நடத்தவோ முடியாது.
- வழிபாட்டுத் தலங்களைக் கொண்ட இடங்களில் கோவில்கள், மசூதிகள், தர்காக்கள் மற்றும் தேவாலயங்கள் ஆகியவை அடங்கும்.
- இந்தியத் தொல்லியல் துறையின் விதிகளின்படி, பாதுகாக்கப்பட்ட தளங்களுக்கான பொறுப்பினை அத்துறை ஏற்ற போது "வழிபாட்டுத் தலங்களாக அவை செயல்பாட்டில் இருந்தால்" மட்டுமே வழிபாட்டு நடவடிக்கைகள் அனுமதிக்கப்படும்.
- ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நமாஸ் நடைபெறும் தாஜ்மஹால் செயல்பாட்டில் உள்ள நினைவுச் சின்னத்திற்கான சிறந்த உதாரணம் ஆகும்.
- மற்ற குறிப்பிடத்தக்கச் செயல்பாட்டில் உள்ள நினைவுச் சின்னங்களில் கன்னோஜில் உள்ள மூன்று மசூதிகள், மீரட்டில் உள்ள ரோமன் கத்தோலிக்க தேவாலயம், டெல்லியின் ஹவுஸ் காஸ் கிராமத்தில் உள்ள நிலா மசூதி மற்றும் லடாக்கில் உள்ள பல புத்த மடாலயங்கள் ஆகியவை அடங்கும்.

## 2024 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலுக்கான கூடுதல் நிதி



- தேர்தல் நடவடிக்கைகள் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுக்காக (EVM) கூடுதலாக 3,147.92 கோடி ரூபாய் செலவழிப்பதற்குப் பாராளுமன்றத்தின் ஒப்புதலை அரசாங்கம் கோரியுள்ளது.
- இது தேர்தலுக்காக கணிக்கப்பட்ட மொத்தச் செலவின மதிப்பினை 5,000 கோடி ரூபாய்க்கு மேல் அதிகரிக்கிறது.
- தேர்தல் தொடர்பான செலவினங்களுக்கு நிதி அளிப்பதற்காக சட்ட அமைச்சகத்திற்கு 3,147.92 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- நிர்வாகச் செலவுகளுக்காக தேர்தல் ஆணையத்துக்கு 73.67 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலுக்காக வாங்கப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் சோதனை மற்றும் பராமரிப்புக்காக 36.20 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலை நடத்துவதற்காக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை வாங்குவதற்கு 575.07 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- 2014, 2009 மற்றும் 2004 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களுக்கான செலவினம் முறையே 3,870.34 கோடி ரூபாய், 1,114.38 கோடி ரூபாய் மற்றும் 1,016.08 கோடி ரூபாய் ஆகும்.

## நிலக்கரி ஆலைகளில் உமிழ்வுக் கட்டுப்பாட்டுத் தொழில்நுட்பத்தினை பயன்படுத்துதல்

Classification of coal TPPs under three categories

| Category | Plants in Delhi-NCR | Parameters other than SO2 norms | SO2 emissions |
|---|---|---|---|
| A: Within 10 km radius of the National Capital Region of cities with million plus population | Dadri TPP, Indira Gandhi TPP, Mahatma Gandhi TPP and Panipat TPP | December 31, 2022 | December 31, 2024 |
| B: Within 10 km radius of critically polluted areas or non-attainment cities | - | December 31, 2023 | December 31, 2025 |
| C: Remaining plants | Harduaganj Thermal Power Station, Guru Gobind Singh TPP, Guru Hargobind TPP, Talwandi Sabo TPP, Rajiv Gandhi TPP, Yamunanagar TPP, Rajpura TPP | December 31, 2024 | December 31, 2026 |

- இந்தியாவின் நிலக்கரி அடிப்படையிலான மின் உற்பத்தி நிலையங்களில் எட்டு சதவீதத்திற்கும் குறைவானவை சல்பர் டை ஆக்சைடு உமிழ்வினைக் கட்டுப்படுத்தச் செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்ட தொழில்நுட்பத்தைப் பின்பற்றியுள்ளன.

- கனல் வாயு கந்தக நீக்க (FGD) அலகுகள், $SO_2$ உமிழ்வைக் குறைப்பதற்கு முக்கியமானது ஆகும்.
- இந்தியாவில் உள்ள நிலக்கரி ஆலைகளில் 16.5 ஜிகாவாட்ஸ் (GW) மட்டுமே கனல் வாயு கந்தக நீக்க (FGD) அலகுகள் மற்றும் சுழல் பாய்ம அடுக்கு எரிப்பு (CFBC) கொதி கலன்களை நிறுவியுள்ளது.
- நாட்டின் 92 சதவீத நிலக்கரி சார்ந்த மின் உற்பத்தி நிலையங்கள் கனல் வாயு கந்தக நீக்க (FGD) அலகுகள் இல்லாமல் இயங்குகின்றன.
- உலகிலேயே மிகப்பெரிய அளவில் கந்தக டை ஆக்சைடை வெளியேற்றும் நாடு இந்தியா ஆகும்.

## அண்டார்டிகா திட்டப் பயணம்

- டார்ஜிலிங்கில் உள்ள இமாலய மலையேறும் சாகச நிறுவனத்தின் குழுவானது 'அண்டார்டிகா திட்டப் பயணம்' என்ற பயணத்தினை மேற்கொண்டது.
- 2021 ஆம் ஆண்டில் தொடங்கிய இந்த பயணம், குழுத் தலைவர் ஜெய் கிஷன் தலைமையிலான மூன்று மலையேற்ற வீரர்கள் கொண்ட குழுவினால் மேற் கொள்ளப் பட்டது.
- நாடு முழுவதும் உள்ள பகுதிகளில் 7,500 சதுர அடி மற்றும் 75 கிலோ எடை கொண்ட தேசியக் கொடியை அக்குழுவினர் ஏற்றினர்.
- சிக்கிம் இமயமலையில் 16,500 அடி உயரத்தில் உள்ள ரெனாக் சிகரத்திலும் அவர்கள் கொடி ஏற்றினர்.
- ஆசியா சாதனை புத்தகம் மற்றும் இந்தியா சாதனை புத்தகம் ஆகியவற்றில் மலையின் மேல் ஏற்றப்பட்ட மிகப்பெரிய இந்தியத் தேசியக் கொடியாக இது பதிவு செய்யப் பட்டுள்ளது.

## மகளிர் வேலைவாய்ப்பின்மை விகிதத்தில் நிலவும் சரிவுப் போக்கு

- மகளிர் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் ஆனது, 2023 ஆம் நிதியாண்டின் முந்தைய காலாண்டில் இருந்த 23.2% மற்றும் இரண்டாம் காலாண்டில் இருந்த 21.7% உடன் ஒப்பிடும்போது தற்போது 24% ஆக உயர்ந்துள்ளது.
- மகளிர் வேலைவாய்ப்பின்மை விகிதம் ஆனது, ஆண்களின் வேலைவாய்ப்பின்மை விகிதத்தை விட அதிகமாக இருந்தாலும், கடந்த மூன்று ஆண்டுகளில் முதல் முறையாக 2024 ஆம் நிதியாண்டின் இரண்டாம் காலாண்டில் 9% மதிப்பெண்ணுக்குக் கீழே குறைந்துள்ளது.
- கடந்த காலாண்டில் 9.1% இருந்த நகர்ப்புற மகளிர் வேலைவாய்ப்பின்மை 2024 ஆம் நிதியாண்டின் இரண்டாம் காலாண்டில் 8.6% ஆகக் குறைந்துள்ளது.
- பணியாளர் வருங்கால வைப்பு நிதியில் புதிதாக இணைந்த நிகர பெண் சந்தா தாரர்களின் எண்ணிக்கை 2023 ஆம் நிதியாண்டில் 28.69 லட்சமாக உயர்ந்துள்ளது.
- ஒட்டு மொத்த வேலைவாய்ப்பின்மை விகிதம் ஆனது முந்தைய காலாண்டில் இருந்த அளவிலிருந்து மாறாமல் 6.6% ஆக இருந்தது.
- முந்தைய காலாண்டில் 5.9% இருந்த ஆண்கள் வேலைவாய்ப்பின்மை விகிதம் ஆனது 6% ஆக உயர்ந்துள்ளது.

## இந்தியாவின் இலகுரக வாகனச் சந்தை

**Need for Speed** Light Vehicle Sales (in million units)

| Countries | 2019 | 2023 | % change |
|---|---|---|---|
| China* | 24.8 | 25.3 | 2 |
| US | 17.1 | 15.5 | -9 |
| **India** | **3.5** | **4.8** | **36** |
| Japan | 5.1 | 4.7 | -7 |
| Germany | 3.9 | 3.1 | -21 |
| UK | 2.7 | 2.2 | -17 |
| Brazil | 2.7 | 2.1 | -19 |
| France | 2.7 | 2.1 | -21 |
| S. Korea | 1.7 | 1.7 | -1 |
| Italy | 2.1 | 1.7 | -19 |

*Mainland China

**Passenger vehicle sales in India have been advancing month-on-month since FY22**

**334,000 units** Nov dispatches touched a new high

- இந்த நடப்பு ஆங்கில ஆண்டில் உலகின் 10 மிகப்பெரிய வாகன உற்பத்தி சந்தைகளில் இந்தியா வேகமாக முன்னேற்றம் பெற்று வருகிறது.
- சீனா மற்றும் அமெரிக்கா ஆகியவற்றிற்கு அடுத்தபடியாக உலகின் மூன்றாவது பெரிய இலகுரக வாகன உற்பத்திச் சந்தையாக (6 டன்களுக்கும் குறைவானது) இந்தியா உள்ளது.
- இந்தியாவின் வாகன விற்பனை அளவானது, 2019 ஆம் ஆண்டில் இருந்த வாகன விற்பனை அளவில் இருந்து 36 சதவீதம் உயர்ந்து 2023 ஆம் ஆண்டில் 4.8 மில்லியன் அலகுகளாக உயரும் என மதிப்பிடப் பட்டுள்ளது.
- 2022-23 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் வாகன விற்பனையானது 3.8 மில்லியன் அலகுகளை எட்டியுள்ளது.

## தலைமை தேர்தல் ஆணையர் நியமனம்

- தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் பிற தேர்தல் ஆணையர்கள் (நியமனம், பணி நிபந்தனைகள் மற்றும் பதவிக்காலம்) மசோதாவினை மாநிலங்களவை நிறைவேற்றி உள்ளது.
- எதிர்காலத்தில் தலைமைத் தேர்தல் ஆணையர் (CEC) மற்றும் தேர்தல் ஆணையர்களை (EC) நியமிப்பதற்கான வழிகளை இந்தச் சட்டம் வழங்கும்.
- இந்தச் சட்டம் ஆனது, 1991 ஆம் ஆண்டு தேர்தல் ஆணையம் (தேர்தல் ஆணையர்களின் பணி நிபந்தனைகள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள்) என்ற சட்டத்தினை மாற்றி அமைக்கிறது.
- தேர்தல் ஆணையர்களின் எண்ணிக்கையானது குடியரசுத் தலைவரால் குறிப்பிட்ட கால இடைவெளியில் தீர்மானிக்கப்படும்.
- தேர்தல் ஆணையத்தின் நியமனமானது, தெரிவுக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் குடியரசுத் தலைவரால் மேற்கொள்ளப்படும்.
- இக்குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது:
    - பிரதமர்,
    - ஒரு அமைச்சரவை அமைச்சர், மற்றும்

- மக்களவையின் எதிர்க்கட்சித் தலைவர் (அல்லது பெரும்பான்மை கொண்ட எதிர்க் கட்சித் தலைவர்).

❖ பாராளுமன்றம் இந்தத் தெரிவுச் செயல்முறையைப் பரிந்துரைப்பதற்கான சட்டத்தை உருவாக்கும் வரை பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், தலைமை நீதிபதி ஆகியோர் அடங்கிய குழு தேர்தல் ஆணையர்களை தேர்வு செய்யும் என உச்ச நீதிமன்றம் (அனூப் பரன்வால் வழக்கு) சமீபத்தில் தீர்ப்பளித்தது.




## ஜம்மு & காஷ்மீர் மற்றும் புதுச்சேரியில் பெண்கள் இட ஒதுக்கீட்டுக்கான மசோதாக்கள்


❖ புதுச்சேரி மற்றும் ஜம்மு & காஷ்மீர் ஒன்றியப் பிரதேசங்களுக்கு அரசியலமைப்பு (106வது திருத்தம்) சட்டத்தின் விதிகளை விரிவுபடுத்தச் செய்வதற்கான இரண்டு மசோதாக்களை மக்களவை நிறைவேற்றியுள்ளது.

❖ இது பாராளுமன்றம் மற்றும் மாநிலச் சட்டமன்றங்களில் பெண்களுக்கு 33% அளவு இட ஒதுக்கீடு வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ புதுச்சேரி ஒன்றியப் பிரதேசத்தின் சட்டப் பேரவையில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு வழங்குவதற்கான விதிமுறைகள், 1963 ஆம் ஆண்டு ஒன்றியப் பிரதேசங்களின் அரசு சட்டத்தினைத் திருத்தியமைப்பதன் மூலம் பாராளுமன்றத்தால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

❖ ஜம்மு & காஷ்மீரில் கடந்த ஆறு ஆண்டுகளாகச் சட்டமன்ற உறுப்பினர்கள் இல்லை.

❖ மக்களவை மற்றும் சட்டமன்றங்களில் பெண்களுக்கான ஒதுக்கீடு 15 ஆண்டுகளுக்கு தொடரும் என்பதோடு பாராளுமன்றமானது பின்னர் இந்த அமலாக்கக் காலத்தை நீட்டிக்க முடியும்.




## 2029 ஆம் ஆண்டில் பெண் வாக்காளர்கள்

- 2029 ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவில் உள்ள பெண் வாக்காளர்களின் எண்ணிக்கை என்பது, ஆண் வாக்காளர்களின் எண்ணிக்கையை விட அதிகமாகும் என்று பாரத் ஸ்டேட் வங்கியின் அறிக்கை கூறியுள்ளது.
- 2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில், மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை சுமார் 68 கோடியாக இருக்கும் என்றும், அதில் பெண் வாக்காளர்களின் எண்ணிக்கை 33 கோடியாக (49%) இருக்கும் என்றும் இந்த அறிக்கை கணித்துள்ளது.
- 2029 ஆம் ஆண்டு முதல், 37 கோடியாக உயர உள்ள பெண் வாக்காளர்கள் எண்ணிக்கை என்பது பதிவு செய்யப்பட்ட ஆண் வாக்காளர்களை விட 36 கோடியை விட அதிகமாக இருக்கும்.
- மேலும் 2047 ஆம் ஆண்டில் பெண் வாக்காளர் எண்ணிக்கை 55% ஆக அதிகரிக்கவும், ஆண் வாக்காளர் எண்ணிக்கை 45% ஆகவும் குறையக்கூடும் என்று கணித்துள்ளது.
- 1951 ஆம் ஆண்டு தேர்தலில் எட்டு கோடி பேர் வாக்களித்தனர்.
- 2009 ஆம் ஆண்டு தேர்தலில் இது 42 கோடியாக இருந்த நிலையில், இதில் 19 கோடி பெண்கள் ஆவர்.
- 2014 ஆம் ஆண்டில், வாக்காளர்களின் எண்ணிக்கை 13.7 கோடியாக அதிகரித்து 55 கோடியாக இருந்த நிலையில், அதில் 26 கோடி பெண்கள் ஆவர்.
- இது பெண்களில் 5.8 மடங்கும், ஆண்களில் 5.2 மடங்கும் அதிகமாக இருந்தது.
- 2019 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் வாக்களித்த ஆண்களை விட பெண் வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது.
- 2019 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் 67.01% ஆண் வாக்காளர்களும், 67.18% பெண் வாக்காளர்களும் வாக்களித்துள்ளனர்.

- More women than men voted in the 2019 Lok Sabha polls
- Participation of women voters at 67.18% more than men's 67.01%
- Number of women voters increased by 5.1% from 2019 to 2022
- The 3 years, saw number of male voters rise by 3.6%
- Total number of voters rose by 4.3% from 2019 to 2022
- Total voters now at 95.1 crore against 91.2 crore 3 years ago
- There are 46.1 crore women voters now from 43.8 crore in 2019
- Number of male electors up from 47.3 crore, now at 49 crore

## மின்னணு மூலத் தரவுப் பரிமாற்ற அமைப்பு (EODES)

- இந்தியா-கொரியா மின்னணு மூலத் தரவுப் பரிமாற்ற அமைப்பு (EODES) ஆனது சமீபத்தில் தொடங்கப்பட்டது.
- இந்த அமைப்பு இந்தியா-கொரியா விரிவான பொருளாதாரக் கூட்டு ஒப்பந்தத்தை (CEPA) சுமூகமாகச் செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது சுங்க ஒத்துழைப்பை மேம்படுத்துதல், தரவு பரிமாற்றத்தை தானியக்கமாக்கச் செய்தல், சர்வதேசச் சுங்க ஒத்துழைப்புச் செயல் முறையில் உலகளாவியத் தரத்தை அமைத்தல் ஆகியவற்றை செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஆளில்லா விமானத் தொழில்நுட்பச் செயல்விளக்கம்



- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு ஆனது தன்னிச்சையாக பறக்கும் விமான தொழில்நுட்பச் செயல்விளக்கத்தினை வெற்றிகரமாக மேற்கொண்டது.
- இதன் மூலம், ஆளில்லா விமானத் தொழில்நுட்பத்திற்கான பல கட்டுப்பாடுகளில் முன்னணித்துவம் பெற்ற நாடுகளின் முதன்மைக் குழுமத்தில் இந்தியா இணைந்து உள்ளது.
- இது அமெரிக்க இராணுவ விமானப்படையில் உள்ள அமெரிக்கன் நார்த்ரோப் க்ரம்மன் நிறுவனத்தின் B-2 'ஸ்பிரிட்' போன்ற மேம்பட்ட குண்டுவீச்சு விமானங்களுக்கு இணையானதாகும்.

## பாஷினி செயற்கை நுண்ணறிவு செயற்கருவி

- பிரதமர் அவர்கள் வாரனாசியில் உள்ள காசி தமிழ் சங்கமத்தில் ஆற்றிய உரையின் போது நிகழ்நேர செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான 'பாஷினி' என்ற செயற் கருவி பயன்படுத்தப்பட்டது.
- இந்த நிகழ்வின் போது குறிப்பாக தமிழ் பேசும் பார்வையாளர்களுக்கு மொழி சார்ந்த சேவையை வழங்கும் வகையில் 'பாஷினி' வடிவமைக்கப்பட்டுள்ளது.
- பல்வேறு இந்திய மொழிகளைப் பேசும் நபர்களிடையே உரையாடல்களை மிகவும் எளிதாக்கும் செயற்கை நுண்ணறிவு வழியான மொழிபெயர்ப்பு அமைப்பாக இது செயல்படுகிறது.
- இது தனிநபர்கள் தங்கள் சொந்த மொழியில் தொடர்பு கொள்ள அனுமதிப்பதோடு, மொழி சார்ந்த தடைகளையும் நிவர்த்தி செய்கிறது.
- பல இந்திய மொழிகளில் மொழி உள்ளீடுகளை சேகரிப்பதில் கவனம் செலுத்தும் வகையில், பாஷா தான் அமைப்பு பாஷினி திட்டத்தில் ஒரு முக்கிய முன்னெடுப்பாகச் செயல்படுகிறது.




## மாநிலங்களுக்கிடையேயான தளவாடப் போக்குவரத்தினை எளிதாக்குதல் 2023


- "பல்வேறு மாநிலங்களுக்கிடையேயான தளவாடப் போக்குவரத்தினை எளிதாக்குதல் (LEADS) 2023" அறிக்கையானது சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- உலக வங்கியின் 2018 ஆம் ஆண்டு தளவாடங்கள் செயல்திறன் குறியீட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்டு, காலப்போக்கில் LEADS அறிக்கையாக உருவாகி உள்ளது.

- ❖ இது மாநிலம்/ஒன்றியப் பிரதேச அளவில் தளவாடச் செயல்திறனை மேம்படுத்தச் செய்வதற்கான நுண்ணறிவுகளை வழங்குகிறது.
- ❖ நாட்டின் தளவாடச் செலவினம் ஆனது 7.8 சதவீதம் முதல் 8.9 சதவீதம் வரை இருக்கும் மதிப்பிடப்பட்டுள்ளது.
- ❖ 2023 ஆம் ஆண்டு LEADS அறிக்கையில் சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலங்கள்


| | சாதனை படைத்தவை | வேகமாக முன்னேறி வருபவை | இலக்கு நிர்ணயித்துள்ளவை |
|---|---|---|---|
| கடற்கரை சார்ந்த மாநிலங்கள் | ஆந்திரா, குஜராத், கர்நாடகா, தமிழ்நாடு | கேரளா, மகாராஷ்டிரா | கோவா, ஒடிசா, மேற்கு வங்காளம் |
| நிலத்தால் சூழப்பட்ட மாநிலங்கள் | ஹரியானா, பஞ்சாப், தெலுங்கானா, உத்தரப் பிரதேசம் | மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், உத்தரக்காண்ட் | பீகார், சத்தீஸ்கர், இமாச்சலப் பிரதேசம், ஜார்க்கண்ட் |
| வடகிழக்கு மாநிலங்கள் | அசாம், சிக்கிம், திரிபுரா | அருணாச்சலப் பிரதேசம், நாகாலாந்து | மணிப்பூர், மேகாலயா, மிசோரம் |
| ஒன்றியப் பிரதேசங்கள் | சண்டிகர், டெல்லி | அந்தமான் & நிக்கோபார், லட்சத்தீவு, புதுச்சேரி | டாமன் & டையூ/ தாத்ரா & நகர் ஹவேலி, ஜம்மு & காஷ்மீர், லடாக் |

## தொலைத்தொடர்பு மசோதா, 2023

- ❖ மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்ட 2023 ஆம் ஆண்டு தொலைத்தொடர்பு மசோதாவானது, கடந்த 138 ஆண்டுகளில் முதல் முறையாக தொலைத்தொடர்புச் சட்டத்தை விரிவான முறையில் மீண்டும் திருத்தி எழுத முன்மொழிகிறது.
- ❖ இது 1885 ஆம் ஆண்டின் தொலைத்தொடர்பு சட்டத்தை மாற்றியமைக்கிறது.
- ❖ தொலைத்தொடர்பு வாடிக்கையாளர்கள் “உடல் அங்க அடையாள அங்கீகாரம்” பெற வேண்டும் என்று இந்த மசோதா வலியுறுத்துகிற நிலையில், அதற்கான வடிவம் பின்னர் அறிவிக்கப்படும்.
- ❖ தொலைத்தொடர்பு தகவல்தொடர்புகளின் சட்டப்பூர்வத் தலையீடுகள் அல்லது கண்காணிப்பு முந்தைய சட்டத்தின் படி மேற்கொள்ளப்படும்.
- ❖ பொது அவசரநிலை அல்லது பாதுகாப்புச் சிக்கல்களின் போது ஒரு தொலைத் தொடர்பு வலையமைப்பின் செயல்பாடுகளை மத்திய அரசு கைப்பற்றுவதற்கு இந்த மசோதா அனுமதிக்கிறது.
- ❖ பார்தி நிறுவனத்தின் ஆதரவு பெற்ற ஒன்வெப் மற்றும் அமெரிக்காவில் அமைந்த ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் ஸ்டார்லிங்க் உள்ளிட்ட செயற்கைக்கோள் சார்ந்த இணைய சேவை வழங்குநர்களுக்கு அவர்கள் அலைக்கற்றை ஒதுக்கீடுகளுக்கான வாய்ப்பினை இந்த மசோதா வழங்குகிறது.




## தேசியப் புவி அறிவியல் தரவு களஞ்சியத் தளம்





- ❖ சுரங்க அமைச்சகமனது, புது டெல்லியில் தேசியப் புவி அறிவியல் தரவுக் களஞ்சியம் (NGDR) என்ற தளத்தினை அறிமுகம் செய்துள்ளது.
- ❖ NGDR என்பது நாடு முழுவதும் உள்ள புவிசார் தகவல்களை அணுகச் செய்வதற்கும், பகிர்வதற்கும், பகுப்பாய்வு செய்வதற்குமான ஒரு விரிவான இயங்கலை தளமாகும்.
- ❖ பயன் மிக்க வளங்களுக்கான முன்னெப்போதும் இல்லாத வகையிலான அணுகலுடன் தொழில் துறைகள் மற்றும் கல்வித்துறையில் உள்ள பங்குதாரர்களுக்கு முக்கியமான புவி அறிவியல் தரவைப் பொது உடைமை ஆக்குவதில் இது ஓர் குறிப்பிடத்தக்க முன்னேற்றப் படியாகும்.

## காக்ரபார் அணுமின் நிலையம் அலகு 4

- ❖ குஜராத்தில் உள்ள காக்ரபார் அணுமின் நிலையத்தின் (KAPP-4) நான்காவது அலகு முழுமையான செயல்பாட்டிற்கு வந்துள்ளது.

- 700 மெகாவாட் உற்பத்தி செய்யும் இந்த அலகுகள் இந்திய அணுசக்தி கழகம் லிமிடெட் (NPCIL) மூலம் கட்டமைக்கப்படும் மிகப்பெரிய உள்நாட்டு அணுசக்தி உற்பத்தி உலைகள் ஆகும்.
- அணுசக்தி ஒழுங்குமுறை வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்ட அனைத்து முக்கிய நிபந்தனைகளையும் பூர்த்தி செய்ததையடுத்து இந்த அணு உலை முழுமையான செயல்பாட்டிற்கு வந்துள்ளது.
- NPCIL தற்போது 7,480 மெகாவாட் திறன் கொண்ட 23 அணுமின் உலைகளை இயக்கி வருகிறது.




## ஆர்க்டிக் நோக்கிய இந்தியாவின் முதல் குளிர்கால ஆய்வுப் பயணம்

- நார்வேயின் ஸ்வால்பார்டில் உள்ள நை-அலெசுண்ட் ஆராய்ச்சி தளத்திற்கு இந்தியா தனது முதல் குளிர்கால ஆய்வுப் பயணத்தைத் தொடங்கியுள்ளது.
- தேசிய துருவ மற்றும் கடல் சார் ஆராய்ச்சி மையம் (NCPOR) ஆனது ஹிமாத்ரி என்ற இடத்தில் ஆராய்ச்சி நிலையத்தைக் கொண்டுள்ளது.
- இந்த ஆய்வுப் பயணம் ஆனது வளிமண்டலச் செயல்முறைகள், வட துருவ மின்னொளி, வளிமண்டல மின்சாரத் தன்மை மற்றும் விண்வெளி சார் இயற்பியல் ஆய்வுகள் பற்றிய தரவுகளைச் சேகரிக்கும்.
- ஆர்க்டிக் கடல் பனியானது பத்தாண்டுகளுக்கு 13% என்ற வீதத்தில் குறைந்து வருகிறது.
- இந்தியப் பருவமழை மற்றும் வெப்பமண்டலப் பருவநிலையில் அதன் தாக்கத்தைப் பற்றி புரிந்து கொள்ள இப்பகுதியில் ஆய்வு மேற்கொள்வது முக்கியமானதாகும்.

- NCPOR ஆர்க்டிக் பகுதியில் தனது செயல்பாடுகளை விரிவுபடுத்தவும், கனடாவின் உயர் ஆர்க்டிக் ரேகை பகுதி மற்றும் கிரீன்லாந்து ஆகிய பகுதிகளில் முக்கிய ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் திட்டமிட்டுள்ளது.
- 1990 ஆம் ஆண்டில், ஜப்பானின் தேசிய துருவ ஆராய்ச்சி நிறுவனம் ஆனது, னை நை - அலெசுண்ட் பகுதியில் ஆராய்ச்சி நிலையத்தினை நிறுவிய முதல் நிறுவனம் ஆகும்.

## முக்கிய கனிமங்கள் குறித்த ஆய்வுகளை விரைவுபடுத்துவதற்கான திட்டம்


- சுரங்க அமைச்சகம் ஆனது, முக்கிய மற்றும் நிலத்தின் ஆழ் நிலைகளில் காணப்படும் கனிமங்கள் குறித்த ஆய்வுகளை மேற்கொள்வதை துரிதப் படுத்துவதற்கான புதிய திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.
- திட்டத்திற்கான அனுமதி வழங்கீடுகளில் ஏற்படும் தாமதங்களை நீக்குதல், திட்டச் செயலாக்கத்தை விரைவுபடுத்துதல் மற்றும் தேசிய கனிம ஆய்வு அறக்கட்டளையின் (NMET) நிதியுதவியுடன் பெரிய நிறுவனங்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் ஆகியவற்றை ஆய்வுத் திட்டங்களில் ஈடுபட ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சுரங்கத் துறை அமைச்சகமானது, அறிவிக்கப்பட்ட தனியார் ஆய்வு நிறுவனங்களுக்கு (NPEAs) ஆய்வுத் திட்டங்களை வழங்குவதற்கு நேரடியாக அனுமதிக்கும்.
- இந்த NPEA நிறுவனங்களுக்கு முன்பு கிடைக்காத சலுகையான தாங்கள் ஆய்வு செய்த கனிமத் தொகுதிகளை ஏலம் விடுவதற்கு தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளன.




## ‘குழந்தை’ என்ற வரையறையில் தெளிவின்மை

- இந்தியாவின் பல்வேறு சட்டங்களின் கீழ் உள்ள ‘குழந்தை’ என்ற சொல்லிற்கு ஒரே மாதிரியான வரையறை தேவை என்று நாடாளுமன்றக் குழு கூறியுள்ளது.
- 1986 ஆம் ஆண்டு குழந்தை மற்றும் இளம்பருவத் தொழிலாளர் (தடை மற்றும் ஒழுங்கு முறை) சட்டத்தின் (CALPRA) படி, ‘குழந்தை’ என்பது தனது பதினான்காவது வயதை நிறைவு செய்யாத நபர் அல்லது 2009 ஆம் ஆண்டு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்விச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வயது இவற்றில் எது அதிகமோ அதைக் குறிக்கிறது.

- 2016 ஆம் ஆண்டு சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தம் ஆனது (14 முதல் 18 வரையான வயதுக்குட்பட்டவர்களை குழந்தைகள் என்று வரையறுக்கிறது.
- 2009 ஆம் ஆண்டு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்விச் சட்டத்தின் கீழ், ‘குழந்தை’ என்ற சொல் ஆறு முதல் பதினான்கு வயதிற்குட்பட்ட ஆண் அல்லது பெண் என்று பொருள்படும்.
- 1948 ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தில், 1986 ஆம் ஆண்டில் மேற் கொள்ளப் பட்ட திருத்தத்தின்படி, ‘குழந்தை’ என்ற சொல் தனது பதினான்காவது வயதைப் பூர்த்தி செய்யாத நபர் என்று வரையறுக்கப்படுகிறது.
- 2015 ஆம் ஆண்டு சிறார் நீதி (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், பதினெட்டு வயதை பூர்த்தி செய்யாத ஒரு நபரை ‘குழந்தை’ என்று வரையறுக்கிறது.
- 2015 ஆம் ஆண்டு சிறார் நீதி சட்டத்தில், ‘இளம் பருவத்தினர்’ என்ற சொல்லானது வரையறுக்கப் படவில்லை.
- ராஷ்ட்ரிய கிஷோர் ஸ்வஸ்த்ய காரியகாரம் 10 முதல் 19 வரையான வயதிற்குட்பட்ட நபரை இளம் வயதினர் (வாலிபர்) என்று வரையறுக்கிறது.
- CALPRA சட்டத்திற்கு முரணாக குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவது பிடியாணை இன்றி கைது செய்யக்கூடிய குற்றமாகும், அதே சமயம் 2015 ஆம் ஆண்டு சிறார் நீதி சட்டத்தின் கீழ் இது பிடியாணை பெறத் தகுந்த குற்றமாகும்.




## பாரதிய நியாய சன்ஹிதாவின் கீழ் மருத்துவர்கள்

- மருத்துவர்களின் கவனக்குறைவான செயல்கள் ஆனது, நோயாளியின் மரணத்திற்கு வழி வகுத்தால் சிறைத் தண்டனை பெறுவதிலிருந்து அவர்களுக்கு விலக்கு அளிக்கப் பட மாட்டாது.
- தற்போது, 1860 ஆம் ஆண்டு இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 304A என்ற பிரிவின் கீழ், மரணத்திற்கு வழி வகுக்கும் கவனக்குறைவான செயல்களுக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை மற்றும் அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும்.

- இந்தியத் தண்டனைச் சட்டத்திற்கு மாற்றாக அமையும் பாரதிய நாகரிக் சுரக்சா சன்ஹிதா, இது போன்ற செயல்களுக்கான தண்டனையை ஐந்து ஆண்டுகளாக அதிகரிக்கிறது.
- ஆனால், மருத்துவர்கள் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டால் இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனை என்ற குறைந்தபட்சத் தண்டனை கிடைக்கும் என்று அது குறிப்பிடச் செய்கிறது.
- எனினும், நோயாளியின் நலனுக்காக அவர்களின் சம்மதத்துடன் நல்ல நம்பிக்கையில் மேற்கொள்ளப்படும் செயல்களின் விளைவாக ஏற்படும் மரணங்களுக்கான குற்றவியல் நடவடிக்கைகளில் இருந்து மருத்துவர்களுக்கு ஏற்கனவே பாதுகாப்பு வழங்கப் பட்டுள்ளது.





### இரத்தம் சார்ந்த குறைபாடுகள் உள்ளவர்களுக்கான இட ஒதுக்கீடு



- தலாசீமியா, இரத்தம் உறையாமை நோய் மற்றும் அரிவாள் வடிவ உயிரணு இரத்த சோகை நோய் போன்ற இரத்தக் கோளாறுகளால் பாதிக்கப்பட்டவர்கள், மாற்றுத் திறனாளிகள் பிரிவின் கீழ் அரசு வேலைகளில் இடஒதுக்கீடு பெறத் தகுதியற்றவர்கள் ஆவர்.
- 2016 ஆம் ஆண்டின் மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் இந்த மூன்று நோய்களும் மாற்றுத் திறனாளிகள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.
- ஆனால், 2016 ஆம் ஆண்டு சட்டத்தின் 34வது பிரிவின்படி, மேற்கூறிய பிரிவினர் அரசு நிறுவனங்களில் உள்ள வேலைவாய்ப்புகளில் இடஒதுக்கீட்டினைப் பெறத் தகுதி அற்றவர்கள் ஆவர்.
- பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த பல குறைபாடுகள் உள்ளவர்களுக்கு அரசு வேலை வாய்ப்புகளில் 4% இடஒதுக்கீடு கிடைக்கப் பெறுகிறது.

## நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்கள் பதிவு மசோதா, 2023


- இந்த மசோதா, பதிப்பகத் துறையை நிர்வகிக்கும் ஆங்கிலேயர் காலத்துச் சட்டத்தை மாற்றியமைத்து, பருவ இதழ்களை பதிவு செய்யும் செயல்முறையை எளிதாக்கும்.
- இது பழங்காலச் சட்டத்தில் உள்ள பருவ இதழ்களை பதிவு செய்வதற்கான எட்டு படிநிலை செயல்முறையை ஒரே படி செயல்முறையாக மாற்றும்.
- இந்த மசோதா, 1867 ஆம் ஆண்டு அச்சிடுதல் மற்றும் பதிவு செய்தல் (PRB) சட்டத்தை மாற்றியமைக்கிறது.
- முன்னதாக நிர்ணயிக்கப்பட்ட 2 முதல் 3 ஆண்டுகள் என்ற காத்திருப்பு காலத்திற்குப் பதிலாக நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்கள் வெளியீட்டு நிறுவனங்கள் தற்போது 60 நாட்களுக்குள் தங்களை பதிவு செய்து கொள்ள முடியும்.
- சில விதிமீறல்களுக்கு, முன்னதாக சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட நிலையில், தற்போது அதற்குப் பதிலாக அபராதம் சார்ந்த சில தண்டனைகள் விதிக்கப்படுவதற்கு முன்மொழியப் பட்டுள்ளன.



## PRAYAS திட்டம்

- சர்வதேச புலம் பெயர்வு அமைப்பு (IOM) PRAYAS திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தியத் தொழிலாளர்கள் மற்றும் மாணவர்கள் பாதுகாப்பான, முறையான மற்றும் தொடர்ச்சியான புலம்பெயர்வுகளை மேற்கொள்வதை எளிதாக்கச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- PRAYAS என்பது இளையோர்கள் மற்றும் திறம் வாய்ந்த தொழில் வல்லுநர்களுக்கான தொடர்ச்சியான மற்றும் எளிதான புலம்பெயர்வை மேம்படுத்துதல் என்பதைக் குறிக்கிறது.
- 1951 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட சர்வதேச புலம்பெயர்தல் அமைப்பானது மனிதாபிமானமிக்க வகையிலான மற்றும் முறையான புலம்பெயர்வுகளை நன்கு மேம்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு முகமை ஆகும்.


## 2023 ஆம் ஆண்டில் CAG தணிக்கைகள்




- 2023 ஆம் ஆண்டில், தலைமைக் கணக்கு தணிக்கையாளரால் தயாரிக்கப்பட்ட மத்திய அரசின் கணக்குகள் குறித்த 18 கணக்கு தணிக்கை அறிக்கைகள் மட்டுமே நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.
- 2019 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் சராசரியாக 22 என்ற கணக்கில், கடந்த சில ஆண்டுகளாக இந்த எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வருகிறது.
- இது 2014 மற்றும் 2018 முதல் 2023 வரையிலான ஆண்டுகளுக்கு இடையில் 40 ஆக குறைந்தது.
- கடந்த ஐந்தாண்டுகளில் இரயில்வே நிர்வாகத் துறையின் 14 தணிக்கை அறிக்கைகள் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்ற நிலையில், இது முந்தைய ஐந்தாண்டு காலத்தில் தாக்கல் செய்யப்பட்ட 27 என்ற எண்ணிக்கையை விட குறைவாகும்.
- தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் (CAG) என்பது இந்தியத் தணிக்கை மற்றும் கணக்குத் துறைக்கு (IA&AD) தலைமை வகிக்கும் ஒரு அரசியலமைப்பு சார்ந்த பதவியாகும்.
- CAG மற்றும் IA&AD ஆகிய இந்த இரண்டு அமைப்புகளும் இந்தியாவின் உயர் நிலை தணிக்கை நிறுவனங்கள் (SAI) என அழைக்கப்படுகின்றன.

## நம்பிக்கை சாராத, உறுதிப்படுத்துதல் சார்ந்த சரிபார்ப்பு

- முக்கிய அமைச்சகங்கள் மற்றும் துறைகளில் உள்ள 10,000 பயனர்களுக்கு என்று பாதுகாப்பான மின்னஞ்சல் அமைப்பை மத்திய அரசு அமைத்துள்ளது.
- நம்பிக்கை சாராத, உறுதிப்படுத்துதல் சார்ந்த சரிபார்ப்பு (ZTA) முறையில் செயல் படும் இந்த மின்னஞ்சல் அமைப்பானது தேசிய தகவல் மையத்தால் (NIC) வடிவமைக்கப் பட்டுள்ளது.
- இந்த 10,000 மின்னஞ்சல் முகவரிகளும் 17 மத்திய அமைச்சகங்கள் மற்றும் பல்வேறு துறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.
- இதற்கு, பயனர் பெயர் மற்றும் கடவுச்சொற்கள் மட்டுமின்றி தற்போது இரண்டு அடுக்கு சரிபார்ப்பு முறை செயல்படுத்தப் பட்டுள்ளது.
- கடவுச்சொற்களோடு சேர்த்து, முக அங்கீகாரம் அல்லது உடல் சார் குறியீடு என்ற ஒரு சரிபார்ப்பும் அவசியமாகும்.
- உள்நுழைவு மற்றும் வெளியேறும் நேரங்கள் பதிவு செய்யப்பட்டு கண்காணிக்கப் படுகின்றன.
- 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வரை குடிமக்கள் தரவுகள் சம்பந்தப்பட்ட 165 தரவு மீறல் சம்பவங்கள் பதிவு செய்யப் பட்டு உள்ளன.




## YUVAi முன்னெடுப்பு

- உலக செயற்கை நுண்ணறிவு கூட்டாண்மை அமைப்பின் (GPAI) தலைமைப் பொறுப்பினைக் கொண்டுள்ள இந்தியா, GPAI உச்சி மாநாட்டைப் புது டெல்லியில் வெற்றிகரமாக நடத்தியது.
- YUVAi - மேம்பாட்டிற்கான இளையோர் சமூகம் மற்றும் செயற்கை நுண்ணறிவு மூலமான வளர்ச்சி என்பது தேசிய மின் ஆளுகைப் பிரிவு (NeGD) மற்றும் இன்டெல் இந்தியா ஆகியவற்றின் கூட்டு முன்னெடுப்பு ஆகும்.
- இந்தத் திட்டம் ஆனது, இளையோர்களுக்கு அத்தியாவசிய செயற்கை நுண்ணறிவு சார்ந்த திறன்களை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டு இந்நிகழ்வில் அறிமுகப் படுத்தப் பட்டது.

- YUVAi ஆனது நாடு முழுவதும் உள்ள 8 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான பள்ளி மாணவர்கள் மத்தியில் செயற்கை நுண்ணறிவு பற்றிய ஆழ்ந்த புரிதலை வளர்ப்பதையும், அவர்களுக்கு செயற்கை நுண்ணறிவு திறன்களை வழங்குவதையும், மனிதர்களுக்கான பயனை மையமாகக் கொண்ட செயற்கை நுண்ணறிவு வடிவமைப்பாளர்களாகவும் பயனர்களாகவும் ஆவதற்கு அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## GPAI புது டெல்லி பிரகடனம்


- 28 நாடுகளை உறுப்பினர்களாகத் கொண்ட உலக செயற்கை நுண்ணறிவு கூட்டாண்மை (GPAI) ஆனது புது டெல்லி பிரகடனத்தை ஒருமனதாக ஏற்றுக் கொண்டது.
- இந்த முன்னெடுப்பானது, சாத்தியமான அபாயங்களைக் குறைக்கும் அதே வேளையில் வாய்ப்புகளைப் பயன்படுத்துவதற்கு முன்னுரிமை அளித்து, செயற்கை நுண்ணறிவு மேம்பாட்டின் போக்கை வழி நடத்த ஆயத்தமாக உள்ளது.
- வேளாண் துறையில் செயற்கை நுண்ணறிவு சார்ந்தப் புத்தாக்கங்களை ஒரு புதிய "கருப்பொருள் சார்ந்த முன்னுரிமையாக" கருத்தில் கொண்டு ஆதரிக்கவும் இந்த பிரகடனம் ஒப்புக் கொண்டுள்ளது.
- பக்கிங்ஹாம்ஷையரில் உள்ள பிளெட்ச்லி பூங்காவில் ஐக்கிய பேரரசின் செயற்கை நுண்ணறிவு பாதுகாப்பு உச்சி மாநாட்டில் கையெழுத்திட்ட ஒப்பந்தத்திற்கு மாறாக இந்த அறிவிப்பு தனித்துவம் பெற்று நிற்கிறது.

## BRAHMA-2D: உள்நாட்டு நதி மாதிரி



- கௌகாத்தியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது, பிரம்மபுத்திரா போன்ற பெரிய பின்னலமைப்பு நதிகளின் ஓட்டத்தை அளவிடுவதற்காக ஒரு கணித மாதிரியை உருவாக்கியுள்ளது.
- இந்த உள்நாட்டு நதி மாதிரிக்கு BRAHMA-2D (பின்னலமைப்பு நதி துணைக் கருவி: நீரியல் கட்டமைப்புப் பகுப்பாய்வுக் கருவி) எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- ஆற்றங்கரை அரிப்பைச் தடுப்பதற்காக ஆற்றங்கரை கிளை அமைப்புகள் போன்ற நிலையான நீரியல் கட்டமைப்புகளை வடிவமைத்தல் புனிதத்தன்மை மற்றும் பிற நதிக்கரைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் இது மிகவும் உதவியாக இருக்கும்.

## INS இம்பால் கப்பலை படையில் இணைப்பு




- INS இம்பால் (பெண்ணன்ட் D68), 15B திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டு வருகின்ற, விசாகப் பட்டினம் ரக ரேடாருக்குப் புலப்படாத வழிகாட்டுதலுடன் கூடிய ஏவுகணை அழிப்புக் கப்பல்களை உள்ளடக்கிய நான்கு போர்க்கப்பல்களில் மூன்றாவது கப்பல் ஆகும்.
- இந்த விசாகப்பட்டினம் ரகக் கப்பலானது பிரம்மோஸ் எனப்படும் கண்டம் விட்டு கண்டம் பாயும் சீர்வேக ஏவுகணைகள் மற்றும் கடற்கரை மற்றும் கடலில் அமைந்த இலக்குகளைத் தாக்கி அழிப்பதற்கான நீண்ட தூர வரம்புடைய, செங்குத்தாக ஏவப் படக் கூடிய பராக்-8 எனப்படும் நிலத்தில் இருந்து வானில் உள்ள இலக்கை தாக்கும் ஏவுகணைகள் ஆகியவற்றினை கொண்டுள்ளன.
- 2014 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், இந்தியக் கடற்படையானது மூன்று கொல்கத்தா ரக வழிகாட்டுதலுடன் கூடிய ஏவுகணை அழிப்புக் கப்பல்களை '15A' என்ற குறியீட்டுப் பெயரிடப்பட்ட திட்டத்தின் கீழ் படையில் இணைத்தது.
- கொல்கத்தா ரகக் கப்பல்களில் INS கொல்கத்தா, INS கொச்சி மற்றும் INS சென்னை ஆகியவை அடங்கும்.
- இந்தக் கப்பல்கள் INS டெல்லி, INS மைசூர் மற்றும் INS மும்பை ஆகியவற்றை உள்ளடக்கிய அவற்றின் முன்னோடியான டெல்லி ரகக் கப்பல்களை விட ஒரு படி மேலானவை.
- அவை திட்டம் 15 என்ற திட்டத்தின் கீழ் கட்டமைக்கப்பட்டு 1997 மற்றும் 2001 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் படையில் இணைக்கப் பட்டன.

## மாநிலங்களுக்கான வரிப் பகிர்வு 2023

- மத்திய அரசானது, 72,961.21 கோடி ரூபாயினை வரிப் பகிர்வாக மாநிலங்களுக்கு வழங்கியுள்ளது.
- உத்தரப் பிரதேசத்திற்கு அதிக அளவாக 13,088.51 கோடி ரூபாயும் அதனைத் தொடர்ந்து பீகாருக்கு 7,338.44 கோடி ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது.
- மத்தியப் பிரதேசம் 5,727.44 கோடி ரூபாயும், அதனைத் தொடர்ந்து மேற்கு வங்காளம் 5,488.88 கோடி ரூபாயும், மகாராஷ்டிரா 4,608.96 கோடி ரூபாயும்; ராஜஸ்தான் 4,396.64 கோடி ரூபாயும் மற்றும் ஒடிசா 3303.69 கோடி ரூபாயும் வரி பகிர்வாகப் பெற்றுள்ளன.

- மீதமுள்ள மாநிலங்களின் பங்குத் தொகையானது 3,000 கோடி ரூபாய்க்கும் குறைவாக உள்ள வகையில், அதாவது 281.63 கோடி ரூபாய் (கோவா) முதல் 2,976.10 கோடி ரூபாய் (தமிழ்நாடு) வரை என்ற அளவில் பகிரப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 23 | Tamil Nadu | 2976.10 |
| 24 | Telangana | 1533.64 |
| 25 | Tripura | 516.56 |
| 26 | Uttar Pradesh | 13088.51 |
| 27 | Uttarakhand | 815.71 |
| 28 | West Bengal | 5488.88 |
| | TOTAL | 72961.21 |

**RAMP திட்டம்**




- மத்திய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை நிறுவனங்கள் அமைச்சகமானது RAMP (MSME நிறுவனங்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல் மற்றும் துரிதப் படுத்துதல்) திட்டத்தின் கீழான 3 துணைத் திட்டங்களை அறிமுகப் படுத்தியுள்ளது.
- அதில் பின்வரும் முன்னெடுப்புகளும் அடங்கும்
    - MSME பசுமை முதலீடு மற்றும் பரிமாற்றத் திட்டத்திற்கான நிதியுதவி (MSE GIFT திட்டம்),
    - சுழற்சி முறைப் பொருளாதாரத்தின் மேம்பாடு மற்றும் முதலீட்டிற்கான MSE திட்டம் (MSE SPICE திட்டம்) மற்றும்

- தாமதமான கட்டணங்களுக்கான இணைய வழி சர்ச்சைத் தீர்வு வழங்கீட்டு MSE திட்டம்.

❖ MSME ஊக்குவிப்பு மற்றும் மேம்பாட்டில் மத்திய-மாநில அரசுகளின் ஒத்துழைப்பை விரைவுபடுத்துதல், MSME அமைச்சகத்தின் தற்போதைய திட்டங்களின் செயல் திறனை மேம்படுத்துதல் ஆகியவை RAMP திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

## தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்கள்




❖ அரசியல் சொற்பொழிவுகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு எதிரான தரக்குறைவான சொற்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு அரசியல் கட்சிகளை இந்தியத் தேர்தல் ஆணையம் (ECI) கேட்டுக் கொண்டுள்ளது.

❖ அரசியலில் அணுகல் மற்றும் உள்ளடக்கம் என்ற பெரும் கொள்கையை ஊக்குவிக்கும் வகையில், தேர்தல் ஆணையம் இந்த வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.

❖ அரசியல் கட்சிகள் இழிவுபடுத்தும் மற்றும் முற்கோல்களை நிலைநிறுத்தும் வகையிலான மாற்றுத்திறன் தொடர்பான கருத்துக்களை கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும் என்று ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.

❖ பொது அறிக்கைகள், உரைகள், கட்டுரைகள் மற்றும் பிரச்சாரப் பரப்புரைகளில் தரக் குறைவான சொற்களைப் பயன்படுத்துவதும் இந்த வழிகாட்டுதல்களின்படி தடை செய்யப் பட்டுள்ளது.

❖ அத்தகைய மொழி, சொற்கூறுகள், சூழலிசைவு, கேலி, தரக்குறைவான குறிப்புகள் அல்லது மாற்றுத்திறனாளிகளை அவமதிக்கும் எந்தவொரு செயலும் 2016 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் சட்டத்தின் 92வது பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப் பட தகுதியுடையதாகும்.

## கர்மயோகி திட்டத்தின் விரிவாக்கப்பட்ட பதிப்பு

❖ நல்லாட்சி தினத்தினையொட்டி, கர்மயோகி திட்டத்தின் மிகவும் விரிவாக்கப்பட்ட பதிப்பானது தொடங்கப்பட்டுள்ளது.

❖ iGOT கர்மயோகி தளத்தில் தொடங்கப்பட்ட மூன்று புதிய அம்சங்களாவன, My iGOT, ஒன்றிணைக்கப்பட்ட திட்டம் மற்றும் சீர்செய்யப்பட்ட திட்டம் ஆகியவை ஆகும்.

- ❖ மேலும் VIKAS (மாறுபடும் மற்றும் அதிவேக கர்மயோகி முழுமையான ஆதரவு) என்ற புதிய கலப்புமுறை கற்றல் திட்டமும் இதன் கீழ் தொடங்கப்பட்டது.

## இந்தியத் திறன்கள் அறிக்கை 2024





- ❖ 2024 ஆம் ஆண்டு இந்தியத் திறன்கள் அறிக்கையில் அதிக வேலை வாய்ப்பு வளங்களைக் கொண்டிருக்கும் பிரிவில் ஆந்திரப் பிரதேச மாநிலமானது மூன்றாவது இடத்தினைப் பெற்றுள்ளது.
- ❖ ஹரியானா மற்றும் மகாராஷ்டிரா இதில் முறையே முதல் மற்றும் இரண்டாவது இடங்களைப் பிடித்துள்ளன.
- ❖ இந்தியாவிலுள்ள ஒட்டுமொத்த இளைஞர்களின் வேலைவாய்ப்பின் முன்னேற்ற நிலையானது, 51.25% என்ற அளவினை எட்டியுள்ளது.
- ❖ ஹரியானா, மகாராஷ்டிரா, ஆந்திரப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், கேரளா மற்றும் தெலுங்கானா போன்ற மாநிலங்கள், அதிக வேலை வாய்ப்பு பெறக் கூடிய இளைஞர்களின் செறிவைக் காட்டுகின்றன.
- ❖ ஹரியானாவில் அதிக வேலை வாய்ப்பு பெறக் கூடிய இளைஞர்கள் குவிந்துள்ளனர்.
- ❖ 80.82% அளவு வேலைவாய்ப்பு பெறக்கூடிய இளைஞர்களுடன் புனே முதலிடத்தைப் பிடித்ததோடு, அதைத் தொடர்ந்து பெங்களூரும், திருவனந்தபுரமும் உள்ளன.
- ❖ 18-21 வயதிற்குட்பட்டவர்களில் 85.45% பேர் அளவு வேலை வேலைவாய்ப்பு பெறக் கூடிய திறன்களைப் பெற்றவர்களை தெலுங்கானா மாநிலம் கொண்டுள்ளது.
- ❖ 26-29 வயதிற்குட்பட்ட நபர்களில் அதிக வேலைவாய்ப்பு பெறக் கூடிய அளவு மனித வளங்களை குஜராத் மாநிலம் கொண்டுள்ளதோடு, இந்த வயதினரில் 78.24% பேர் வேலை வாய்ப்பு பெரும் திறனுடன் உள்ளனர்.

# சர்வதேசச் செய்திகள்

## வடிவமைப்பின் அடிப்படையில் பாதுகாப்பான செயற்கை நுண்ணறிவு அமைப்புகள்

- அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் சில நாடுகள் செயற்கை நுண்ணறிவு பாதுகாப்பு தொடர்பான முதல் விரிவான சர்வதேச ஒப்பந்தத்தினை வெளியிட்டுள்ளன.
- மோசமான நடவடிக்கையில் ஈடுபடும் அமைப்புகளிடம் இருந்து செயற்கை நுண்ணறிவை எவ்வாறு பாதுகாப்பாக வைத்திருப்பது என்பது தொடர்பான அம்சங்களை இது கையாளச் செய்வதோடு, மேலும், "வடிவமைப்பின் அடிப்படையில் பாதுகாப்பான" செயற்கை நுண்ணறிவு அமைப்புகளை உருவாக்க நிறுவனங்களுக்கு இது அழுத்தமும் கொடுக்கிறது.
- செயற்கை நுண்ணறிவினை வடிவமைத்துப் பயன்படுத்தும் நிறுவனங்கள் ஆனது, வாடிக்கையாளர்களையும், பொதுமக்களையும் தவறான நடவடிக்கைகளில் இருந்து பாதுகாக்கும் வகையில் அவற்றை உருவாக்கிப் பயன்படுத்த வேண்டும் என்று 18 நாடுகள் ஒப்புக் கொண்டுள்ளன.
- இந்த ஒப்பந்தம் ஆனது பிணைப்பு சார்ந்தது அல்ல. மேலும், செயற்கை நுண்ணறிவு அமைப்புகளின் முறைகேடானப் பயன்பாட்டினைக் கண்காணித்தல், மென்பொருள் வழங்கீட்டு நிறுவனங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் சேதப்படுத்துதலிலிருந்து தரவுகளைப் பாதுகாத்தல் போன்ற பொதுவான பரிந்துரைகளைக் கொண்டுள்ளது.

## புவிவெப்ப ஆற்றல் சார்ந்த தனிப்பட்ட மின் உற்பத்தி ஆலை (IPP)




- ஜிம்பாப்வே நாடானது, தனது முதல் பயன்பாட்டு சார்ந்த புவிவெப்ப ஆற்றல் சார்ந்த தனிப்பட்ட மின் உற்பத்தி ஆலையினை (IPP) உருவாக்கி, நாட்டில் பசுமை இல்ல வாயு (GHG) உமிழ்வைக் குறைக்க உதவ உள்ளதாக அறிவித்துள்ளது.
- 2021 ஆம் ஆண்டில், ஜிம்பாப்வேயின் மொத்த ஆற்றல் உற்பத்தியில் புதுப்பிக்க இயலா ஆற்றல் மூலங்கள் 29 சதவிகிதமும், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்கள் 71% சதவிகிதமும் கொண்டுள்ளன.
- மொத்த ஆற்றல் உற்பத்தியில், நீர் மின் ஆற்றல் 69% பங்குடன் மிகப்பெரிய பங்கைக் கொண்டுள்ளது.

- பருவநிலை மாற்றத்தால் தூண்டப்பட்ட சவால்கள் ஆனது, தீவிர சுமை குறைப்பிற்கும், புதைபடிவ எரிபொருட்கள் மீது அதிகம் சார்ந்திருக்கும் நிலைக்கும் வழி வகுத்தது.
- 2021 ஆம் ஆண்டில், உலகளாவிய பசுமை இல்ல வாயு உமிழ்வில் ஜிம்பாப்வே நாட்டின் பங்கு 0.03% மட்டுமே ஆகும்.
- இது தீவிர பருவநிலை நிகழ்வுகளால் அதிகம் பாதிக்கப்படும் நிலையில் உள்ளதோடு பருவநிலை மாற்றத்தால் அதிகம் பாதிக்கப்படும் முதல் 10 நாடுகளில் இதுவும் ஒன்றாக இடம் பெற்றுள்ளது.

## 2023 ஆம் ஆண்டில் புதிய நிலக்கரி ஆலை கட்டுமானம் – சீனா




- 2023 ஆம் ஆண்டில் உலகளாவிய ஆற்றல் உற்பத்தி திறனில் 95% சதவீதத்திற்கும் அதிகமானப் பங்குடன் புதிய நிலக்கரி ஆலை கட்டுமானத்தில் சீனா முன்னணியில் உள்ளது.
- உலகளாவிலான மதிப்பீட்டில், 131 நிலக்கரி ஆலை திட்டங்களுடன் சீனாவை தவிர்த்து 32 நாடுகளில் 110 GW திறன் கொண்ட நிலக்கரி ஆற்றல் உற்பத்தி ஆலைகள் தற்போது கட்டுமானத்தில் உள்ளன.
- மொத்த திட்டமிடப்பட்ட ஆலைகளின் திறனில் 83% பங்குடன் இந்தியா, வங்காளதேசம் மற்றும் இந்தோனேசியா ஆகியவை முன்னணியில் உள்ளன.

## சர்வதேச கடல்சார் அமைப்பு – இந்தியா

- இந்திய நாடானது, சர்வதேச கடல்சார் அமைப்பு சபைக்கு 2024-25 ஆகிய இரண்டாண்டு காலத்திற்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

- இந்தியாவின் இந்த மறுதேர்தல் ஆனது, "சர்வதேச கடல் சார் வர்த்தகத்தில் மிகப் பெரிய அளவிலான ஈடுபாடு கொண்ட 10 நாடுகளில் ஒன்றாகவும்", ஆஸ்திரேலியா, பிரேசில், கனடா, பிரான்சு, ஜெர்மனி, நெதர்லாந்து, ஸ்பெயின், சுவீடன் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் போன்ற செல்வாக்கு மிக்க நாடுகளில் ஒன்றாகவும் இந்திய நாட்டினை இடம் பெற வைக்கிறது.
- 2030 ஆம் ஆண்டு கடல்சார் இந்தியா தொலைநோக்குத் திட்டத்தின் கீழ், இலண்டனில் உள்ள சர்வதேச கடல்சார் அமைப்பின் தலைமையகத்தில் நிரந்தரப் பிரதிநிதிகளை நியமிப்பதன் மூலம் இந்தியா சர்வதேச கடல்சார் அமைப்பில் அதன் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## பாரீஸ் மன்றம்

- இலங்கை அரசானது, இந்தியா மற்றும் ஜப்பான் உள்ளிட்ட கடன் வழங்கீட்டு நாடுகளை உறுப்பினர்களாக கொண்ட பாரீஸ் கிளப் என்ற குழுவுடன் கடன் நடவடிக்கை திட்டத்தின் மீதான "கொள்கைசார் உடன்பாட்டை" சமீபத்தில் எட்டி உள்ளது.
- பாரீஸ் கிளப் என்பது கடன் வழங்கீட்டு நாடுகளை உறுப்பினர்களாக கொண்ட ஒரு அலுவல் சாரா குழு ஆகும்.
- இது இருதரப்பு கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத கடனாளி நாடுகளுக்கு நிலையான தீர்வுகளைக் கண்டறிவதற்காகப் பணியாற்றுகிறது.
- அர்ஜென்டினா நாடானது பாரீஸ் நகரில் அதன் பொதுக் கடன் வழங்குநர்களை சந்திக்க ஒப்புக் கொண்ட 1956 ஆம் ஆண்டு கூட்டத்தில் இந்த மன்றமானது தோற்றுவிக்கப் பட்டது
- பாரீஸ் கிளப் 22 நிரந்தர உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.
- இந்தக் குழுவில் இந்தியா உறுப்பினராக இல்லை.
- பாரீஸ் கிளப் பொதுவாக சர்வதேச நாணய நிதியத்தின் திட்டக் காலத்துடன் ஒத்துப் போகிறது.

## ஐநா அமைதிப்படை அமைச்சர்கள் கூட்டம் 2023

- இது கானாவின் அக்ராவில் நடைபெறுவதாக இருந்தது.
- இதில் 85 நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புகள் கலந்து கொண்டன.
- இது ஐக்கிய நாடுகள் சபையால் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் கூட்டம் ஆகும்.
- இதில் இந்தியப் பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் அஜய் பட் கலந்து கொண்டார்.
- ஒவ்வொரு அமைதிப்படை திட்டமும் ஐ.நா பாதுகாப்புக் குழுமத்தால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.
- இது 1948 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- ஐநா உறுப்பு நாடுகள் அமைதிப் படைகளுக்குத் தன்னார்வ அடிப்படையில் தங்கள் வீரர்களைப் பங்களிக்கின்றன.
- ஐநா அமைதிப் படை நடவடிக்கைகளின் நிதி ஆதாரங்கள் ஐநா உறுப்பு நாடுகளின் கூட்டுப் பொறுப்பாகும்.

- கடந்த 70 ஆண்டுகளில், இந்தியா 53 வெவ்வேறு பணிகளில் 2,75,000க்கும் மேற்பட்ட துருப்புக்களை வழங்கியுள்ளது.
- 2007 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காக்கும் பணிக்குப் பெண்கள் மட்டுமே அடங்கிய குழுவை அனுப்பிய முதல் நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றது.
- இந்திய ராணுவம் புதுதில்லியில் ஐக்கிய நாடுகளின் அமைதிப் படை மையத்தை (CUNPK) நிறுவியுள்ளது.
- 2021 ஆம் ஆண்டில், இந்தியா ஐநாவுடன் இணைந்து UNITE AWARE எனும் தளத்தை அறிமுகப் படுத்தியது.

## சர்வதேசப் பருத்தி ஆலோசனைக் குழு

- மும்பையில் அமைந்துள்ள ஜியோ உலக மாநாட்டு மையத்தில் சர்வதேசப் பருத்தி ஆலோசனைக் குழுவின் (ICAC) அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொள்ளும் 81வது முழுமையான அமர்வுகளின் கூட்டமானது ஜவுளி அமைச்சகத்தால் நடத்தப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான கருப்பொருள் யாதெனில் "பருத்தி மதிப்புச் சங்கிலி: உலகளாவிய செழுமைக்கான உள்ளூர் கண்டுபிடிப்புகள்".
- ICAC அமைப்பின் முழுமையான கூட்ட அமர்வுகளானது ஒவ்வொரு ஆண்டும் அதன் உறுப்பு நாடுகளில் நடத்தப்படுகிறது.
- இது பருத்தி உற்பத்தி, நுகர்வு மற்றும் வர்த்தகம் செய்யும் நாடுகளைச் சேர்ந்த உறுப்பினர்களின் சங்கமாகும்.
- இது அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ள வாஷிங்டனைத் தலைமையகமாக கொண்டு 1939 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
- சர்வதேச பருத்தி ஆலோசனைக் குழுவின் (ICAC) உறுப்பினர்களில் இந்தியாவும் ஒன்றாக உள்ளது.
- இதன் 28 உறுப்பினர்களில் பெரும்பாலானவை உலகளவில் அதிக பருத்தியினை உற்பத்தி செய்யும் நாடுகளாகும்.
- ஆனால் உலகளவில் அதிகப் பருத்தியினை உற்பத்தி செய்யும் 10 பெரிய உற்பத்தியாளர் நாடுகளில் இரண்டு (சீனா மற்றும் துர்க்மெனிஸ்தான்) பெரிய உற்பத்தியாளர் நாடுகளானது இதில் உறுப்பினர்களாக சேரவில்லை.
- பருத்தி சாகுபடி செய்வதில் உலகி இந்தியா மிகப்பெரிய பரப்பளவினைக் கொண்டுள்ளதோடு, பருத்தி உற்பத்தியிலும் உலகளவில் இரண்டாவது இடத்தினை வகிக்கின்றது.
- குஜராத், மகாராஷ்டிரா மற்றும் தெலுங்கானா ஆகியவை அதிகளவில் பருத்தி உற்பத்தி செய்யும் முக்கியமான மாநிலங்களாகும்.
- இம்மாநிலங்கள் நாட்டின் பருத்தி உற்பத்தியில் 65 சதவீதத்தினை உற்பத்தி செய்கின்றன.
- கஸ்தூரி பருத்தி பாரத் என்பது இந்தியாவின் மதிப்புமிக்க தர அடையாளத்தினைப் பெற்ற பருத்தி ஆகும்.

## 2023 ஆம் ஆண்டு மெராபி எரிமலை வெடிப்பு




- இந்தோனேசியாவின் உள்ள மேற்கு சுமத்ராவில் மெராபி மலை அமைந்துள்ளது.
- இது சுமத்ராவில் மிகவும் சுறுசுறுப்பாக காணப்படும் எரிமலை என்ற பெயரினைக் கொண்டுள்ளது.
- பசிபிக் எரிமலை வளையம் என்றும் அழைக்கப்படுகிற பசிபிக் கடலைச் சுற்றியுள்ள வளையமானது பசிபிக் பெருங்கடலில் செயல்பாட்டில் உள்ள எரிமலைகள் மற்றும் அடிக்கடி நிகழும் நிலநடுக்கங்களால் வகைப்படுத்தப்படும் ஒரு பாதையாகும்.
- இது பசிபிக், ஜுவான் டி ஃபூகா, கோகோஸ், இந்திய-ஆஸ்திரேலியன், நாஸ்கா, வட அமெரிக்க மற்றும் பிலிப்பைன் தட்டுகள் உட்பட பல கண்டத் தட்டுகளுக்கு இடையே உள்ள எல்லைகளைப் பகிர்ந்துள்ளது.

## கோடெக்ஸ் அலிமென்டேரியஸ் குழு 2023




- கோடெக்ஸ் அலிமென்டேரியஸ் குழுவின் (CAC) நிர்வாகக் அமைப்பின் ஆசியப் பிராந்தியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினராக இந்தியா ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- இது இத்தாலியின் ரோமில் உள்ள உணவு மற்றும் விவசாய அமைப்பின் (FAO) தலைமையகத்தில் அதன் 46வது கூட்டத்தின் போது நடைபெற்றது.
- கேழ்வரகு, குதிரைவாலி, வரகு அரிசி, பனிவரகு மற்றும் சாமை போன்ற தினைகளுக்கு உலகளாவியத் தரநிலைகளை நிறுவ இந்தியா முன்மொழிந்தது.
- கோடெக்ஸ் தற்போது சோளம் மற்றும் முத்து தினைக்கான தரங்களைக் கொண்டுள்ளது.
- CAC என்பது ஒரு சர்வதேச உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய அமைப்பாகும்.

- இது 1963 ஆம் ஆண்டு FAO மற்றும் உலக சுகாதார அமைப்பு (WHO) ஆகியவற்றால் இணைந்து நிறுவப்பட்டது.
- உலக வர்த்தக அமைப்பின் (WTO) சுகாதார மற்றும் தாவர சுகாதார நடவடிக்கைகளை (SPS) பயன்படுத்துவதற்கான ஒப்பந்தமானது கோடெக்ஸ் தரநிலைகளை அங்கீகரிக்கிறது.
- இந்தியா 1964 ஆம் ஆண்டு கோடெக்ஸ் அலிமென்டேரியஸ் அமைப்பில் உறுப்பினரானது.

## AIGIF

- 4வது ஆசியான் இந்தியா கடைமட்டப் புத்தாக்க மன்றம் 2023 (AIGIF) என்ற மாநாடானது சமீபத்தில் மலேசியாவின் லங்காவி நகரில் நடைபெற்றது.
- AIGIF என்பது அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் ஆகிய துறைகளில் இந்தியாவிற்கும் ஆசியான் உறுப்பினர் நாடுகளுக்கும் (AMS) இடையிலான உறவை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தும் ஒரு வருடாந்திரத் திட்டமாகும்.

## ஐநா சாசனத்தின் பிரிவு 99




- சமீபத்தில், ஐ.நா. பாதுகாப்புச் சபையில் உரையாற்றிய ஐ.நா. பொதுச்செயலாளர் குட்டெரஸ், காஸாவில் மனிதாபிமான அமைப்பின் மீதான வீழ்ச்சியின் கடுமையான அபாயத்தை எடுத்துக் காட்டினார்.
- ஒரு மனிதாபிமான பேரழிவைத் தவிர்க்க உதவுமாறு அவர் சபையை வலியுறுத்தியதோடு மனிதாபிமான ரீதியில் போர் நிறுத்தத்திற்கும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

- ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ், தனது பதவிக் காலத்தில் முதல்முறையாக 99வது பிரிவைச் செயல்படுத்துவதாக கூறினார்.
- ஐநா சாசனத்தின் பிரிவு 99, சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பைப் பேணுவதற்கு அச்சுறுத்தலாக இருக்கும் எந்தவொரு விவகாரத்தையும் பாதுகாப்புச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கான விருப்ப அதிகாரத்தை அதன் பொதுச் செயலாளருக்கு வழங்குகிறது.

## WRC 23 - துபாய், UAE

- ஐக்கிய அரபு அமீரகத்தினை சேர்ந்த முகமது அல் ரம்சி என்பவர் 2023 ஆம் ஆண்டு நடைபெறும் உலக வானொலித் தொடர்பு மாநாட்டின் (WRC 23) தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- ரேடியோ-அதிர்வெண் நிறமாலை, புவிநிலை-செயற்கைக்கோள் மற்றும் புவிநிலை அல்லாத-செயற்கைக்கோள் சுற்றுப்பாதைகளின் உலகளாவிய பயன்பாட்டை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்பதற்காக ஒவ்வொரு நான்கு வருடங்களுக்கும் ஒருமுறை சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியத்தால் (ITU) WRC மாநாடானது ஏற்பாடு செய்யப் படுகிறது.


## 2023 ஆம் ஆண்டின் உலகின் சக்திவாய்ந்த 100 பெண்கள்




- மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், HCL பெருநிறுவனத்தின் தலைவர் ரோஷ்னி நாடார் மல்ஹோத்ரா, இந்திய உருக்கு ஆணையத்தின் தலைவர் சோமா மோண்டல் மற்றும் பயோகான் நிர்வாகத் தலைவர் கிரண் மசூம்தார்-ஷா ஆகியோர் ஃபோர்ப்ஸின் வருடாந்திர 'உலகின் சக்திவாய்ந்தப் பெண்கள்'பட்டியலில் இடம் பெற்ற 100 பேரில் நான்கு பேர் இந்தியர்களாவர்.
- இந்தியாவின் முதல் முழுநேர பெண் நிதியமைச்சராகப் பணியாற்றிய நிர்மலா சீதாராமன், தொடர்ந்து ஐந்தாவது ஆண்டாக இந்தப் பட்டியலில் இடம் பிடித்துள்ளார்.
- இந்தப் பட்டியலில் முதல் இடத்தினை ஐரோப்பிய ஆணையத்தின் தலைவரான உர்சுலா வான் டெர் லேயன் பிடித்துள்ளார்.
- அவரைத் தொடர்ந்து ஐரோப்பிய மத்திய வங்கியின் தலைவராக பணி புரியும் கிறிஸ்டின் லகார்ட், அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரீஸ் மற்றும் இத்தாலியப் பிரதமர் ஜியோர்ஜியா மெலோனி ஆகியோர் உள்ளனர்.

## WHO குளோபல் மருத்துவப் பரிசோதனை மன்றம்

- இது உலக சுகாதார மன்றத்தின் முதல் மன்றமாகும்.
- இது நிலையான மருத்துவ ஆராய்ச்சி உள்கட்டமைப்பிற்கான உலகளாவிய தொலைநோக்குப் பார்வையை விவாதித்து உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இந்தியாவில், 1940 ஆம் ஆண்டு மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் சட்டத்தின் கீழ், மத்திய மருந்துத் தரக் கட்டுப்பாட்டு அமைப்பானது (CDSCO) மருத்துவப் பரிசோதனைகளை ஒழுங்குபடுத்துகிறது.
- இந்திய மருத்துவப் பரிசோதனைகள் பதிவு (CTRI) என்பது ஒரு இலவச இணையப் பொதுப் பதிவு அமைப்பாக 2007 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.
- இது சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகத்தின் கீழ் அமைந்துள்ள ICMR அமைப்பால் பராமரிக்கப்படுகிறது.
- இது இந்தியாவில் உள்ள ஒரு தேசிய மருத்துவப் பரிசோதனைப் பதிவகமாகும்.
- பொது மருந்துக் கட்டுப்பாட்டாளர் (இந்தியா) (DCGI) அறிவுறுத்தலின் படி, CTRI அமைப்பில் ஒவ்வொரு மருத்துவப் பரிசோதனைக்கும் பதிவு செய்வது கட்டாயமாகும்.




## ஒரே மாகாணம், ஒரே கொள்கை

- நிதி தொடர்பான இடர் மேலாண்மையினை மேற்கொள்ள வடிவமைக்கப்பட்ட "ஒரு மாகாணம், ஒரு கொள்கை" என்ற உத்தியினை சீனாவின் தேசிய நிதி ஒழுங்குமுறை நிர்வாக அமைப்பானது அறிமுகப்படுத்தியது.
- எல்லாவற்றுக்கும் ஒரே மாதிரியான உத்தியைக் கடைப்பிடிப்பதற்குப் பதிலாக, குறிப்பிட்ட சவால்கள் மற்றும் அபாயங்களை எதிர்கொள்ள தேவையான உத்திகளை உருவாக்க மாகாணங்கள் தங்களின் சொந்தக் கொள்கைகளை வகுப்பதற்காக வேண்டி வலியுறுத்தப்படுகின்றன.
- கட்டுப்படுத்தப்பட்ட கோவிட் ஜீரோ கொள்கைகள் மற்றும் தொடர்ச்சியான சொத்து நெருக்கடியினால் நீடித்த விளைவுகளால் இது அதிகரித்திருக்கிறது.



## இத்தாலி மற்றும் BRI




- 2019 ஆம் ஆண்டு சீனாவின் பட்டை மற்றும் பாதை முன்முயற்சியில் (BRI) இணைவதற்காக கையெழுத்திட்ட ஒரே பெரிய மேற்கத்திய நாடு மற்றும் ஒரே ஜி7 நாடு இத்தாலி ஆகும்.
- ஆனால் 2023 ஆம் ஆண்டு இத்திட்டத்திலிருந்து விலகுவதாக இத்தாலி உறுதி செய்து உள்ளது.
- பட்டை மற்றும் பாதை முன்முயற்சி (பட்டை ஒன்று பாதை ஒன்று) என்பது 2013 ஆம் ஆண்டு சீன அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட உலகளாவிய உள்கட்டமைப்பு மேம்பாட்டு உத்தி ஆகும்.
- "கடன்-பொறியமைப்பு இராஜதந்திரம்" என்று அமெரிக்க ஐக்கிய நாடுகள் முத்திரை குத்துவதன் மூலம் அது விமர்சனங்களை எதிர்கொண்டது.

## யுனெஸ்கோ நிர்வாகக் குழுவின் துணைத் தலைவர்

- யுனெஸ்கோ நிர்வாகக் குழுவின் துணைத் தலைவர் பதவிக்கான வாக்கெடுப்பில் இந்தியாவை வீழ்த்தி பாகிஸ்தான் வெற்றி பெற்றுள்ளது.

- ஐக்கிய நாடுகள் சபையின் (UN) ஒரு சிறப்பு நிறுவனமாகவும் செயல்படுகிற யுனெஸ்கோவின் நிர்வாகக் குழுவானது அதன் மூன்று அரசியலமைப்பு உறுப்புகளில் ஒன்றாகும்.
- பொது அவை மற்றும் செயலகம் அதன் மற்ற இரண்டு அமைப்புகளாகும்.
- 2025 ஆம் ஆண்டு வரை நான்கு வருடக் காலத்திற்குப் பதவி வகிக்கும் வகையில் 2021 ஆம் ஆண்டு இந்தியாவானது யுனெஸ்கோ நிர்வாகக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டது.
- ஒரு தலைவர், ஆறு துணைத் தலைவர்கள் மற்றும் நிரந்தரக் குழுக்கள் மற்றும் அந்தக் குழுக்களின் ஐந்து தலைவர்கள் உட்பட 12 உறுப்பினர்களை நிர்வாகக் குழுவின் பணியகமானது கொண்டுள்ளது.
- யுனெஸ்கோவின் அனைத்து உறுப்பினர்களும் ஆறு பிராந்திய தேர்தல் குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர் என்பதோடு அத்தகைய ஒவ்வொரு குழுவும் ஒரு துணைத் தலைவரால் பிரதிநிதித்துவப் படுத்தப்படுகிறது.
- ஆஸ்திரேலியா, வங்காளதேசம், சீனா, குக் தீவுகள், இந்தியா, இந்தோனேஷியா, ஜப்பான், பிலிப்பைன்ஸ், கொரியக் குடியரசு, இலங்கை மற்றும் வியட்நாம் ஆகியவற்றை உள்ளடக்கிய தொகுதி IV பிரிவின் துணைத் தலைவருக்கான இந்தத் தேர்தலில் பாகிஸ்தான் வெற்றி பெற்றுள்ளது.
- குழு I (மேற்கு ஐரோப்பா மற்றும் வட அமெரிக்க நாடுகள்), குழு II (கிழக்கு ஐரோப்பிய நாடுகள்), குழு III (லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகள்), குழு IV (ஆசிய மற்றும் பசிபிக் நாடுகள்), குழு V (a) (ஆப்பிரிக்கன் மாநிலங்கள்) மற்றும் குழு V (b) (அரபு நாடுகள்) ஆகியவை அந்த ஆறு குழுக்களாகும்.

## செயற்கை நுண்ணறிவு கூட்டணி

- மெட்டா மற்றும் IBM ஆகியவை இணைந்து செயற்கை நுண்ணறிவு கூட்டணியை நிறுவியுள்ளன.
- இது செயற்கை நுண்ணறிவு மேம்பாட்டிற்கான "தடையற்ற அறிவியல்" என்ற அணுகுமுறையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது கூகுள், மைக்ரோசாப்ட் மற்றும் ஓபன் AI போன்ற போட்டி நிறுவனங்களிடமிருந்து இந்த நிறுவனங்களை வேறுபடுத்திக் காட்டுகிறது.
- இது தடையற்ற அறிவியல் பரிமாற்றம், தடையற்றப் புத்தாக்கம் மற்றும் செயற்கை நுண்ணறிவின் எதிர்காலத்தை வடிவமைப்பதற்கு வேண்டி தடையற்ற மூல தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துதல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.
- "தடையற்ற மூலம்" என்ற சொல்லானது, தடையற்ற முறையில் அணுகக்கூடிய குறியீட்டைக் கொண்ட மென்பொருளை உருவாக்கச் செய்யும் பல தசாப்த கால நடைமுறையில் தோன்றியது.
- OpenAI நிறுவனத்தின் பெயர் அவ்வாறு இருந்தபோதிலும், அது பெரும்பாலும் குறிப்பிட்ட நிபந்தனைகளுடன் கூடிய செயற்கை நுண்ணறிவு அமைப்புகளையே உருவாக்குகிறது

## உலக சுகாதார அமைப்பின் சமூக இணைப்பு ஆணையம் (2024-2026)




- ❖ உலக சுகாதார அமைப்பானது (WHO) சமூக இணைப்பிற்கான ஆணையத்தைத் தொடங்கியுள்ளது.
- ❖ இது அமெரிக்கத் தலைமை மருத்துவ அதிகாரி டாக்டர் விவேக் மூர்த்தி மற்றும் ஆப்பிரிக்க ஒன்றிய இளம் தூதர் சிடோ பெம்பா ஆகியோர் இதன் இணைத் தலைவர்கள் ஆவர்.
- ❖ இது தனிமையை ஓர் உலகளாவிய சுகாதார அச்சுறுத்தலாக கருத்தில் கொண்டு அதனை நிவர்த்தி செய்வதற்கான 3 வருட முன்னெடுப்பாகும்.
- ❖ ஆரோக்கியம், நல்வாழ்வு, பொருளாதார முன்னேற்றம், சமூக மேம்பாடு மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றில் சமூக இணைப்பின் பங்கைப் பகுப்பாய்வு செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.


## எஸ்சிகிபோ பகுதி

- ❖ அண்டை நாடான கயானாவின் கட்டுப்பாட்டில் உள்ள எண்ணெய் வளம் நிறைந்த பகுதியான எஸ்சிகிபோவை கைப்பற்ற வெனிசுலா அரசு திட்டமிட்டுள்ளது.
- ❖ 95 சதவீதத்திற்கும் அதிகமான வெனிசுலா நாட்டு வாக்காளர்கள், எஸ்சிகிபோ மீது உரிமை கோரும் பொது வாக்கெடுப்பிற்கு ஒப்புதல் அளித்துள்ளனர்.
- ❖ எஸ்சிகிபோ கயானாவின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்துள்ள நிலையில், அதற்கு முன் - ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக அது பிரிட்டிஷ் கயானாவாக இருந்தது, ஆனால் வெனிசுலா நீண்ட காலமாக அதைக் கட்டுப்படுத்த முயல்கிறது.

- வெனிசுலா நாடானது, அந்தப் பிராந்தியத்தின் கிழக்கே உள்ள எஸ்சிகிபோ நதி தனது நாட்டுடன் இயற்கையான எல்லையை உருவாக்குகிறது என்று கூறுகிறது.
- இப்பகுதியில் உலகின் மிகப்பெரிய கச்சா எண்ணெய் இருப்பு உள்ளது.
- மதிப்பிடப்பட்ட இருப்பின் அளவானது குறைந்தது 10 பில்லியன் பீப்பாய்கள் அதாவது குவைத் அல்லது ஐக்கிய அரபு அமீரகத்தில் இருக்கும் அளவை விட அதிகம் ஆகும்.




## அனைவருக்குமான முன் எச்சரிக்கைகள் 2027





- இந்த முன்னெடுப்பானது, 2027 ஆம் ஆண்டின் இறுதிக்குள் அபாயகரமான வானிலை, நீர் சார்ந்த அல்லது பருவநிலை நிகழ்வுகளில் இருந்து பூமியில் உள்ள அனைவரையும் பாதுக்காப்பதற்காக உயிர்காக்கும் முன் எச்சரிக்கை அமைப்புகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- EW4All முன்னெடுப்பிற்கான நிர்வாகச் செயல் திட்டமானது 27வது பங்குதாரர்கள் மாநாட்டில் அறிமுகப்படுத்தப் பட்டதோடு இது ஐந்து ஆண்டுகளில் 3.1 பில்லியன் டாலர் முதலீடுகளைத் திரட்டுவதை மையமாகக் கொண்டது.
- இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, 2023 ஆம் ஆண்டிற்கான EW4All முன்னெடுப்பினை விரைவாக செயல்படுத்த 30 நாடுகளுக்கு முன்னுரிமை அளிக்கப் பட்டுள்ளன.
- இந்த முன்னெடுப்பு உலக வானிலை அமைப்பு (WMO) மற்றும் ஐக்கிய நாடுகளின் பேரிடர் அபாயக் குறைப்பு அலுவலகம் (UNDRR) தலைமையிலானதாகும்.
- ஐக்கிய நாடுகள் சபையின் மேம்பாட்டுத் திட்ட அமைப்பு ஆனது (FAO, OCHA, UNEP, UNESCO, IFRC மற்றும் WFP ஆகியவற்றுடன் இணைந்து) அதன் தற்போதைய திட்டங்கள் மற்றும் திட்ட நிரல்கள் மூலம் EW4All முன்னெடுப்பினைச் செயல்படுத்தும் பங்குதாரர் ஆகும்.


## ஷிடாவான் அணுமின் நிலையம்

- உலகின் முதல் நான்காம் தலைமுறை தொழில்நுட்பம் சார்ந்த அணு உலையான சீனாவின் ஷிடாவான் அணுமின் நிலையம் தனது வணிக ரீதியான செயல்பாடுகளைத் தொடங்கியுள்ளது.
- இந்த வாயுவின் மூலம் குளிரூட்டப்பட்ட, உயர் வெப்பநிலை உருவாக்க அணு உலையானது (HTGR) அணு ஆற்றல் தொழில்நுட்பத்தில் சீனாவின் உலகளாவிய முன்னணித்துவத்தினை எடுத்துக் காட்டுகிறது.
- இந்த உயர் வெப்பநிலை உலையில் உள்ள அமைப்பு குளிர்விக்க தண்ணீரைப் பயன்படுத்துவதற்கு என்று பதிலாக ஹீலியம் வாயுவைப் பயன்படுத்தி குளிர்விக்கப் படுகிறது.
- நீர் வளங்களுக்கு அருகில் அவை அமைக்கப்பட வேண்டிய அவசியமில்லை என்பதால், அதிக எண்ணிக்கையிலான உள்நாட்டு அணுமின் நிலையங்களை உருவாக்க இது உதவும்.
- இந்த அணுமின் நிலையத்தில் பயன்படுத்தப்படும் பொருட்களில் 93.4 சதவீத அளவுப் பொருட்கள் உள்நாட்டில் இருந்து பெறப்பட்டவை.
- 2035 ஆம் ஆண்டிற்குள் அணுசக்தி மூலம் 10% மின்சாரத்தையும் 2060 ஆம் ஆண்டிற்குள் 18% மின்சாரத்தையும் உற்பத்தி செய்ய சீனா இலக்கு வைத்துள்ளது.



## ஐரோப்பிய ஒன்றியத்தின் செயற்கை நுண்ணறிவு விதிகள்

- செயற்கை நுண்ணறிவினைப் பயன்படுத்துவதற்கான தெளிவான விதிகளை முன் வைத்த முதல் கண்டமாக ஐரோப்பிய ஒன்றியம் மாறியுள்ளது.
- அடுத்த ஆண்டின் தொடக்கத்தில், தற்போது முன்மொழியப்பட்டுள்ள செயற்கை நுண்ணறிவுச் சட்டத்தின் மீது ஐரோப்பியப் பாராளுமன்றம் வாக்களிக்கவுள்ளது.
- இந்தச் சட்டம் ஆனது 2025 ஆம் ஆண்டிற்குள் நடைமுறைக்கு வரும்.
- செயற்கை நுண்ணறிவினால் ஏற்பட உள்ள வேலைகளைத் தானியக்கமாக்குதல், இயங்கலையில் தவறான தகவல்களைப் பரப்புதல் மற்றும் தேசியப் பாதுகாப்பிற்கு ஆபத்தை ஏற்படுத்துதல் போன்ற சாத்தியமான ஆபத்துகளிலிருந்துப் பாதுகாப்பினை வழங்க இது முயற்சிக்கிறது.




## 91வது இன்டர்போல் பொதுச் சபை


- இன்டர்போலின் (சர்வதேசக் குற்றவியல் காவல் அமைப்பு) 91வது பொதுச் சபையானது வியன்னா நகரில் நடைபெற்றது.
- இது 1923 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட சர்வதேசக் குற்றவியல் காவல் அமைப்பின் (இன்டர்போல்) நூற்றாண்டு விழாவையும் கொண்டாடியது.
- மத்தியப் புலனாய்வு அமைப்பு (CBI) மற்றும் தேசியப் புலனாய்வு முகமை (NIA) ஆகியவற்றின் பிரதிநிதிகள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.
- இன்டர்போலின் 'தொலைநோக்குத் திட்டம் 2030' என்பதினை ஏற்பதற்கு இந்தியாவும் ஆதரவு அளித்தது.
- இந்தியா 1949 ஆம் ஆண்டில் இன்டர்போல் அமைப்பில் சேர்ந்தது என்பதோடு, மேலும் அந்த அமைப்பின் தீவிரச் செயல்பாட்டு உறுப்பினராகவும் இருந்து வருகிறது.
- இந்தியா இதற்கு இரண்டு பொதுச் சபைகளை நடத்தியுள்ளது.
- கடந்த ஆண்டு, 168 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்ற 90வது பொதுச் சபையை இந்தியா நடத்தியது.
- 1923 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப் பட்ட இன்டர்போல் அமைப்பின் தலைமையகம் பிரான்சின் லியோன் என்ற இடத்தில் அமைந்து உள்ளது.

## பசுமைப் பயணம் 2050 திட்டம்

- சர்வதேசக் கடல்சார் அமைப்பின் (IMO) பசுமைப் பயணம் 2050 திட்டத்திற்கான முன்னோடியான தலைமை நாடாக இந்தியாவினைத் தேர்ந்தெடுத்துள்ளது.
- கப்பல்களில் இருந்து வெளியேறும் பசுமை இல்ல வாயுக்களின் (GHG) அளவைக் குறைக்கும் முயற்சிகளில் வளர்ந்து வரும் நாடுகளுக்கு உதவுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பசுமைப் பயணம் 2050 திட்டத்தில் பங்கேற்கும் நாடுகள்: அசர்பைஜான், பெலிஸ், சீனா, குக் தீவுகள், ஈக்வடார், ஜார்ஜியா, இந்தியா, கென்யா, மலேசியா, சாலமன் தீவுகள், தென்னாப்பிரிக்கா, இலங்கை ஆகியனவாகும்.
- இது 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நார்வே அரசாங்கத்திற்கும் சர்வதேச கடல்சார் அமைப்பிற்கும் இடையிலான கூட்டுத் திட்டமாகும்.




## ஸ்டோர்ம் மேக்கர்ஸ் II நடவடிக்கை



- இன்டர்போல் அமைப்பின் "ஸ்டோர்ம் மேக்கர்ஸ் II" என்ற நடவடிக்கையின் விளைவாக, பல்வேறு நாடுகளில் 281 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
- அவர்கள் மீது மனிதக் கடத்தல், கடவுச் சீட்டு மோசடி, ஊழல், தொலைத்தொடர்பு மோசடி மற்றும் பாலியல் சுரண்டல் போன்ற குற்றச்சாட்டுகள் உள்ளன.
- மனிதக் கடத்தலில் பாதிக்கப்பட்ட 149 பேர் மீட்கப்பட்ட நிலையில், 360க்கும் மேற்பட்ட விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன.
- ஆசியா மற்றும் பிற பிராந்தியங்களில் உள்ள 27 நாடுகளில் உள்ள சட்ட அமலாக்க முகவர்கள் இந்த நடவடிக்கைக்காக அணிதிரட்டப்பட்டனர்.
- கடத்தப்பட்டவர்களை இணைய மோசடியில் ஈடுபடுவதற்கு என்று கட்டாயப்படுத்தும் நோக்கத்திற்காக வேண்டி மேற்கொள்ளப்பட்ட முதல் மனித கடத்தல் வழக்கினை தெலுங்கானா காவல்துறை பதிவு செய்தது.

## 2023 ஆம் ஆண்டில் உலகின் முன்னணி அபினி உற்பத்தி

- 2023 ஆம் ஆண்டில் ஆப்கானிஸ்தானை முந்தி, மியான்மர் உலகின் முன்னணி அபின் உற்பத்தியாளராக மாறியுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் தலிபான்கள் அறிவித்த போதைப் பொருள் தடைக்குப் பிறகு ஆப்கானிஸ்தானில் அபினி (ஓபியம்) சாகுபடியில் ஏற்பட்ட 95 சதவிகித சரிவானது மியான்மர் நாட்டிற்கு உலகளவில் விநியோகம் செய்வதற்கானப் பெரு வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது.
- அபினி செடி (ஓபியம் பாப்பி) சாகுபடியானது, தற்போது சுமார் 75% வரை அதிக லாபம் ஈட்டுகிறது.
- அபினி செடிகளின் சராசரி விலையானது, ஒரு கிலோவிற்கு தோராயமாக 355 டாலர் ஆக உயர்ந்துள்ளது.
- இதன் சாகுபடி பரப்பு ஆனது, ஆண்டிற்கு ஆண்டு 18% அதிகரித்து, 47,000 ஹெக்டேரை எட்டியுள்ளது.
- இது 2001 ஆம் ஆண்டிலிருந்து பதிவான அதிக அளவில் சாத்தியமான விளைச்சலைக் குறிக்கிறது.



## மாலியில் ஐ நா சபையின் அமைதிப்படை விலக்கம்

- மாலியில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப்படையின் பணியானது, அந்த நாட்டில் இருந்த 10 ஆண்டுகால செயல்பாடுகளை அதிகாரப்பூர்வமாக நிறைவு செய்து உள்ளது.
- இது மாலியில் (MINUSMA) ஐக்கிய நாடுகள் சபையின் பல்பரிமாண ஒருங்கிணைந்த நடுநிலையாக்கல் நடவடிக்கை என அழைக்கப்படுகிறது.
- இந்தப் பணியில் கடந்த பத்தாண்டுகளாக மாலியில் சுமார் 15,000 சிப்பாய்கள் மற்றும் காவல்துறையினர் பணியமர்த்தப்பட்டிருந்தனர்.
- முழுவதும் நிலத்தால் சூழப்பட்ட மாலி, 2012 ஆம் ஆண்டு முதல் இஸ்லாமிய தீவிரவாத கிளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்குப் போராடி வருகிறது.

## செயற்கை நுண்ணறிவு நுட்பத்தினை ஒழுங்குமுறைப்படுத்தச் செய்வதற்கான கட்டமைப்பு

- பிரதமருக்கான பொருளாதார ஆலோசனைக் குழு (EAC-PM) "செயற்கை நுண்ணறிவு நுட்பத்தினை ஒழுங்குமுறைப் படுத்தச் செய்வதற்கான ஒரு பல்கலப்பு ஏற்பு அமைப்பு கட்டமைப்பு" என்ற ஆய்வறிக்கையை வெளியிட்டுள்ளது.
- மேலும், ஐரோப்பிய ஒன்றியம் (EU) செயற்கை நுண்ணறிவை (AI) ஒழுங்குமுறைப் படுத்துவதற்கான உலகின் முதல் விரிவான சட்டங்கள் பற்றிய மிகவும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தற்காலிக ஒப்பந்தத்தை எட்டியுள்ளது.
- விதிகளை மீறும் நிறுவனங்களுக்கு கடுமையான அபராதங்களை விதிப்பதற்கான விதிகளுடன், முகத்தை அடையாளம் காணும் தொழில்நுட்பம் மற்றும் மனித நடத்தையை நகலாக்கம் செய்ய செயற்கை நுண்ணறிவு நுட்பத்தினைப் பயன்படுத்த செய்வதில் விதிக்கப்படும் வலுவான கட்டுப்பாடுகள் இந்த ஒப்பந்தத்தில் அடங்கும்.




## இரண்டு மரபணு சிகிச்சை முறைகளுக்கு ஒப்புதல் – அமெரிக்கா

- 12 வயதுக்கு மேற்பட்ட நோயாளிகளில் அரிவாள் வடிவ உயிரணு இரத்தசோகை நோய்க்கு சிகிச்சையளிப்பதற்கான காஸ்கேவி மற்றும் லிஃப்ஜீனியா ஆகிய இரண்டு மரபணு சிகிச்சைகளுக்கு அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாக அமைப்பு ஒப்புதல் அளித்துள்ளது.

- ❖ பீட்டா தலசீமியா சிகிச்சைக்கான காஸ்கேவி மரபணு சிகிச்சையை அங்கீகரிப்பது குறித்த அதன் முடிவு ஆனது 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் அறிவிக்கப்படும் எதிர்பார்க்கப்படுகிறது.
- ❖ இந்த முடிவுகள், நோய்களுக்குச் சிகிச்சையளிக்க CRISPR-Cas9 என்ற நுட்பத்தினைப் பயன்படுத்தும் மரபணு சிகிச்சையைத் தொடங்கப் படுவதைக் குறிக்கின்றன.




## ரஷ்யாவின் புதிய அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்கள்

- ❖ ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் இரண்டு புதிய அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களை தொடங்கி வைத்தார்.
- ❖ இந்த இரண்டு நீர்மூழ்கிக் கப்பல்களுக்கும் கிராஸ்நோயார்ஸ்க் மற்றும் பேரரசர் மூன்றாம் அலெக்சாண்டர் என்று பெயரிடப்பட்டுள்ளது.
- ❖ புதிய போரே (ஆர்க்டிக் காற்று) வகை அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களின் ஒரு பகுதியான பேரரசர் மூன்றாம் அலெக்சாண்டர் கப்பல் பனிப்போருக்குப் பிறகு மாஸ்கோவினால் அறிமுகப்படுத்தப்பட்ட முதல் புதிய தலைமுறை நுட்பம் சார்ந்த நீர்மூழ்கிக் கப்பல்கள் ஆகும்.

## காட்டெருமை வளங்காப்பிற்கு அச்சுறுத்தல்



- ❖ உக்ரைனில் நடந்து வரும் போர் ஆனது, காட்டெருமைகளின் மீதான வளங்காப்பு முயற்சிகளுக்கு அச்சுறுத்தலாக இருக்கும்.

- ஐரோப்பிய வனக் காட்டெருமை என்றும் அழைக்கப்படும் காட்டெருது ஆனது, 1927 ஆம் ஆண்டில் ஐரோப்பியக் காடுகளில் இருந்து அழிந்துவிட்டது.
- வனங்களில் சுதந்திரமாக சுற்றித் திரியும் காட்டெருமைகளில் 50 சதவீதத்திற்கும் அதிகமானவை உக்ரைனில் காணப்படுகின்றன.
- ஏறத்தாழ 7,300 ஐரோப்பியக் காட்டெருமைகள் தான் தற்போது காணப்படுகின்றன.

## மாதவிடாய் நிறுத்த நிலைக்கான மருந்து வியோசா - ஐக்கியப் பேரரசு

- வியோசா அல்லது ஃப்பெசோலினேடன்ட் என்று பெயரிடப்பட்ட மருந்து, ஐக்கியப் பேரரசின் மருந்துகள் மற்றும் சுகாதாரப் பொருட்கள் ஒழுங்குமுறை நிறுவனத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுள்ளது.
- இது மாதவிடாய் நிறுத்த (மெனோபாஸ்) காலத்தில் திடீர்க் காய்ச்சல் நிலையுடன் போராடும் லட்சக்கணக்கான பெண்களுக்கு நிவாரணம் அளிக்கக் கூடிய ஒரு மருந்து ஆகும்.
- தற்போது, ஹார்மோன் மாற்று சிகிச்சை (HRT) என்பது திடீர்க் காய்ச்சல் நிலைக்கு வழங்கப் படும் மிகப் பயனுள்ள சிகிச்சையாகும்.
- ஹார்மோன் சாராத மாதவிடாய் நிறுத்த நிலை மருந்தான வியோசா, நியூரோகினின் -3 எனப்படும் புரதத்தைத் தடுப்பதன் மூலம் திடீர் காய்ச்சல் நிலை ஏற்படுவதைத் தடுப்பதற்காக நேரடியாக மூளையைச் சென்றடைகிறது.


## சால்டன் கடலில் லித்தியம் இருப்பு

- அமெரிக்காவின் எரிசக்தி துறையானது, கலிபோர்னியாவின் சால்டன் கடலில் இருந்து லித்தியம் பிரித்தெடுப்பதற்கான சாத்தியமிகு வாய்ப்புகளை கண்டறிந்துள்ளது.
- சால்டன் கடலின் ஆழ் பகுதிகளில் 18 மில்லியன் மெட்ரிக் டன் லித்தியம் இருப்புக்கள் இருப்பதாக ஒரு பகுப்பாய்வில் கண்டறியப்பட்டது.
- லித்தியம் என்பது மின்சார வாகனங்களின் (EV) மின் கலங்கள் மற்றும் புதுப்பிக்கத் தக்க ஆற்றல் சேமிப்பு அமைப்புகளுக்கு அவசியமான ஒரு கூறு ஆகும்.
- இந்த இருப்பு ஆனது 382 மில்லியன் மின்சார வாகனங்களின் (EV) மின் கலங்களுக்கு மூலப்பொருளை வழங்கும்.



## சீனாவில் நிலநடுக்கம்

- சீனாவில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தால் அந்நாட்டின் வடமேற்குப் பகுதியில் சுமார் 126 பேர் உயிரிழந்துள்ளனர் மற்றும் பலர் காயமடைந்துள்ளனர்.
- இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.2 ஆக பதிவானது, அதே சமயம் அமெரிக்கப் புவியியல் ஆய்வு மையம் ஆனது இது 5.9 ரிக்டர் அளவில் பதிவானதாகவும், 10 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்டதாகவும் பதிவு செய்துள்ளது.
- சுமார் 600க்கும் மேற்பட்டோர் உயிரைப் பலி வாங்கிய 2014 ஆம் ஆண்டில் தென்மேற்கு யுனான் மாகாணத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தினை அடுத்து, பத்தாண்டுகளுக்குப் பிறகு சீனாவைத் தாக்கிய மிக மோசமான நிலநடுக்கம் இதுவாகும்.
- 2008 ஆம் ஆண்டில் சிச்சுவான் மாகாணத்தில் ஏற்பட்ட 7.9 ரிக்டர் அளவிலான நில நடுக்கத்தில் 90,000 பேர் உயிரிழந்தனர்.
- 1920 ஆம் ஆண்டில் கன்சு மாகாணத்தில் ஏற்பட்ட 7.8 ரிக்டர் அளவிலான நில நடுக்கத்தில் சுமார் 2,30,000 பேர் இறந்ததாகக் கூறப்படுகிறது.
- பின்னர் 1927 ஆம் ஆண்டில் ஏற்பட்ட 7.6 ரிக்டர் அளவிலான நிலநடுக்கத்தில் 41,000க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.
- யூரேசிய, இந்திய மற்றும் பசிபிக் கண்டத் தட்டுகள் சந்திக்கும் பகுதியில் சீனா அமைந்திருப்பதால், அங்கு நிலநடுக்கங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளது.





## கெலேபு சீர்மிகு நகரத் திட்டம்

- பூடான் அரசானது, அசாம் மாநிலத்துடனான அதன் எல்லையில் 1,000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் ஒரு பெரிய “சர்வதேச நகரத்தினை” கட்டமைக்கத் திட்டமிட்டு உள்ளது.
- இந்த திட்டமானது, “தெற்காசியப் பகுதியினை இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்கள் வழியாக தென்கிழக்கு ஆசியாவுடன் இணைக்கும் பொருளாதார வழித்தடம் ஆக” இருக்கும்.
- கெலேபு நகரை இணைக்கும் முதல் இந்தியா-பூடான் இரயில் பாதையை அமைக்க இந்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

- இது அசாம் மற்றும் மேற்கு வங்காளத்தில் உள்ள சாலைகள் மற்றும் வர்த்தக & கடப்பு பகுதிகளுடன் இணைக்கப்படும்.
- காலப்போக்கில், இது மியான்மர், தாய்லாந்து, கம்போடியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுடனான அணுகலை பூடான் நாட்டிற்கு வழங்கும்.




## நோமா நோய்




- உலக சுகாதார அமைப்பு ஆனது, நோமா நோயினை (கடைவாய் அழுகல் நோய்) புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் (NTD) என்ற அதன் அதிகாரப்பூர்வ பட்டியலில் சேர்த்துள்ளது.
- நோமா நோய் ஆனது, வாயழுகல் அல்லது அழுகிய வாயழல் என்றும் அழைக்கப் படுகிறது.
- இது தோராயமாக 90 சதவீத இறப்பு விகிதத்துடன், வாய் மற்றும் முகத்தில் ஏற்படும் கடுமையான தசையழுகல் நோயாகும்.
- இது தீவிர வறுமை, ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் சுகாதாரம் மற்றும் வாய்வழி சுகாதாரத்திற்கு முறையான அணுகல் இன்மை போன்றவற்றுடன் தொடர்புடையது.
- நோமா நோய் ஆனது முதன்மையாக 2 முதல் 6 வயதுடைய குழந்தைகளைப் பாதிக்கிறது மற்றும் ஏழ்மை நிலையில் உள்ள சமூகத்தினர் மத்தியில் பொதுவாகக் காணப் படுகிறது.


- உலக சுகாதார அமைப்பின் இணையதளமானது, ஆண்டிற்கு சுமார் 140,000 நோய் பாதிப்புகள் பதிவாகுவதாகவும் சுமார் 770,000 வழக்குகள் பரவிக் காணப்படுவதாகவும் மதிப்பிடுகிறது.

## சர்வதேச ஒட்டகங்கள் ஆண்டு

- ஐக்கிய நாடுகள் சபையானது 2024 ஆம் ஆண்டினை சர்வதேச ஒட்டகங்கள் ஆண்டாக (IYC 2024) நிர்ணயித்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டு ஆனது, பல்வேறு சமூகங்களில் ஒட்டகங்கள் ஆற்றும் ஒரு முக்கியப் பங்கினை எடுத்துரைக்க உள்ளது.
- 90க்கும் மேற்பட்ட நாடுகளில் நிலவும் பாதகமான சூழலில் உள்ள பல குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்கு ஒட்டகங்கள் எந்த அளவிற்கு முக்கியம் என்பதை இந்தத் தினம் மக்களுக்கு உணர்த்தும்.




## கோவிட்-19 வைரசின் JN.1 மாற்றுரு





- கோவிட்-19 வைரசின் JN.1 மாற்றுரு உலக சுகாதார அமைப்பினால் “கவனம் செலுத்த வேண்டிய மாற்றுரு” என வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- இந்தப் புதிய மாற்றுருவானது, பொதுமக்களின் சுகாதாரத்திற்கு அதிக அச்சுறுத்தலை ஏற்படுத்தவில்லை.

- இந்நோய் பாதிப்பு முதலில் லக்சம்பர்க் நகரில் பதிவு செய்யப்பட்டது.
- இது ஒமைக்ரான் துணை மாற்றுருவினை அதன் தோற்றுவாயாகக் கொண்ட பைரோலா மாற்றுருவின் (BA.2.86) வழித்தோன்றலாகும்.

## நூற்றாண்டில் ஏற்பட்ட மிகப்பெரிய வெள்ளம் – வடக்கு குயின்ஸ்லாந்து

- ஜாஸ்பர் என்ற வெப்பமண்டலப் புயல் ஆனது, ஆஸ்திரேலியாவின் தொலைதூர வடக்கு குயின்ஸ்லாந்து பகுதியில் இந்த நூற்றாண்டிலேயே இல்லாத மிகப்பெரிய வெள்ளத்தை ஏற்படுத்தியுள்ளது.
- இரண்டு மழை அளவிகளில் வெறும் 12 மணி நேரத்தில் 660 மில்லிமீட்டர் (26 அங்குலம்) மழைப் பொழிவு பதிவாகியுள்ளது.
- இது 1972 ஆம் ஆண்டில் அந்த மாகாணத்தில் பதிவான 617 மி.மீ. என்ற முந்தைய மழைப் பொழிவின் அளவை விஞ்சியது.
- மயோலாவில் உள்ள பாரோன் நதியில் 100 ஆண்டுகளுக்கும் மேலாக ஏற்படாத ஒரு அளவிலான அதிகபட்ச வெள்ளம் ஏற்பட்டது.
- டெய்ன்ட்ரீ நதியில், இதுவரையில் பதிவான அதிகபட்ச வெள்ளப்பெருக்கு அளவைத் தாண்டி வெள்ளம் ஏற்பட்டது.
- இது 2019 ஆம் ஆண்டில் பதிவான சாதனை அளவான 12.6 மீட்டருக்கு மேலாக தற்போது 15 மீட்டர் என்ற மழைப்பொழிவு அளவை எட்டியுள்ளது.




## எகிப்து நாட்டின் புதிய அதிபர்

- எகிப்து நாட்டு அதிபர் அப்தெல் ஃபத்தா அல்-சிசி மூன்றாவது முறையாக வெற்றி பெற்றுள்ளார்.
- அவர் 2014 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளில் என இரண்டு முறையும் 97% வாக்குகளுடன் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

- 2019 ஆம் ஆண்டில் அரசியலமைப்பு சட்டம் திருத்தியமைக்கப்பட்டது.
- இது அதிபரின் பதவிக் காலத்தினை நான்கில் இருந்து ஆறு ஆண்டுகளாக நீட்டித்த நிலையில் இது சிசி மூன்றாவது முறையாக அதிபர் பதவிக்கான போட்டியில் ஈடுபடச் செய்யவும் வாய்ப்பளித்தது.



## ப்ராஸ்பெரிட்டி கார்டியன் நடவடிக்கை

- செங்கடலில் பாதுகாப்பு நிலையைப் பேணுவதற்காக வேண்டி அமெரிக்க அரசானது, ப்ராஸ்பெரிட்டி கார்டியன் என்ற நடவடிக்கையினைத் தொடங்கியுள்ளது.
- ஐக்கியப் பேரரசு, பஹ்ரைன், கனடா, பிரான்சு, இத்தாலி, நெதர்லாந்து, நார்வே, செஷெல்ஸ் மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகள் இந்த பன்னாட்டுப் பாதுகாப்பு முன்னெடுப்பில் இணைந்துள்ளன.
- செங்கடல் ஆனது, சர்வதேச வர்த்தகத்தினை மேற்கொள்வதற்கு அவசியமான தடையற்றப் போக்குவரத்து மற்றும் முக்கிய வணிக வழித்தடம் ஆக விளங்கும் ஒரு முக்கிய நீர்வழிப் பாதையாகும்.
- சமீபத்தில், ஏமன் நாட்டினைச் சேர்ந்த ஹவுதி போராளிகள் வணிக கப்பல்களை 12 முறை தாக்கியுள்ளனர் அல்லது கைப்பற்றியுள்ளனர்.
- முன்னதாக நவம்பர் மாதத்தில், ஹவுதி போராளிகள், கேலக்ஸி லீடர் என்ற இந்தியக் கப்பலை கடத்திச் சென்றனர்.



## புலம்பெயர்வு மற்றும் தஞ்சம் தொடர்பான ஐரோப்பிய ஒன்றியத்தின் புதிய ஒப்பந்தம்




- 'முறைசாரா' புலம்பெயர்ந்தோர் என்று அழைக்கப்படும் புகலிடக் கோரிக்கைகளை மேலாண்மை செய்வதற்கான புதிய விதிகள் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளன.
- ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் புலம் பெயர்வு மற்றும் புகலிடம் கோரிக்கை நிவர்த்தி செயல்முறையை சீரமைக்க ஒப்புக்கொண்டுள்ளன.
- இந்த புதிய அமைப்பானது ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் எல்லையில் அமைந்திராத நாடுகளுக்கு இரண்டு விருப்ப தேர்வுகளை வழங்கும்.
    - ஒன்று, அவை 30,000 புகலிட விண்ணப்பதாரர்களில் தங்கள் பங்கை ஏற்றுக் கொள்ளலாம்.
    - அல்லது, ஒவ்வொரு தஞ்சம் கோருபவருக்கும் குறைந்தபட்சம் தலா 20,000 யூரோக்களை (USD 21,870) ஐரோப்பிய ஒன்றிய நிதியில் வைப்பு வைக்கலாம்.


## அங்கோலா மற்றும் OPEC



- எண்ணெய் உற்பத்தி ஒதுக்கீடு தொடர்பான சர்ச்சையின் காரணமாக, பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகள் அமைப்பின் தனது 16 ஆண்டுகால உறுப்பினர் அந்தஸ்தில் இருந்து வெளியேறுவதாக அங்கோலா அறிவித்துள்ளது.
- நாட்டின் குறைந்து வரும் உற்பத்தி திறனைப் பிரதிபலிக்கச் செய்யும் வகையில் இந்த கூட்டமைப்பு தலைவர்களால் விதிக்கப்பட்ட குறைக்கப்பட்ட உற்பத்தி வரம்பை அந்த நாடு நிராகரித்தது.
- அங்கோலாவின் இந்த நடவடிக்கையானது, பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகள் கூட்டு அமைப்பின் உறுப்பினர் எண்ணிக்கையை 12 ஆகக் குறைக்கும்.

## அர்ஜென்டினா லித்தியம் கனிமத் தொகுதிகளில் இந்தியா


- அர்ஜென்டினாவில் உள்ள ஐந்து லித்தியம் கனிமத் தொகுதிகளை ஆய்வு செய்து கனிமம் எடுப்பதற்கான ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான பேச்சுவார்த்தைகளின் இறுதி கட்டத்தில் இந்தியா உள்ளது.
- ஆஸ்திரேலியாவுடனான ஒப்பந்தத்திற்கு பிறகு, முக்கிய தாதுப் பொருட்களைப் பெறுவதற்கான ஒரு வெளிநாட்டுக் கூட்டாண்மையில் கையெழுத்திடுவதற்கான இந்தியாவின் இரண்டாவது முயற்சி இதுவாகும்.
- 2022 ஆம் ஆண்டில், இரண்டு லித்தியம் மற்றும் மூன்று கோபால்ட் தொகுதிகளுடன் மொத்தம் ஐந்து தொகுதிகளை ஆய்வு செய்து கனிமம் எடுப்பதற்காக ஆஸ்திரேலியாவின் முக்கியமான கனிமங்கள் வழிவகுத்தல் அலுவலகத்துடனான (CMFO) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டது.
- மொத்தம் 98 மில்லியன் டன்கள் அளவிலான உலகளாவிய லித்தியம் இருப்புக்களில் 21 சதவிகிதம் ஆனது அர்ஜென்டினாவில் காணப்படுகிறது.
- உலகளாவிய லித்தியம் இருப்பு பங்கில் அர்ஜென்டினா இரண்டாவது இடத்திலும், பொலிவியா முதலிடத்திலும் உள்ளன.



# பொருளாதாரச் செய்திகள்

## புதிய முறைசார் வேலைவாய்ப்புகள்

- ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி அமைப்பின் (EPFO) ஊதியத் தரவானது, இந்த ஆண்டின் ஏப்ரல் முதல் ஆகஸ்ட் மாதத்திற்கு இடைப்பட்ட காலத்தில் சமூகப் பாதுகாப்பு அமைப்பில் ஒட்டு மொத்தமாக 4.92 மில்லியன் புதிய சந்தாதாரர்கள் சேர்ந்துள்ளனர் என்பதைக் காட்டுகிறது.
- இது முந்தைய ஆண்டின் இதே காலக் கட்டத்தில் 5.51 மில்லியனாக இருந்தது.
- இது புதிதாக உருவாக்கப்பட்ட ஊதியத் தரவுகளின் எண்ணிக்கையில் 10.7 சதவீத சரிவைப் பிரதிபலிக்கிறது.




## வெனிசுலா கச்சா எண்ணெய் இறக்குமதி





- ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் உள்ளிட்ட இந்திய எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்கள் ஆனது, வெனிசுலா கச்சா எண்ணெயை இடைத்தரக நிறுவனங்கள் மூலம் இறக்குமதி செய்வதை மீண்டும் தொடங்கியுள்ளன.
- வெனிசுலா மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளை அமெரிக்க அரசு தற்காலிகமாக நீக்கியதை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.
- ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனமானது, சாத்தியமான நேரடி விற்பனைக்காக PDVSA (வெனிசுலாவின் அரசுக்கு சொந்தமான எண்ணெய் நிறுவனம்) நிறுவனத்தின் நிர்வாகிகளுடன் நேரடிப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள திட்டமிட்டு வருகிறது.

## 16வது நிதி ஆணையத்திற்கான மதிப்பீட்டு வரையறைகள் (2026-2031)




- சமீபத்தில், மத்திய அமைச்சரவையானது 16 வது நிதி ஆணையத்திற்கான மதிப்பீட்டு வரையறைகளுக்கு (ToR) சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது.
- 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதி முதல் தொடங்க உள்ள வரவிருக்கும் ஐந்தாண்டு காலத்திற்கு, மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையே வருவாய்ப் பகிர்வுக்கான சூத்திரத்தைப் பரிந்துரைக்கும் முக்கியமான பொறுப்பை இந்த ஆணையம் கொண்டு உள்ளது.
- பதினைந்தாவது நிதி ஆணையத்தின் பரிந்துரைகள் ஆனது 2025-26 நிதியாண்டு வரை செல்லுபடியாகும்.
- இந்த ஆணையம் தனது பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கு 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 31 ஆம் தேதி வரையில் அரசு காலக்கெடு விதித்துள்ளது.
- மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையே நிகர வரி வருவாயைப் பகிர்ந்தளிப்பது மற்றும் அத்தகைய வருவாயில் ஒவ்வொரு மாநிலங்களின் பங்கை அந்தந்த மாநிலங்களுக்கு ஏற்ப ஒதுக்கீடு செய்வது ஆகியவை இந்த ஆணையத்தின் முக்கியப் பரிந்துரைகளாகும்.
- அந்தந்த மாநிலங்களின் நிதி ஆணையங்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் பஞ்சாயத்துகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் நிதிக்கு ஆதரவு அளிக்கும் வகையில் மாநில அரசின் தொகுப்பு நிதியைப் பெருக்கத் தேவையான நடவடிக்கைகளையும் இந்த ஆணையம் பரிந்துரைக்கும்.
- இந்தியாவின் ஒருங்கிணைந்த தொகுப்பு நிதியிலிருந்து மாநிலங்களின் வருவாய் மானியங்கள் மூலம் மாநிலங்களுக்குச் செலுத்த வேண்டிய தொகைகளை நிர்வகிக்கும் கொள்கைகள் மற்றும் மானியங்கள் மூலம் மாநிலங்களுக்குச் செலுத்தப்படும் தொகைகளை வகுத்தல் சார்ந்த கொள்கைகள் ஆகியவற்றையும் இந்த ஆணையம் பரிந்துரைக்கும்.
- மேலும், இந்த ஆணையம் பேரிடர் மேலாண்மை முன்னெடுப்புகளுக்கு நிதியுதவி செய்வதில் தற்போதுள்ள விதிமுறைகளை மதிப்பாய்வு செய்து அதற்குத் தகுந்தப் பரிந்துரைகளை வழங்கும்.

## 2023 ஆம் ஆண்டில் புதிய முறைசார் வேலைவாய்ப்புகள் குறைவு





- இது ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி அமைப்பின் (EPFO) சமீபத்தியத் தரவு ஆகும்.
- இது 2023-24 ஆம் நிதியாண்டின் முதல் பாதியில் புதிய சந்தாதாரர்களில் 10.1% என்ற அளவு சரிவு பதிவாகியுள்ளதை வெளிப்படுத்துகிறது என்பதோடு இது முறைசார் வேலைவாய்ப்பு உருவாக்கத்தில் உள்ள மந்தநிலையையும் குறிக்கிறது.
- 18 முதல் 28 வயதிற்குட்பட்ட சந்தாதாரர்களில் பதிவான 9.54% சரிவு என்பது கவலைக் கொள்ள வைக்கும் வகையிலான போக்கு ஆகும்.
- இந்த வயதுப் பிரிவினர், பொதுவாக வேலைவாய்ப்புச் சந்தையில் முதல் முறையாக நுழையும் பிரிவுடன் தொடர்புடைய மக்கள்தொகை ஆகும்.
- பெண் சந்தாதாரர்களின் எண்ணிக்கையில் 11.1% குறைந்துள்ளதாகவும் இந்தத் தரவுகள் தெரிவிக்கின்றன.

## ‘Build for Bharat’ முயற்சி

- மின் வணிகத்திற்காக திறந்த வலையமைப்பு நிறுவனமானது (ONDC), Google Cloud India, Antler in India, Paytm, Protean மற்றும் Startup India ஆகியவற்றுடன் இணைந்து இதை அறிமுகப் படுத்தியது.
- இது மின் வர்த்தகத்தில் உள்ள சவால்களை எதிர்கொள்வது, பல்வேறு துறைகளில் புதுமை மற்றும் நடைமுறைத் தீர்வுகளை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதில் புதிய தொழில் தொடங்கும் நிறுவனங்கள், நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் உட்பட 200,000 பங்கேற்பாளர்கள் வரை கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- மின் வணிகத்திற்காக திறந்த வலையமைப்பானது (ONDC) 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 அன்று வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையின் (DPIIT) கட்டுப்பாட்டின் கீழ் நிறுவப்பட்டது.

**நெகிழிக் கழிவுகளைக் குறைப்பதற்கான தேசிய வட்டாரப் பொருளாதாரச் சாலை வரைபடம்**




- மத்திய அமைச்சரான டாக்டர் ஜிதேந்திர சிங் இந்த அறிக்கையினை வெளியிட்டார்.
- இது இந்தியா மற்றும் ஆஸ்திரேலியாவில் உள்ள முன்னணி ஆராய்ச்சி நிறுவனங்களின் கூட்டு முயற்சியாகும்.
- அடுத்த ஆண்டு இறுதி செய்யப்பட இருக்கின்ற, உலகளாவிய நெகிழி ஒப்பந்தத்தினை உருவாக்குவதற்கான பேச்சுவார்த்தைகளில் இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் மிகவும் தீவிரமாகப் பங்கேற்கின்றன.
- நெகிழித்துறையில் ஒரு வட்டாரப் பொருளாதாரத்திற்கு இந்தியா மாறுவதற்கான பாதைக்கான வரைபடத்தை உருவாக்க வேண்டி ஆராய்ச்சி மற்றும் தொழில் கூட்டாண்மைகளை நிறுவுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2070 ஆம் ஆண்டிற்குள் நிகரப் பூஜ்ஜிய இலக்கை அடைவதற்கான வட்டாரப் பொருளாதாரத்திற்கான தேடலில் இந்தியா முன்னணியில் உள்ளது.

## முதலீட்டாளர் இடர் குறைப்பு அணுகல் (IRRA) தளம்

- இது இந்தியப் பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தால் (SEBI) தொடங்கப்பட்டது.
- இது BSE (மும்பை பங்குச் சந்தை), NSE (தேசியப் பங்குச் சந்தை), NCDEX (தேசிய சரக்கு மற்றும் சார்பு பொருள் சந்தை), MCX (பல்பொருள் பரிமாற்றம்) மற்றும் இந்தியாவின் பெருநகரப் பங்குச் சந்தை (MSE) ஆகிய அனைத்து பங்குச் சந்தைகளால் இணைந்து உருவாக்கப்பட்டுள்ளது.
- வர்த்தக உறுப்பினர் அல்லது பங்குத் தரகர் எதிர்கொள்ளும் தொழில்நுட்பக் கோளாறுகளின் போது முதலீட்டாளர்களுக்கு ஒரு 'பாதுகாப்புக் கட்டமைப்பினை' வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதன் நோக்கமா ஆனது, முதலீட்டாளர்களுக்கு தொழில்நுட்பக் கோளாறுகள் அல்லது எதிர்பாராதச் செயலிழப்புகள் ஏற்பட்டால் இந்தத் தளத்தைப் பயன்படுத்தி தளத்தில் உள்ள தங்களின் பங்கு நிலைகளை அதே நாளில் விற்க/ அதன் விற்பனையை நிறுத்துவதற்கு மற்றும் நிலுவையில் உள்ள விற்பனைகளை ரத்து செய்வதற்கான ஒரு வாய்ப்பை வழங்குவதாகும்.


## UPI கட்டண வரம்பு

- இந்திய ரிசர்வ் வங்கி ஆனது, மருத்துவமனைகள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கான ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகச் செயலி மூலமான பரிவர்த்தனை வரம்பை 5 லட்சம் ரூபாயாக உயர்த்தியுள்ளது.
- முன்பு ஒரு பரிவர்த்தனையில் 1 லட்சம் ரூபாய் வரை மட்டுமே பணப் பரிமாற்றம் மேற்கொள்ள முடியும் என்று வரம்பு நிர்ணயிக்கப்பட்டது.
- மூலதன சந்தை வசூல் (கடன் அட்டை கொடுப்பனவுகள், கடன் திருப்பிச் செலுத்துதல், மாதாந்திர தவணை), காப்பீடு போன்றவற்றிற்கான UPI மூலமான கட்டணங்களுக்கான பரிவர்த்தனை வரம்பு 2 லட்சம் ரூபாயாக வரையறுக்கப்பட்டது.
- 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், நேரடி சிறு முதலீட்டுத் திட்டம் மற்றும் ஆரம்பப் பொதுப் பங்கு வெளியீடு சந்தாக்களுக்கான UPI கட்டணங்களுக்கான பரிவர்த்தனை வரம்பு 5 லட்சம் ரூபாயாக அதிகரிக்கப்பட்டது.


RBI eases regulations on payments through UPI and bank mandates but tightens the screws on fintechs

- The central bank raises the limit on recurring e-payment mandates for credit card, insurance and mutual fund payments to ₹1 lakh from ₹15,000 currently
- RBI proposes the creation of a Fintech Repository by April as banks and NBFCs begin to partner with fintechs to offer loans
- RBI also opts to regulate web-aggregation of loan products to enhance transparency

## புத்தொழில் நிறுவனங்கள் நிதி



HOW INDIA FARES

Indian startups churned merely $7 billion this year so far

| | INDIA | US | EUROPE | CHINA | SEA* |
|---|---|---|---|---|---|
| Funding ($bn) | 7 | 107 | 40.4 | 11.5 | 4.3 |
| Global funding (%) (country rank) | 4 (4) | 56 (1) | 21 (2) | 6 (3) | 2 |
| Funding rounds | 1,000 | 5,691 | 3,783 | 578 | 448 |
| No. of companies funded 1st time | 387 | 2,558 | 1,959 | 297 | 220 |
| Series A+ rounds | 283 | 3,017 | 1,524 | 366 | 193 |

- 2023 ஆம் ஆண்டில் புத்தொழில் நிறுவனங்கள் அதிக நிதியுதவி பெறும் நாடுகளின் உலகளாவியத் தரவரிசையில் இந்தியா நான்காவது இடத்திற்கு சரிந்தது.
- இந்தியாவில் கடந்த ஐந்து ஆண்டுகளில் மிகக் குறைந்த நிதி வரவு பதிவாகியுள்ளது.
- 2021 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளில் உலக அளவில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது.
- மொத்த நிதியுதவியில் 7 பில்லியன் டாலர் மட்டுமே பெறுவதன் மூலம், தற்போது அது அமெரிக்கா, ஐக்கியப் பேரரசு மற்றும் சீனா ஆகிய நாடுகளை விட பின்தங்கி உள்ளது.
- 2023 ஆம் ஆண்டில், அனைத்து நிலைகளிலும் நிதியுதவி குறைந்துள்ள நிலையில், கடைசி நிலை நிதியுதவி 73%க்கும் மேலாகக் குறைந்ததோடு, அதைத் தொடர்ந்து ஆரம்ப-நிலை நிதியுதவி (70%) மற்றும் தூண்டுதல்-நிலை நிதியுதவி (60%) ஆக குறைந்துள்ளது.

## உலகளாவியப் பணப் பரிமாற்றம் 2023





- உலக வங்கியின் சமீபத்திய புலம்பெயர்வு மற்றும் மேம்பாடு அறிக்கையானது, 2023 ஆம் ஆண்டில் குறைவான மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளுக்கான (LMICs) பண அனுப்பீடுகளில் தொடர்ச்சியான ஒரு வளர்ச்சி பதிவாகியுள்ளதை வெளிப்படுத்துகிறது.
- உலக வங்கியின் ஒரு கூற்றுப்படி பண அனுப்பீடுகளில் அதிகப் பங்கினைப் பெறும் நாடாக இந்தியா திகழ்கிறது.
- இந்தியப் பொருளாதாரம் ஆனது, ஆண்டிற்கு 125 பில்லியன் அமெரிக்க டாலர்களைப் பெற்றுள்ளது.
- மெக்சிகோ (67 பில்லியன் அமெரிக்க டாலர்), சீனா (50 பில்லியன் அமெரிக்க டாலர்), பிலிப்பைன்ஸ் (40 பில்லியன் அமெரிக்க டாலர்), எகிப்து (24 பில்லியன் டாலர்) ஆகிய நாடுகள் பண அனுப்பீடுகளில் அதிகப் பங்கினைப் பெறும் முதல் ஐந்து நாடுகள் ஆகும்.
- 2023 ஆம் ஆண்டில் குறைவான மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளுக்கு அனுப்பப்படும் பணம் 3.8 சதவீதம் அதிகரித்து, மொத்தம் 669 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டியது.
- தெற்காசியாவில் 2023 ஆம் ஆண்டில் பணம் அனுப்பீடு 7.2% அதிகரித்துள்ளது.

- 2023 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் 200 அமெரிக்க டாலர்களை அனுப்பச் செய்வதற்கான பண அனுப்பீட்டுச் செலவினங்கள் சராசரியாக 6.2% என்ற அளவில் தொடர்ந்து அதிகமாக உள்ளது.
- சராசரியாக 12.1% செலவினத்துடன், பணம் அனுப்புவதற்கான அதிகச் செலவினமிக்க வழியாக வங்கிகள் உள்ளன.

## மாநிலங்களுக்கான நிகர கடன் வரம்புகள் 2023

- மாநில அரசுகள் ஓராண்டிற்கான தங்களது நிகர கடன் வரம்புகளை விட கூடுதலாக 2.04 லட்சம் கோடி ரூபாயை கடனாகப் பெறலாம்.
- இந்த ஆண்டு சுமார் 61,000 கோடி ரூபாய் கூடுதல் கடன் பெறுவதற்கு 22 மாநிலங்களுக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.
- இது அவற்றின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) 3% என்ற நிகர கடன் உச்சவரம்புக்கு மேலாக உள்ளது.
- தேசிய ஓய்வூதிய திட்டத்திற்குத் தேவையான பங்களிப்புகளை செலுத்துவதன் மூலம் தங்கள் ஓய்வூதியப் பொறுப்புகளைப் பூர்த்தி செய்த மாநிலங்களுக்கு கூடுதல் கடன் பெறுவதற்கான உச்சவரம்பு வழங்கப்பட்டுள்ளது.
- மேலும், மின்சாரத் துறை அமைச்சகத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில், மாநில அரசுகள் இந்த ஆண்டு 1.43 லட்சம் கோடி ரூபாய்க்கு சற்று அதிகமாக நிதி திரட்டத் தகுதி பெற்றுள்ளன.
- 15வது நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின்படி, இந்த ஆண்டிற்கான சாதாரண நிகர கடன் உச்சவரம்பு 8,59,988 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



## 2023 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வேளாண்மையின் பங்கு



INVESTMENTS DRYING UP

| Sector | FY18 | FY19 | FY20 | FY21 | FY22 |
|---|---|---|---|---|---|
| Agriculture | 26.14 | 25.88 | 27.83 | 30.98 | 30.23 |
| Industry | 29.23 | 26.26 | 24.54 | 23.42 | 24.67 |
| Services | 44.63 | 47.86 | 47.63 | 45.60 | 45.10 |


*FY-Financial Year, Figs in %, Source: State Economic Survey

- தொழில்துறை மற்றும் சேவைத் துறையின் விரைவான வளர்ச்சியின் காரணமாக 1990-91 ஆம் ஆண்டில் 35% ஆக இருந்த இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வேளாண்மை துறையின் பங்கு கடந்த நிதியாண்டில் 15% ஆகக் குறைந்துள்ளது.
- நாட்டின் ஒட்டு மொத்த மொத்த மதிப்பு கூட்டல் (GVA) மதிப்பீட்டில் 1990-91 ஆம் ஆண்டில் 35% ஆக இருந்த வேளாண்மை துறையின் பங்கு 2022-23 ஆம் ஆண்டில் 15% ஆகக் குறைந்துள்ளது.
- இது வேளாண் சார் மொத்த மதிப்பு கூட்டல் மதிப்பின் சரிவினால் ஏற்படவில்லை, மாறாக தொழில்துறை மற்றும் சேவைத் துறையின் மொத்த மதிப்புக் கூட்டலின் விரைவான வளர்ச்சியால் இந்த சரிவு பதிவாகியுள்ளது.
- கடந்த ஐந்து ஆண்டுகளில் வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த துறைகள் சராசரியாக 4% வருடாந்திர வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன.
- உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வேளாண்மையின் பங்கும் பல தசாப்தங்களாக குறைந்துள்ளது என்பதோடு அது சமீபத்திய ஆண்டுகளில் சுமார் 4% ஆக உள்ளது.

## 2024 ஆம் நிதியாண்டின் இலக்கைத் தவற உள்ள பங்கு முதலீட்டு விலக்கல்

- நடப்பு நிதியாண்டிற்கான முதலீட்டு விலக்கல் இலக்கு ஆனது மீண்டும் தவற வாய்ப்பு உள்ளது.
- நடப்பு நிதியாண்டில், மதிப்பிடப்பட்ட தொகை 51,000 கோடி ரூபாயாகும்.
- ஆனால், ஆரம்பப் பொதுப் பங்கு வெளியீடு (IPO) மற்றும் ஓஎஃப்எஸ் (விற்பனைக்குக் கொண்டு வரப்படும் பங்குகள்) மூலமான சிறுபான்மை பங்கு (முதன்மை பங்கு தாரரைச் சாராத பங்குகள்) விற்பனை மூலம் சுமார் 20% அல்லது 10,049 கோடி ரூபாய் மட்டுமே சேகரிக்கப்பட்டுள்ளது.
- இந்தப் பட்டியலில் உள்ள அனைத்து மத்தியப் பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் IDBI வங்கியின் தனியார்மயமாக்கல் அடுத்த நிதியாண்டிற்கு மாற வாய்ப்புள்ளது.

- மொத்தத்தில், தற்போது DIPAM (முதலீடு மற்றும் பொதுச் சொத்து மேலாண்மைத் துறை) மூலம் சுமார் 11 பரிவர்த்தனைகள் செயல்படுத்தப்படுகின்றன.
- கடந்த 10 ஆண்டுகளில் முதலீட்டு விலக்கல் மூலம் திரட்டப்பட்ட சுமார் 4.20 லட்சம் கோடி ரூபாயில் 3.15 லட்சம் கோடி ரூபாய் ஆனது சிறுபான்மை பங்கு விற்பனையிலிருந்தும் 69,412 கோடி ரூபாய் ஆனது 10 மத்தியப் பொதுத் துறை நிறுவனங்களில் மேற்கொள்ளப்படும் மூலோபயப் பரிவர்த்தனைகள் மூலமும் பெறப் பட்டது.





# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## செவ்வாய்க் கிரகத்தில் சுழல் காற்று

- நாசாவின் 'ஆறு சக்கர புவியியல் ஆய்வுக் கருவியான,' பெர்சீவெரன்ஸ் என்ற உலாவிக் கலமானது, செவ்வாய்க் கிரகத்தில் தூசுக்கள் நிறைந்த சுழல் காற்றினைத் தனது ஒளிப் படக் கருவியில் படம் பிடித்துள்ளது.
- இந்த சுழல் காற்றானது, பூமியில் நிகழும் சுழல் காற்றினை போன்றே உள்ளது.
- பொதுவாக, செவ்வாய்க் கிரகத்தில் நிகழும் சுழல்காற்றுகள் நமது கிரகத்தில் காணும் சுழல் காற்றினை விட சிறியதாக இருக்கும்.
- ஆனால் சுழல் காற்றின் தாக்கமற்ற பகுதியின் அடிப்படையிலான கணக்கீடுகளின் படி, இவை சுமார் இரண்டு கிலோமீட்டர் (1.2 மைல்) உயரம் இருந்தது.
- இது ஒவ்வோர் ஆண்டும் அமெரிக்காவில் ஏற்படும் வழக்கமான சுழல் காற்றினை விட மிக உயரமானது என்பதோடு, இது அமெரிக்க எம்பயர் ஸ்டேட் கட்டிடத்தின் உயரத்தை விட ஐந்து மடங்கு உயரம் ஆகும்.
- இந்த உலாவிக் கலமானது, "தோரோஃபேர் முகடு" என்று பெயரிடப்பட்ட இடத்தில் ஏற்பட்ட இந்த சுழல் காற்றினைப் பதிவு செய்துள்ளது .

- இது பெர்சீவெரன்ஸ் உலாவிக் கலத்தில் இருந்து சுமார் நான்கு கிலோமீட்டர் அல்லது 2.5 மைல் தொலைவில் இருந்தது.
- இது மணிக்கு 19 கிலோமீட்டர் அல்லது 12 மைல் வேகத்தில் நகர்ந்தது.
- தற்போதைய மதிப்பீட்டின்படி, அதன் அகலம் சுமார் 200 அடி (அல்லது 60 மீட்டர்) ஆகும்.





## மபெல்லா தடுப்பூசி

- தடுப்பூசி தயாரிப்பு நிறுவனமான இந்தியன் இம்யூனாலஜிக்கல்ஸ் (IIL) மபெல்லா எனப் படும் குழந்தைகளுக்கான தட்டம்மை மற்றும் ரூபெல்லா தடுப்பூசியினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்த வலுகுன்ற செய்யப்பட்ட MR தடுப்பூசியானது, வியட்நாமின் பாலிவாக் இன்ஸ்டிடியூட் என்ற நிறுவனத்துடனான ஒரு பிரத்யேக கூட்டாண்மையில் உருவாக்கப் பட்டது.
- உலகளவில் சுமார் ஒரு லட்சம் குழந்தைகளின் உயிர்களைப் பலிவாங்கும் கொடிய தட்டம்மை மற்றும் ரூபெல்லாவைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசரத் தேவையை இந்த தடுப்பூசி அறிமுகம் நிவர்த்தி செய்கிறது.


## ஊடுகதிர் முனைவாக்கமானி செயற்கைக்கோள்

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் ஆனது, முனைப்பு மிக்க ஊடுகதிர் மூலங்களின் முனைவாக்கம் குறித்து ஆய்வு செய்வதற்காக அதன் முதல் ஊடுகதிர் முனைவாக்கமானி செயற்கைக்கோளை (XPoSat) விண்ணில் ஏவுவதற்கான ஒரு திட்டத்தினை அறிவித்துள்ளது.
- ஊடுகதிர் மூலங்களிலிருந்து வெளிப்படும் 8-30 keV திறன் அளவிலான ஆற்றல் அலை வரிசையில் ஊடுகதிர் முனைவாக்கத்தினை அளவிடுதல் மற்றும் 0,8 முதல் 15 keV திறன் அளவிலான ஆற்றல் அலைவரிசையில் காஸ்மிக் ஊடுகதிர் மூலங்களின் நீண்ட கால நிறமாலை மற்றும் தற்காலிக ஆய்வுகள் ஆகியவை இந்த ஆய்வில் அடங்கும்.
- இந்தத் திட்டமானது தோராயமாக ஐந்து ஆண்டுகள் செயல்பாட்டில் இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.




## JT60SA – ஜப்பான்


- இது உலகின் மிகப்பெரிய மற்றும் மிகவும் மேம்பட்ட தொழில்நுட்பம் கொண்ட சோதனை அடிப்படையிலான அணுக்கரு இணைவு உலை ஆகும்.
- ஜப்பானின் இபராக்கி என்ற மாகாணத்தில் அமைந்துள்ள இந்த உலை அதன் செயல் பாடுகளை அதிகாரப்பூர்வமாகத் தொடங்கியுள்ளது.
- இது ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் ஜப்பானுக்கும் இடையிலான கூட்டு முயற்சியாக உருவாக்கப்பட்டது.
- இது 200 மில்லியன் டிகிரி செல்சியஸ் வரை சூடேற்றப்பட்ட ஒரு சுற்றிச் சுழலும் பிளாஸ்மாவைக் கொண்டிருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஒரு இனிப்பு மாவுப் பண்டம் வடிவமான “டோகாமாக்” கலனைக் கொண்டுள்ளது.
- இந்த அதிநவீன உலையானது பிரான்சு நாட்டில் உள்ள சர்வதேச அதிவெப்ப அணுக்கரு இணைவு சோதனை உலைக்கு (ITER) முன்னோடியாக உள்ளது.




- அணுக்கரு இணைவு என்பது தூய்மையான மற்றும் நிலையான ஆற்றல் மூலமாகும்.
- அணுக்கரு இணைவு என்பது தற்போது அணுக்கருப் பிளவு சார்ந்து இயங்கி வரும் அணுமின் நிலைய தொழில்நுட்பத்திற்கு ஒரு புரட்சிகர மாற்றாக இருக்கும்.

- இது இரண்டு அணுக்கருக்களை இணைத்து ஒற்றையான மற்றும் மிகவும் கனமான தனிமத்தை உருவாக்கச் செய்யும் செயல்முறையை உள்ளடக்கியது.
- அணுக்கருவைப் பிளவுபடுத்தும் அணுக்கருப் பிளவுச் செயல்முறை போலல்லாமல், இந்த அணுக்கரு இணைவு ஆனது குறைவான சுற்றுச்சூழல் தாக்கத்துடன் ஏராளமான ஆற்றலை வழங்கும் திறனைக் கொண்டுள்ளது.

## HD110067



- இது இதுவரையில் அறியப்பட்ட 6 நெப்டியூன் சார் புறக்கோள்களைக் கொண்ட ஒரு நட்சத்திரமாகும்.
- இந்த நட்சத்திரம் ஆனது வடக்கு வானத்தில் அமைந்த விர்கோ (கன்னி) கோள் மண்டலத்திற்கு அருகில் உள்ள கோமா பெரெனிசஸ் விண்மீன் திரளில் அமைந்து உள்ளது.
- இது புவியிலிருந்து சுமார் 100 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளது.
- நாசாவின் புறக்கோள் கடப்பு கண்காணிப்பு செயற்கைக்கோள் (TESS) ஆனது 2020 ஆம் ஆண்டில் நட்சத்திரத்தின் பிரகாசம் குறைவதைக் கண்டறிந்தது.
- இந்த நட்சத்திரத்தின் முன் கோள்கள் கடந்து செல்வதை இது குறிக்கிறது.

## INS சந்தாயக்

- கடற்படை தினத்தை முன்னிட்டு (டிசம்பர் 4), கொல்கத்தாவில் அமைந்துள்ள கார்டன் ரீச் கப்பல் கட்டுபவர்கள் மற்றும் பொறியாளர்கள் (GRSE) இந்தியக் கடற்படைக்கு ஐஎன்எஸ் சந்தாயக்கை வழங்கினர்.
- INS சந்தயாக் என்பது இந்தியாவில் இதுவரை கட்டப்பட்ட மிகப்பெரிய ஆய்வுக் கப்பலாகும்.
- GRSE நிறுவனத்தால் கட்டப்பட்ட நான்கு ஆய்வு கப்பல்களின் (பெரிய) தொடரில் இது முதன்மையானதாகும்

## ASW குறைவான ஆழம் கொண்ட பகுதியில் இயங்கும் நீர்வழி வாகனங்கள் (CSL) திட்டம்



Anti Submarine Warfare Shallow Water Craft

- இந்தியக் கடற்படைக்கான 3 நீர்மூழ்கி எதிர்ப்புப் போர்க் கப்பல்கள் கொச்சி கப்பல் கட்டும் தளத்தில் இயக்கத் தொடங்கப்பட்டன.
- இந்தக் கப்பல்களுக்கு INS மாஹே, INS மல்வான் மற்றும் INS மங்ரோல் என்று பெயரிடப்பட உள்ளது.
- இந்தக் கப்பல்கள் ASW என்ற குறைவான ஆழம் கொண்ட பகுதியில் இயங்கும் நீர்வழி வாகனங்கள் (CSL) திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- இது கொச்சியில் உள்ள கொச்சின் கப்பல் கட்டும் நிறுவனத்தால் கட்டமைக்கப் படுகிறது.
- இவைக் கடலோரப் பகுதிகளில் நீர்மூழ்கி எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், குறைந்த முக்கியத்துவம் கொண்ட கடல்சார் செயல்பாடுகள் (LIMO) மற்றும் கண்ணிவெடிகளை அகற்றும் செயல்பாடுகளுக்காகப் பயன்படுத்தப் படுவதற்காகவும் வேண்டி கட்டமைக்கப்பட்டுள்ளன.

## அணுசக்தி ஈர்ப்பு குண்டுகள்




- புதிய அணுசக்தி ஈர்ப்பு குண்டினை உருவாக்கும் அமெரிக்காவின் திட்டங்கள் B61-13 என குறிப்பிடப்படுகிறது.


- இந்த குண்டுகள் வழிகாட்டுதல் அமைப்பைக் கொண்டிருக்கவில்லை என்பதால் ஒரு உந்து விசை சார்ந்த பாதையைப் பின்பற்றுகின்றன.
- இந்தப் புதிய வெடிகுண்டு ஆனது, 360 கிலோடன்கள் எடை கொண்டதாக மதிப்பிடப் பட்டுள்ள நிலையில் இது ஹிரோஷிமாவை அழித்த குண்டினை விட சுமார் 24 மடங்கு சக்தி வாய்ந்தது.
- இந்த ஏவுகணையில் ஏற்றப்பட்ட ஈர்ப்பு வெடிகுண்டுகள் ஆனது, இலக்கை நோக்கிப் பறப்பதற்குப் பதிலாக புவியீர்ப்பு விசையால் தரை நோக்கி இழுக்கப் படுகின்றன.
- இதில், ஒரு குண்டுவீச்சு விமானம் அல்லது விமானம் இலக்குப் பகுதியின் மீது பறந்து அந்தக் குண்டை வீசுகிறது.

## செயற்கை நுண்ணறிவு மாதிரி ஜெமினி


- கூகுள் நிறுவனமானது, ஜெமினி என்ற அதன் சமீபத்திய செயற்கை நுண்ணறிவு அமைப்பை அதிகாரப் பூர்வமாக அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஜெமினி செயற்கை நுண்ணறிவு அமைப்பானது அல்ட்ரா, ப்ரோ மற்றும் நானோ ஆகிய மூன்று தனித்துவமானப் பயன் முறைகளை அறிமுகப்படுத்துகிறது.
- இது தற்போது பார்ட் எனப்படும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த உரையாடு மென்பொருளுடன் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளது என்பதோடு இது பிக்சல் வகை கைபேசிகளிலும் கிடைக்கப் பெறுகிறது.
- கூகுள் நிறுவனமானது, OpenAI நிறுவனத்தின் ChatGPT என்பதுடன் போட்டியிடுவதை நோக்கமாகக் கொண்டு இதனை அறிமுகப்படுத்தியுள்ளது.

## ஆதித்யா சூரியக் காற்று துகள் பரிசோதனை (ASPEX)

- இது சூரியனை ஆராய்வதற்காக ஏவப்பட்ட இந்தியாவின் ஆதித்யா-எல்1 செயற்கைக் கோளில் உள்ள ஒரு உபகருவி (பேலோட்) ஆகும்.
- இது அதன் செயல்பாடுகளைத் தொடங்கியுள்ளது.
- இது சூரியக் காற்றின் துகள்களை ஆய்வு செய்வதற்காக வடிவமைக்கப் பட்டுள்ளது.
- இது அயனியாக்கம் செய்யப்பட்ட மூலக்கூறுகளைப் பிரித்து அடையாளம் காணும் பகுப்பாய்வு கருவி (SWIS) மற்றும் சுப்ரா வெப்ப மற்றும் ஆற்றல் துகள் நிறமாலை (STEPS) போன்ற கருவிகளைக் கொண்டுள்ளது.
- SWIS என்பது சூரியனில் இருந்து மின்னேற்றம் செய்யப்பட்ட துகள்களை (அயனிகள்) அளவிடுவதன் மூலம் இது ஒரு பரந்த பார்வையை வழங்குகிறது, அதே நேரத்தில் STEPS சூரியனால் உமிழப்படும் உயர் ஆற்றல் துகள்களைப் படிப்பதில் பெரும் கவனம் செலுத்துகிறது.
- விண்வெளி வானிலை மற்றும் பூமியில் உள்ள தகவல் தொடர்பு அமைப்புகள் மற்றும் மின் கட்டங்களில் அதன் சாத்தியமான தாக்கத்தைப் புரிந்து கொள்வதில் ASPEX ஒரு முக்கியப் பங்கினை வகிக்கிறது.





## ஜாமூனின் மரபணு வரிசைமுறை




- போபாலில் இயங்கிவரும் இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (IISER) ஆராய்ச்சியாளர்கள் முதன்முதலில் ஜாமூன் (நாவல்) மரத்தின் மரபணு வரிசை முறையை மேற்கொண்டுள்ளனர்.
- S. குமினி என்ற மரபணுவை வரிசைப்படுத்த ஆராய்ச்சிக் குழுவானது ஆக்ஸ்போர்டு நானோபோர் மற்றும் 10x ஜெனோமிக்ஸ் வரிசைமுறை என்ற தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தியது.
- இந்தப் பகுப்பாய்வானது, ஜாமூன் மரபணுவில் அதிக எண்ணிக்கையிலான குறியீட்டு மரபணுக்களை வெளிப்படுத்திய நிலையில் இது நியோபாலிப்ளோயிடி என்ற நிகழ்வைக் குறிக்கிறது.

- நியோபாலிப்ளோயிடி நிகழ்வு என்பது பாலிப்ளோயிடியின் நிகழ்வை (இரண்டுக்கும் மேற்பட்ட முழுமையான குரோமோசோம்களைக் கொண்டிருக்கும் பரம்பரை நிலை) குறிக்கிறது.
- நியோபாலிப்ளோயிடி நிகழ்வு என்பது பாலிப்ளோயிடியின் நிகழ்வைக் குறிக்கிறது.
- ஒரு உயிரினத்தில் பல குரோமோசோம்களைக் கொண்டிருக்கும் இந்த நிலையானது அதன் உயிரணுக்களில் குரோமோசோம்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வழி வகுக்கிறது.
- உயிரணுப் பிரிவின் போது ஏற்படும் பிழைகள் அல்லது வெவ்வேறு இனங்களுக்கு இடையில் ஏற்படும் கலப்பினப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு வழிமுறைகள் மூலம் பாலிப்ளோயிடி என்ற நிகழ்வு ஏற்படலாம்.

## குறுகிய தூர வரம்புடைய கடற்படைக் கப்பல் எதிர்ப்பு ஏவுகணை (NASM-SR)




- இந்தியக் கடற்படையானது, பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்புடன் இணைந்து, சீ கிங் 42B என்ற ஹெலிகாப்டரில் இருந்து உள்நாட்டிலேயே உருவாக்கப் பட்ட குறுகிய தூர வரம்புடைய கடற்படை கப்பல் எதிர்ப்பு ஏவுகணையின் (NASM-SR) வழிகாட்டுதலுடன் கூடிய சோதனைகளை சமீபத்தில் வெற்றிகரமாக மேற்கொண்டது.
- இந்தியக் கடற்படைக்காக உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட, வான்வழியாக ஏவப்படக் கூடிய முதல் கப்பல் எதிர்ப்பு ஏவுகணை இதுவாகும்.
- இந்த ஏவுகணை தற்போது கடற்படையில் பயன்படுத்தப்பட்டு வரும் சீ ஈகிள் என்ற ஏவுகணைகளுக்குப் பதிலாக பயன்படுத்தப்படும்.
- NASM-SR என்ற ஏவுகணையானது கடல் மட்டத்திலிருந்து வெறும் 5 மீட்டர் உயரத்தில் பயணிக்கக் கூடியது.
- கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகளின் இந்த தாழ்மட்டச் செயல்பாடுகள் திறன் ஆனது கடல்சார் பகுதியில் ரேடார் மற்றும் அகச்சிவப்பு கண்டறிதல் நுட்பங்களில் இருந்து தப்பித்தல் திறன் (sea skimming) என்று அழைக்கப்படுகிறது.

## புரட்சிகரமான புவிசார் வரைபடமாக்கல் நுட்பம்

- நாட்டின் முதன்மையான தேசிய ஆய்வு மற்றும் வரைபடமாக்கல் அமைப்பான இந்திய ஆய்வு அமைப்பானது (SoI), புவியிடஞ்சார்ந்தத் தீர்வுகளில் நிபுணத்துவம் பெற்ற முன்னணி இந்திய வரைபடமாக்கல் நிறுவனமான ஜெனிசிஸ் இன்டர்நேசனல் நிறுவனத்துடன் கைகோர்த்துள்ளது.

- இந்தியாவில் முப்பரிமாண (3டி) எண்ணிம இரட்டை வரைபடமாக்கல் திட்டத்தை உருவாக்குவதற்காக SoI அமைப்புடன் பொது-தனியார் ஒப்பந்தத்தை ஏற்படுத்திய முதல் நிறுவனமாக ஜெனிசிஸ் மாறியது.
- இது ஆத்மநிர்பர் பாரதத்தினை மேம்படுத்துவதை வலியுறுத்துகின்ற இந்தியாவின் 2022 ஆம் ஆண்டு தேசியப் புவியியல் கொள்கையுடன் ஒத்துப்போகிறது.
- இந்தக் கூட்டாண்மை ஆனது, அதி துல்லியத் திறன் கொண்ட முப்பரிமாணத் தரவு, எண்ணிம வடிவ நிலப்பரப்பு மாதிரிகள் (DTM), எண்ணிம மேற்பரப்பு மாதிரிகள் (DSM) மற்றும் வடிவியல் ரீதியாக திருத்தியமைக்கப்பட்ட செயற்கைக் கோள் புகைப்படம் (ஆர்த்தோ இமேஜரி) ஆகியவற்றைப் பயன்படுத்தி, இந்திய வரைபடக் கட்டமைப்பு முன்னெடுப்பினை அறிமுகப்படுத்தும்.




## இந்தியாவில் கொசு மீன்களின் தாக்கம்



- கொசுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஆந்திரப் பிரதேசம், ஒடிசா மற்றும் பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் உள்ள பல்வேறு பகுதிகள் அதன் உள்ளூர் நீர்நிலைகளில் கொசு மீன்களை விடுவித்துள்ளன.
- கொசு மீன் ஆனது அமெரிக்காவைப் பூர்வீகமாக கொண்டது.
- 1928 ஆம் ஆண்டில், கம்புசியா, குறிப்பாக கம்புசியா அஃபினிஸ் மற்றும் கம்புசியா ஹோல்ப்ரூக்கி ஆகிய இனங்களானது பிரிட்டிஷ் ஆட்சியின் போது இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- கொசுப் புழுக்களை (லார்வாக்கள்) உண்பதற்கும், கொசுக்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதற்கும் இந்த மீன்களைப் பயன்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

- ஆஸ்திரேலியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த கொசுமீன்கள் அந்நாட்டின் உள்ளூர் மீன் இனத்தின் அழிவுக்கு வழி வகுத்தன.
- இந்தியாவில், கொசு மீன்களின் அறிமுகத்தைத் தொடர்ந்து தலைப் பிரட்டைகள் குறைந்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.
- உலக சுகாதார அமைப்பானது, 1982 ஆம் ஆண்டில் கம்பூசியா இனங்களை கொசுக் கட்டுப்பாட்டுக் காரணிகளாகப் பயன்படுத்தப் பரிந்துரைப்பதை நிறுத்தியது.
- மேலும் 2018 ஆம் ஆண்டில், இந்திய அரசாங்கத்தின் தேசியப் பல்லுயிர் ஆணையம் ஆனது அஃபினிஸ் மற்றும் கம்புசியா ஹோல்ப்ரூக்கி ஆகியவற்றை அயல்நாட்டு ஆக்கிரமிப்பு இனங்களாக அறிவித்தது.

## ஐஎன்எஸ் இம்பால்

- இந்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஐஎன்எஸ் இம்பால் கப்பலின் (12706) அடையாளச் சின்னத்தைத் திறந்து வைத்தார்.
- இது நான்கு புலப்படா வழிகாட்டும் ஏவுகணை அழிப்பான் கப்பல் கட்டும் 15பி என்ற திட்டத்தின் மூன்றாவது கப்பலாகும்.
- இந்தச் சின்னம் அதன் இடதுபுறத்தில் காங்லா அரண்மனை மற்றும் வலதுபுறத்தில் 'கங்லா-சா' ஆகியவற்றைக் கொண்டுள்ளது.
- கங்லா அரண்மனை மணிப்பூரின் ஒரு முக்கியமான வரலாற்று மற்றும் தொல்பொருள் தளமாகவும் கடந்த காலத்தில் அரசரின் தலைமை இடமாகவும் இருந்தது.
- 'கங்லா-சா' என்பது மணிப்பூர் வரலாற்றில் இருந்து வந்த ஒரு புராண உயிரினம் ஆகும், என்பதோடு அதன் மக்களின் பாதுகாவலர் எனும் அடையாளமாகவும் அது உள்ளது.
- 'கங்லா-சா' மணிப்பூரின் மாநிலச் சின்னமாகவும் உள்ளது.
- இது இந்தியக் கடற்படையின் போர்க்கப்பல் வடிவமைப்புப் பணியகத்தால் வடிவமைக்கப் பட்டு, மும்பையில் உள்ள மசாகன் டாக் ஷிப் பில்டர்ஸ் லிமிடெட் (எம்.டி.எல்) மூலம் கட்டப்பட்டது.
- இந்தக் கப்பல் உள்நாட்டுக் கப்பல் கட்டுமானத்தின் ஒரு அடையாளமாகும் என்பதோடு இது உலகின் மிகவும் தொழில்நுட்ப ரீதியாக மேம்படுத்தப் பட்ட போர்க்கப்பல்களில் ஒன்றாகவும் உள்ளது.

## அரிய நோய்களைக் குணப்படுத்தும் இனம்சார் மருந்துகள்


- இந்தியாவில் மத்திய சுகாதாரத் துறை அமைச்சகமானது நான்கு அரிய நோய்களுக்கு சிகிச்சையளிக்க இனம்சார் (ஜெனரிக்) மருந்துகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
- அவை டைரோசினீமியா-வகை 1, கௌச்சர் நோய், வில்சன் நோய் மற்றும் டிராவெட்-லெனாக்ஸ் காஸ்டாட் நோய்க்குறி ஆகிய 4 நோய்கள் ஆகும்.
- முதன்முறையாக அரிய வகை நோய்களுக்கான மருந்துகளை உள்நாட்டிலேயே தயாரித்து வழங்கும் சிறப்பு முயற்சி இதுவாகும்.
- 13 அரிதான நோய்கள் மற்றும் கதிர் அரிவாள் செல் நோய்களுக்கு மத்திய அரசு முன்னுரிமை அளித்துள்ளது.

- அரியவகை நோய் என்பது ஒரு சிறிய எண்ணிக்கையிலான அளவில் மக்களைப் பாதிக்கின்ற, குறிப்பாக குறைவாக பரவி உள்ள ஒரு சுகாதாரக் குறைவு நிலை ஆகும்.
- தற்போது, எட்டு வகையான இனம்சார் மருந்துகள் உள்ள நிலையில் அவற்றில், நான்கு வகையான மருந்துகள் இந்தியாவில் கிடைக்கின்றன என்பதோடு, மேலும் நான்கு வகையான மருந்துகள் அடுத்த ஆண்டு கிடைக்கப் பெறும்.
- இனம்சார் மருந்துகள் என்பது செயலில் உள்ள பொருட்கள், அதன் அளவு, பாதுகாப்பு, வலிமை, தரம் ஆகியவற்றின் அடிப்படையில் நிறுவனப் பெயர் கொண்ட அல்லது காப்புரிமை மருந்துகளுக்குச் இணையான மருந்துகளாகும்.
- இவை பொதுவாக குறைந்த விலையில் விற்கப்படுகின்றன.
- ஒரு நிறுவனப் பெயர் கொண்ட மருந்துக்கான காப்புரிமைப் பாதுகாப்பு காலம் காலாவதியானதும், பிற மருந்து நிறுவனங்கள் இந்த இனம்சார் பதிப்புகளைத் தயாரித்து விற்கலாம்.
- நான்கு அரிய நோய்களுக்கான இந்த இனம்சார் மருந்துகளின் விலை, நிறுவன மருந்துகளின் தற்போதையச் சந்தை மதிப்பை விட 100 மடங்கு குறைவாக இருக்கும்.




## எதிர் பருப்பொருள் ஈர்ப்பு விசைக்கு உட்படுதல்

- உலகின் மிகப்பெரிய துகள் தூண்டுதல் நுட்ப நிறுவனமான CERN, எல்லா பொருட்களைப் போலவே, எதிர் பருப்பொருள்களும் ஈர்ப்பு விசையின் காரணமாக கீழே விழுகிறது என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.
- எதிர் பருப்பொருள் என்பது வழக்கமான பருப்பொருளை போலவே ஒரே மாதிரியான நிறை கொண்ட ஆனால் எதிர் மின்னூட்டம் கொண்ட புதிரான இரட்டை வடிவமாகும்.
- எலக்ட்ரான்கள் மற்றும் புரோட்டான்கள் போன்ற அனைத்து சார்பு அணுத் துகள்களும் எதிர் பருப்பொருள் கூறினைக் கொண்டுள்ளன.
- எலக்ட்ரான்கள் எதிர்மறையாக மின்னூட்டம் பெற்றிருந்தாலும், எதிர் பருப்பொருளின் எலக்ட்ரான்கள் நேர்மறையாக மின்னூட்டம் பெற்றுள்ளன.
- அதேபோல், புரோட்டான்கள் நேர்மறையாக மின்னூட்டம் பெற்றிருந்தாலும், எதிர் பருப்பொருளின் புரோட்டான்கள் எதிர்மறையாக மின்னூட்டம் பெற்றுள்ளன.
- ஐன்ஸ்டீனின் பொது சார்பியல் கோட்பாடு, அனைத்து நிறைகளும், அவற்றின் உள் கட்டமைப்புகளில் உள்ள வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல், ஈர்ப்பு விசைக்கு ஒரே மாதிரியாக எதிர்வினையாற்றுகின்றன என்று கணித்துள்ளது.



## "ஒலி எழுப்பும்" பிளாஸ்மா அலைகள்



- புதன் கோளைச் சுற்றி மர்மமான "ஒலி எழுப்பும்" பிளாஸ்மா அலைகள் இருப்பதை அறிவியலாளர்கள் கண்டறிந்து பதிவு செய்துள்ளனர்.
- இத்தகையக் குழும அலைகள் பூமி, வியாழன் மற்றும் சனி ஆகியவற்றில் பதிவு செய்யப் பட்டதோடு, யுரேனஸ் மற்றும் நெப்டியூன் ஆகியவற்றிலும் பதிவு செய்யப் பட்டன.
- புதன் கோளின் காந்தப்புலத்தில் இருந்து "விசில்" போன்ற ஒலி அலைகள் வெளிப் படுவது இதுவே முதல் முறையாகும்.
- மற்ற கிரகங்களில் உள்ள வலுவான காந்தப்புலத்தினைப் போல, புதன் கோளானது வலுவான காந்தப் புலத்தினை கொண்டிராததால் இந்த கண்டுபிடிப்பு மிகவும் சுவாரஸ்யமானதாக உள்ளது.
- புதன் கோள் ஆனது அடிப்படையில், பெரும்பாலும் வளிமண்டலம் இன்றி காணப்படும் ஒரு பெரிய பாறைக் கோளம் ஆகும்.
- இது சூரியனுக்கு மிக அருகில் சுற்றி வருவதால், இந்தக் கோள் தொடர்ந்து சூரிய கதிர் வீச்சு மற்றும் காற்றினால் தாக்கப்படுகிறது.

## WASP-17b

- ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கியைப் பயன்படுத்தி, WASP-17b எனப்படும் புறக்கோளின் உயர்மட்ட மேகங்களில் குவார்ட்ஸ் நுண் படிகங்கள் கண்டறியப் பட்டு உள்ளது.

- ❖ புறக்கோள்களின் வளிமண்டலத்தில் சிலிக்கா துகள்கள் கண்டறியப்படுவது இது முதல் முறை ஆகும்.
- ❖ WASP-17b என்பது F-வகை நட்சத்திரத்தைச் சுற்றி வரும் ஒரு வாயு நிரம்பிய இராட்சத புறக்கோள் ஆகும்.
- ❖ அதன் நிறை வியாழன் கோளின் நிறையில் 0.78 அளவுடையது என்பதோடு இது அதன் நட்சத்திரத்தின் ஒரு சுற்றுப்பாதையை நிறைவு செய்ய 3.7 நாட்கள் ஆகும்.
- ❖ இந்தப் புறக்கோள் நமது கிரகத்தில் இருந்து சுமார் 1,324 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது.





## மரபுத் திரி செல்களால் ஆன குரங்கு

- ❖ சீனாவில் உள்ள அறிவியலாளர்கள் பச்சை நிற கண்கள் மற்றும் பொலிவான விரல் நுனிகள் போன்ற தனித்துவமான அம்சங்களைக் கொண்ட முதல் இவ்வகையிலான முதல் குரங்கினை உருவாக்கியுள்ளனர்.
- ❖ குருத்தணு (ஸ்டெம்) செல்கள் மூலம் உருவாக்கப்பட்ட சிமெரிக் அல்லது கலப்பின குரங்கின் உலகின் முதல் நேரடி பிறப்பு இதுவாகும்.
- ❖ ஆய்வகத்தில் பிறந்த இந்தக் குரங்கு 10 நாட்கள் உயிர் வாழ்ந்த நிலையில் அதன் பிறகு அது கருணைக் கொலை செய்யப் பட்டது.
- ❖ கலப்பின எலிகள் முதன்முதலில் 1960 ஆம் ஆண்டுகளில் உருவாக்கப்பட்டன என்பதோடு அவை பொதுவாக உயிரியல் மருத்துவ ஆராய்ச்சியில் பயன்படுத்தப் படுகின்றன.



## போன்டஸ் கண்டத்தட்டு

- தென்கிழக்கு ஆசியாவில் சுமார் 20 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு காணாமல் போன பழைய கண்டத் தட்டு ஒன்றை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- போன்டஸ் தட்டு என்று அழைக்கப் படும் கண்ட மேலோட்டின் துண்டுகள் போர்னியோ தீவு அருகே தென் சீனக் கடலில் கண்டுபிடிக்கப்பட்டன.
- இந்தக் கண்டத்தட்டு ஒரு காலத்தில் சுமார் 15 மில்லியன் சதுர மைல் அளவு, அதாவது தோராயமாக பசிபிக் பெருங்கடலின் கால் பகுதியளவு இருந்ததாக கூறப்படுகிறது.
- பாஞ்சியா என்ற பெருங்கண்டம் உடைவதற்கு முன், போன்டஸ் தட்டு புவியின் கண்ட மேலோட்டின் ஒரு பகுதியை உள்ளடக்கியிருந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- ஆனால் அது கடந்த பல மில்லியன் வருடங்களில் பூமிக்கு அடியில் மூழ்கி விட்டது.
- அது இருந்த காலத்தில் போன்டஸ் பெருங்கடல் எனப்படும் கடலின் அடியில் மூழ்கி இருந்ததால் இதற்கு " போன்டஸ் தட்டு" என்று பெயர் சூட்டப் பட்டது.




## நிலவில் சாலைகள்



- நிலவில் சாலைகள் மற்றும் தரையிறங்கும் தளங்களை அமைப்பதற்கான மூலப் பொருளாக நிலவின் தூசிப் படலங்களைப் பயன்படுத்தலாம் என்று அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- இது பெரும்பான்மையாக அடர் சாம்பல் நிற நிலவு எரிமலைப் பாறையைக் கொண்டு உள்ளது.
- அறிவியலாளர்கள் மாறுபட்ட வலிமை மற்றும் அளவுகள் கொண்ட லேசர் கற்றைகளைப் பயன்படுத்தி, தங்கள் சோதனைகளில் செறிவூட்டப்பட்ட சூரிய ஒளி படுமாறு தூண்டுவித்தனர்.
- தூசுகளை உருக்கி முக்கோண, வெற்று மையம் கொண்ட ஓடுகளை வெற்றிகரமாக தயாரித்தனர்.
- இவை ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு, நிலவில் சாலைகள் மற்றும் தரையிறங்கும் தளங்களை அமைப்பதற்கு திடமான மேற்பரப்புகளை உருவாக்கப் பயன்படுத்தப் படும்.
- ஆனால் சுமார் 10 x 10 மீ அளவிலான தரையிறங்கும் தளத்தினை உருவாக்க சுமார் 100 நாட்கள் ஆகும்.

## சனிக் கோளின் வளையங்கள் மறைவு



- நமது சூரிய மண்டலத்தில், சூரியனில் இருந்து ஆறாவது கோளாக அமைந்த சனி, அதன் கண்கவர் மற்றும் இயல்பு சார் சின்னமாக விளங்கும் அதன் வளையங்களுக்குப் பெயர் பெற்றது.


- இந்த வளையங்கள், பெரும்பான்மையாக எண்ணற்றப் பனிக்கட்டித் துகள்கள் மற்றும் சிறிய பாறைத் துண்டுகளால் ஆனது.
- 2025 ஆம் ஆண்டில், ஒளியியல் மாயை காரணமாக இந்த வளையங்கள் பார்க்க முடியாதவாறு மறைந்து விடும் என்று சமீபத்திய ஆய்வுகள் கூறுகின்றன.
- சனிக் கோளானது பூமியுடன் சரியான சீரமைப்பில் இல்லை, அது 9 டிகிரி கோணத்தில் சாய்ந்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் இந்தக் கோணம் சுமார் 3.7 டிகிரியாகக் குறைந்திருக்கும்.
- ஒரு வருடம் கழித்து, பூமியிலிருந்து அது விலகிச் செல்வதால், சனிக் கோளின் அச்சு அதன் தற்போதைய சாய்ந்த நிலையில் இருந்து செங்குத்து நிலைக்கு மாறும்.
- இது அதன் வளையங்களை பூமிக்கு இணையான மெல்லிய கிடைமட்டப் பட்டை போல தோற்றமளிக்கும்.
- இது இந்தக் கட்டமைப்பினைப் பார்ப்பதற்கு மிகவும் மெல்லியதாக உள்ளது போல் தோன்றச் செய்யும்.
- இந்த நிகழ்வு, வளையங்களின் அடிப்பகுதி வெளிப்படும் காலமான 2032 ஆம் ஆண்டு வரை நீடிக்கும்.
- சனிக் கோளின் வளைய அமைப்பு ஆனது அக்கோளில் இருந்து 282,000 கிலோ மீட்டர்கள் வரை நீண்டுள்ளது.
- ஆனால் செங்குத்து உயரம் ஆனது பொதுவாக ஏழு பிரதான வளையங்களில் சுமார் 30 அடி இருக்கும்.

## AMRIT தொழில்நுட்பம்

- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனமானது நீரிலிருந்து ஆர்சனிக் மற்றும் உலோக அயனிகளை அகற்றுவதற்காக வேண்டி 'AMRIT' என்ற ஒரு தொழில் நுட்பத்தை உருவாக்கி உள்ளது.
- 'AMRIT' என்பது இந்தியத் தொழில்நுட்பம் மூலம் ஆர்சனிக் மற்றும் உலோகத்தை அகற்றுதல் என்பதைக் குறிக்கிறது.
- இந்தத் தொழில்நுட்பம் அதன் வழியாக தண்ணீர் செலுத்தப்படும் போது ஆர்சனிக்கை மட்டுமே தேர்ந்தெடுத்து நீக்கச் செய்கின்ற, நுண்ணிய அளவிலான இரும்பு ஆக்சி-ஹைட்ராக்சைடைப் பயன்படுத்துகிறது.
- இந்த நீர்ச் சுத்திகரிப்புக் கருவியானது, வீட்டு உபயோகம் மற்றும் அனைத்து சமூகப் பயன்பாடுகளுக்கும் ஏற்றவாறு உருவாக்கப்பட்டுள்ளது.
- ஆர்சனிக் என்பது பூமியின் கண்ட மேலோட்டின் மீது இயற்கையாகக் காணப்படும் மூலக்கூறு ஆகும் என்பதோடு இது காற்று, நீர் மற்றும் நிலம் என்று அனைத்திலும் சுற்றுச்சூழலில் பரவிக் காணப்படுகிறது.
- இது அதன் கனிம வடிவத்தில் அதிக நச்சுத் தன்மை கொண்டது.
- குடிநீர் மற்றும் உணவு மூலமாக ஆர்சனிக் உடலில் உட்புகுவதால் புற்றுநோய் மற்றும் தோல் புண்கள் ஏற்படலாம்.



## நாசாவின் DSOC அமைப்பின் முதல் ஒளி மூலமான தரவுப் பரிமாற்றம்




- நாசாவின் விண்வெளி ஒளியிழைத் தகவல் தொடர்பு (DSOC) அமைப்பானது அதன் "முதல் ஒளி மூலம் வழியான" தரவுப் பரிமாற்றத்தினை மேற்கொண்டுள்ளது.
- இந்த லேசர் மூலமான விண்வெளி தகவல் தொடர்பு அமைப்பு ஆனது தரவுகளை 10 மில்லியன் மைல்களுக்கு லேசர் மூலம் வெற்றிகரமாக அனுப்பியது.
- இந்த தொலைவானது, பூமியில் இருந்து நிலவு அமைந்துள்ள தொலைவினை விட 40 மடங்கு அதிகமாகும்.
- எனவே, இது தொலைதூரத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒளியிழை சார்ந்த தகவல் தொடர்புகளின் செயல் விளக்கமாக மாறியது.
- சமீபத்தில் ஏவப்பட்ட சைக் என்ற விண்கலத்தில் DSOC பொருத்தப்பட்டது.
- சைக் ஆய்வுக் கலமானது, செவ்வாய் மற்றும் வியாழன் இடையே உள்ள முக்கிய குறுங் கோள் மண்டலத்தினை நோக்கிப் பயணிக்கிறது.

## அண்டத்திற்கு வெளியே அமைந்த கருந்துளையிலிருந்து முனைவாக்க உமிழ்வுகள்





- ❖ குவஹாத்தியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் மற்றும் இஸ்ரோ ஆராய்ச்சியாளர்கள் அண்டத்திற்கு வெளியே அமைந்த கருந்துளையில் ஊடுகதிர் முனைவாக்கத்தினை கண்டறிந்துள்ளனர்.
- ❖ ஊடுகதிர் (X-கதிர்) முனைவாக்கமானி எனப்படும் நுட்பத்தின் மூலம் பால்வெளி அண்டத்திற்கு அப்பால் இருக்கும் கருந்துளை மூலத்திலிருந்து முனைவாக்க உமிழ்வுகளை ஆராய்ச்சியாளர்கள் முதன்முறையாகக் கண்டறிந்துள்ளனர்.
- ❖ ஊடு கதிர் முனைவாக்கம் ஆனது, கருந்துளை மூலங்களின் திரளாக்கத் தன்மையைப் புரிந்து கொள்வதற்கான வழி முறையை வெளிப்படுத்துகிறது.
- ❖ கருந்துளைகளுக்கு அருகில் இருந்து கதிர்வீச்சு எங்கிருந்து வருகிறது என்பதைக் கண்டறிய இது ஒரு தனித்துவமான கண்காணிப்பு நுட்பமாகும்.
- ❖ LMC X-3 சூரியனை விட 10,000 மடங்கு சக்தி வாய்ந்த ஊடு கதிர்களை வெளியிடுகிறது.
- ❖ இந்த ஊடு கதிர்கள் கருந்துளைகளைச் சுற்றியுள்ள பொருட்களுடன், குறிப்பாக அவை சிதறி அவற்றுடன் தொடர்பு கொள்ளும்போது துருவமுனைவாக்க பண்புகளை (அச்சு மற்றும் கோணம்) மாற்றுகிறது.
- ❖ சீரற்ற பெருவிண்மீன் தொகுதி X-3 (LMC X-3) என்பது கருந்துளை மற்றும் சூரியனை விட அதிக வெப்பமான, பெரிய மற்றும் அதிக எடை கொண்ட ஒரு "சாதாரண" நட்சத்திரம் கொண்ட இரும விண்மீன் அமைப்பாகும்.
- ❖ இது பூமியிலிருந்து சுமார் 200,000 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள பால் வெளி அண்டத்தின் துணைக்கோள் மண்டலத்தில் அமைந்துள்ளது.


## தொலைதூரக் கோள்களின் வளிமண்டலத்தில் குவார்ட்ஸ் படிகங்கள்

- ❖ WASP-17b என்ற புறக்கோளின் உயர்மட்ட மேகங்களில் குவார்ட்ஸ் நுண் படிகங்கள் இருப்பதை வானியலாளர்கள் கண்டறிந்தனர்.
- ❖ WASP-17b என்பது நமது கிரகத்தில் இருந்து சுமார் 1,300 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள ஒரு "வெப்பமான வியாழன்" புறக்கோள் ஆகும்.

- புறக்கோள்களின் வளிமண்டலத்தில் சிலிக்கா துகள்கள் கண்டறியப்படுவது இது முதல் முறையாகும்.
- சிலிக்கேட்டுகள் சிலிக்கான் மற்றும் ஆக்ஸிஜன் நிறைந்த தாதுக்கள் ஆகும் என்ற நிலையில் அவை பூமி மற்றும் சந்திரனின் நிறையில் பெரும்பங்கினையும், சூரியக் குடும்பத்தில் உள்ள மற்ற பாறைப் பொருள்களில் பெரும்பங்கினையும் கொண்டு உள்ளன.
- அவை அண்டம் முழுவதும் அதிகளவில் காணப் படுகின்றன.
- ஆனால் புறக்கோள்கள் மற்றும் பழுப்பு நிறக் குறுங்கோள்களின் வளிமண்டலங்களில் இதுவரையில் கண்டறியப்பட்ட சிலிக்கேட் துகள்கள் ஒலிவின் மற்றும் பைராக்ஸீன் போன்ற மெக்னீசியம் நிறைந்த சிலிக்கேட்டுகளால் ஆனது.
- குவார்ட்ஸ் என்பது ஒரு தூய சிலிக்கான் டை ஆக்சைடு ஆகும்.




## பிரகாச மாறுநிலை ஆய்வு கருவி (BTSbot)




- ஒரு புதிய செயற்கை நுண்ணறிவு (AI) கருவி மற்றும் ஒரு முழு தானியங்கி செயல் முறையானது அதன் முதல் மீயொளிர் விண்மீன் வெடிப்பினை மிகவும் வெற்றிகரமாக கண்டறிந்து, அடையாளம் கண்டு, வகைப்படுத்தியுள்ளது.
- இக்கருவி SN2023tyk என்ற புதிய மீயொளிர் விண்மீன் வெடிப்பினைக் கண்டறிந்தது.

- இந்த செயற்கை நுண்ணறிவுக் கருவியானது BTSbot- பிரகாச மாறுநிலை ஆய்வு கருவி என அழைக்கப்படுகிறது.
- இதற்கு 16,000 வானியல் மூலங்களிலிருந்து பெறப்பட்ட 1.4 மில்லியனுக்கும் அதிகமான ஆய்வுப் படங்கள் கொண்டு பயிற்சியளிக்கப்பட்டது.

## லாக்பிட் 3.0


- சீனாவின் மிகப்பெரிய கடன் வழங்குநரான சீனாவின் தொழில்துறை மற்றும் வணிக வங்கியின் அமெரிக்கப் பிரிவானது சமீபத்தில் பணய தீநிரல் தாக்குதலால் பாதிக்கப் பட்டது.
- இந்தப் பணய தாக்குதலில் லாக்பிட் 3.0 என்ற பணய தீநிரல் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- லாக்பிட் 3.0 ஆனது தனது தீநிரல்களை மறை செயல்பாட்டு வலை தளத்தில் விற்பனை செய்யும் லாக்பிட் என்ற நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டது.
- லாக்பிட் 3.0 என்பது, 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை பதிவான அனைத்து தாக்குதல்களிலும் சுமார் 28 சதவிகித தாக்குதல்களுக்கு காரணமாக அமைந்த பணய தீநிரலின் மிகவும் பிரபலமான திரிபு ஆகும்.
- பணய தீநிரல் என்பது நமது கோப்புகளுக்கான அணுகலைத் தடுக்கிறது அல்லது தாக்குதலை தொடங்கியவர்கள் கோரும் தொகையைச் செலுத்தும் வரை முக்கியத் தரவுகளை வெளியிடுவதாக மிகவும் அச்சுறுத்தும் வகையிலான தீங்கிழைக்கும் ஒரு மென்பொருளாகும்.




## என்செலடஸ் துணைக்கோளில் ஹைட்ரஜன் சயனைடு

- சனிக்கோளின் பனி நிறைந்த ஒரு துணைக்கோளான என்செலடஸில் அமைந்த பெருங் கடல்களில் உயிரினங்களை உருவாக்குவதில் முக்கிய மூலக்கூறாக அமைந்த ஹைட்ரஜன் சயனைடு இருப்பதை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- என்செலடஸ் துணைக்கோளின் உறைந்த மேற்பரப்பிற்கு அடியில் உள்ள கடல்கள் முன்பு நம்பப் பட்டதை விட அதிக இரசாயன ஆற்றலைக் கொண்டிருக்கக் கூடும்.

- என்செலடஸின் மேற்பரப்பில் இருந்து வெளிப்படும் நீராவியில் மெத்தனால், ஈத்தேன் மற்றும் ஆக்ஸிஜனுடன் ஹைட்ரஜன் சயனைடு இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர்.
- சனிக் கோளின் 146 துணைக் கோளில் ஒன்றான என்செலடஸ், அதன் கட்டமைப்பு காரணமாக வானியலாளர்களுக்கு மிகவும் ஆர்வமூட்டும் ஒன்றாக உள்ளது.
- இது நீர் பனிக்கட்டியால் ஆன வெண்மையான, கோடுகள் நிறைந்த மேற்பரப்பைக் கொண்டுள்ளது.
- இந்த உறைந்த கண்ட மேலோட்டின் கீழ், துணைக் கோள் முழுவதும் பரவிக் காணப் படும் வெப்பமான, உப்பு நிறைந்த கடல் உள்ளது.
- இந்த வட்ட வடிவ துணைக் கோள் ஆனது, -200°C என்ற மேற்பரப்பு வெப்பநிலையுடன் வெறும் 500 கிமீ அகலம் கொண்டது.
- ஆனால் அதன் உட்புற அமைப்புகள் பல ஆற்றல் மற்றும் வெப்ப மூலங்களைக் கொண்டுள்ளன.





## க்ருத்ரிம் செயற்கை நுண்ணறிவு

- ஓலா நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியானவர் க்ருத்ரிம் (சமஸ்கிருதத்தில் செயற்கை என்று பொருள்) என்ற தீர்வினைச் சமீபத்தில் வெளியிட்டார்.
- இது "இந்தியாவின் முதல் பல் கட்டமைப்பு செயற்கை நுண்ணறிவு" தீர்வாகவும் கூறப் படுகிறது.
- இந்த இயங்குதளம் ஆனது ChatGPT உடன் முற்றிலும் ஒத்திருக்கிறது.
- பல்வேறு இந்திய மொழிகளில் GPT-4 விட க்ருத்ரிம் செயற்கை நுண்ணறிவு சிறந்தது.
- இதனால் 20க்கும் மேற்பட்ட இந்திய மொழிகளைப் புரிந்து கொள்ள முடியும் மற்றும் சுமார் 10 மொழிகளில் பதிலை உருவாக்க முடியும்.
- இதில் மராத்தி, இந்தி, வங்காளம், தமிழ், கன்னடம், தெலுங்கு, ஒடியா, குஜராத்தி மற்றும் மலையாளம் ஆகியவை அடங்கும்.
- இது அடிப்படை க்ருத்ரிம் மாதிரி, மற்றும் மிகவும் திறம் வாய்ந்த க்ருத்ரிம் ப்ரோ என இரண்டு வகைப்பாடுகளில் கிடைக்கப் பெறும்.





## பாறைகளில் காணப்படும் பெரிய அளவிலான படிவு இடைவெளி




- அறிவியலாளர்கள் "பாறைகளில் காணப்படும் பெரிய அளவிலான படிவு இடைவெளி" குறித்த மர்மத்தைச் சமீபத்தில் வெளிக்கொணர்ந்துள்ளனர்.
- இது பூமியின் கண்ட மேலோட்டில் பெரிய பகுதிகள் புவியியல் பதிவிலிருந்து விடுபட்ட ஒரு நிகழ்வு ஆகும்.
- இந்த இடைவெளியானது, கோளின் பெரும்பகுதி பனியால் மூடப்பட்டிருந்த "பனிப் பந்து பூமி" என்று அழைக்கப்படும் ஒரு காலக் கட்டத்தில் நிகழ்ந்த கடுமையான பனிப் பாறை அரிப்பிலிருந்து தோன்றியது.
- இந்தப் பண்டைய காலத்தில் ஏற்பட்ட பனிப்பாறை அரிப்பு செயல்முறையானது, வண்டல் படிவில் ஒரு இடைவெளியை உருவாக்கி, சில குறிப்பிட்ட அளவிலான பாறைகளை நீக்குவதற்கு வழிவகுத்தது.
- இந்தப் புவியியல் சார்ந்த வினோத நிகழ்வானது, 1869 ஆம் ஆண்டில் அரிசோனாவில் உள்ள கிராண்ட் கேன்யான் பகுதியில் முதன்முதலில் காணப்பட்டது.
- உலகளவில், பனிப்பாறை சார்ந்த செயல்பாடுகள் காரணமாக மிக வியக்கத்தக்க வகையில் 3-5 கிலோமீட்டர் அளவிலான பாறைகள் அரிக்கப்பட்டதாக சமீபத்திய ஒரு ஆய்வு மதிப்பிட்டுள்ளது.

- இது கேம்ப்ரியனுக்கு முந்தைய காலத்தினைச் சேர்ந்த ஒரு பில்லியன் கன கிலோ மீட்டர் அளவிலான பொருட்கள் பதிவுகளில் இருந்து காணாமல் போக வழிவகுத்தது.
- ஃபானெரோசோயிக் சகாப்தத்திற்கு முன்பான காலத்தில் முன்னர் நம்பப்பட்டதை விட மாபெரும் அளவிலான அரிப்பு ஏற்பட்டது.
- ஃபானெரோசோயிக் என்பது புவியின் புவியியல் கால அளவீட்டில் உள்ள நான்கு புவியியல் யுகங்களில் உள்ள தற்போதைய மற்றும் சமீபத்திய சகாப்தம் ஆகும்.
- இது 538.8 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு இருந்து தற்போது வரையிலான காலக் கட்டத்தை உள்ளடக்கியது.

## TEMPO செயற்கைக்கோள்




- TEMPO என்பது புவி நிலை சுற்றுப்பாதையில் உள்ள நாசாவின் முதலாவது புவிக் கண்காணிப்பு செயற்கைக்கோள் ஆகும்.
- TEMPO செயற்கை கோள் ஆனது, வளிமண்டல மாசுபாடுகள் குறித்த ஒரு மணி நேர அடிப்படையிலான தகவல்களை வழங்குவதோடு இது காற்றுத் தரம் குறித்த விரிவான தகவல்களையும் வழங்குகிறது.
- இது தென் கொரியாவின் GEMS மற்றும் ஐரோப்பிய விண்வெளி முகமையின் எதிர்கால செயற்கைக் கோளுடன் கூடிய மெய்நிகர் செயற்கைக் கோள் தொகுப்பின் ஒரு பகுதியாக மாறும்.
- எனவே, இது வடக்கு அரைக்கோளத்தில் பரந்த அளவில் காற்று மாசு கண்காணிப்பை மேற்கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அவசர கால (நெரிசல் மிக்க நேரங்கள்) மாசுபாடு, மேம்படுத்தப்பட்ட காற்றுத் தர எச்சரிக்கை அமைப்புகளின் திறன், ஓசோனில் மின்னல் நிகழ்வுகளின் விளைவுகள், காட்டுத் தீ மற்றும் எரிமலைகளால் ஏற்படும் மாசுபாட்டின் தாக்கம் மற்றும் உரப் பயன்பாட்டினால் ஏற்படும் விளைவுகள் உள்ளிட்ட மாசுபாடுகளை பகுப்பாய்வு செய்ய TEMPO செயற்கைக்கோள் உதவும்.


## செவ்வாய்க் கிரகத்தில் எரிமலை செயல்பாடுகள்

- சமீபத்திய ஆய்வு ஒன்று, செவ்வாய்க் கிரகத்தில் சுமார் 40க்கும் மேற்பட்ட எரிமலை நிகழ்வுகள் நிகழ்வதை வெளிப்படுத்தி ஆவணப்படுத்தியுள்ளது.

- பாறைக் குழம்புகள் அடங்கிய மிகப்பெரிய ஓட்டங்களுள் ஒன்று, அதபாஸ்கா வால்ஸ் என்ற பள்ளத்தாக்கில் ஏறக்குறைய 1,000 கன மைல் அளவிற்கு எரிமலைப் பாறைகளை நிரப்புகிறது .
- இந்த எரிமலைச் செயல்பாடு ஆனது, கடந்த 120 மில்லியன் ஆண்டுகளுக்குள் நிகழ்ந்து இருக்கலாம் என்று கூறப்படுகிறது.
- செவ்வாய்க் கிரகத்தில் இதுவரை எரிமலைச் செயல்பாடு எதுவும் பதிவாகவில்லை.
- ஆனால் "எலிசியம் பிளானிஷியா எரிமலை சார்ந்த செயல்பாடுகள் ரீதியாக முன்பு நினைத்ததை விட மிகவும் தீவிரமாக செயலில் இருந்தது மற்றும் இன்றும் கூட எரிமலையாக செயலில் இருக்கக்கூடும்.
- எலிசியம் பிளானிஷியா என்பது கிரகத்தின் இளம் (சமீபத்தில் செயல்பாடுகளைத் தொடங்கிய) எரிமலை நிலப்பரப்பு ஆகும்.



## அசாதாரண நைட்ரஜன் - 9 உட்கரு





- நிலையாக பிணைத்திருக்கக்கூடியதை விட ஐந்து கூடுதல் புரோட்டான்களைக் கொண்டுள்ள அதி-அரிய நைட்ரஜன் வடிவத்தின் முதல் தோற்றத்தினை அறிவியலாளர்கள் பதிவு செய்துள்ளனர்.
- நைட்ரஜன்-9 எனப்படும் புதிய ஐசோடோப்பின் நிலையை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

- நைட்ரஜன்-9 ஐசோடோப்பின் அணுக்கள் ஏழு புரோட்டான்கள் மற்றும் இரண்டு நியூட்ரான்களால் வகைப்படுத்தப்படுகின்ற நிலையில் – இது வழக்கத்திற்கு மாறாக அமைந்த அதிக எண்ணிக்கையிலான புரோட்டான் மற்றும் நியூட்ரான் விகிதமாகும்.
- பொதுவாக, நைட்ரஜன் ஏழு புரோட்டான்கள் மற்றும் ஏழு நியூட்ரான்களுடன் நைட்ரஜன்-14 ஐசோடோப்பாக இருக்கும்.
- இந்த ஏற்றத்தாழ்வு ஆனது ஐசோடோப்பின் நிலைத்தன்மையின் மீது ஒரு முக்கியமான விளைவைக் கொண்டிருக்கிறது என்பதோடு இது அதன் சிதைவு செயல் முறைகள் மற்றும் ஒட்டுமொத்தச் செயல்பாட்டினையும் பாதிக்கிறது.
- அதிக புரோட்டான் உள்ளடக்கம் ஆனது நைட்ரஜன்-9 அணுக்களை வழக்கமான நிலைத் தன்மை வரம்புகளுக்கு அப்பால் கொண்டு செல்கிறது .
- மொத்தம் 118 தனிமங்கள் உள்ள நிலையில் அதில் ஒவ்வொரு தனிமமும் வெவ்வேறு எண்ணிக்கையிலான எலக்ட்ரான்கள், புரோட்டான்கள் மற்றும் நியூட்ரான்களின் அணுக்களால் தனித்துவமானது.
- ஐசோடோப்புகள் நியூட்ரான்களின் எண்ணிக்கையில் மட்டும் மாறுபடுகின்ற, கொடுக்கப்பட்ட ஒரு தனிமத்தின் அணுக்கள் ஆகும்.

## பொருட்களின் ஆய்விற்கான விளக்க வரைபட வலையமைப்புகள்


- கூகுள் நிறுவனத்தின் டீப் மைண்ட் மற்றும் லாரன்ஸ் பெர்க்லி தேசிய ஆய்வகத்தின் ஆராய்ச்சியாளர்கள் சமீபத்தில் பொருட்களின் ஆய்விற்கான விளக்க வரைபட வலையமைப்புகளை (GNoME) அறிமுகப்படுத்தினர்.
- இது புதிய பொருட்களைக் கண்டறியவும், பொருளின் நிலைத் தன்மையைக் கணிக்கவும் உதவும் ஒரு செயற்கை நுண்ணறிவு கருவியாகும்.
- இதுவரை, GNOME ஆனது 380,000 நிலையான பொருட்கள் உட்பட 2.2 மில்லியன் புதிய பொருட்களைக் கண்டுபிடித்துள்ளது.
- இது ஏறக்குறைய 800 ஆண்டு கால அறிவுத் தகவலுக்குச் சமம் ஆகும்.



## பூமியின் முதன்மை E அடுக்கு


- பூமியின் மையத்தின் வெளிப்புறத்தில் அமைந்துள்ள புதிய புதிரான அடுக்காக மேற்பரப்பு நீர் புவிக் கிரகத்திற்குள் ஆழமாக ஊடுருவியதன் விளைவாக உருவான முதன்மை E அடுக்கானது உள்ளது.

- மேற்பரப்பு நீரைச் சுமந்து செல்லும் கண்டத்தட்டுகள் பல பில்லியன் ஆண்டுகளாக பூமிக்குள் ஆழமாக இதனைக் கொண்டு சென்றுள்ளன.
- உட்புகுந்த நீரானது அதிக அழுத்தத்தின் கீழ் கருவ அடுக்கின் பொருட்களுடன் வேதியியல் ரீதியாக வினைபுரிகிறது.
- இந்த வினையானது வெளிப்புற மையத்தில் ஹைட்ரஜன் நிறைந்த, சிலிக்கான் -குறைந்த அடுக்கு உருவாக வழிவகுக்கிறது.
- இந்தச் செயல்பாட்டின் மூலம் உருவாகும் சிலிக்கா படிகங்கள் கவச அடுக்குடன் இணைந்து கலந்து, அதன் ஒட்டு மொத்த இயைபைப் பாதிக்கிறது.
- திரவ உலோக அடுக்கில் ஏற்படும் இந்த மாற்றங்கள் அதன் அடர்த்தி குறைவதற்கும் நில அதிர்வுப் பண்புகளை மாற்றுவதற்கும் காரணமாக இருக்கலாம்.




## அபோபிஸுக்கான திட்டம்

- பூமியின் சுற்றுப்பாதைக்கு அருகில் ‘ஒழுங்கற்ற நிலையின் கடவுள்’ என்ற சிறுகோள் வரத் தொடங்கியதால், அந்த சிறுகோளைப் பற்றி ஆய்வு செய்யும் திட்டத்தினை நாசா மீண்டும் தொடங்கியுள்ளது.
- "ஒழுங்கற்ற நிலையின் கடவுள்" என்றும் அழைக்கப்படும் அபோபிஸ் என்ற இந்த சிறுகோள் 2029 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 ஆம் தேதி அன்று பூமிக்கு அருகில் பயணிக்க வாய்ப்புள்ளதாகவும், மேலும் பூமிக்கு 20,000 மைல்கள் தொலைவில் இருக்கும் என்றும் நாசா குறிப்பிட்டுள்ளது.
- கிட்டத்தட்ட 370 யார்டு அளவுள்ள இந்த விண்வெளிப் பாறையானது ஒவ்வொரு 7,500 வருடங்களுக்கு ஒருமுறை பூமியை நெருங்குகிறது.
- 2175 மற்றும் 2195 ஆண்டுகளுக்கு இடையில் பூமியைத் தாக்க 1/2700 வாய்ப்புகளைக் கொண்ட பென்னு சிறுகோள் மிகவும் முக்கியமானதாகும்.
- பென்னுவில் இருந்து சேகரிக்கப்பட்ட தூசி மற்றும் பாறை மாதிரிகள் சமீபத்தில் நாசாவால் பூமிக்கு கொண்டு வரப்பட்டது.



# சுற்றுச்சூழல் செய்திகள்

## பர்தா வனவிலங்கு சரணாலயம்

- பர்தா வனவிலங்குச் சரணாலயமானது (BWLS) கிர் தேசியப் பூங்கா மற்றும் சரணாலயத்திற்கு அடுத்தபடியாக இந்தியாவில் ஆசியச் சிங்கங்களின் இரண்டாவது வாழிடமாக மாற உள்ளது.
- குஜராத் மாநில வனத் துறையானது "சிங்க வளங்காப்பு @ 2047" திட்டத்தின் ஒரு பகுதியாக பர்தா வனவிலங்குச் சரணாலயத்தினைச் சிங்கங்களின் இரண்டாவது வாழிடமாக மாற்றுவதற்கான தனது திட்டத்தை முன்வைத்துள்ளது.
- சிங்க வளங்காப்புத் திட்டம் என்பது ஆசியச் சிங்கம் மற்றும் அதன் வாழ்விடத்தைப் பாதுகாப்பதற்கும் அவற்றின் வளத்தினைக் காப்பதற்கும் 2021 ஆம் ஆண்டில் இந்திய அரசால் தொடங்கப்பட்ட ஒரு முன்னெடுப்பு ஆகும்.
- இது போர்பந்தரிலிருந்து தோராயமாக 15 கிலோமீட்டர் தொலைவிலும், குஜராத்தின் கிர் வன தேசியப் பூங்காவிற்கு மேற்கே 100 கிலோமீட்டர் தொலைவிலும் அமைந்து உள்ளது.
- 1979 ஆம் ஆண்டு வனவிலங்குச் சரணாலயமாக நிறுவப்பட்டதற்கு முன்பு, பர்தா வனவிலங்குச் சரணாலயமானது போர்பந்தர் மற்றும் ஜாம்நகருக்கான தனியார் வளம் காப்பகமாக இருந்தது.



## ஐரோப்பாவில் அச்சுறுத்தல் நிலையில் உள்ள மகரந்தச் சேர்க்கை இனங்களுக்கான IUCN அமைப்பின் விரிவான வளங்காப்பு செயல் திட்டங்கள்




- ❖ 2023 ஆம் ஆண்டு மே மாதத்தில், சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியம் (IUCN) ஆனது, IUCN இனங்கள் உயிர்வாழ்தல் ஆணையம், முதுகெலும்பி சாரா உயிரினங்கள் பாதுகாப்புக் குழு, வட்டமிடும் ஈக்கள் (ஹோவர்ஃபிளை) இன நிபுணர் குழு மற்றும் பக்லைஃப் அமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து, ஐரோப்பிய ஒன்றியத்தில் அச்சுறுத்தல் நிலையில் உள்ள மகரந்தச் சேர்க்கை இனங்களின் வளங்காப்புத் தேவைகள் மற்றும் முன்னுரிமைகளைக் கோடிட்டுக் காட்டும் மூன்று செயல் திட்டங்களை இறுதி செய்துள்ளது.
- ❖ இந்த செயல் திட்டங்கள் ஆனது, 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தொடங்கப்பட்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவி பெறும் திட்டத்தின் கட்டமைப்பிற்குள் உருவாக்கப் பட்டன.
- ❖ "லாரல் வன மண்டலத்தின் கேனரியன் தீவுகளைச் சேர்ந்த மகரந்தச் சேர்க்கை இனங்கள் – வளங்காப்புத் திட்டம் 2023-2028" என்ற ஆரம்பச் செயல் திட்டம் ஆனது, பண்டைய லாரல் வன வாழ்விடத்தில் வாழ்கின்ற நான்கு பூச்சி இனங்கள் – இரண்டு பட்டாம்பூச்சிகள், ஒரு தேனீ மற்றும் ஒரு ஹோவர்ஃபிளை – மீது கவனம் செலுத்துகிறது.
- ❖ "ஐரோப்பாவில் உள்ள டீசல் செடிகளை சார்ந்த தேனீக்கள் – வளங்காப்பு செயல் திட்டம் 2023-2030" என்ற இரண்டாவது செயல் திட்டம் ஆனது டீசல் செடிகளைச் சார்ந்த காட்டு தேனீக்கள் எதிர்கொள்ளும் சவால்களை எடுத்துக் காட்டுகிறது.
- ❖ இறுதிச் செயல்திட்டம் ஆனது முதுமையான மரங்கள் மற்றும் ஈரமான, சிதையும் மரங்களைச் சார்ந்துள்ள ஆறு ஹோவர்ஃபிளை இனங்கள் மீது கவனம் செலுத்துகிறது.

- இந்த சப்ராக்ஸிலிக் பூச்சிகள், முக்கிய மகரந்தச் சேர்க்கை இனங்களாகவும், ஊட்டச் சத்து மறுசுழற்சி, பூச்சிக்கொல்லி மற்றும் சுற்றுச்சூழல் ஆரோக்கியத்தின் குறிகாட்டிகளாகவும் செயல்படுகின்றன.
- "ஐரோப்பாவில் உள்ள முதுமையான மரங்களைச் சார்ந்த ஹோவர்ஃபிளை இனங்கள் – வளங்காப்பு செயல் திட்டம் 2023-2030", சிதைவுற்ற மரம் மற்றும் பழங்கால மரங்களைச் சார்ந்திருக்கும் மகரந்தச் சேர்க்கை பூச்சி இனங்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு வனவியல் நடைமுறைகளின் முக்கியத்துவத்தை வெகுவாக வலியுறுத்துகிறது.

## 2023 ஆம் ஆண்டில் இந்தியாவில் உமிழ்வு நிலை




- பருவநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் கட்டமைப்பு உடன்படிக்கைக்கான மூன்றாவது தேசிய அறிக்கை' என்ற அரசாங்க அறிக்கை வெளியிடப் பட்டுள்ளது.
- பசுமை இல்ல வாயு உமிழ்வில் பொருளாதார வளர்ச்சி கொண்டுள்ள தொடர்பினை குறைப்பதில் நாட்டின் நடவடிக்கையில் உள்ள கணிசமான முன்னேற்றத்தை இது குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- இந்திய நாடானது, 2005 முதல் 2019 ஆம் ஆண்டு வரையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியிலான உமிழ்வுச் செறிவில் 33% குறைத்துள்ள நிலையில் இது 11 ஆண்டுகளுக்கு முன்னதாகவே இலக்குகளை தாண்டியது என்பதைக் குறிக்கிறது.
- வருடாந்திர மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 7% ஆக இருந்த போதிலும், உமிழ்வுகள் ஆண்டிற்கு 4% மட்டுமே உயர்ந்துள்ளது.
- உலக மக்கள்தொகையில் 17% பங்கினைக் கொண்டுள்ள இந்தியா, உலகளாவிய கார்பன் உமிழ்வு 4 சதவீதத்திற்கும் குறைவான பங்கையே கொண்டுள்ளது.
- அதே காலகட்டத்தில் 1.97 பில்லியன் டன் கார்பன் டை ஆக்சைடுக்கு இணையான கூடுதல் கார்பன் பிடிப்பு பகுதிகளை இந்தியா உருவாக்கியுள்ளது.
- 2005 ஆம் ஆண்டின் அளவுடன் ஒப்பிட்டு, 2030 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியிலான உமிழ்வு தீவிரத்தை 45% குறைக்கும் இலக்கை அடைவதற்கான ஒரு பாதையில் இந்தியா உள்ளது.

- எரிசக்தித் துறையானது மானுடவியல் சார்ந்த உமிழ்வுகளுக்கு அதிகப் பங்கினை கொண்டுள்ள (75.81%) நிலையில், அதைத் தொடர்ந்து வேளாண்மை (13.44%), தொழில் துறைச் செயல்முறைகள் மற்றும் தயாரிப்புப் பொருட்கள் பயன்பாடு (8.41%), மற்றும் கழிவுகள் (2.34%) ஆகியவை அதிகப் பங்கினைக் கொண்டுள்ளன.
- நிலப் பயன்பாடு, நிலப் பயன்பாட்டு மாற்றம் மற்றும் வனவியல் (LULUCF) துறையானது குறிப்பிடத் தக்க வகையில் 4,85,472 ஜிகா டன் கார்பன் டை ஆக்சைடுக்குச் சமமான (GgCO2e) உமிழ்வை நீக்கியுள்ளது.
- 2028 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் வருடாந்திர பருவநிலைப் பேச்சு வார்த்தையை இந்தியா நடத்த உள்ளது.
- 2019 ஆம் ஆண்டு பசுமை இல்ல வாயு இருப்புக்களுடன் தனது மூன்றாவது தேசிய அறிக்கையினைச் சமர்ப்பித்ததன் மூலம் வளர்ந்து வரும் நாடுகளில் இந்தியா தனித்து நிற்கிறது.
- சீனா (2014), பிரேசில் (2016), தென்னாப்பிரிக்கா (2017) மற்றும் சவுதி அரேபியா (2012) போன்ற பிற நாடுகளுடன் ஒப்பிடும் போது இது மிகவும் சமீபத்திய தரவைக் குறிக்கிறது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் புதைபடிவ எரிபொருள் சார்ந்த எரிசக்தி ஆதாரங்களில் இருந்து 50% வரை நிறுவப்பட்ட ஒட்டுமொத்த மின்சக்தி திறனை அடைய இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது.
- 2070 ஆம் ஆண்டிற்குள் நிகர சுழிய உமிழ்வு கொண்ட பொருளாதாரமாக மாற இந்தியா வெகுவாக உறுதி பூண்டுள்ளதோடு, இது நீண்ட கால நிலைத்தன்மைக்கான அதன் அர்ப்பணிப்பை எடுத்துக் காட்டுகிறது.

## தாமோ புலிகள் காப்பகம்





- 2,300 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் நாட்டிலேயே மிகப்பெரிய புலிகள் காப்பகத்தை மத்தியப் பிரதேசம் பெற உள்ளது.
- மத்தியப் பிரதேசத்தில் உள்ள இரண்டு வனவிலங்கு சரணாலயங்களை இணைக்கும் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- நௌராதேஹி வனவிலங்கு சரணாலயம் மற்றும் ராணி துர்காவதி வனவிலங்கு சரணாலயம் ஆகியவை அந்த இரண்டு சரணாலயங்கள் ஆகும்.

## அங்கீகரிக்கப்பட்ட மற்றும் ஈடு செய்யும் காடு வளர்ப்பு (ACA) திட்டம்





- மத்தியப் பிரதேசத்தில் ஜமுனா திறந்தவெளி சுரங்கத் திட்டத்தின் (OCP) வெற்றியானது, இந்தத் திட்டத்தின் வெற்றிக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.
- காடு வளர்ப்பிற்காக பழைய நிலக்கரி வயல்களை மீட்டெடுப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இயற்கை வளம் குறைவதால், ஜூன் 2014 ஆம் ஆண்டு அது தனது திறந்தவெளி சுரங்க நடவடிக்கைகளை நிறுத்தியது.
- சமீபத்திய செயற்கைக்கோள் தரவுகளின்படி, 88.07% சுரங்கப் பகுதியானது வெற்றிகரமாக மீட்கப்பட்டுள்ளது.
- இழப்பீட்டுக் காடு வளர்ப்பு என்பது வன நிலத்தை வனம் அல்லாத நோக்கங்களுக்காக மாற்றுவதுடன் அதற்குச் சமமான நிலத்தில் காடு வளர்ப்பதை உறுதி செய்வதற்கான ஒரு திட்டமாகும்.
- இது 2016 ஆம் ஆண்டின் இழப்பீட்டுக் காடு வளர்ப்பு நிதிச் சட்டத்தின் கீழ் ஒரு சட்டப்பூர்வ தேவையாக உள்ளது.

## பாரதத்திற்கான "உயிரிப் பார்வை"



- புதுடெல்லியில் நடைபெற்ற உயிரித் தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு மன்ற (BRIC) சங்கத்தின் தொடக்க நிகழ்விற்கான கூட்டத்தில், இந்தியாவிற்கான "உயிர் பார்வை"என்பதினை வரையறுக்க வேண்டியதன் அவசியமானது வலியுறுத்தப் பட்டது.
- உயிரித் தொழில்நுட்பத்தின் தாக்கத்தினை அதிகரிக்க வேண்டும் என்பதற்காக 14 சிறந்த அறிவியல் தன்னாட்சி நிறுவனங்களை ஒரு ஒருங்கிணைந்தத் தளத்தின் கீழ் BRIC கொண்டுவருகிறது.
- இது அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் உயிரித் தொழில்நுட்பத் துறையின் (DBT) கீழ் இயங்கும் ஒரு உச்ச பட்ச தன்னாட்சிச் சங்கமாகும்.
- இக்கூட்டத்தில் பூஜ்ஜிய கழிவுகளுக்கான பசுமையான சுத்தமான வாழ்க்கை முறையினை வளாகத்திற்குள் கொண்டு வருவதற்கான திட்டமும் தொடங்கப்பட்டது.
- iBric (BRIC அமைப்பின் நிறுவனங்கள்) அமைப்பு 6வது 'R'- "ஆராய்ச்சி நுண்ணறிவு" மூலம் 5 R பூஜ்ஜியக் கழிவுகளை வலுப்படுத்தும்.
- 5 Rகள் என்பது 'மறுத்தல், குறைத்தல், மறுபயன்பாடு, மறுபயன்பாடு செய்தல், மறுசுழற்சி செய்தல்'ஆகியனவாகும்.
- இந்த முயற்சியானது சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முறை என்ற திட்டத்தின் இயக்கத்துடன் ஒத்துப் போகிறது.


## "மியாவாக்கி" தோட்ட வளர்ப்பு முறை




- கோல் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் துணை நிறுவனமான தென்கிழக்கு நிலக்கரி தளங்கள் லிமிடெட் (SECL) அதன் செயல்பாட்டுப் பகுதிகளில் முதன்முறையாக மியாவாக்கி முறையைச் செயல்படுத்த உள்ளது.
- இந்த முன்னெடுப்பு ஆனது, இந்தியாவின் மிகப்பெரிய நிலக்கரிச் சுரங்கமான சத்தீஸ்கரின் கெவ்ரா சுரங்கத்தைச் சுற்றிலும் பசுமைப் பரப்பை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- கெவ்ரா மாபெரும் நிலக்கரி உற்பத்தி திட்டம் ஆனது, சமீபத்தில் 50 மில்லியன் டன் நிலக்கரி உற்பத்தியை எட்டிய நாட்டின் முதல் சுரங்கம் ஆக மாறியது.

- மியாவாக்கி என்பது காடு வளர்ப்புத் திட்டத்திற்காக நகர்ப்புறங்களில் ஒரு சிறிய காடுகளை உருவாக்கும் ஒரு முன்னெடுப்பு ஆகும்.
- ஜப்பானியத் தாவரவியலாளர் அகிரா மியாவாக்கியின் நினைவாக இந்த முறைக்கு இப்பெயரிடப்பட்டது.
- இந்த முறையில் ஒவ்வொரு சதுர மீட்டருக்கும் 2 முதல் 4 என்ற அளவில் வெவ்வேறு வகையான உள்நாட்டு மரங்கள் நடப்படும்.
- இந்த முறையில், மரங்கள் சுயச் சார்புடையதாக உள்ளன என்பதோடு வழக்கமான உரம் மற்றும் நீர்ப்பாசனம் இதற்கு தேவையில்லை.
- அவை 3 ஆண்டுகளில் அதன் முழு உயரம் வரை வளரும்.

## இந்தியாவின் நிலத்தடி நீரில் ஆர்சனிக் மற்றும் ஃபுளூரைடு மாசுபாடு





- இந்தியாவின் 25 மாநிலங்களில் உள்ள 230 மாவட்டங்களின் நிலத்தடி நீரில் ஆர்சனிக் மற்றும் 27 மாநிலங்களில் உள்ள 469 மாவட்டங்களின் நிலத்தடி நீரில் ஃபுளூரைடு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.
- மத்திய நிலத்தடி நீர் வாரியத்தால் (CGWB) தெரிவிக்கப்பட்ட இந்த நிலத்தடி நீர் மாசுபாடு ஆனது, பெரும்பாலும் புவியியல் சார்ந்த இயல்புடையது என்பதோடு இதில் பல ஆண்டுகளாக குறிப்பிடத்தக்க மாற்றம் எதுவும் பதிவாகவில்லை.
- இந்த மாசுபாடு ஆனது முதன்மையாக புவியியல் இயக்கம் சார்ந்ததாகும் என்ற நிலையில் இவை இயற்கையாகவே பாறை அல்லது மண் கட்டமைப்புகளில் உள்ளதாகவும், இவை பல்வேறு வேதிச் செயல்முறைகள் மூலம் நிலத்தடி நீரில் நுழைவதாகவும் கண்டறியப் பட்டுள்ளது.
- ஜல் சக்தி அமைச்சகத்தின் கீழ் உள்ள மத்திய நிலத்தடி நீர் வாரியம் ஆனது, நிலத்தடி நீரில் ஆர்சனிக் மற்றும் ஃபுளூரைடு ஆகியவற்றின் மாசுபாடு உட்பட நிலத்தடி நீரின் தரத்தைத் தொடர்ந்து கண்காணித்து மதிப்பீடு செய்கிறது.
- CGWB மற்றும் இந்தியப் புவியியல் ஆய்வு நிறுவனங்களுக்கு இடையேயான ஒரு சமீபத்தியப் புரிந்துணர்வு ஒப்பந்தமானது நிலத்தடி நீர் மாசுபாடு பற்றிய ஆய்வுகளை இலக்காக வைத்துள்ளது.

- பஞ்சாப், ஹரியானா, ஆந்திரப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், சத்தீஸ்கர், ஜார்க்கண்ட், பீகார் மற்றும் அசாம் ஆகிய எட்டு மாநிலங்களின் நிலத்தடி நீரில் ஆர்சனிக் மற்றும் ஃபுளூரைடு மாசுபாடு உள்ளது.

## இந்தியா 2023: தீவிர வானிலை நிகழ்வுகளின் மதிப்பீடு

- இது டவுன் டு எர்த் (DTE) இதழ் மற்றும் அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் ஆகியவற்றின் அறிக்கையாகும்.
- 33 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் 92 நாட்களில் 85 நாட்களில் தீவிர வானிலை நிகழ்வுகள் ஏற்பட்ட நிலையில், இதில் மகாராஷ்டிரா மற்றும் ராஜஸ்தான் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன.
- மத்தியப் பிரதேசம், கிட்டத்தட்ட ஒவ்வொரு இரண்டாவது நாளிலும் குறுகிய கால இடைவெளியில் தீவிர காலநிலை நிகழ்வுகளை அனுபவித்தது.
- பீகாரில் அதிகபட்சமாக 642 பேரும், இமாச்சலப் பிரதேசம் (365 இறப்புகள்) மற்றும் உத்தரப் பிரதேசம் (341 இறப்புகள்) ஆகிய மாநிலங்கள் அடுத்தடுத்து மனித இறப்புகளைப் பதிவு செய்துள்ளன.
- இமாச்சலப் பிரதேசத்திலும் அதிக அளவில் சேதமடைந்த வீடுகள் (15,407) பதிவாகி உள்ளன.
- பஞ்சாப் மாநிலம் 63,649 கால்நடைகள் இறப்புடன், மிக அதிகமான விலங்குகளின் உயிரிழப்புகளைக் கண்டது.



## UNFCCC COP 28 உச்சி மாநாடு


- இது ஐக்கிய அரபு அமீரகத்தால் துபாயில் நடத்தப்பட்டது.
- இது 2023 ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்ற மாநாடு அல்லது காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஒப்பந்த கட்டமைப்பின் (UNFCCC) உறுப்பினர் நாடுகளின் மாநாடு ஆகும்.
- ஐக்கிய அரபு அமீரகத்தின் சுல்தான் அல் ஜாபர் இதன் தலைவராக நியமிக்கப்பட்டார்
- 1992 ஆம் ஆண்டில் எட்டப்பட்ட முதல் ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை ஒப்பந்தத்தில் இருந்து இது ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது.
- "உறுப்பினர் நாடுகள்" என்பவை 1992 ஆம் ஆண்டில் அசல் ஐ.நா. காலநிலை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாடுகள் ஆகும்.
- 2015 ஆம் ஆண்டின் பாரீஸ் ஒப்பந்தமானது உலக சராசரி வெப்பநிலை உயர்வை 2 டிகிரி செல்சியஸுக்குக் கீழே வைத்திருக்கவும், தொழில்துறை முன்னேற்றத்திற்கு முந்தைய அளவை விட 1.5 டிகிரி செல்சியஸ் அளவைத் தாண்டாமல் கட்டுப்படுத்தவும் முயற்சிக்கிறது.
- COP மாநாட்டின் 33வது பதிப்பை 2028 ஆம் ஆண்டில் இந்தியாவில் நடத்த இந்தியா முன்வந்துள்ளது.
- கார்பன் மடுவை உருவாக்குவதற்கான வணிக ரீதியான முயற்சியான "கிரீன் கிரெடிட் முன்முயற்சியையும்" இது ஆதரித்தது.
- COP28 ஆனது பொது சுகாதாரத்தில் காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை விவாதிக்கும் முதல் COP ஆகும்.





## இந்தியாவில் ஆரம்பகால சீமைச் சுண்ணாம்புத் தன்மை உடைய (புவியியல் கால அளவின் ஒரு வயது) சுறாமீன் புதைபடிவங்கள்

- இந்தியாவின் முதல் ஆரம்பகால சீமைச் சுண்ணாம்புத் தன்மை உடைய சுறாமீனின் புதைபடிவங்கள் ராஜஸ்தானின் ஜெய்சால்மர் படுகையில் ஹபூர் பாறை அடுக்கமைவில் கண்டுபிடிக்கப் பட்டன.
- இவை சுமார் 115 மில்லியன் ஆண்டுகளுக்கு முந்தையவை ஆகும்.
- இது ஏற்கனவே இருந்த பழைய உயிரினங்கள் காணாமல் போனது பற்றியும் புதிய உயிரினங்களின் தோற்றம் குறித்தும் குறிப்பிடுவதோடு, இது சுறாக்களுக்கு என்று ஒரு உருமாறும் சகாப்தமாகவும் இருந்தது.

- ❖ தற்போதைய ஆய்வானது இந்தப் புதிய பரிமாணங்களை அறிமுகப்படுத்துவதோடு, இந்தியாவில் முதல் ஆரம்பகால சீமைச் சுண்ணாம்புத் தன்மை உடைய சுறாக்களின் வரிசையினை வெளியிடுகிறது.




**A23a**




- ❖ இது உலகின் மிகப்பெரிய பனிப்பாறையாகும்.
- ❖ இது 1986 ஆம் ஆண்டில் மேற்கு அண்டார்டிகாவில் உள்ள ஃபில்ச்னர்-ரோன் பனிப் பாறை திட்டில் இருந்து உருவானது.

- 30 ஆண்டுகளுக்கும் மேலாக பெரும்பாலும் நிலையாக ஒரே இடத்தில் இருந்த பின்னர் இது தனது அரிதான பயணத்தைத் தொடங்கியுள்ளது.
- இது வெடல் கடலில் ஒரு நிலையான அங்கமாக உள்ளது.
- வெடல் கடல் தெற்குப் பெருங்கடலின் ஒரு பகுதியாகும் என்பதோடு இது வெடல் நீரோட்ட சுழலையும் கொண்டுள்ளது.

## விர்ஜின் அட்லாண்டிக் விமானம்



- இது உலகின் முதலாவது 100% சுற்றுச்சூழல் நிலையான விமான எரிபொருளில் (SAF) இயங்கும் விமானத்தை லண்டனில் இருந்து அமெரிக்காவின் நியூயார்க்கிற்கு இயக்கியது.
- ஒரு வணிக ரீதியிலான விமானம் 100% அளவிற்கு இவ்வகை எரிபொருளில் நீண்ட தூரம் பறந்தது இதுவே முதல் முறையாகும்.
- கழிவு சமையல் எண்ணெய் போன்ற மூலங்களிலிருந்துப் பெறப்பட்ட இது உமிழ்வை 70% வரை குறைக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது.
- ஆனால் இதனைத் தயாரிக்க தேவையான பொருட்களின் அதிகப்படியான விலை மற்றும் குறைந்த விநியோகம் ஆகியன இதன் பெரிய அளவிலான உற்பத்தியைக் கடினமாக்குகிறது.
- தற்போது, உலகளாவிய ஜெட் எரிபொருள் பயன்பாட்டில் 0.1% க்கும் குறைவாகவே SAF உள்ளது.
- உலகளாவியக் கார்பன் வாயு வெளியேற்றத்தில் விமானப் போக்குவரத்துத் துறையின் பங்கு 2-3% என மதிப்பிடப்பட்டுள்ளது.

## மேனிஸ் மிஸ்டீரியா

- அறிவியலாளர்கள் சமீபத்தில் ஒன்பதாவது வகையான எறும்புத் திண்ணிகளை (பாங்கோலின்) கண்டுபிடித்து, அதற்குத் தற்காலிகமாக "மேனிஸ் மிஸ்டீரியா" என்று பெயரிட்டுள்ளனர்.
- எறும்புத் திண்ணிகள் மேனிடே குடும்பத்தினைச் சேர்ந்த பாலூட்டிகள் மற்றும் ஃபோலிடோட்டா எனப்படும் ஒற்றை வகை உயிரலகினைச் சேர்ந்தவை ஆகும்.
- எட்டு வகையான எறும்புத் திண்ணிகள் தற்போது வரை அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

- நான்கு ஆசிய எறும்புத் திண்ணிகள் மேனிஸ் இனத்தைச் சேர்ந்தவை மற்றும் நான்கு ஆப்பிரிக்க எறும்புத் திண்ணிகள் ஃபேடஜினஸ் மற்றும் ஸ்முட்சியா வகையைச் சேர்ந்தவை ஆகும்.
- இந்தப் புதிய இனமானது அதன் பிலிப்பைன்ஸ் மற்றும் மலேசியா இனங்களிடமிருந்து சுமார் ஐந்து மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பிரிந்ததாக நம்பப்படுகிறது.



## டோடோ பறவை (ராப்பஸ் குக்குல்லாட்டஸ்)

- மரபியல் வல்லுநர்கள் மற்றும் வளங்காப்பாளர்கள் இணைந்து டோடோ பறவைகளை மொரிஷியஸ் தீவில் இருந்த அவற்றின் சொந்த வாழ்விடத்திற்கு மீண்டும் அறிமுகப் படுத்துவதற்கான முயற்சியில் ஈடுப்ட்டுள்ளனர்.
- மொரீஷியஸ் பகுதியில் வாழ்ந்த ஒரு பறவையான டோடோ என்பது கடைசியாக 350 ஆண்டுகளுக்கு முன்பு 1662 ஆம் ஆண்டில் தென்பட்டது.
- "dead as a dodo" என்ற சொற்றொடர் ஆங்கில மொழியில், முற்றிலும் அழிந்த ஒன்றைக் குறிக்க பொதுவாகப் பயன்படுத்தப் படுகின்றது.
- சுமார் 1 மீட்டர் உயரமும் 10 முதல் 18 கிலோகிராம் வரை எடையும் கொண்டதாக நம்பப் படும் டோடோ பறவையினால் பறக்க முடியாது.



## கிழக்குத் தொடர்ச்சி மலையின் இயற்கை விளக்க மையம்

- இந்த இலட்சியமிகு திட்டமானது அதிகாரப்பூர்வமாக பொதுமக்களின் பார்வைக்காக திறக்கப்பட்டுள்ளது.

- இது விசாகப்பட்டினத்தில் உள்ள கம்பலகொண்டா வனவிலங்குச் சரணாலயத்தின் வளாகத்தில் அமைந்துள்ளது.
- இந்த மையமானது ஆந்திரப் பிரதேச வனத் துறையினால் மேற்கொள்ளப் பட்ட, இத்தகைய முதல்-வகையான கலை சார் திட்டமாகும்.
- இந்த மையமானது, கிழக்குத் தொடர்ச்சி மலைகளின் முக்கியமான சுற்றுச்சூழல் அமைப்புகளை காட்சிப்படுத்துவதோடு, பழங்குடியினச் சமூகங்கள் காடுகளுடன் நன்கு ஒன்றியிருப்பதையும் எடுத்துக் காட்டுகிறது.



## சாய்கா மறிமான்




- சர்வதேச இயற்கை பாதுகாப்பு ஒன்றியம் ஆனது (IUCN) இந்த இனங்களை (சாய்கா டாடாரிகா) மிகவும் அருகிய நிலையில் உள்ள இனம் என்ற வகையிலிருந்து அச்சுறுத்தல் நிலையை அண்மித்த இனம் ஆக மாற்றப்பட்டது.
- சாய்கா என்ற இனத்தில் பெரும்பாலான பகுதிகளில் காணப்படும் சைகா டாடாரிகா டாடாரிகா மற்றும் மங்கோலியாவில் மட்டுமே காணப்படும் சைகா டாடாரிகா மங்கோலிகா என இரண்டு துணை இனங்கள் உள்ளன.
- ஐரோப்பாவில் ஹங்கேரி முதல் ஆசியாவின் மஞ்சூரியா வரை பரந்து விரிந்து கிடக்கும் பெரியப் புல்வெளிப் பகுதியான ஐரோப்பிய ஆசிய ஸ்டெப்பி புல்வெளி முழுவதும் ஒரு காலத்தில் இந்த இனம் காணப்பட்டது.
- கஜகஸ்தானில் 2005 ஆம் ஆண்டில் வெறும் 48,000 ஆக இருந்த சாய்கா இனங்களின் எண்ணிக்கையானது தற்போது 1.9 மில்லியனுக்கும் மேலாக அதிகரித்துள்ளது.
- 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதக் கணக்கெடுப்பின்படி, மங்கோலியன் கிளை இனங்களில் 15,540 உயிரிகள் உள்ளன.

## லோரைனோசொரஸ் (ப்ளையோசர்)



- 170 மில்லியன் ஆண்டுகள் பழமையான கடல் வாழ் ஊர்வன இனத்தின் புதை படிவங்கள் ஆனது, டைனோசர்களின் காலத்தைச் சேர்ந்த இந்த விலங்கானது மிகவும் பழமையான மாபெரும் அளவிலான வேட்டையாடும் ப்ளையோசர் என்பதை வெளிப் படுத்தியுள்ளன.
- ப்ளையோசர் என்பவை ப்ளைசியோசர்களுடன் நெருங்கிய தொடர்புடைய இனங்கள் என்பதோடு அவை கடல்களில் வாழ்ந்த பழமையான ஊர்வன இனங்களாகும்.
- ப்ளைசியோசர் முதன்முதலில் 170 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பூமியில் தோன்றின என்பதோடு அவை மிகவும் திறம் வாய்ந்த முறையில் நீந்தும் இனங்களாக இருந்தன.
- இந்த உயிரினம் 1.3 மீட்டருக்கும் அதிகமான நீளம் கொண்ட பெரிய கூம்புப் பற்களைக் கொண்ட தாடைகளைக் கொண்டிருந்தது.


## இமயமலைப் பகுதியின் பருவநிலையில் தூசுப் படலங்களின் தாக்கம்




- அகமதாபாத்தில் அமைந்த இஸ்ரோவின் இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகம் (PRL) ஆனது, "தூசுப் படலங்கள் இமயமலையை சூடாக்குகின்றன" என்று கண்டறிந்துள்ளது.
- இது இந்து குஷ்-இமயமலை-திபெத்திய பீடபூமி (HKHTP) பகுதியில் பருவநிலை மாற்றத்தைத் தூண்டும் முக்கிய காரணியாக இருக்கும்.

- புவியின் தாழ்மட்ட வளிமண்டலத்தின் மொத்த வெப்பமயமாதல் காரணிகளில் (தூசுப் படலங்கள்+ பசுமை இல்ல வாயுக்கள்) 50 சதவீதத்திற்கும் அதிகமானவை தூசுப் படலங்கள் மட்டுமே ஆகும்.
- இது நிலத்திலமைந்த ஆய்வகத்தின் கண்காணிப்பு, செயற்கைக்கோள் தரவு மற்றும் மாதிரி உருவகப்படுத்துதல்களை உள்ளடக்கிய முதல் பகுப்பாய்வு ஆகும்.

## இமயமலை பள்ளத்தாக்குக் காற்று




- அதிக உயரத்தில் உள்ள பனிக்கட்டிகளில் அதிக வெப்பநிலையானது மோதும் போது, குறைந்த உயரத்தில் உள்ள பகுதிகளை நோக்கி குளிர்ந்த காற்றை வீசும் 'பள்ளத் தாக்குக் காற்று' (இறங்குக் காற்று, புவி ஈர்ப்புக் காற்று) தூண்டப்படுகிறது என்று அறிவியலாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.
- மலைகளுக்கு மேலே பாயும் காற்றுக்கும், பனிக்கட்டிகளுடன் நேரடியாக தொடர்பு கொள்ளும் குளிர்ந்த காற்றுக்கும் இடையே வெப்பநிலை இடைவெளி உருவாக்கப் படுகிறது.
- இது பனிப்பாறையின் மேற்பரப்பில் கட்டுக்கடங்காத வெப்பப் பரிமாற்றம் மிகவும் அதிகரிப்பதற்கும், மேற்பரப்புக் காற்று அதிகமாக குளிர்ச்சி அடைவதற்கும் வழி வகுக்கிறது.
- மிதவெப்பக் காற்று குளிர்ச்சியடைந்து மிக அடர்த்தியாக மாறுவதால், அது கீழிறங்கி, மலைச் சரிவின் தாழ் மட்ட அண்மைப் பகுதிகளில் பள்ளத்தாக்குக் காற்றை மிகவும் தூண்டுகிறது.
- இந்த நிகழ்வு சில பகுதிகளில் புவி வெப்பமடைதலின் விளைவுகளை குறைக்கலாம் என்றாலும், வரவிருக்கும் பத்தாண்டுகளில் அதன் நிலைத்தன்மைக்கு உத்தரவாதம் ஏதும் இல்லை.

## வகாயாமா சோர்யு


- 72 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு, பசிபிக் கடல்களில் "நீல டிராகன்" என்று அழைக்கப் படும் ஒரு மாபெரும் விகாரமான விலங்கு காணப்பட்டது.

- ஆராய்ச்சியாளர்கள் அந்த மாபெரும் விகார விலங்கிற்கு வகாயாமா சோர்யு, அதாவது நீல டிராகன் என்று பெயரிட்டுள்ளனர்.
- இந்த உயர் நிலை வேட்டையாடும் விலங்கானது கிரெட்டேசியஸ் யுகத்தின் பிற்காலத்தில் அழிந்து போன, பெரிய கடல் ஊர்வன இனமான மோசாசர் (கடல் பல்லி இனஞ்சார்ந்த) ஆகும்.
- ஜப்பானின் வகயாமா மாகாணத்தில் இந்தப் புதைபடிவங்கள் கிடைக்கப் பெற்றதன் நினைவாக இதற்கு இப்பெயரிடப் பட்டது.




## கார்பன் சேகரிப்பில் ஆல்காக்களின் பங்கு

- ஜோத்பூரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் புதுமையான தொழில் நுட்பம் ஆனது, கார்பன் டை ஆக்சைடைப் பிடிப்பதற்கும், கழிவுநீரைச் சுத்திகரித்து மின்சாரத்தை உருவாக்குவதற்கும் பாசிக்களின் (ஆல்கா) துணையுடன் இயங்கும் எரிபொருள் கலங்களைப் பயன்படுத்துகிறது.
- கனல் வாயுக்களை பாசி நிறைந்த குளங்களில் குமிழிகளாக்குதல் என்ற வழக்கமான செயல் முறையுடன் ஒப்பிடும்போது, அவற்றின் மறைமுக உயிர்வேதியியல் செயல் முறை மிகவும் செயல் திறன் மிக்கதாக உள்ளது.
- இது கார்பன் டை ஆக்சைடை கார்பனேட்டுகளாக மாற்றுவதோடு, நீரில் உள்ள கனிம கார்பனின் கரைதிறனை அதிகரிக்கிறது, இதனால் இது நீரில் கார்பன் தக்க வைப்புத் திறனை அதிகரிக்கிறது.
- இந்தத் திறந்த குளங்கள் சார்ந்த செயல்முறைகளை விட ஒளிசார் உயிரி உலைகள் போன்ற முழுவதும் மூடப்பட்ட அமைப்புகளின் பயன்பாடு விரும்பத் தக்கதாக கூறப் படுகிறது.
- அவை பைகார்பனேட்டுகள் $CO_2$ ஆக சிதைவதைத் தடுப்பத்தோடு, அதன் pH அளவைப் பேணுகின்றன.
- கூடுதலாக, இந்தத் தொழில்நுட்பம் ஆனது கழிவுநீரைப் பயன்படுத்துவதோடு, இது கழிவு நீர்நிலை போன்ற நிலைமைகளில் செழித்து வளரும் திறன் கொண்ட ஒரு வெப்ப நிலை தாங்கும் ஆல்கா திரிபினை (குளோரெல்லா வல்காரிஸ்) பயன்படுத்துகிறது.




## பருவநிலை தொடர் விளைவு: தொலைத்தொடர்புகளை ஆய்வு செய்தல்





- பருவநிலை தொலைத்தொடர்புகள் என்றும் அழைக்கப்படும் பூமியில் உள்ள பிரிந்து காணப்படும் இடங்களில் நிகழும் வானிலை நிகழ்வுகளுக்கு இடையிலான தொடர்புகள் உலகளவில் பெரியளவில் வலுவடைந்து வருகின்றன.
- இந்தத் தொலைத்தொடர்புகள் கடந்த 37 ஆண்டுகளில் தெற்கு அரைக்கோளத்தை அதிக அளவில் பாதித்துள்ளன.
- உலகின் ஒரு பகுதியில் ஏற்படும் காட்டுத் தீ மற்றும் வெள்ளம் போன்ற பருவநிலை நிகழ்வுகள் ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் தொலைவில் உள்ள பகுதிகளில் உள்ள வானிலையை எவ்வாறு பாதிக்கலாம் என்பதை தொலைத்தொடர்புகள் விவரிக்கச் செய்கின்றன.
- தொலைத்தொடர்புகளால் மிகவும் வெகுவாக பாதிக்கப்படக் கூடிய பகுதிகள் தென் கிழக்கு ஆஸ்திரேலியா மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகியவை ஆகும்.
- தெற்கு அரைக்கோளத்தில் பெருமளவில் பெருங்கடல்கள் பரவியிருப்பதால் இது அதிக பாதிப்புக்குள்ளாகும் பகுதியாக உள்ளது.

- இது மிகவும் நிலையான தொலைதொடர்புகள் மற்றும் ராஸ்பி அலை அல்லது கிரக அலைகளின் உருவாக்கத்திற்கு பங்களிக்கிறது.
- பெருங்கடல்களிலும் வளிமண்டலத்திலும் ராஸ்பி அலைகள் ஏற்படுகின்றன.
- அவை பூமியின் சுழற்சியின் காரணமாக இயற்கையாகவே நிகழ்கின்றன என்பதோடு, இவை வெப்ப மண்டலத்திலிருந்துத் துருவ மண்டலங்களை நோக்கி வெப்பத்தையும், வெப்ப மண்டலங்களை நோக்கி குளிர்ந்தக் காற்றையும் இடமாற்ற உதவுகின்றன.

## ஆர்க்டிக் மதிப்பீட்டு அறிக்கை 2023

- 2023 ஆம் ஆண்டு ஆனது ஆர்க்டிக் பகுதியில் பதிவான மிக வெப்பமான கோடைகால ஆண்டு என்ற முந்தையப் பதிவினை முறியடித்துள்ளது.
- ஆர்க்டிக் பகுதியின் வெப்பநிலையானது, உலக சராசரி விகிதத்தை விட மூன்று மடங்கு வேகமாக உயர்ந்து வருகிறது.
- கிரீன்லாந்தின் பனிப் படலமானது ஜூன் மாத இறுதியில் வேகமாக உருகத் தொடங்கிய நிலையில் இது இதுவரையில் பதிவான அதன் ஐந்தாவது உருகும் நிகழ்வு ஆகும்.
- பேரண்ட்ஸ், காரா, லாப்டேவ் மற்றும் பியூஃபோர்ட் கடல்களில் கடல் மேற்பரப்பு வெப்ப நிலை ஆகஸ்ட் மாதத்தில் இயல்பை விட 9 முதல் 12 டிகிரி பாரன்ஹீட் (5 முதல் 7 டிகிரி செல்சியஸ்) அதிகமாக இருந்தது.
- 2022-23 ஆம் ஆண்டு குளிர்காலத்தில் பனித் திரட்சியானது ஆர்க்டிக் முழுவதும் சராசரியை விட அதிகமாக இருந்தது.
- அங்கு காற்று இயக்கங்களில் மாற்றங்கள் மற்றும் தீவிரமான கடல் புயல்கள் அதிகளவில் பதிவாகியுள்ளன.
- யுகோன் நதி சினூக், 1970 ஆம் ஆண்டுகளில் இருந்து அளவில் சுமார் 6% வரை குறைந்து உள்ளது.



## சம் சால்மன் மீனின் இடம்பெயர்வு



- சம் சால்மன் (கிழாங்கு மீன்) எனப்படும் அனாட்ரோமஸ் சால்மோனிட் மீன் இனம் ஆனது, ஆர்க்டிக் பகுதியை முட்டையிடுவதற்கான ஒரு புதிய இடமாகக் கண்டறிந்து உள்ளது.
- சம் சால்மன் என்பது அனாட்ரோமஸ் இனமாகக் கூறப்படுகிற நிலையில், அதாவது முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்பதற்காக நன்னீர் நீரோடைகள் மற்றும் ஆற்றுப் பகுதிகளுக்கு இடம் பெயரும் இனமாகும்.
- பின்னர் அவை உணவிற்காகவும் வளர்வதற்காகவும் உப்பு நீர் கொண்ட கடல் சூழலுக்கு இடம் பெயர்கின்றன.
- அவை நீண்ட காலம் நன்னீரில் தங்குவதில்லை.
- பருவநிலை மாற்றத்தினால், இவை அதிக எண்ணிக்கையில் இனப்பெருக்கம் செய்வதற்கு ஆர்க்டிக் பகுதிகள் ஏற்றதாக மாறி வருகின்றன.

## அருகி வரும் வெளவால் இனங்கள்

- பிரான்ஸ் நாட்டின் கோர்சிகா தீவில் காணப்படும் "மிகவும் அரிதான" மற்றும் அருகிய நிலையில் உள்ளதாகக் கருதப்படும் ஒரு புதிய உயிரினத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- மலைகளில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த வெளவால் இனம் மைப்டிஸ் இனத்தைச் சேர்ந்த முன்னர் அறியப்படாத ஓர் இனத்தைச் சேர்ந்தது.
- ஆறு கண்டங்களில் பரவிக் காணப்படும் 120க்கும் மேற்பட்ட இனங்களைக் கொண்டு உள்ளன.
- இந்தப் புதிய இனத்திற்கு, கோர்சிகன் பேச்சுவழக்கில் "நம்முடையது" என்று பொருள் படும் 'நஸ்ட்ரேல்' என்று பெயரிடப்பட்டுள்ளது.




## சென்னையில் ப்ளூ டிராகன்கள்




- ❖ பொதுவாக ஆழ்கடல் பகுதிகளில் காணப்படும் இரண்டு விஷமுள்ள கடல்வாழ் உயிரினங்கள் சென்னையில் கண்டறியப் பட்டுள்ளன.
- ❖ ப்ளூ சீ டிராகன்கள் (கிளாக்கஸ் அட்லாண்டிகஸ்), மற்றும் ப்ளூ பட்டன் (போர்பிடா போர்பிட்டா) எனப்படும் பாலிப்களின் குழுக்கள் பெசன்ட் நகர் கடற்கரையில் தென்பட்டுள்ளன.
- ❖ பொத்தான் போன்ற வடிவங்களை ஒத்திருக்கும் ப்ளூ பட்டன் உயிரினம் ஒற்றை உயிரினங்கள் அல்ல, மாறாக அவை ஹைட்ராய்டுகள் எனப்படும் சிறிய வேட்டையாடி இனங்களின் குழுக்கள் ஆகும்.
- ❖ ப்ளூ பட்டன்கள் பெரும்பாலும் ஜெல்லிமீனாக (இழுது மீன்) தவறாக அடையாளம் கொள்ளப் படுகின்றன.
- ❖ ப்ளூ சீ டிராகன்கள் அதன் தனித்துவமானத் தோற்றத்திற்காக அறியப்படுகின்ற ஓர் அரிய ஆழ்கடல் வாழ் உயிரினம் ஆகும்.
- ❖ கடல் உயிரினங்களின் ஒரு வகுப்பான கடல் அட்டைப்பூச்சி இனமான இது மிகப் பரந்த அளவிலான வண்ணங்கள் மற்றும் வடிவங்களைக் கொண்ட, உடல் மேலோடுகள் அற்ற மெல்லுடலிகள் ஆகும்.

## பாப்பாத்தி சோலை



- சின்னக்கனலில் உள்ள சுமார் 364.5 ஹெக்டேர் பரப்பளவு நிலத்தைக் காப்புக் காடுகளாக அறிவிக்கும் ஒரு திட்டத்தை அரசு நிறுத்தி வைத்துள்ளது.
- அதிக எண்ணிக்கையிலான வண்ணத்துப் பூச்சிகளுக்கு மிகவும் ஒரு புகழ் பெற்ற பாப்பாத்தி சோலைப் பகுதியின் பெயர் வண்ணத்துப்பூச்சிகள் என்று பொருள்படும் பாப்பாத்தி என்ற தமிழ்ச் சொல்லில் இருந்து பெறப்பட்டது.
- பாப்பாத்தி என்றால் வண்ணத்துப் பூச்சி என்றும், சோலை என்றால் சோலை நிலம் என்று பொருள்படும்.
- தமிழ்நாட்டின் மழை மறைவுக் காடுகளிலிருந்து மூணாரின் உயரமான பகுதிகளுக்கு இடம் பெயரும் போது பல வண்ணத்துப் பூச்சிகள் இப்பகுதியை வந்தடைகின்றன.
- பாப்பாத்தி சோலைப் பகுதி, பல வகை தைலம் (இம்பேடியன்ஸ் பால்சமினா) மற்றும் அரிய வகை மல்லிகை மலர்கள் நிறைந்த பகுதியாகக் கருதப்படுகிறது.
- இது சதுரங்கப்பாரா மலைகளுக்கும் மதிகெட்டான் சோலை பகுதிக்கும் நடுவில் அமைந்துள்ளது.
- கடந்த ஆண்டு இப்பகுதியில் நீலக்குறிஞ்சி மலர் பூத்தது.

## உலகளாவிய தூசு உமிழ்வுகளில் மனித நடவடிக்கைகளின் தாக்கம்




- உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு ஆனது, "மணல் மற்றும் தூசுப் புயல்கள்: வேளாண்மையில் தணிப்பு, ஏற்பு, கொள்கை மற்றும் இடர் மேலாண்மை நடவடிக்கைகளுக்கான வழிகாட்டி" என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- வேளாண்மையானது ஒரு முக்கிய மனித நடவடிக்கை சார்ந்த காரணியாக இருப்பதோடு, மனித நடவடிக்கைகள் உலகளாவிய தூசு உமிழ்வுகளில் 25 சதவீதத்தை பங்களிக்கின்றன.
- ஒவ்வோர் ஆண்டும், இரண்டு பில்லியன் டன்களுக்கும் அதிகமான மணல் மற்றும் தூசுகள் பூமியின் வளிமண்டலத்தில் ஆயிரக்கணக்கான கிலோமீட்டர்களுக்கு மேல் பயணிக்கின்றன.

- மணல் மற்றும் தூசுப் புயல்கள் என்பது சிறிய துகள்களின் குழுமத்தை மிக அதிக உயரத்திற்கு கொண்டுச் செல்லும் வலுவான மற்றும் சுழல் காற்று என்று குறிப்பிடப் படுகின்ற ஒரு வானிலை நிகழ்வு ஆகும்.
- அவை மனித ஆரோக்கியம், சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றில் பாதகமான தாக்கங்களை ஏற்படுத்துவதாக அறியப்படுகிறது.
- மணல் மற்றும் தூசுப் புயல்கள் 17 நிலையான மேம்பாட்டு இலக்குகளில் 11 இலக்குகளை அடைவதில் ஒரு வலுவான சவாலை ஏற்படுத்துகின்றன.
- நிலப்பயன்பாட்டில் மாற்றம், வேளாண்மை, நீர் வழிகளின் திசைமாற்றம் மற்றும் காடழிப்பு போன்ற மானுடவியல் சார்ந்த காரணிகள் 25 சதவீதத்திற்கு பங்களிக்கச் செய்கின்றன.

## குதிக்கும் சிலந்திகளின் புதிய இனங்கள்



- அஃப்ராஃப்ளாசில்லா பேரினத்தைச் சேர்ந்த குதிக்கும் சிலந்திகளின் இரண்டு புதிய வகைகளை ஆராய்ச்சியாளர்கள் குழு ஒன்று கண்டறிந்துள்ளது.
- இந்தப் பேரினத்தைச் சேர்ந்த மூன்று இனங்கள் மட்டுமே இந்தியாவில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டன.
- அஃப்ராஃப்ளாசில்லா கேரளா என்ற இனத்தின் மாதிரிகள் இரிஞ்சாலக்குடா மற்றும் குட்டநாடு ஆகியப் பகுதிகளில் காணப்பட்டன.
- அஃப்ராஃப்ளாசில்லா அதவத்துரென்சிஸ் திருச்சிராப்பள்ளியில் உள்ள அதவத்தூரில் கண்டறியப்பட்டது.
- அஃப்ராஃப்ளாசில்லா பேரினத்தைச் சேர்ந்த குதிக்கும் சிலந்தி இனங்கள், ஆப்பிரிக்காவிலிருந்து ஆஸ்திரேலியா வரையிலான பகுதிகளில் பல்வேறு அறியப் பட்ட இனங்களுடன் இணைந்து காணப்படுகின்றன.
- சமீபத்திய கண்டுபிடிப்புகள் ஆனது ராஜஸ்தான், கேரளா மற்றும் தமிழ்நாட்டில் இந்தப் பேரினம் இருப்பதை வெளிப்படுத்தியுள்ளன.
- இந்தப் புதிய கண்டுபிடிப்புகள் மூலம், அறியப்பட்ட அஃப்ராஃப்ளாசில்லா இனங்களின் எண்ணிக்கையானது 47 ஆக உயர்ந்துள்ளது, அதில் ஆப்பிரிக்காவில் அதிகபட்சமாக 19 இனங்கள் உள்ளன.

## டால்ஃபஸின் ஸ்டார்கேசர்




- ஆராய்ச்சியாளர்கள் மீன்கள் மற்றும் பிற கடல்வாழ் உயிரினங்களைத் தாக்கும் மில்லி மீட்டர் அளவிலான நான்கு புதிய வகை ஓடுகலிக் கொண்டுள்ள கணுக்காலி வகை ஒட்டுண்ணிகளையும், அதன் இரண்டு புதிய வகைகளையும் கண்டறிந்துள்ளனர்.
- இந்த ஒட்டுண்ணி கோப்பாட் டால்ஃபஸின் ஸ்டார்கேஸர் இனத்தைச் சார்ந்து (யுரேனோஸ்கோபஸ் குட்டாடஸ்) வாழ்வதாகக் கண்டறியப்பட்டதால், இந்தப் புதிய குடும்பத்திற்கு யுரேனோஸ்கோபிகோலைடே என்று ஆராய்ச்சியாளர்கள் பெயரிட்டு உள்ளனர்.
- இது தென்மேற்கு இந்தியக் கடற்கரையில் 300-550 மீட்டர் ஆழத்தில் வாழும் மீன் இனமாகும்.
- இந்தியாவில் ஒரு புதிய ஓடுடைய கணுக்காலி குடும்பத்தின் முதல் கண்டுபிடிப்பும், அதன் தரவு விவரிப்பும் இதுவாகும்.
- யுரேனோஸ்கோபிகோலைடே என்ற புதிய குடும்பத்தின் கண்டுபிடிப்பு ஆனது, அதன் கீழ் ஹிரோடே ஓஹ்ஸ்டுகாய் என்ற புதிய பேரினம் மற்றும் இனங்களை உருவாக்க வழிவகுத்தது.
- இந்தக் குழுவானது க்ளிப்டோதோவா சாகாரா என்று பெயரிடப்பட்ட ஒரு புதிய இனம் மற்றும் இணைக்கால்கள் கொண்ட இனத்தையும் கண்டறிந்துள்ளது.
- எல்துசா அக்வாபியோ எனப் பெயரிடப்பட்ட மற்றொரு புதிய இணைக்கால்கள் கொண்ட ஓடுடைய கணுக்காலி வகை ஒட்டுண்ணி இனமும் கண்டறியப்பட்டுள்ளது.
- இந்த நான்காவது புதிய இனம் ஆனது 11-12 மி.மீ அளவிலான சதையில் ஊடுருவும் ஒட்டுண்ணி வகையான துடுப்புக் காலிகள் ஆகும்.

## உணவு உற்பத்தியில் புதைபடிவ எரிபொருள் பயன்பாடு

- உலக உணவு உற்பத்தியானது, வருடாந்திர உலகளாவிய புதைபடிவ எரிபொருள் பயன்பாட்டில் தற்போது 15 சதவீதப் பங்கினைக் கொண்டுள்ளது.
- இது 4.6 ஜிகா டன் கார்பன் டை ஆக்சைடு உமிழ்விற்குச் சமமாகும்.
- உணவு உற்பத்தி மூலமான உமிழ்வானது, அனைத்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மற்றும் ரஷ்யாவின் ஒருங்கிணைந்த உமிழ்வுகளுக்கு இணையான உமிழ்வினை வெளியிடுகிறது.
- 2050 ஆம் ஆண்டில் உலகளாவிய உணவுத் தேவையானது 35-56 சதவிகிதம் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்க ப்படுவதோடு, அதற்கேற்ற வகையில் புதைபடிவ எரிபொருள்களின் பயன்பாடும் அதிகரிக்கும்.

- நிலத்திலிருந்து உணவு உட்கொள்ளல் வரையிலான ஒட்டுமொத்த உணவு விநியோகச் சங்கிலியிலும் உள்ள உலகளாவிய புதைபடிவ எரிபொருள் பயன்பாட்டை ஆராய்ச்சியாளர்கள் மதிப்பிட்டிருப்பது இதுவே முதல் முறையாகும்.




## உலகின் மிகச்சிறிய கோரைப்பல் தவளை



- இந்தோனேசியாவின் சுலவேசி தீவில் வாழும் லிம்னோனெக்டெஸ் இனத்தினைச் சேர்ந்த, நிலப்பரப்பில் கூடு கட்டும் கோரைப்பல் தவளை இனத்தினைச் சேர்ந்த புதிய தவளை இனத்தை உயிரியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்த தீவிலுள்ள அனைத்து லிம்னோனெக்டெஸ் இளம்பருவ தவளைகளில் இது மிகச் சிறிய உடல் அமைப்பினைக் கொண்டுள்ளது.
- இதன் மூக்கு முதல் வால் வரையிலான நீளம் அதிகபட்சமாக 3 செ.மீ (1.2 அங்குலம்) அளவினைக் கொண்டுள்ளது.


## சின்னார் வனவிலங்கு சரணாலயத்தில் யூரேசிய நீர்நாய்

- கேரளாவில் இடுக்கியில் உள்ள சின்னார் வனவிலங்கு சரணாலயத்தில் முதன் முறையாக ஆராய்ச்சியாளர் குழுவினர் யூரேசிய நீர்நாய் விலங்கினை கண்டறிந்து உள்ளனர்.
- யூரேசிய நீர்நாய்களின் அறிவியல் பெயர் லுட்ரா லுட்ரா ஆகும்.

- இதனுடன், மிருதுவான சருமம் கொண்ட நீர்நாய் மற்றும் சிறிய நகம் கொண்ட நீர் நாய் உட்பட மூன்று வகையான நீர்நாய்கள் கேரளாவில் காணப் படுகின்றன.



## செல்ஃபிங் சிண்ட்ரோம்





- பிரான்சின் தலைநகரான பாரீஸில் குறைவான மகரந்தச் சேர்க்கைக் காரணிகளை ஈர்ப்பதற்காக குறைவான தேன் மற்றும் சிறிய பூக்களை உற்பத்தி செய்து, வளரும் ஒரு பூவை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.
- பூச்சிகளின் எண்ணிக்கையானது குறைந்து வருவதால் குறைவான மகரந்தச் சேர்க்கை காரணிகளை ஈர்ப்பதற்காக வேண்டி அந்தத் தாவரமானது தன்மகரந்தச் சேர்க்கைக்குப் பரிணமித்துள்ளது.
- தானாகக் கருவுறல் நிலையின் இந்த ஒன்றிணைந்த பரிணாம வளர்ச்சியானது தாவர மகரந்தச் சேர்க்கைக்கான தொடர்புகளை அச்சுறுத்துகிறது.
- தன்மகரந்தச் சேர்க்கை என்பது தாவரங்கள் தானே தங்களைப் பெருக்கிக் கொள்ளும் செயல்முறையாகும்.

- அவை பொதுவாக இனப்பெருக்கம் செய்வதற்கான மகரந்தச் சேர்க்கைக்கு பூச்சிகளை நம்பியுள்ள நிலையில், இந்த நடத்தையானது ஆஞ்சியோஸ்பெர்ம்களின் மரபுக்கு முரணானது என்பதோடு, இவை இயற்கையில் ஒன்றோடொன்று மிகவும் இணைக்கப் பட்ட உறவினையும் பாதிக்கிறது.
- 100 மில்லியன் ஆண்டுகால பரிணாம வளர்ச்சியில் இந்த இடையூறுகளானது கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும்.
- இது பூச்சிகளின் வீழ்ச்சியை துரிதப்படுத்தலாம் என்பதோடு அது தாவரங்களின் எண்ணிக்கையை மிகவும் குறைவான மாறுபாடு கொண்டதாகவும், சுற்றுச்சூழல் மாற்றத்திற்கு மிகவும் பாதிக்கப்படக் கூடியதாகவும் ஆக்குகிறது.

## 2023 ஆம் ஆண்டு 204 புலிகளின் இழப்பு

- இந்தியாவானது இந்த ஆண்டு ஜனவரி 1 முதல் டிசம்பர் 25 வரை 204 புலிகளை இழந்துள்ளது.
- இந்திய மாநிலங்களில் 52 புலிகளின் இறப்புகளுடன் மகாராஷ்டிரா முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து இந்தியாவில் அதிக புலிகளைக் கொண்ட மாநிலமான மத்தியப் பிரதேசத்தில் 45 புலிகள் உயிரிழந்துள்ள நிலையில், 26 புலிகளின் இறப்புகளுடன் உத்தரகாண்ட் அடுத்த இடத்தில் உள்ளது.
- தமிழ்நாடு மற்றும் கேரளாவில் தலா 15 புலிகளின் இறப்புகள் பதிவாகியுள்ளன.
- இந்த ஆண்டு இறப்புகள் கடந்த பத்தாண்டுகளில் மிக அதிகமானதாக உள்ளதாக சில ஊடகங்களின் அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.
- 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையில் இந்தியப் புலிகளின் எண்ணிக்கையானது 200 அதிகரித்துள்ளது.
- இந்தியாவில் புலிகளின் எண்ணிக்கையானது 2018 ஆம் ஆண்டில் 2,967 ஆகவும், 2022 ஆம் ஆண்டில் 3,167 ஆகவும் இருந்தது.



# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலக மலேரியா அறிக்கை 2023

- 2022 ஆம் ஆண்டில் உலகளவில் பதிவான மலேரியா பாதிப்பு எண்ணிக்கைகள் 249 மில்லியனாக உயர்ந்துள்ளதாக உலக சுகாதார அறிக்கை வெளிப்படுத்துகிறது.
- இது பெருந்தொற்றுக் காலத்திற்கு முன்பு பதிவான அளவை விட 16 மில்லியன் அளவு அதிகரித்துள்ளது.
- உலகளாவிய மலேரியா எதிர்ப்பு நடவடிக்கைகள் ஆனது, கோவிட்-19 பெருந்தொற்று சார்ந்த இடையூறுகள், மருந்து மற்றும் பூச்சிக் கொல்லி எதிர்ப்புத் திறன், முக்கிய மனிதாபிமான நெருக்கடிகள், வளங்களின் பற்றாக்குறை சார்ந்த கட்டுப்பாடுகள் மற்றும் பருவநிலை மாற்றப் பாதிப்புகள் உட்பட பல சவால்களை எதிர்கொள்கிறது.
- உலக சுகாதார அமைப்பு பரிந்துரைத்த முதல் மலேரியா தடுப்பூசி RTS,S/AS01 உள்ளிட்ட பல தடுப்பூசிகளின் உருவாக்கத்தினை இந்த அறிக்கை அங்கீகரிக்கிறது.
- சமீபத்தில் R21/Matrix-M எனப்படும் இரண்டாவது தடுப்பூசியினைப் பயன்படுத்தவும் உலக சுகாதார அமைப்பு பரிந்துரைத்தது.
- நைஜீரியா (27%), காங்கோ ஜனநாயகக் குடியரசு (12%), உகாண்டா (5%), மற்றும் மொசாம்பிக் (4%) ஆகிய நான்கு நாடுகள் உலகளவில் பதிவான மலேரியா பாதிப்புகளில் சுமார் பாதிக்கும் மேற்பட்ட பங்கினைக் கொண்டுள்ளன.
- 2022 ஆம் ஆண்டில் உலக சுகாதார அமைப்பின் தென்-கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில் பதிவான மலேரியா பாதிப்புகளில் வியத்தகு வகையில் இந்தியா 66% பங்கினைக் கொண்டுள்ளது.
- ஒரு புரோட்டோசோவா ஒட்டுண்ணியான பிளாஸ்மோடியம் விவாக்ஸ், இப்பகுதியில் சுமார் 46% மலேரியா பாதிப்புகளுக்குக் காரணமாயிருந்தது.
- உலக சுகாதார அமைப்பின் தென்கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில் மலேரியாவால் ஏற்பட்ட மொத்த உயிரிழப்புகளில் 94% இறப்புகள் இந்தியா மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளில் பதிவாகியுள்ளன.




- 2022 ஆம் ஆண்டில், 94% மலேரியா பாதிப்புகள் மற்றும் உலகளவில் மலேரியாவால் ஏற்பட்ட மொத்த உயிரிழப்புகளில் 95% பங்குடன் ஆப்பிரிக்கா அதிக மலேரியா பாதிப்பு எண்ணிக்கையைக் கொண்டுள்ளது.

- உலக சுகாதார அமைப்பு ஆனது, மலேரியா பாதிப்பு மற்றும் உயிரிழப்பு விகிதங்களை 2025 ஆம் ஆண்டில் 75% ஆகவும், 2030 ஆம் ஆண்டில் 90% ஆகவும் குறைப்பதற்கு இலக்கு நிர்ணயித்துள்ளது.

## நகர்ப்புறத் திட்டமிடல் மற்றும் மேம்பாடு பற்றிய இந்திய உள்கட்டமைப்பு அறிக்கை 2023




- இது 2001 ஆம் ஆண்டு IDFC அறக்கட்டளையால் தொடங்கப்பட்ட ஒரு வருடாந்திர வெளியீடு ஆகும்.
- இது நகர்ப்புற மறுமேம்பாட்டின் மூலம் தற்போதுள்ள நகரங்களை மேம்படுத்துவதற்கான ஒரு விரிவான வரைபடமாகும்.
- இது IDFC அறக்கட்டளை, உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் (கர்நாடகா) குழுமம் (iDeCK) மற்றும் புது தில்லியின் தேசிய நகர்ப்புற விவகார நிறுவனம் (NIUA) ஆகியவற்றால் வெளியிடப்பட்டது.
- சமூக உள்கட்டமைப்பில் தொண்டு செயல்கள் அல்லது பிறருக்கு உதவும் முயற்சிகளில் ஈடுபடுகிற IDFC அறக்கட்டளை என்பது ஒரு இலாப நோக்கற்ற நிறுவனமாகும்.

## 2022 ஆம் ஆண்டில் இந்தியாவில் நிகழ்ந்த குற்றங்கள்

- தேசியக் குற்ற ஆவணக் காப்பகத்தின் (NCRB) அறிக்கையான இது மத்திய உள்துறை அமைச்சகத்தால் வெளியிடப்பட்டது.
- 1986 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட NCRB அமைப்பானது குற்றம் மற்றும் குற்றவியல் கண்காணிப்பு வலையமைப்பு மற்றும் அமைப்புகள் (சிசிடிஎன்எஸ்), குற்றப் புள்ளியியல், கைரேகைகள் மற்றும் பயிற்சிப் பிரிவு என நான்கு பிரிவுகளைக் கொண்டுள்ளது.

- இது இந்தியத் தண்டனைச் சட்டம் (IPC) மற்றும் மாநில உள்ளூர் சட்டங்கள் (SLL) ஆகியவற்றின் அடிப்படையில் குற்றம் தொடர்பான தகவல்களைச் சேகரித்து ஆய்வு செய்கிறது.
- NCRBயின் இந்த அறிக்கை, பதிவு செய்யப்பட்ட குற்ற நிகழ்வுகளை மட்டுமே கொண்டு உள்ளதே தவிர, உண்மையில் நிகழ்ந்த குற்ற எண்ணிக்கைகளை அல்ல என்பதை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.
- பெருநகரங்களில் ஒரு லட்சம் மக்கள்தொகைக்கு அடையாளம் காணக்கூடிய குற்றங்கள் (IPC) என்ற விகிதத்தில் கொல்கத்தா தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக இந்தியாவின் பாதுகாப்பான நகரமாக அதன் இடத்தைப் பெற்றுள்ளது.
- இதில் புனே (மகாராஷ்டிரா) மற்றும் ஹைதராபாத் (தெலுங்கானா) ஆகியவை முறையே இரண்டு மற்றும் மூன்றாவது இடங்களைப் பிடித்தன.
- அதைத் தொடர்ந்து சென்னை, கோவை, சூரத் ஆகிய நகரங்கள் உள்ளன.

| Safest Cities in India | | |
|---|---|---|
| **Ranks** | **City** | **IPC Rate** |
| 1. | Kolkata | 78.2 |
| 2. | Chennai | 178.5 |
| 3. | Coimbatore | 211.2 |
| 4. | Surat | 215.3 |
| 5. | Pune | 219.3 |
| 6. | Hyderabad | 266.7 |
| 7. | Bengaluru | 337.3 |
| 8. | Ahmedabad | 360.1 |
| 9. | Mumbai | 376.3 |
| 10. | Kozhikode | 397.5 |

- ஒட்டு மொத்தப் பாதுகாப்பில் கொல்கத்தா சிறந்து விளங்கும் அதே வேளையில், பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அங்கு அதிகரித்துள்ளதை இந்த அறிக்கை எடுத்துக் காட்டுகிறது.
- கொல்கத்தாவில் பெண்களுக்கு எதிரான குற்ற விகிதம் ஒரு லட்சம் மக்கள்தொகைக்கு 27.1 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது, இது கோயம்புத்தூர் (12.9) மற்றும் சென்னை (17.1) ஆகியவற்றின் எண்ணிக்கைகளை விட அதிகமாக உள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் நாட்டிலேயே பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான முதல் தகவல் அறிக்கைகளின் (எஃப்ஐஆர்) எண்ணிக்கையில் டெல்லி முதலிடத்தில் உள்ளது.
- ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர் மற்றும் தெலுங்கானா போன்ற மாநிலங்களில் 2022 ஆம் ஆண்டில் பட்டியல் சாதியினர் (SC) மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (ST) மக்களுக்கு எதிரான வழக்குகள் அதிகரித்துள்ளன.
- மத்தியப் பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்கள் இதன் முக்கியப் பங்களிப்பாளர்களாக நீடிக்கின்றன.
- மகாராஷ்டிராவில் விலங்குகள் தாக்குதல் தொடர்பாக அதிக வழக்குகள் பதிவாகி உள்ளன.

- அதைத் தொடர்ந்து உத்தரப் பிரதேசம், ஒடிசா, தமிழ்நாடு, சத்தீஸ்கர், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- அதிக எண்ணிக்கையிலான விலங்குகள் கடி வழக்குகள் ராஜஸ்தானில் பதிவாகி உள்ளன, அதைத் தொடர்ந்து முறையே மத்தியப் பிரதேசம், தமிழ்நாடு மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகியவை உள்ளன.
- இந்தியத் தண்டனைச் சட்ட (IPC) குற்றங்களின் கீழ் அதிக குற்றப் பத்திரிகை பதிவு விகிதங்களைக் கொண்ட மாநிலங்கள் கேரளா, புதுச்சேரி மற்றும் மேற்கு வங்கம் ஆகியவை ஆகும்.


## விவசாயிகள் தற்கொலைகள் பற்றிய NCRB தரவு 2022

| Year | 2022 | 2021 | 2020 | 2019 | 2018 |
|---|---|---|---|---|---|
| Farmer suicides | 5,207 | 5,318 | 5,579 | 5,957 | 5,763 |
| Agri labourer suicides | 6,083 | 5,563 | 5,098 | 4,324 | 4,586 |
| Total | 11,290 | 10,881 | 10,677 | 10,281 | 10,349 |

- இந்தியாவில் 2022 ஆம் ஆண்டில் விவசாயத் துறையில் 11,290 தற்கொலைகள் நடந்து உள்ளன.
- பலியானவர்களில் 5,207 பேர் விவசாயிகள் மற்றும் 6,083 பேர் விவசாயத் தொழிலாளர்கள் ஆவர்.
- 2022 ஆம் ஆண்டு இந்தியா முழுவதும் விவசாயிகள் தற்கொலைகள் ஒரு துயரமான எழுச்சியைக் கண்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் ஒரு மணி நேரத்துக்கு ஒரு விவசாயியாவது தற்கொலை செய்து கொண்டு உள்ளார்.
- அன்றாட விவசாயக் கூலியை நம்பி வேலை செய்யும் தொழிலாளர்களின் தற்கொலைகள், விவசாயிகள் மற்றும் உழவர்களிடையே உள்ள தற்கொலைகளின் எண்ணிக்கையை மிஞ்சி விட்டன.
- மகாராஷ்டிராவில் அதிக எண்ணிக்கையிலான விவசாயிகள் தற்கொலைகள் (4,248) பதிவாகியுள்ள நிலையில் இது இந்தியாவில் 38% வழக்குகளுக்கு பங்களிக்கிறது.
- இம்மாநிலத்தின் பெரும்பாலான தற்கொலைகள் விதர்பா மற்றும் மராத்வாடா ஆகிய மாவட்டங்களில் பதிவாகியுள்ளன.
- அதனைத் தொடர்ந்து கர்நாடகா (2,392), ஆந்திரப் பிரதேசம் (917), தமிழ்நாடு (728), மற்றும் மத்தியப் பிரதேசம் (641) ஆகியவை உள்ளன.

- 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது அதிகப்பட்சமாக உத்தரப் பிரதேசத்தில் தற்கொலைகள் 42.13% என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது.
- அதே சமயம் அது ஆந்திராவில் 16% என்ற அளவு குறைந்துள்ளது.
- நாட்டில் பதிவாகும் மொத்தத் தற்கொலைகளில் 7-8 சதவீதம் விவசாய தற்கொலைகள் ஆகும்
- தேசியக் குற்ற ஆவணக் காப்பகத்தின் (NCRB) அறிக்கை விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் குறித்த அதன் வரையறையைக் குறிப்பிடவில்லை.
- குறு, சிறு, நடுத்தர மற்றும் பெரிய தொழிலாளர்களை வேறுபடுத்துவதற்கு விளையும் நிலங்களின் அளவு பயன்படுத்தப் படுகிறது.
- 1 ஹெக்டேர் (2.5 ஏக்கர்) வரை நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் குறு விவசாயிகள் என்றும், 1-2 ஹெக்டேர் வரை நிலம் வைத்திருப்போர் சிறு விவசாயிகள் எனவும் கூறப் படுகிறது

## இந்தியாவில் விபத்து மரணங்கள் மற்றும் தற்கொலைகள் (ADSI) 2022 அறிக்கை




- இது தேசியக் குற்றப் பதிவு ஆவணக் காப்பகத்தால் (NCRB) வெளியிடப்படுகிறது.
- இதன் படி அதிகபட்சமாக தற்கொலை செய்வோர்களின் எண்ணிக்கையில் மகாராஷ்டிரா மாநிலம் முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து முறையே அடுத்தடுத்த இடங்களில் தமிழ்நாடு, மத்தியப் பிரதேசம், கர்நாடகா, கேரளா மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- 8 மாநிலங்கள் மற்றும் 4 யூனியன் பிரதேசங்களில் விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் தற்கொலைகள் பற்றிய பதிவு இதில் செய்யப்படவில்லை.
- பெண்களின் தற்கொலைகளில், இல்லத்தரசிகள் அதிகப் படியான அளவில் மொத்தத் தற்கொலைகளில் சுமார் 14% பேர் தற்கொலை செய்து கொள்கின்றனர்.
- அதனைத் தொடர்ந்து மாணவர்கள் மற்றும் தினசரி ஊதியம் பெறுபவர்கள் எண்ணிக்கை காணப்படுகிறது.
- 2021 ஆம் ஆண்டு மிசோரமில் SC மற்றும் ST பிரிவினர் மீதான வன்கொடுமை வழக்குகள் எதுவும் பதிவு செய்யப் படவில்லை.

- ஆனால் அது 2022 ஆம் ஆண்டில் வன்கொடுமை தொடர்பான வழக்குகளைப் பதிவு செய்து உள்ளது.

## முன்னேறு நோக்குள்ள தொகுதி திட்டத்தின் ABP முதலாவது முன்னேறு நோக்குள்ள கழிமுகங்கள் பகுதி தரவரிசை




- முன்னேறு நோக்குள்ள தொகுதி திட்டத்தின் (ABP) முதலாவது முன்னேறு நோக்குள்ள கழிமுகங்கள் பகுதி தரவரிசையினை NITI ஆயோக் வெளியிட்டது.
- 5 கருப்பொருள்களாக தொகுக்கப்பட்ட 40 முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளை (KPIs) அடைவதில் தொகுதிகளின் செயல்திறன் மற்றும் முன்னேற்றத்தின் அடிப்படையில் இந்தத் தரவரிசை தீர்மானிக்கப் பட்டது.
- 27 மாநிலங்கள் மற்றும் 4 ஒன்றியப் பிரதேசங்களில் உள்ள 329 மாவட்டங்களில் இருந்து சுமார் 500 தொகுதிகள் இந்த திட்டத்தின் ஒரு பகுதியாக சேர்க்கப்பட்டுள்ளது.
- தெலுங்கானா மாநிலம் குமுரம் பீம் ஆசிபாபாத் மாவட்டத்தில் உள்ள திரியாணி தொகுதியானது முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- இரண்டாவது இடத்தை உத்தரப் பிரதேச மாநிலத்தினைச் சேர்ந்த கௌசாம்பி மாவட்டத்தில் உள்ள கௌசாம்பி தொகுதி பெற்றுள்ளது.
- ABPயுடன் கூடுதலாக, 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்துக்கான ADP தரவரிசையும் அறிவிக்கப்பட்டது.
- ராயகடா (ஒடிசா) மற்றும் ஜமுய் (பீகார்) ஆகியன இதில் முறையே முதல் மற்றும் இரண்டாவது இடங்களைப் பெற்றன.


## UNAIDS உலக எய்ட்ஸ் தின அறிக்கை 2023

- UNAIDS அமைப்பின் அறிக்கைக்கு 'எய்ட்ஸை முடிவுக்குக் கொண்டுவரும் பாதை' என்று தலைப்பிடப் பட்டுள்ளது.
- இது எய்ட்ஸை முடிவுக்குக் கொண்டு வருவதில் உள்ள அரசியல் மற்றும் நிதி சார்ந்த தேர்வுகளை வலியுறுத்துகிறது.
- 2010 ஆம் ஆண்டு 7.7 மில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டு 29.8 மில்லியனாக, உலகளவில் ஆன்டிரெட்ரோவைரல் சிகிச்சையில் உள்ளவர்களின் எண்ணிக்கை நான்கு மடங்கு அதிகரித்துள்ளதாக இவ்வறிக்கை குறிப்பிடுகிறது.

- இந்தியாவிற்கான 2022 ஆம் ஆண்டு எச்.ஐ.வி மதிப்பீடுகளில் ஏறத்தாழ 2.47 மில்லியன் மக்கள் எச்.ஐ.வியுடன் வாழ்கிறார்கள் என்பதைக் குறிக்கிற நிலையில் 2010 ஆம் ஆண்டு முதல் புதிய நோய்த் தொற்றுகளில்பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கையானது 42% என்ற அளவிற்குக் குறைந்துள்ளது.
- இந்தியாவிற்கான ஒரு முக்கிய முன்னுரிமை என்பது இது தொடர்பான முதன்மை விழிப்புணர்வானது தனி நபர்களை அவர்களின் நிலையை அறிந்து சென்றடைவது தானே தவிர அது சிகிச்சை தொடர்பானது அல்ல.





## உலகளாவிய காலநிலை 2011-2020: ஒரு தசாப்த முடுக்கம்




- உலக வானிலை அமைப்பானது (WMO) இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- 2011-2020 தசாப்த காலமானது நிலம் மற்றும் கடல் ஆகிய இரண்டிற்கும் மிகவும் வெப்பமான காலமாக பதிவு செய்யப்பட்டு வெளிப்பட்டது.
- உலகளாவியச் சராசரி வெப்பநிலை என்பது 1850-1900 காலச் சராசரியை விட 1.10 ± 0.12 °C அளவிற்கு உயர்ந்தது.
- 2016 ஆம் ஆண்டு (எல் நினோ நிகழ்வின் காரணமாக) மற்றும் 2020 ஆம் ஆண்டு ஆகியவை வெப்பமான ஆண்டுகளாக தனித்து நிற்கின்றன.
- $CO_2$ (கரிம வாயு) உமிழ்வு 2020 ஆம் ஆண்டு 413.2 ppm (ஒரு மில்லியனிற்கு எவ்வளவு துகள்) என்ற அளவினை எட்டியது.
- கிரீன்லாந்து மற்றும் அண்டார்டிக் பனிக்கட்டிகள் 2001-2010 கால அளவுடன் ஒப்பிடும் போது 38% அளவிற்கு அதிகப் பனி அளவினை இழந்துள்ளன.

- அண்டார்டிக் ஓசோன் துளையானது 2011-2020 ஆம் ஆண்டு காலக் கட்டத்தில் குறைந்து விட்டதால் அது மாண்ட்ரீயல் நெறிமுறையின் கீழ் வெற்றிகரமான சர்வதேச நடவடிக்கைக்களுக்கான வரவாக வைக்கப்பட்டுள்ளது.

## மாநிலக் கல்விசார் சாதனை மதிப்பீடு (SEAS) 2023




- இது முதலாவது மாநிலக் கல்விசார் சாதனை மதிப்பீடு ஆகும்.
- இது அடிப்படை, ஆயத்த மற்றும் நடுத்தரக் கல்வி நிலைகளின் இறுதிக் கட்டத்தில் மாணவர்களின் கற்றல் திறன்களை மதிப்பிடுவதற்கான மதிப்பீடு ஆகும்.
- இதில் மொழி மற்றும் கணிதத் திறன்கள் மீது சிறப்பு கவனம் செலுத்தப்படும்.
- இது அறிவுத் திறனின் மதிப்பீடு, மறுமதிப்பாய்வு மற்றும் பகுப்பாய்வு (PARAKH) என்ற தேசிய மதிப்பீட்டு ஒழுங்குமுறை அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- சத்தீஸ்கர், டெல்லி, ஒடிசா, பஞ்சாப், ராஜஸ்தான் மற்றும் மேற்கு வங்காளம் தவிர அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் இந்தக் கணக்கெடுப்பில் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது ஆகும்.

## வெப்பமண்டல ஈர நிலங்களின் (வெட் டிராபிக்ஸ்) நிலை குறித்த அறிக்கை 2023

- யுனெஸ்கோ அமைப்பினால் பட்டியலிடப்பட்ட குயின்ஸ்லாந்து வெப்பமண்டல ஈர நிலங்களின் மேலாண்மை மற்றும் பாதுகாப்பு ஆணையத்தினால் தயாரிக்கப்பட்டு மாகாண அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது.
- இது அதிகரித்து வரும் அச்சுறுத்தல்கள் மற்றும் ரிங்டெயில் போசம் போன்ற உயிரினங்களின் ஆரோக்கியம் குறைந்து வருவதை எடுத்துக் காட்டுகிறது.
- பருவநிலை மாற்றம் ஆனது, 2020 ஆம் ஆண்டில் இருந்து ஆஸ்திரேலியாவின் பல்லுயிர் வளம் கொண்ட வடக்கு மழைக்காடுகளில் உள்ள மேலும் 25 சதவீத உயிரினங்களை அச்சுறுத்தப்பட்ட நிலையில் உள்ள உயிரினங்களின் பட்டியலில் சேர்த்துள்ளது.

## மாறும் நிலை கொண்ட நிலத்தடி நீர் ஆதார மதிப்பீட்டு அறிக்கை 2023

- இந்த அறிக்கையை நாடு முழுவதற்குமாக மத்திய ஜல் சக்தித் துறை அமைச்சகத்தால் வெளியிடப்பட்டது.
- இதற்கு முன்பு 1980, 1995, 2004, 2009, 2011, 2013, 2017, 2020 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.
- நிலத்தடி நீர் ஆதாரங்களின் தற்போதைய நிலைகளையும், நிலத்தடி நீர் மேலாண்மை நடைமுறைகளின் தாக்கத்தினையும் தீர்மானிப்பதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- 2023 ஆம் ஆண்டு மதிப்பீட்டு அறிக்கையின்படி, நாடு முழுவதற்கும் தேவையான மொத்த ஆண்டு நிலத்தடி நீரின் மீள்நிரப்பானது 449.08 பில்லியன் கன மீட்டர் (BCM) ஆகும்.
- மேலும் நாட்டின் ஒட்டு மொத்த தேவைக்காக ஆண்டுக்கு 241.34 BCM நிலத்தடி நீரானது பிரித்தெடுக்கப்பட்டுப் பயன்படுத்தப்படுகிறது.
- இது முந்தைய ஆண்டினை விட (2022) 11.48 BCM அதிகரித்திருப்பதைக் குறிக்கிறது.
- மேலும், நாட்டிலுள்ள மொத்த மதிப்பீட்டு அலகுகளான 6553 என்ற அலகில், 4793 என்ற அளவிலான அலகுகளானது ‘பாதுகாப்பானது’என்றும் 736 அலகுகள் ‘அதிக அளவில் சுரண்டப்பட்டவை என்றும் இதில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

Ground water Resources assessment 2004 to 2023

| S.No. | Ground Water Resources Assessment | 2004 | 2009 | 2011 | 2013 | 2017 | 2020 | 2022 | 2023 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | Annual Ground Water Recharge (bcm) | 433 | 431 | 433 | 447 | 432 | 436 | 438 | 449 |
| 2 | Annual Extractable Ground Water Resource (bcm) | 399 | 396 | 398 | 411 | 393 | 398 | 398 | 407 |
| 3 | Annual Ground Water Extractionfor Irrigation, Domestic & Industrial uses(bcm) | 231 | 243 | 245 | 253 | 249 | 245 | 239 | 241 |
| 4 | Stage of Ground Water Extraction (%) | 58% | 61% | 62% | 62% | 63% | 62% | 60% | 59% |

## 2023 ஆம் ஆண்டிற்கான ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவன (SIPRI) அறிக்கை

- உலகின் மிகப்பெரிய 100 ஆயுத நிறுவனங்களின் ஆயுதங்கள் மற்றும் இராணுவ சேவைகளின் விற்பனையானது 2022 ஆம் ஆண்டில் $597 பில்லியனை எட்டியது.
- இது நடைமுறை விதிகளின் அடிப்படையில் 2021 ஆம் ஆண்டினை விட 3.5 சதவீதம் குறைவாக இருந்தது.
- 2015 ஆம் ஆண்டு முதல் 100 ஆயுத நிறுவனங்களின் SIPRI பட்டியல் நிறுவப்பட்ட பிறகு இது அதன் முதல் சரிவிற்கான பதிவாக உள்ளது.
- இந்தியப் பாதுகாப்பு பொதுத்துறை நிறுவனங்களான ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ், பாரத் எலெக்ட்ரானிக்ஸ் மற்றும் மசாகன் டாக்ஸ் ஆகியவை முதல் 100 ஆயுத உற்பத்தி நிறுவனங்களில் இடம்பெற்றுள்ளன.

- இந்த பட்டியலில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆதிக்கம் செலுத்துகிறது, ஆனால் அதன் வருவாய் 7.9% குறைந்துள்ளது.
- முதல் 100 நிறுவனங்களின் மொத்த ஆயுதங்களின் வருவாயில் 51% USA வினை சேர்ந்ததாகும்.
- முந்தைய SIPRI புள்ளி விபரங்களின்படி, அமெரிக்க ஐக்கிய நாடுகள் ($877 பில்லியன்), சீனா ($292 பில்லியன்) மற்றும் ரஷ்யா ($86.4 பில்லியன்) ஆகிய நாடுகளுக்குப் பிறகு, ($81.4 பில்லியன்) இராணுவத்திற்காக செலவு செய்யும் உலகின் நான்காவது பெரிய நாடாக இந்தியா உள்ளது.
- 2018-2022 ஆம் ஆண்டில் மொத்த உலகளாவிய இறக்குமதியில் 11% பங்கினைக் கொண்டு, உலகின் மிகப்பெரிய ஆயுத இறக்குமதியாளராக இந்தியா தொடர்ந்து நீடித்து வருகிறது.


## 2023 ஆம் ஆண்டிற்கான உலக எண்மப் போட்டித் தன்மை தரவரிசை

- இந்தத் தரவரிசையினை மேலாண்மை மேம்பாட்டுக்கான சர்வதேச நிறுவனமானது (IMD) வெளியிட்டது.
- இந்தக் குறியீட்டில் இந்தியா 49வது இடத்தில் உள்ளது.
- இந்தக் குறியீட்டில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.
- இதன் இரண்டாவது இடத்தில் நெதர்லாந்தும் மூன்றாவது இடத்தில் சிங்கப்பூரும் உள்ளன.
- இந்தக் குறியீடு 3 குறிகாட்டிகளின் அடிப்படையில் தயாரிக்கப்படுகிறது.
- இந்தக் குறிகாட்டிகளானது அறிவு, தொழில்நுட்பம் மற்றும் எதிர்காலத் தயார்நிலை ஆகியவை ஆகும்.
- இந்தத் தரவரிசையில் மொத்தமாக 64 நாடுகள் இடம் பெற்றுள்ளன.
- உலகின் மொத்த எண்ம உள்கட்டமைப்பு முதலீட்டில் 75%க்கு சீனா, பிரேசில், இந்தியா, இந்தோனேசியா மற்றும் வியட்நாம் ஆகிய ஐந்து நாடுகள் 2023 ஆம் ஆண்டு உலக வங்கியின் இணையான அறிக்கையின் மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளன.

## Q3 2023 மெர்காம் இந்தியா மேற்கூரை சூரிய ஒளி மின்தகடு அறிக்கை

- இது மெர்காம் இந்தியா ஆராய்ச்சி நிறுவனத்தால் வெளியிடப்பட்டது.
- இந்தியாவில் மேற்கூரை சூரிய ஒளி மின்தகடு நிறுவல்கள் ஆண்டுக்கு ஆண்டு (YoY) 34.7% உயர்வை பதிவு செய்துள்ளன.
- 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் இந்தியா 907 மெகாவாட் சூரியஒளி ஆற்றல் உற்பத்தித் திறனைச் சேர்த்தது.
- இது 2023 ஆம் காலண்டர் ஆண்டின் (CY) மூன்றாவது காலாண்டில் (ஜூலை-செப்டம்பர்) காலக் கட்டத்தில் நிகந்துள்ளது.
- இதில் மகாராஷ்டிரா (26.5%) அதிகப்படியான ஆற்றல் திறனை இணைத்துள்ளது.
- அதைத் தொடர்ந்து கர்நாடகா (20.3%) மற்றும் தமிழ்நாடு (19.5%) ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாத நிலவரப்படி, இந்தியாவின் மொத்த திறந்த அணுகல் சூரிய திறன் 11 ஜிகாவாட்டை எட்டியது.

- ஒட்டு மொத்த மொத்தத் திறனில் 33.3% கர்நாடகாவின் பங்கு ஆகும்.
- அதனைத் தொடர்ந்து மகாராஷ்டிரா (14.1%) மற்றும் தமிழ்நாடு (10.3%) ஆகியவை உள்ளன.




## உலக வானிலை அமைப்பின் 2023 ஆம் ஆண்டிற்கான உலக காலநிலை அறிக்கையின் தற்காலிகப் பதிப்பு

- 2023 ஆம் ஆண்டு தான் அதிக வெப்பமான ஆண்டாக இருக்கும் என்பதை உலக வானிலை அமைப்பு உறுதிப்படுத்தியுள்ளது.
- உலகளாவிய வெப்பநிலை (2023 அக்டோபர் இறுதி வரை) தொழில்துறைக்கு முந்தைய நிலைகளை விட (1850-1900) தோராயமாக 1.4 டிகிரி செல்சியஸாக உயர்ந்து வருகிறது.
- இது கடந்த 2016 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட அதிகபட்ச அளவை முறியடித்துள்ளது.
- எனினும் தற்போதைய அளவுகள், உலகம் 1.5 டிகிரி செல்சியஸ் என்ற நீண்ட கால வெப்பமயமாதல் வரம்பை கடந்துவிட்டது என்பதைக் குறிக்கவில்லை.
- 2015 ஆம் ஆண்டின் பாரீஸ் உடன்படிக்கையின் படி, பெரும்பேரழிவு தரும் காலநிலை தாக்கங்களைத் தடுப்பதற்கான உச்ச வரம்பு 1.5C என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

## QS அமைப்பின் உலகப் பல்கலைக்கழக நிலைத்தன்மை தரவரிசை 2024


- பட்டியலிடப்பட்ட 56 இந்தியப் பல்கலைக்கழகங்களில், டெல்லி பல்கலைக்கழகம் (DU) உலகளவில் 220வது இடத்தைப் பிடித்தது.
- இப்பல்கலைக்கழகம் ஆனது, ஆசியாவில் 30வது இடத்தையும் பெற்றுள்ளது.
- சென்னை, காரக்பூர், ரூர்க்கி மற்றும் டெல்லி ஆகிய இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகங்கள் ஆகியவை முறையே 344வது, 349வது, 387வது மற்றும் 426வது இடங்களைப் பெற்றுள்ளன.
- சுற்றுச்சூழல் நிலைத்தன்மை குறிகாட்டியில், நான்கு இந்தியப் பல்கலைக்கழகங்கள் உலகின் முன்னணி 100 பல்கலைக்கழகங்களில் இடம் பெற்றுள்ளன. வேலூர் தொழில் நுட்பக் கழகம் தேசிய அளவில் (உலகளவில் 49) முதலிடம் பெற்றுள்ளது.
- இந்த ஆண்டு தரவரிசையில் சிறந்து விளங்கும் நாடுகளில் ஒன்றாக ஆஸ்திரேலியா தனித்து நிற்கிற நிலையில், அதன் முதல் 10 இடங்களில் இடம் பெற்ற பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கையில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.

- இந்தப் பட்டியலில் மூன்று பல்கலைக்கழகங்கள் இடம் பெற்ற கொண்ட கனடா நாட்டினைத் தொடர்ந்து, இரண்டு பல்கலைக்கழகங்களைக் கொண்டு ஐக்கியப் பேரரசு மற்றும் ஆஸ்திரேலியா ஆகியவை இடம் பெற்றுள்ளன.

**QS WORLD UNIVERSITY RANKINGS: SUSTAINABILITY 2024**

| 2024 Rank | Institution | Country/Territory |
|---|---|---|
| 1 | University of Toronto | Canada |
| 2 | University of California, Berkeley (UCB) | United States |
| 3 | The University of Manchester | United Kingdom |
| 4 | University of British Columbia | Canada |
| 5 | The University of Auckland | New Zealand |
| 6 | Imperial College London | United Kingdom |
| 7 | The University of Sydney | Australia |
| 8 | Lund University | Sweden |
| 9 | The University of Melbourne | Australia |
| 10 | Western University | Canada |


## பருவநிலை மாற்றச் செயல்திறன் குறியீடு (CCPI) 2024




- 2022 ஆம் ஆண்டில் பருவநிலை செயல்திறனில் இந்தியா ஏழாவது இடத்தில் உள்ளது.
- ஆனால் 'மிக அதிக' செயல்திறன் பிரிவின் முதல் மூன்று இடங்களை எந்த நாடும் பெறாததால் தற்போதைய வரிசையில் இந்தியா நான்காவது இடத்தில் உள்ளது.
- டென்மார்க் 75.59 சதவீத புள்ளிகளுடன் முன்னணி (4வது) இடத்தினைத் தக்க வைத்துக் கொண்டது.

- 72.07 மற்றும் 70.70 புள்ளிகளுடன் எஸ்டோனியா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகியவை முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பிடித்தன.
- இந்தியா 70.25 சதவீதப் புள்ளிகளுடன் அவற்றை அடுத்து 7வது இடத்தில் உள்ளது.
- செயல்திறன் பட்டியலில் சவுதி அரேபியா 67வது இடத்தில் உள்ளது.
- COP28 மாநாட்டினை நடத்தும் ஐக்கிய அரபு அமீரகம் 65வது இடத்தைப் பிடித்துள்ளது.

## உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து குறித்த பிராந்திய கண்ணோட்டம் 2023




- ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) ஆனது உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து 2023: புள்ளியியல் மற்றும் போக்குகள் என்ற பிராந்தியக் கண்ணோட்ட அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டில், 74.1% இந்தியர்களால் ஆரோக்கியமான உணவை வாங்க முடிய வில்லை.
- 2020 ஆம் ஆண்டில், இது 76.2 சதவீதமாக இருந்தது.
- பாகிஸ்தானில் 82.2% பேரும், வங்காளதேசத்தில் 66.1% பேரும் மிக ஆரோக்கியமான உணவைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.
- உயர்ந்து வரும் உணவு விலைகள், உயர்ந்து வருமம் வருமானத்துடன் ஈடாகவில்லை எனவே, அதிக எண்ணிக்கையிலான மக்கள் ஆரோக்கியமான உணவை வாங்க இயல வில்லை.
- நாட்டின் மக்கள் தொகையில் 16.6% பேர் ஊட்டச்சத்துக் குறைபாடு கொண்டவர்களாக உள்ளனர் என இந்த அறிக்கை கூறுகிறது.
- நாட்டின் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளில் 31.7% அளவில் பேர் வளர்ச்சி குன்றிய நிலையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- ஐந்து வயதிற்குட்பட்ட 18.7% குழந்தைகள் இந்த முக்கிய உடல்நலப் பிரச்சனையை எதிர்கொள்வதனால் வளர்ச்சிக் குறைபாடு (உயரத்திற்கு ஏற்ற எடையின்றி இருத்தல்) பிரிவில் இந்தியா அதிக விகிதத்தைக் கொண்டுள்ளது.
- ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளில் 2.8% பேர் அதிக எடை கொண்டவர்களாக இருப்பதாக இந்த அறிக்கை கூறுகிறது.

- இந்தியாவில் உள்ள 15 முதல் 49 வயதிற்குட்பட்ட பெண்களில் 53% பேர் இரத்த சோகையால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இது 2019 ஆம் ஆண்டில் இந்தப் பிராந்தியத்தில் பதிவான மிகப்பெரிய விகிதமாகும்.
- 0 முதல் 5 மாதம் வரையான குழந்தைகளுக்கு பிரத்தியேகமாக தாய்ப்பால் வழங்குதல் விகிதத்தில் 63.7% சதவீதத்துடன் இந்தியா அதன் தரத்தினை மேம்படுத்தியுள்ளது.
- இது உலகளவில் பதிவான அளவை (47.7%) விட அதிகம் ஆகும்.
- இந்தப் பிராந்தியத்தில், பிறப்பின் போது குறைந்த எடை கொண்ட குழந்தைப் பிறப்பு இந்தியாவில் அதிக அளவில் (27.4%) உள்ள நிலையில் அதைத் தொடர்ந்து வங்காள தேசம் மற்றும் நேபாளம் ஆகியவை உள்ளன.

## உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து பற்றிய ஆப்பிரிக்கா பிராந்திய கண்ணோட்ட அறிக்கை

- ஆப்பிரிக்காவில் உள்ள சுமார் 282 மில்லியன் மக்கள், மக்கள்தொகையில் 20% சதவீதத்தினர் 2022 ஆம் ஆண்டில் ஊட்டச்சத்து குறைபாட்டினை எதிர்கொண்டு உள்ளனர்.
- கிழக்கு ஆப்பிரிக்கா நாடானது, 134.6 மில்லியன் ஊட்டச்சத்து குறைபாடுள்ள நபர்களுடன் முதலிடத்தில் உள்ள நிலையில் இதைத் தொடர்ந்து மேற்கு ஆப்பிரிக்கா 62.8 மில்லியன், மத்திய ஆப்பிரிக்கா 57 மில்லியன், வடக்கு ஆப்பிரிக்கா 19.5 மில்லியன், மற்றும் தென் ஆப்பிரிக்கா 7.6 மில்லியன் ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- ஆப்பிரிக்காவில், 342 மில்லியன் மிகக் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மை நிலையை எதிர்கொள்ளும் நபர்களுடன், சுமார் 868 மில்லியன் மக்கள் மிதமான அல்லது கடுமையான உணவுப் பாதுகாப்பின்மை நிலையில் உள்ளனர்.
- ஆப்பிரிக்காவின் மக்கள் தொகையில் 77.5% பேர், சுமார் ஒரு பில்லியன் நபர்கள் 2021 ஆம் ஆண்டில் ஆரோக்கியமான உணவை வாங்க இயலவில்லை.
- இது 42% என்ற உலகளாவிய விகிதத்துடன் அதிக அளவில் முரண்படுகிறது.


Prevalence of undernourishment (percent)

| | 2000 | 2010 | 2014 | 2019 | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|---|---|---|---|
| World | 12.7 | 8.6 | 7.7 | 7.9 | 8.9 | 9.3 | 9.2 |
| Africa | 22.4 | 15.1 | 15.3 | 17.0 | 18.7 | 19.4 | 19.7 |
| Central Africa | 35.6 | 22.5 | 21.9 | 24.8 | 27.6 | 28.5 | 29.1 |
| Eastern Africa | 38.4 | 23.8 | 23.9 | 26.7 | 28.1 | 28.4 | 28.5 |
| Northern Africa | 6.3 | 4.7 | 5.3 | 5.8 | 6.0 | 6.9 | 7.5 |
| Southern Africa | 5.7 | 7.2 | 8.2 | 8.3 | 9.5 | 10.0 | 11.1 |
| Western Africa | 15.0 | 10.8 | 10.6 | 11.0 | 13.7 | 14.5 | 14.6 |


## உலகளாவிய சாலைப் பாதுகாப்பு நிலை குறித்த அறிக்கை 2023

- 2010 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் உலகளவில் ஆண்டுதோறும் ஏற்படும் சாலைப் போக்குவரத்து சார்ந்த உயிரிழப்புகள் 5% குறைந்து 1.19 மில்லியன் இறப்புகள் ஆக உள்ளது.

- ஐக்கிய நாடுகள் சபையின் 108 உறுப்பினர் நாடுகளில் இந்த வீதத்தில் சரிவு பதிவாகி உள்ள நிலையில் இந்தியாவில் மட்டும் இறப்புகள் 15% அதிகரித்துள்ளன.
- இந்தியாவில், 2010 ஆம் ஆண்டில் 1.34 லட்சமாக இருந்த சாலைப் போக்குவரத்து இறப்புகளின் மொத்த எண்ணிக்கையானது 2021 ஆம் ஆண்டில் 1.54 லட்சமாக உயர்ந்து உள்ளது.
- பத்து நாடுகள் சாலைப் போக்குவரத்து இறப்புகளை 50%க்கும் மேல் குறைப்பதில் வெற்றி பெற்றுள்ளன.
- மேலும் முப்பத்தைந்து நாடுகள், சாலைப் போக்குவரத்து இறப்புகளை 30% முதல் 50% வரை குறைத்ததன் மூலம், இதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளன.
- அனைத்து வயதினரில் ஏற்படும் உயிரிழப்பினைக் கருத்தில் கொள்ளும்போது சாலை விபத்து மரணத்திற்கான 12வது முக்கிய காரணமாகும்.
- 2010 ஆம் ஆண்டில் 1 லட்சம் பேருக்கு 18 ஆக இருந்த சாலை விபத்து சார்ந்த இறப்பு விகிதம் ஆனது 2021 ஆம் ஆண்டில் 1 லட்சத்திற்கு 15 ஆகக் குறைந்துள்ள நிலையில், இது 2010 ஆம் ஆண்டு முதல் சாலைப் போக்குவரத்து இறப்பு விகிதத்தில் பதிவான 16% சரிவைக் குறிக்கிறது.




## சர்வதேச கடன் அறிக்கை



- சர்வதேச கடன் அறிக்கை (IDR) என்பது உலக வங்கியினால் நீண்டகாலமாக வெளியிடப் படும் வருடாந்திர வெளியீடாகும்.
- இது 122 நாடுகளுக்கான வெளிநாட்டுக் கடன் புள்ளிவிவரங்கள் மற்றும் பல்வேறு பகுப்பாய்வுகளைக் கொண்டுள்ளது.
- கடன்-சேவை கொடுப்பனவுகள் - அசல் மற்றும் வட்டி உட்பட - 2022 ஆம் ஆண்டில் 5% உயர்ந்து 443.5 பில்லியன் டாலராக இருந்தது.
- 75 ஏழ்மையான நாடுகளின் வெளி நாட்டுப் பொதுக் கடன் சேவைத் தொகைகள் 2022 ஆம் ஆண்டில் 88.9 பில்லியன் டாலர் என்ற அளவை எட்டியது என்பதோடு மேலும் 2023-2024 ஆம் ஆண்டு காலகட்டத்தில் இது 40% அதிகரிக்கவும் செய்யும்.
- 2012 ஆம் ஆண்டில் இருந்து, அந்நாடுகளின் வட்டித் தொகை மட்டும் நான்கு மடங்கு அதிகரித்து 23.6 பில்லியன் டாலராக இருந்தது.
- தனியார் துறை கடன் வழங்கு நிறுவனங்கள் கடனாக வழங்கியதை விட சுமார் 185 மில்லியன் டாலர்களை அசலாகத் திரும்பப் பெற்றுள்ளன.
- ஒட்டுமொத்தமாக, குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் இருந்து பத்திரதாரர்களுக்கு 127.1 பில்லியன் டாலர் நிகர நிதி வழங்கப்பட்டுள்ளது.
- 2019-2021 ஆம் காலகட்டத்தில் சராசரி நிதி வரவு 202 பில்லியன் டாலர் ஆகும்.
- உலக வங்கி மற்றும் பிற பலதரப்பு கடன் வழங்குநர்கள், 2022 ஆம் ஆண்டில் வளர்ந்து வரும் நாடுகளுக்கான புதிய நிதியுதவியில் 115 பில்லியன் டாலர்களை வழங்குவதன் மூலம் இடைவெளியை நிரப்ப உதவியது.


## மெர்சர் குழுமத்தின் வாழ்க்கைத் தரக் குறியீடு 2023

| Ranking 2023 | City | Location |
|---|---|---|
| 1 | VIENNA | AUSTRIA |
| 2 | ZURICH | SWITZERLAND |
| 3 | AUCKLAND | NEW ZEALAND |
| 4 | COPENHAGEN | DENMARK |
| 5 | GENEVA | SWITZERLAND |

- வியன்னா (ஆஸ்திரியா), சூரிச் (சுவிட்சர்லாந்து) மற்றும் வான்குவார் (கனடா) ஆகியவை இதே வரிசையில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற நகரங்கள் ஆகும்.
- இதில் ஹைதராபாத் 153வது இடத்தையும், பெங்களூரு 156வது இடத்தையும் பெற்று உள்ளது.
- ஐதராபாத்தை அடுத்து, புனே (154) இந்தியாவில் இரண்டாவது சிறந்த 'வாழ்க்கைத் தரம்' கொண்ட நகரமாக உள்ளது.
- இந்தத் தரவரிசைகளின் முந்தையப் பாதிப்பு 2019 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட நிலையில் அதில் புனே மற்றும் ஹைதராபாத் இரண்டும் 143வது இடத்தைப் பகிர்ந்து கொண்டன.

## படுகொலை பற்றிய உலகளாவிய ஆய்வறிக்கை 2023


FIG. 13 Interpersonal murders by type in India, 2019–2021




- ❖ போதைப்பொருள் மற்றும் குற்றத்திற்கான ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகம் (UNODC) ஆனது, 2023 ஆம் ஆண்டிற்கான அதன் படுகொலை பற்றிய உலகளாவிய ஆய்வறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- ❖ 2019-21 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் இந்தியாவில் நடைபெற்ற ஒவ்வொரு ஐந்து கொலைகளில் ஒன்று தண்ணீர் தொடர்பான மோதல்களால் ஏற்பட்டுள்ளது.
- ❖ தெற்கு ஆசியா, ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதி மற்றும் மத்திய அமெரிக்கா போன்ற நாடுகளில் இது போன்ற சம்பவங்கள் அதிகம் ஆக பதிவாகியுள்ளன.
- ❖ 2019-2021 ஆகிய காலக் கட்டத்தில் இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட அனைத்து மனித கொலைகளில் சுமார் 20 சதவிகிதம் தண்ணீர் தொடர்பான மோதலுக்குக் காரணமாக ஏற்பட்டிருக்கலாம்.
- ❖ தேசியக் குற்ற ஆவணக் காப்பக அமைப்பின் 2020 ஆம் ஆண்டு அறிக்கையின் படி, 2017-2019 ஆகிய காலக் கட்டத்தில் தண்ணீர் தொடர்பான மோதல்களில் குறைந்தது 232 இந்தியர்கள் உயிரிழந்துள்ளனர்.

## கற்கரி வகை நிலக்கரி இறக்குமதி 2023

- ❖ இந்தியாவின் கற்கரி வகை நிலக்கரியின் இறக்குமதியானது, இந்த நிதியாண்டின் ஏப்ரல் முதல் நவம்பர் வரையிலான (11 மாதங்கள்) காலக் கட்டத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு அதிகபட்சமாக 38.14 மில்லியன் டன்னாக (mt) உள்ளது.
- ❖ கடந்த ஆண்டு ஒப்பீட்டுக் காலத்தில் சுமார் 38.12 மில்லியன் டன் ஏற்றுமதிகள் பதிவாகியதோடு வருடாந்திர (ஆண்டாண்டு) அடிப்படையிலான இறக்குமதிகள் சற்று அதிகமாக பதிவாகியுள்ளன.
- ❖ 60 சதவீதப் பங்குடன் ஆஸ்திரேலியா தொடர்ந்து ஏற்றுமதியில் முன்னணியில் இருந்து வருகிறது.
- ❖ கனடா மற்றும் மொசாம்பிக் போன்ற நாடுகளைப் பின்னுக்குத் தள்ளி ரஷ்யா இதில் மூன்றாவது பெரிய விநியோகஸ்தராக இடம் பெற்றுள்ளது.




| | CY 2018 | CY 2019 | CY 2020 | CY 2021 | CY 2022 | CY 2023 YTD |
|---|---|---|---|---|---|---|
| PET COKE | 6,827,264 | 11,329,431 | 9,817,673 | 4,893,871 | 9,832,224 | 11,387,613 |
| MET COKE | 5,461,349 | 3,245,157 | 2,632,358 | 2,173,538 | 3,323,603 | 3,371,533 |
| PCI | 8,403,115 | 12,680,593 | 12,754,716 | 14,186,766 | 15,248,388 | 15,827,763 |
| ANTHRACITE | 1,671,322 | 1,995,781 | 1,953,790 | 2,185,118 | 2,299,231 | 2,031,008 |
| NON COKING COAL | 170,969,456 | 182,064,694 | 157,926,183 | 137,412,586 | 160,874,687 | 163,456,908 |
| COKING COAL | 51,660,925 | 48,761,629 | 45,648,295 | 53,887,510 | 52,912,960 | 52,220,792 |

# மாநிலச் செய்திகள்

## உறுப்பு மாற்று சிகிச்சை பெற்றவர்களுக்கான விளையாட்டு போட்டிகள்

- ❖ கேரள மாநில அரசானது முதல் முறையாக உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை பெற்றவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளை நடத்த உள்ளது.
- ❖ இது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் சர்வதேசப் பல்துறை விளையாட்டு போட்டிகள் ஆகும்.
- ❖ இது உறுப்பு மாற்று சிகிச்சை பெற்றவர்கள் மற்றும் உறுப்பு வழங்கியவர்கள் ஆகியோருக்கான விளையாட்டு போட்டிகளாகும்.
- ❖ உறுப்பு மாற்று சிகிச்சை பெற்றவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் கூட்டமைப்பானது (WTGF) இந்தப் போட்டிகளை (WTG) ஏற்பாடு செய்கிறது.
- ❖ உறுப்பு மாற்று சிகிச்சை பெற்றவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் கூட்டமைப்பு (WTGF) என்பது ஐக்கியப் பேரரசில் அமைந்துள்ள ஒரு இலாப நோக்கற்ற அமைப்பாகும்.

## ரேவந்த் ரெட்டி

- ❖ காங்கிரஸ் மத்தியத் தலைமையானது, தெலுங்கானா காங்கிரஸ் கட்சித் தலைவர் A. ரேவந்த் ரெட்டியை தெலுங்கானா மாநில முதல்வராக தேர்வு செய்துள்ளது.
- ❖ 2014 ஆம் ஆண்டில் அம்மாநிலம் உருவான பிறகு காங்கிரஸ் கட்சியின் முதல் முதலமைச்சராக அவர் பதவியேற்க உள்ளார்.
- ❖ அவர் காங்கிரஸ் சட்டமன்றக் கட்சி (CLP) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## மாநிலத் தேர்தல்கள் 2023




- சமீபத்தில் நடந்த நான்கு மாநிலத் தேர்தல்களில் மூன்றில் பா.ஜ.க. வெற்றி பெற்று உள்ளது.
- பாரதிய ஜனதா கட்சியானது, சத்தீஸ்கர் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களை காங்கிரஸிடம் இருந்து கைப்பற்றியும், மத்தியப் பிரதேசத்தில் ஐந்தாவது முறையாக வெற்றி பெற்றும் சாதனை படைத்துள்ளது.
- சந்திரசேகர் ராவ் தலைமையிலான ஒன்பது ஆண்டு கால பாரத இராஷ்டிர சமிதியின் (BRS) ஆட்சியை காங்கிரஸ் முடிவுக்குக் கொண்டு வந்தது.
- BRS ஆனது முன்னதாக தெலுங்கானா இராஷ்டிர சமிதி (TRS) என அழைக்கப்பட்டது.

## உத்தரகாண்ட் - புவிசார் குறியீடு பெற்ற பொருட்கள்

- முதன்முறையாக, உத்தரகாண்ட் மாநிலத்தின் 18 தயாரிப்புகள் ஒரே நாளில் புவிசார் குறியீட்டினைப் பெற்றுள்ளன.
- இந்த வகையில் இந்தியாவில் உத்தரகாண்ட் இவ்வகையிலான முதல் மாநிலமாகும்.
- தொழில்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் (DPIIT) துறையின் புவிசார் குறியீட்டுப் பதிவுப் பிரிவினால் உள்ளூர் தயாரிப்புகளுக்குப் புவிசார் குறியீடு வழங்கப் படுகிறது.
- புவிசார் குறியீடு பெற்றத் தயாரிப்புகள் பின்வருமாறு : பெரினாக் தேயிலை, மாண்டுவா, ஜாங்கோரா, கஹாட் பருப்பு, சிகப்பு அரிசி, பிளாக் பட் (கருப்பு அவரை), மால்டா பழங்கள், அமராந்த் - தண்டு கீரை (ராம்தானா), அல்மோராவின் லக்கௌரி மிளகாய், துவரைப் பருப்பு, புரான்ஷ் ஜூஸ், சிறுகாஞ்சொறி (கண்டலி) இழை, நைனிடால் மெழுகுவர்த்தி, ரங்வாலி பிச்சோடா , ராம்நகரின் லிச்சி, நைனிடாலின் பீச் பழம், சாமோலி முகக்கவசம், உத்தரகாண்ட் மரக் கலை வேலைப்பாடுகள்.
- இங்கு ஏற்கனவே புவிசார் குறியீடு பெற்றத் தயாரிப்புகள்: பிரியாணி இலை, பாஸ்மதி அரிசி, போட்டியா டான், ஐபன் கலை, சியுரா எண்ணெய், முன்சியாரி வெள்ளை காராமணிப் பயறு, ரிங்கல் கைவினை பொருள், தம்ரா மற்றும் துல்மா.




## புதிய மிசோரம் முதல்வர்

- ❖ மிசோரம் மாநிலத்தின் புதிய முதல்வராக லால்துஹோமா பதவியேற்றார்.
- ❖ 2023 ஆம் ஆண்டு மிசோரம் மாநில சட்டமன்றத் தேர்தலில் (40 இடங்கள்) ஜோரம் தேசியவாதக் கட்சி வெற்றி பெற்றது.
- ❖ இது 2019 ஆம் ஆண்டு கதிர்கள் இல்லாத சூரியன் என்ற சின்னத்துடன் ஒரு அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட்டது.




## மொத்தக் கருவுறுதல் விகிதம் – கேரளா

- ❖ கல்வி கற்ற பெண்களின் மத்தியிலான மொத்தக் கருவுறுதல் விகிதம் ஆனது இந்தியாவிலேயே கேரளாவில் மட்டுமே அதிகமாக உள்ளது.
- ❖ இது 2020 ஆம் ஆண்டு மாதிரிப் பதிவு அமைப்பு புள்ளியியல் அறிக்கை மூலம் வெளிப் படுத்தப் பட்டுள்ளது.
- ❖ இது, கல்வி கற்காதப் பெண்களை விட, கல்வி கற்ற பெண்கள் தான் குறைவான குழந்தைகள் கொண்டுள்ளனர் என்ற பொதுவான அனுமானத்தை கேரளா உடைத்து உள்ளது.
- ❖ 'கல்வியறிவு பெற்ற' பெண்களிடையே 1.5 என்ற கருவுறுதல் விகிதமும், கல்வியறிவு அற்றவர்களிடையே 0.2 என்ற கருவுறுதல் விகிதமும் பதிவாகியுள்ளது.

- இரண்டு பிரிவுகளிலும் சேர்த்து கேரளாவின் மொத்தக் கருவுறுதல் விகிதம் 1.8 ஆகும்.
- தேசிய அளவில், 'கல்வியறிவு அற்ற' பெண்களின் மொத்தக் கருவுறுதல் விகிதம் 3.1 ஆக உள்ள நிலையில் இது 'கல்வியறிவு கொண்ட குழுவை விட (1.9) மிக அதிகம் ஆகும்.
- மொத்தக் கருவுறுதல் விகிதம் (TFR) என்பது ஒரு பெண்ணின் மகப்பேறு காலத்தில் (15-49 வயது) பிறக்கும் குழந்தைகளின் சராசரி எண்ணிக்கையாகும்.

| INDICATOR | SRS 2014 | SRS 2019 | SRS 2020 |
|---|---|---|---|
| Crude Birth Rate (CBR) | 21.0 | 19.7 | 19.5 |
| Total Fertility Rate | 2.3 | 2.1 | 2.0 |
| Early Neonatal Mortality Rate (ENMR) – 0- 7 days | 20 | 16 | 15 |
| Neonatal Mortality Rate (NMR) | 26 | 22 | 20 |
| Infant Mortality Rate (IMR) | 39 | 30 | 28 |
| Under 5 Mortality Rate (U5MR) | 45 | 35 | 32 |

## சத்தீஸ்கரின் புதிய முதல்வர்

- சத்தீஸ்கர் சட்டசபையின் புதிய முதல்வராக விஷ்ணு தியோ சாய் (59) தேர்வு செய்யப் பட்டுள்ளார்.
- அவர் நான்கு முறை பாராளுமன்ற உறுப்பினராகவும், மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராகவும், மேலும் இரண்டு முறை மாநில பாஜக கட்சித் தலைவராகவும் இருந்துள்ளார்.
- சமீபத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் 90 உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றத்தில் அவரது கட்சி (பாஜக) 54 இடங்களைக் கைப்பற்றியது.

## 4E வேவ் இயக்கம்

- 4E வேவ் எனப்படும் ஜம்மு மாணவர் தலைமையிலான தேசிய எரிசக்தி வளங்காப்பு இயக்கம் ஆனது சமீபத்தில் தொடங்கப்பட்டது.
- இந்த இயக்கமானது நிலையான நடைமுறைகளை மேம்படுத்துவதற்கும், ஆற்றலைச் சேமிப்பதற்காக தனிநபர்கள் மற்றும் சமூகங்களில் பொறுப்பு உணர்வை ஏற்படுத்தச் செய்வதற்கும் செயலாற்றுகிறது.
- 4E வேவ் இயக்கம் ஆனது நான்கு முக்கிய கூறுகளை உள்ளடக்கியது:
    - சுற்றுச்சூழலுக்கு ஏற்றத் தன்மை: சுற்றுச்சூழலுக்கு உகந்த ஆற்றல் சேமிப்பு நடைமுறைகளை ஊக்குவித்தல்
    - பொருளாதாரம்: தனிநபர்கள் மற்றும் சமூகங்களுக்குப் பொருளாதார நன்மைகளுக்கு வழி வகுக்கும் ஆற்றல் சேமிப்பு தீர்வுகளை வலியுறுத்துதல்
    - கல்வி: ஆற்றல் சேமிப்பு முறைகள் மற்றும் அவற்றின் முக்கியத்துவத்தைப் பற்றிப் பொதுமக்களுக்குக் கற்பிப்பதில் கவனம் செலுத்துதல்

- அதிகாரமளித்தல்: ஆற்றலைப் பாதுகாப்பதில் தீவிரப் பங்கு வகிக்க தனிநபர்கள் மற்றும் சமூகங்களுக்கு அதிகாரமளித்தல்




## மோகன் யாதவ் – மத்தியப் பிரதேச மாநில முதல்வர்


- மத்தியப் பிரதேசத்தின் புதிய முதல்வராக மோகன் யாதவ் அறிவிக்கப்பட்டுள்ளார்.
- 230 உறுப்பினர்களைக் கொண்ட சட்டசபையில் அவரது கட்சி (பாஜக) 163 இடங்களை வென்றது.
- அம்மாநிலத்தில் ராஜேந்திர சுக்லா மற்றும் ஜகதீஷ் தேவ்தா ஆகிய இரண்டு துணை முதல்வர்கள் நியமிக்கப்படுவர்.
- மோகன் யாதவ் ஒரு இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பு சார்ந்த தலைவர் மற்றும் உஜ்ஜைன் தெற்குப் பகுதியிலிருந்து மூன்று முறை பாஜக சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றியவர் ஆவார்.
- இவர் முன்பு மத்தியப் பிரதேசத்தின் உயர்கல்வி அமைச்சராகப் பணியாற்றியுள்ளார்.

## 24வது ஹார்ன்பில் திருவிழா

- நாகாலாந்தின் பாரம்பரிய கிராமமான கிசாமாவில் பத்து நாட்கள் அளவிலான 24வது ஹார்ன்பில் (இருவாச்சி) திருவிழா நடைபெற்றது.
- அம்மாநிலத்தின் 16 முக்கியப் பழங்குடியினர் தங்கள் கலாச்சாரம், பாரம்பரியத்தைக் கொண்டாடும் வகையில் இந்தத் திருவிழாவைக் கொண்டாடுகிறார்கள்.
- 2000 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தத் திருவிழா ஹார்ன்பில் என்ற இருவாச்சி பறவையின் பெயரால் இப்பெயர் பெற்றது.
- இது நாகா நாட்டுப்புறவியல் மற்றும் சடங்குகளில் உள்ள நம்பகத்தன்மை, அழகு மற்றும் கருணை ஆகியவற்றைக் குறிக்கும் ஒரு கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த பறவை ஆகும்.
- அம்மாநிலத்தில் 16 மாவட்டங்கள் மற்றும் 17 பழங்குடியினங்கள் உள்ள நிலையில் அவை ஒவ்வொன்றும் மற்றொன்றிலிருந்து வேறுபட்டவை.
- நாகாலாந்து மாநிலம் திருவிழாக்களின் நிறைந்த பகுதி என்றும் ஹார்ன்பில் திருவிழாவானது திருவிழாக்களின் திருவிழா என்றும் குறிப்பிடப்படுகிறது.
- நாகாலாந்து சாராத திருவிழா பார்வையாளர்கள் உள்ளூர் அரசாங்கத்திடம் பாதுகாக்கப் பட்ட பகுதியில் பயணிப்பதற்கான அனுமதியைப் பெற வேண்டும்.

## ராஜஸ்தான் மாநிலத்தின் புதிய முதல்வர்

- ❖ ராஜஸ்தான் மாநிலத்தின் புதிய முதல்வராக பஜன் லால் சர்மா தேர்வு செய்யப் பட்டுள்ளார்.
- ❖ சர்மாவின் துணை முதல்வர்களாக தியா குமாரி மற்றும் பிரேம் சந்த் பைர்வா ஆகியோர் நியமிக்கப் பட்டுள்ளனர்.
- ❖ ராஜஸ்தான் சட்டசபையின் புதிய சபாநாயகராக வாசுதேவ் தேவ்னானி பதவியேற்க உள்ளார்.
- ❖ பஜன் லால் சர்மா முதல் முறையாக சங்கனேர் சட்டமன்றத் தொகுதியிலிருந்து சட்ட மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.


199 seats · 101 for majority

| Parties | Total seats | Seats won | Seats leading | Gain/Loss |
|---|---|---|---|---|
| Bharatiya Janata Party | 115 | 115 | – | +42 |
| Indian National Congress | 69 | 69 | – | -30 |
| Bahujan Samaj Party | 2 | 2 | – | -4 |
| Others | 13 | 13 | – | -8 |

## பான்னி புல்வெளியில் இனப்பெருக்க மையம்


● Spread over 3,000 sq km, Banni, Asia's largest grassland, is a reserve forest

● Around 48 villages, populated by around 8,000 families, are part of the Banni grassland

● Around 1 lakh animals graze on the grassland


● Out of the 8,760 hectares of encroached land in Banni, 540 hectors land cleared so far

**HOME TO RICH FLORA AND FAUNA:** The Banni area consists of two ecosystems – wetlands and grasslands – in juxtaposition. Banni falls under the Dichanthium-Cenchrus Lasiurus type of grass cover. These grasslands are home to a rich array of flora and fauna including 192 species of plants, 262 species of birds, several species of mammals, reptiles and amphibians. Traditionally, Banni grasslands were managed following a system of rotational grazing.

- பான்னி புல்வெளியில் சிவிங்கிப் புலிகளின் இனப்பெருக்க மையத்தினை அமைக்கச் செய்வதற்கான ஒரு திட்டத்தினை குஜராத் மாநில அரசு தயாரித்துள்ளது.
- குஜராத்தின் கட்ச் மாவட்டத்தில் 2,500 சதுர கி.மீ. பரப்பளவில் பரந்து விரிந்துள்ள பான்னி புல்வெளி இந்தியாவின் மிகச்சிறந்த மற்றும் மிகப்பெரிய புல்வெளிகளில் ஒன்றாகும்.
- இந்தப் பாதுகாக்கப்பட்ட காடு ஆனது, பிரபலமான பான்னி இன எருமைகளுக்கு மிகப் பெயர் பெற்றது.
- 40 வகையான புல் மற்றும் 99 வகையான பூக்கும் தாவர இனங்களோடு, இங்கு 273 பறவை இனங்களும் உள்ளன.

## பங்கோலகா வனவிலங்குச் சரணாலயத்தில் புலி

- சிக்கிமின் பங்கோலகா வனவிலங்குச் சரணாலயத்தில், 3640 மீட்டர் உயரத்தில் ஒரு புலி தென்பட்டுள்ளது.
- புலிகள் தென்பட்ட இந்தியாவின் மிக உயரமான பகுதி இதுவாகும்.
- இதற்கு முன், இந்தியாவில் புலிகள் காணப்பட்ட மிக உயரமான இடம் அருணாச்சலப் பிரதேசத்தில் 3,630 மீட்டர் உயரத்தில் உள்ள இடமாகும்.
- பூடானில், புலிகள் 4,000 மீட்டருக்கும் அதிகமான உயரத்தில் தென்பட்டுள்ளன.




## உணவு கலப்படம் தொடர்பான வழக்குகள்

- தேசியக் குற்ற ஆவணக் காப்பகம் (NCRB) வெளியிட்டுள்ளத் தரவுகளின்படி, உணவுக் கலப்படம் தொடர்பான வழக்குகளில் நாட்டிலேயே ஹைதராபாத் நகரம் முதலிடத்தில் உள்ளது.
- இதில் தெலுங்கானா முதலாவது இடத்திலும் அதைத் தொடர்ந்து, ஆந்திரப் பிரதேசமும் உள்ளது.

- 2022 ஆம் ஆண்டில், இந்தியாவில் உள்ள 19 முக்கிய நகரங்களில் மொத்தம் 291 உணவுக் கலப்பட வழக்குகள் பதிவாகியுள்ளன.
- இந்த வழக்குகளில் மொத்தம் 246 வழக்குகள் மிகவும் அதிர்ச்சியூட்டும் வகையில் ஹைதராபாத்தில் மட்டுமே பதிவாகியுள்ளன.

## மணிப்பூரில் மதுபானம் அறிமுகம்

- மணிப்பூர் மாநில அமைச்சரவையானது, 30 ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு அம்மாநிலத்தில் மது விற்பனை மற்றும் நுகர்வை சட்டப்பூர்வமாக்கியுள்ளது.
- மதுபானங்கள் தயாரிப்பு, உற்பத்தி, உடைமை, ஏற்றுமதி, இறக்குமதி, சரக்குப் போக்குவரத்து, கொள்முதல், விற்பனை மற்றும் நுகர்வு ஆகியவற்றுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- மணிப்பூர் மாநில பானங்கள் கழக லிமிடெட் (MSBCL) நிறுவனத்தையும் இது நிறுவியது.
- தற்போது நடைபெற்று வரும் இன மோதல் மற்றும் போதைப்பொருள் மற்றும் மது ஆகியவற்றின் தவறானப் பயன்பாடுகளுக்கு எதிரான பிரச்சாரத்தின் மத்தியில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
- அம்மாநில அரசு ஆனது, இந்த சட்டப்பூர்வமாக்கல் மூலம் ஆண்டிற்கு 600-700 கோடி ரூபாய் வருவாய் ஈட்ட திட்டமிட்டுள்ளது.
- மணிப்பூர் அரசு 1991 ஆம் ஆண்டில் 'மணிப்பூர் மதுவிலக்கு சட்டத்தை' இயற்றியது என்பதோடு, கடந்த ஆண்டு அத்தடையை பகுதியளவு நீக்கவும் செய்தது.
- பட்டியலிடப்பட்டச் சாதியினர் மற்றும் பழங்குடியினர் சமூகங்களுக்கு அவர்களின் பாரம்பரிய முறைகள் மற்றும் வழக்கமான பல்வேறு சட்டங்களின் கீழ் மதுபானம் காய்ச்சுவதற்கு இது விலக்கு அளித்துள்ளது.




## ஜார்க்கண்ட் மாநில வாசிகள் மசோதா

- 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இருந்து, இரண்டு முறை திருப்பி அனுப்பப்பட்ட 'ஜார்க்கண்ட் மாநில வாசிகள் மசோதாவிற்கு' ஜார்க்கண்ட் மாநில சட்டசபை ஒப்புதல் அளித்துள்ளது.

- இது உள்ளூர் வாசிகள் என்பதை வரையறுப்பதற்கான 'நிலப் பதிவேடுகளுக்கான சான்றுக்கான' வரம்பு நிலை ஆண்டாக 1932 ஆம் ஆண்டினை நிர்ணயிக்கிறது.
- இந்த மசோதாவின் கீழ், 1932 ஆம் ஆண்டு கணக்கெடுப்பு அல்லது காதியன் என்ற ஆவணம் அல்லது அதற்கு முன்பான கணக்கெடுப்பில் ஒருவரின் பெயர் அல்லது மூதாதையர்களின் பெயர் பதிவு செய்யப்பட்டிருந்தால், அவர் உள்ளூர் வாசி என்று அழைக்கப்படுவார்.
- நிலமற்ற நபர்களைப் பொறுத்தவரையில், அவர்களின் கலாச்சாரம், உள்ளூர் பழக்க வழக்கங்கள் மற்றும் பாரம்பரியம் போன்றவற்றின் அடிப்படையில் அதன் கிராம சபைகளால் உள்ளூர் வாசிகளாக அடையாளம் காணப்படுவார்கள்.
- இதே போன்ற கொள்கை 2002 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்டது, ஆனால் அது நீதிமன்றங்களால் ரத்து செய்யப்பட்டது.

**Jharkhand Definition of Local Persons and for Extending the Consequential Social, Cultural and Other Benefits to such Local Persons Bill, 2022**

➤ Local person shall mean domicile of Jharkhand, who is an Indian citizen and resides within the territorial and geographical limits of Jharkhand and he/she or his/her ancestor(s) name is recorded in the survey/khatiyan of 1932 or before

**KEY TAKEAWAYS**

➤ In case landless persons or whose ancestors resided before 1932 but their land record is missing or illegible and they are unable to produce land record, the local gram sabha will be empowered to identify the locals

Both the Acts shall take effect after it is included in the ninth schedule of the constitution of India

## இந்தியாவில் கரும்புலிகள்



- இந்தியாவில் 10 கரும்புலிகள் (கரு நிறமி அதிகம் கொண்ட புலிகள்) உள்ளன என்பதோடு அவை அனைத்தும் ஒடிசாவின் சிமிலிபால் புலிகள் வளங்காப்பகத்தில் மட்டுமே காணப் படுகின்றன.
- அகில இந்தியப் புலிகள் மதிப்பீட்டின் 2022 சுழற்சியின்படி, சிமிலிபால் புலிகள் வளங் காப்பகத்தில் 16 புலிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவர்களில் 10 புலிகள் கரு நிறமி அதிகம் கொண்டவையாகும்.

- மரபியல் கட்டமைப்பின் அடிப்படையில், சிமிலிபால் புலிகள் வளங்காப்பகம் ஆனது வளங் காப்பிற்கான தனித்துவமிக்க மரபணுத் தொகுதியாக அடையாளம் காணப் பட்டுள்ளது.

## இந்தியாவின் முதல் கைரோகாப்டர் வான் சுற்றுலா

- இந்த ஆண்டு இறுதிக்குள், இந்தியாவின் முதல் கைரோகாப்டர் வான் சுற்றுலாவினை உத்தரகாண்ட் மாநில அரசு அறிமுகப்படுத்த உள்ளது.
- இது மாநிலத்தில் சாகசச் சுற்றுலா என்ற கருத்தாக்கத்தை மீண்டும் அறிமுகம் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- முதல் கைரோகாப்டர் சோதனை பயணம் ஆனது பைராகி முகாமில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.
- கைரோகாப்டர் என்பது சுழலிகளைத் திருப்பும் இயந்திரம் இல்லாத, மற்றும் ஒரு சிறிய ஹெலிகாப்டரை ஒத்த வான்வழி வாகனம் ஆகும்.



## இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவு நகரம்

- உத்தரப் பிரதேச மாநில அரசானது, லக்னோவில் நாட்டின் முதல் செயற்கை நுண்ணறிவு நகரத்தை உருவாக்க திட்டமிட்டுள்ளது.
- இந்த நகரம் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பங்களின் சூழலுக்கு ஒரு முக்கிய இடமளிப்பதனையும் அவற்றை மேம்படுத்துவதையும் நோக்கமாக கொண்டுள்ளது.
- செயற்கை நுண்ணறிவு நகரம் ஆனது, புதுமையான கருத்தாக்கங்கள் மற்றும் எதிர்காலத் தொழில் வல்லுநர்களின் மேம்பாட்டிற்கான ஒரு படைப்பாக்கக் களமாக செயல்படுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- லக்னோவின் இந்தியத் தகவல் தொழில்நுட்பக் கல்வி கல்வி கழகத்தில் அமைந்துள்ள சிறப்பு செயற்கை நுண்ணறிவு மையமானது, 15க்கும் மேற்பட்ட செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திரக் கற்றல் சார்ந்த புத்தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவை வழங்குகிறது.
- 2022 ஆம் ஆண்டில் உலகளாவிய செயற்கை நுண்ணறிவு சந்தையானது 137 பில்லியன் டாலர் ஆக மதிப்பிடப் பட்டது என்பதோடு மேலும், 2023 முதல் 2030 ஆம் ஆண்டு வரையில் அது 37.3% என்ற கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதத்தைக் காணும் எனவும் எதிர்பார்க்கப் படுகிறது.

## பணி புரிய மிகவும் விருப்பமான மாநிலம்

- 2024 ஆம் ஆண்டு இந்திய திறன்கள் அறிக்கையில், பணியாற்றுவதற்கு அதிகம் விரும்பப் படும் மாநிலமாக கேரளா உருவெடுத்துள்ளது.
- அனைத்து வயது ஆண்களும் பெண்களும் பணியாற்ற அதிகம் விரும்பும் நகரங்களில் கொச்சி மற்றும் திருவனந்தபுரம் ஆகியவை முறையே இரண்டாவது மற்றும் நான்காவது இடத்தைப் பிடித்துள்ளன.
- பெரும்பாலான பெண்கள் பணியாற்ற விரும்பும் முதல் 10 நகரங்களில் கொச்சி முதல் இடத்தைப் பெற்றுள்ளது.
- 18 முதல் 21 வயதுக்குட்பட்டவர்கள் மத்தியில் அதிகப் பணியாட்கள் வளங்களைக் கொண்ட இரண்டாவது மாநிலம் கேரளா ஆகும்.

## சூரிய சக்தி பூங்கா திட்டம்

- ராஜஸ்தான் மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய இரண்டு மாநிலங்களும் சூரிய சக்தி பூங்கா திட்டத்தின் மூலம் அதிக திறன்களை உருவாக்கியுள்ளன.
- "சூரிய சக்தி பூங்காக்கள் மற்றும் மாபெரும் சூரிய சக்தி மின் உற்பத்தி ஆலைகளின் மேம்பாட்டிற்கான திட்டமானது 20,000 மெகாவாட் மொத்தத் திறன் உற்பத்தி என்ற நோக்குடன் 2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தொடங்கப்பட்டது.
- மேலும், குறைந்தபட்சமாக 50 சூரிய சக்தி பூங்காக்களை அமைப்பதற்காக சூரிய சக்தி பூங்கா திட்டத்தின் கீழான ஆலைகளின் உற்பத்தி திறன் இலக்கு, 2017 ஆம் ஆண்டு மார்ச் மாத்தத்தில் 40,000 மெகாவாட்டாக உயர்த்தப்பட்டது.
- இத்திட்டத்தின் காலக்கெடுவானது 2023-24 ஆம் ஆண்டு வரை நிர்ணயிக்கப் பட்டு உள்ளது.
- 10,401 மெகாவாட் உற்பத்தித் திறனில், ராஜஸ்தான் இதுவரையில் 3065 மெகாவாட் திறனையும், ஆந்திரா 3050 மெகாவாட்டையும் நிறுவியுள்ளன.
- கர்நாடகா மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகியவை முறையே 2000 மெகாவாட் மற்றும் 1000 மெகாவாட் திறன்களை நிறுவியுள்ளன.



# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## தேசிய உலோகவியலாளர் விருது 2022

- 2022 ஆம் ஆண்டு தேசிய உலோகவியல் நிபுணர் விருது (NMA) ஆனது மத்திய எஃகு அமைச்சகத்தினால் வழங்கப்படுகிறது.
- ஐந்து சிறப்புமிக்க உலோகவியலாளர்களுக்கு ஐந்து பிரிவுகளில் மதிப்புமிக்க தேசிய உலோகவியல் நிபுணர் விருது வழங்கப்பட்டது.
- இந்த விருதினைப் பெற்றவர்கள்
    - டாக்டர் காமாட்சி முதலி உத்தண்டி – வாழ்நாள் சாதனையாளர் விருது
    - டாக்டர் தேபாஷிஷ் பட்டாச்சார்ஜி – தேசிய உலோகவியலாளர் விருது
    - டாக்டர் ராமேஷ்வர் சா – இரும்பு மற்றும் எஃகு துறையில் ஆராய்ச்சி & மேம்பாடு
    - டாக்டர் நிலாய் குண்டு – இளம் உலோகவியலாளர் (சுற்றுச்சூழல்) விருது
    - அகிலன் முத்து மாணிக்கம் – இளம் உலோகவியலாளர் (உலோக அறிவியல்) விருது.

## நான்சென் விருது

- 1954 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட UNHCR நான்சென் அகதிகள் விருது ஆனது தனி நபர்கள், குழுக்கள் மற்றும் நிறுவனங்கள், அத்துடன் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மற்றும் நாடற்ற மக்களைக் கௌரவிக்கிறது.
- ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் முகமையான ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் ஆணையம் (UNHCR), 2023 ஆம் ஆண்டிற்கான நான்சென் அகதி விருதினை அப்துல்லா மிரே என்பவருக்கு வழங்குவதாக அறிவித்துள்ளது.
- மிரே, கென்யாவில் 100,000 புத்தகங்களை அகதிக் குழந்தைகளுக்கு வழங்கி கல்விக்கான உரிமைக்காகப் போராடிய முன்னாள் அகதியும் பத்திரிகையாளரும் ஆவார்.
- கென்யாவில் ஒரு பத்திரிகையாளராக பணியாற்றிய அவர் ஹப் லிங்க் எனப்படும் அகதிகள் இளையோர் கல்வி மையத்தை நிறுவினார்.
- இது ஒரு வெளிப்புற, அகதிகள் தலைமையிலான அமைப்பு ஆகும்.

## மாற்றுத்திறனாளிகளுக்கான அதிகாரமளித்தலுக்கான 2023 ஆம் ஆண்டு தேசிய விருதுகள்

- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள், 2023 ஆம் ஆண்டு சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தன்று (டிசம்பர் 3) 21 தனிநபர்கள் மற்றும் 9 நிறுவனங்களுக்கு இந்த தேசிய விருதுகளை வழங்கினார்.
- அவர் புதிய பாராளுமன்றக் கட்டிடத்தை உள்ளடக்கம் மற்றும் ஒத்துணர்வின் அடையாளமாக அடையாளப்படுத்தும் வகையில் அது அணுகத் தக்கதாக உள்ளதாக அறிவித்தார்.
- அமேசான் இந்தியா நிறுவனமானது இந்த மதிப்பு மிக்க தேசிய விருதை வென்றுள்ளது.

- தீபா மல்லிக் மற்றும் ஷீத்தல் தேவி ஆகியோரின் சிறப்பான சாதனைகளுக்காக இந்த விருது அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ஷீத்தல் தேவி, தனது 16 வயதில், இந்த ஆண்டு ஆசிய மாற்றுத் திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டிகளில், இரண்டு தங்கம் உட்பட மூன்று பதக்கங்களைப் பெற்று, மாற்றுத் திறனாளி பெண்களின் மகத்தான திறனை வெளிப்படுத்தினார்.

## 'ஹம்ப் WWII' அருங்காட்சியகம்

- இது இரண்டாம் உலகப் போரின் போது உயிரிழந்த நேச நாட்டுப் படைகளின் விமானப் படை வீரர்களுக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு அருங்காட்சியகம் ஆகும்.
- அருணாச்சலப் பிரதேசத்தின் பாசிகாட் என்னுமிடத்தில் இது திறக்கப்பட்டுள்ளது.
- இது 'தி ஹம்ப்' (மேட்டுப் பகுதி- திமில்) என்று அழைக்கப்படும், வடகிழக்கு அசாம் மற்றும் சீனாவின் யுனான் ஆகியவற்றுக்கு இடையேயான ஆபத்தான விமானப் பாதையில் விமானங்களை இயக்கிய விமானிகளுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக அமைக்கப் பட்டுள்ளது.
- அசாமில் உள்ள விமானநிலையங்களில் இருந்து யுனானில் உள்ள விமான தளங்களுக்குப் பறக்கும் வழித்தடத்தில் நேச நாட்டு விமானிகள் எதிர்கொள்ளும் பயங்கரமான சவால்களின் காரணமாக அந்த விமானப் பாதை அப்பெயரைப் பெற்றது.
- ஹம்ப் விமானப் பாதையானது அசாம், அருணாச்சலப் பிரதேசம், திபெத், மியான்மர் மற்றும் யுனான் (சீனா) வழியாகச் செல்கிறது.
- இந்த விமான பயணங்கள் 1942 முதல் 1945 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்டது.
- இது அமெரிக்க தலைமையிலான நேச நாட்டுப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட, விமான வரலாற்றில் மிக முக்கியமான வான்வழிப் பயணங்களில் ஒன்றாக அமைந்தது.

## ஃபோர்ப்ஸ் ஆசியா இதழின் மனிதவினப் பற்று நாயகர்கள் பட்டியல்

- நந்தன் நீலேகனி, K.P. சிங் மற்றும் நிகில் காமத் ஆகிய மூன்று முக்கிய இந்திய வணிகத் தலைவர்கள் ஃபோர்ப்ஸ் ஆசியா இதழின் 17வது மனிதவினப் பற்றாளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.
- நந்தன் நீலேகனி இன்ஃபோசிஸ் நிறுவனத்தின் இணை நிறுவனர் மற்றும் தலைவர் ஆவார்.
- K.P. சிங் DLF நிறுவனத்தின் தலைவர் ஆவார்.
- நிகில் காமத் செரோதா நிறுவனத்தின் இணை நிறுவனர் ஆவார்.

## சுற்றுலா விருதுகள் 2024

- இந்திய அரசின் சுற்றுலா அமைச்சகமானது, 2024 ஆம் ஆண்டு தேசிய சிறந்த கிராமச் சுற்றுலாப் போட்டி மற்றும் 2024 ஆம் ஆண்டு தேசிய சிறந்த கிராமப்புற தங்கும் விடுதி போட்டி ஆகியவற்றை அறிவித்துள்ளது.
- இந்தியாவில் கிராமப்புறச் சுற்றுலா மேம்பாட்டிற்கான மிக விரிவான தேசிய உத்தி மற்றும் செயல் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த முன்னெடுப்பானது மேற்கொள்ளப் படுகிறது.

## வி.ஆர்.லலிதாம்பிகா – கேரளா

- இவர் ஒரு புகழ்பெற்ற விஞ்ஞானி மற்றும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தில் (ISRO) மனித விண்வெளிப் பயணத் திட்டத்தின் முன்னாள் இயக்குனர் ஆவார்.
- இவர் பிரான்சின் மதிப்புமிக்க 'Légion d'Honneur' விருதைப் பெற்றுள்ளார்.
- இஸ்ரோவின் முன்னாள் தலைவர் ஏ எஸ் கிரண் குமாருக்குப் பிறகு பிரான்சின் இந்த விருதைப் பெற்ற இரண்டாவது இஸ்ரோ விஞ்ஞானி இவர் ஆவார்.
- பிரெஞ்சு தேசிய விண்வெளி நிறுவனமான CNES மற்றும் ISRO ஆகியவற்றுக்கு இடையேயான ஒத்துழைப்பை வளர்ப்பதில் இவர் முக்கியப் பங்கு வகித்தார்.

## சுகந்தி சுந்தரராஜ்

- அப்பல்லோ மருத்துவமனையின் பிராந்திய மக்கள் தொடர்பு தலைவரான சுகந்தி சுந்தரராஜ் என்பவர் PRSI மற்றும் தொழில்துறைக்கான சிறந்தப் பங்களிப்புகளுக்காக இந்திய மக்கள் தொடர்புச் சங்கத்தின் (PRSI) தேசிய விருதைப் பெற்றுள்ளார்.
- புது தில்லியில் நடைபெற்ற சர்வதேச மக்கள் தொடர்பு விழாவில் இவர் விருதைப் பெற்றார்.
- இந்த ஆண்டில் இந்த விழாவின் கருப்பொருள் 'ஜி 20: வளர்ந்து வரும் இந்தியா மற்றும் இந்தியாவின் விழுமியங்களை உலகிற்கு வெளிப்படுத்துதல்: மக்கள் தொடர்புகளுக்கான வாய்ப்புகள்' என்பதாகும்.

## இந்திய இணைய ஆளுமை மன்றம் 2023

- இது இணையம் தொடர்பான பொதுக் கொள்கை சிக்கல்களைப் பற்றி விவாதிக்க பல்வேறு குழுக்களின் பிரதிநிதிகளை ஒன்றிணைக்கும் பல பங்குதாரர் தளமாகும்.
- 2021 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இது ஐ.நா இணைய ஆளுகை மன்றத்துடன் தொடர்புடைய ஒரு முயற்சியாகும்.
- இது "முன்னோக்கி நகருதல் - பாரதத்தின் டிஜிட்டல் நிகழ்ச்சி நிரலை அளவீடு செய்தல்" என்ற கருத்துருவின் கீழ் புது தில்லியில் நடைபெற்றது.

## 2023 ஆம் ஆண்டு ISSA விஷன் ஜீரோ விருது

- ஊழியர்களுக்கான அரசு காப்பீட்டு நிறுவனம் (ESIC) சர்வதேச சமூகப் பாதுகாப்புச் சங்கத்தின் 2023 ஆம் ஆண்டு ISSA விஷன் ஜீரோ விருதினைப் பெற்றது.
- இது சமீபத்தில் ஆஸ்திரேலியாவின் சிட்னியில் நடைபெற்ற வேலையில் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம் குறித்த 23வது உலக காங்கிரஸில் வழங்கப் பட்டது.
- 1927 ஆம் ஆண்டு சர்வதேசத் தொழிலாளர் அமைப்பின் அனுசரணையின் கீழ் சர்வதேச சமூகப் பாதுகாப்புச் சங்கமானது நிறுவப்பட்டது.
- ஸ்விட்சர்லாந்திலுள்ள ஜெனீவாவில் இதன் தலைமையகமானது அமைந்துள்ளது
- ESIC என்பது 1948 ஆம் ஆண்டு ESI சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு சட்டப்பூர்வ பெருநிறுவன அமைப்பாகும்.




## சஃபீனா ஹுசைன்

- இவர் 'Educate Girls' என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனத்தை நிறுவியவர் ஆவார்.
- கல்விக்கான மதிப்புமிக்க WISE என்ற பரிசு இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- கத்தாரின் தோஹா நகரில் நடைபெற்ற 11வது உலக கல்விப் புத்தாக்க உச்சி மாநாட்டில் (WISE) “கத்தார் அறக்கட்டளை” என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனத்தால் இந்த பரிசு வழங்கப் பட்டது.
- இது கல்வித் துறையில் வழங்கப்படும் மிகவும் மதிப்புமிக்க விருதுகளில் ஒன்றாகும்.
- இந்த விருதைப் பெறும் இரண்டாவது இந்தியர் இவர் ஆவார்.
- 2012 ஆம் ஆண்டில் இந்த விருதினைப் பெற்ற முதல் நபர் பிரதாம் அமைப்பின் இணை நிறுவனர் மாதவ் சவான் ஆவார்.

## மலேசியாவில் AIGIF மன்றத்தின் 4வது பதிப்பு

- ஆசியான் இந்தியா அடிமட்ட நிலையில் புத்தாக்க மன்றத்தின் (AIGIF) 4வது பதிப்பை மலேசியா நடத்தியது.
- AIGIF ஆனது அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கங்களில் (STI) இந்தியா மற்றும் ஆசியான் உறுப்பு நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் வருடாந்திரத் தளமாக செயல்படுகிறது.
- அஸ்ஸாமின் காம்ரூப் பகுதியின் சுயால்குச்சியைச் சேர்ந்த திரு. தீபக் பரலி, தனது கண்டுபிடிப்பான நூல் செருக்கும் சாதனத்திற்காக 1வது பரிசைப் பெற்றார்.
- மகாராஷ்டிராவின் ஜல்னாவைச் சேர்ந்த திரு. சுனில் ஷிண்டே, தனது பட்டுப்புழு வளர்ப்பு வலை மடிப்பு இயந்திரத்திற்காக 3வது பரிசைப் பெற்றார்.
- டெல்லியைச் சேர்ந்த ஆஞ்சல் அகர்வால் என்பவரும் பார்கின்சன் லத்தி என்ற தனது படைப்பிற்காக மாணவர்களின் கண்டுபிடிப்பு பிரிவில் 3வது பரிசைப் பெற்றார்.

## 54வது சர்வதேசத் திரைப்பட விழா - கோவா

- 1952 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்திய சர்வதேசத் திரைப்பட விழா (IFFI), ஆண்டு தோறும் கோவாவில் நடத்தப்படும் ஆசியத் திரைப்பட விழாக்களில் ஒன்றாகும்.
- அந்தோணி சென் இயக்கிய பிரஞ்சு, பிரிட்டிஷ் மற்றும் கிரேக்க இணைத் தயாரிப்பு திரைப்படமான Drift மதிப்புமிக்க ICFT-UNESCO காந்தி பதக்கத்தைப் பெற்றுள்ளது.
- ஹாலிவுட் நடிகரும் தயாரிப்பாளருமான மைக்கேல் டக்ளஸ், சினிமாவில் சிறந்து விளங்கியதற்காக மதிப்புமிக்க சத்யஜித் ரே வாழ்நாள் சாதனையாளர் விருதைப் பெற்றார்.
- மாதுரி தீட்சித் நேனேக்கு 'பாரதிய சினிமாவில் ஆற்றியப் பங்களிப்புக்கான சிறப்பு அங்கீகாரம்' என்ற விருது வழங்கப்பட்டது.
- IFFI விழாவில் விருதை வென்ற முதல் கன்னடத் திரைப்படமாக ‘காந்தாரா’ வரலாறு படைத்தது.
- கன்னட நடிகரும், திரைப்படத் தயாரிப்பாளருமான ரிஷப் ஷெட்டி, காந்தாரா திரைப்படத்திற்காக சிறப்பு நடுவண் விருதைப் பெற்றார்.
- Endless Borders திரைப்படம் ஆனது தங்க மயில் விருதை வென்றது.
- Endless Borders படத்தில் நடித்ததற்காக ஈரானிய நடிகர் பூரியா ரஹிமி சாம் சிறந்த நடிகருக்கான விருதைப் பெற்றார்.

**Award List**

- Golden Peacock Best Film: ‘Endless Borders’
- Best Actor-Male: Pouria Rahimi Sam for ‘Endless Borders’
- Best Actor (Female): Melanie Thierry for ‘Party of Fools’
- Best Director: Stephan Komandarev for ‘Blaga’s Lessons’
- Special Jury Award: Rishab Shetty For ‘Kantara’
- Best Debutant Director: Reger Azad Kaya for his Syrian-Arab Republic film ‘When the Seedlings Grow’
- Best Web Series: ‘Panchayat Season 2’
- Satyajit Ray Lifetime Achievement Award: Michael Douglas

## 12வது வருடாந்திர REX CONCLiVE விழா

- ரெக்ஸ் கர்மவீர் உலகப் புத்தாய்வு அங்கத்தினர் 2023-24 மற்றும் சக்ரா விருதுகள் இந்த நிகழ்வில் வழங்கப்பட்டன.
- ரெக்ஸ் கர்மவீர் சக்ரா பதக்கம் என்பது மனிதகுலத்திற்குச் சிறந்தப் பங்களிப்பினை ஆற்றிய நபர்களை அங்கீகரிக்கும் உலகளாவிய குடிமை விருதாகும்.
- செயல்பாடு, கல்வி, தன்னார்வத் தொண்டு மற்றும் சுகாதார நலம் ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்ட சிறந்தப் பங்களிப்பை அங்கீகரித்து, கர்மவீர் சக்ரா விருது 3 வகைகளில் வழங்கப் படுகிறது.

- தங்கப் பதக்கம் - ருமானா சின்ஹா சேகல், டி-ஹப் மையத்தில் உள்ள செரண்டிபிட்டி மற்றும் மென்டார் ஆகியவற்றின் நிறுவனர்
- வெள்ளிப் பதக்கம் - மைஹுர்சா போரோ, அசாம் மாநிலத்தினைச் சேர்ந்த முதல் தலைமுறைச் சமூக தொழில்முனைவாளர் மற்றும் கல்வித் தொழில்முனைவாளர்.
- வெண்கலப் பதக்கம்- நாராயணப்பா, ஆந்திரப் பிரதேசத்தின் குறு விவசாயி




## 2023 ஆம் ஆண்டு REACH மாற்றத்தினை ஏற்படுத்தும் புதுமையாளர் விருது

- ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை நிபுணரான டாக்டர் அதுல் ஷா அவர்களுக்கு, தொழு நோய் சிகிச்சைக்கான அவரது அற்புதமான பங்களிப்பிற்காக 2023 ஆம் ஆண்டு REACH மாற்றத்தினை ஏற்படுத்தும் புதுமையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.
- இவர் தொழுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் குறைபாடுகளை தீர்ப்பதற்காக சிறப்பு உபகரணங்களைப் பயன்படுத்தாமல் மிகவும் எளிய அறுவை சிகிச்சையைப் பயன்படுத்தினார்.
- தொழுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்குப் பொதுவாக ஏற்படும் பாத புண்களைப் பராமரிப்பதில் நோயாளிகளுக்கு உதவும் வகையில் 'சுய-பராமரிப்புத் தொகுப்பு' ஒன்றையும் அவர் வடிவமைத்தார்.
- இந்தப் புதுமையான தீர்வு இந்தியாவின் தேசிய தொழுநோய் ஒழிப்பு திட்டத்தில் (2007 ஆம் ஆண்டு முதல்) ஒருங்கிணைக்கப்பட்டு இந்தியா முழுவதும் சுமார் 80,000 பேர் பயனடைந்துள்ளனர்.

## இந்திரா காந்தி அமைதி பரிசு 2023

- 2023 ஆம் ஆண்டிற்கான அமைதி, ஆயுதக் குறைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான இந்திரா காந்தி பரிசு டேனியல் பாரன்போயிம் மற்றும் அலி அபு அவ்வாத் ஆகியோருக்கு வழங்கப் பட்டுள்ளது.
- இஸ்ரேல்-பாலஸ்தீன மோதலுக்கு அகிம்சை வழியில் தீர்வு காண்பதற்காக இஸ்ரேல் மற்றும் அரபு நாடுகளின் இளைஞர்கள் மற்றும் மக்களை ஒன்றிணைப்பதில் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளுக்காக இது வழங்கப்படுகிறது.

- ஜெர்மனியஜ கூட்டாட்சிக் குடியரசின் கிரேட் கிராஸ் ஆஃப் மெரிட், பிரின்ஸ் ஆஃப் அஸ்டூரியாஸ் விருதுகள் மற்றும் கமாண்டர் ஆஃப் தி லீஜியன் ஆஃப் ஹானர் உள்ளிட்ட பல விருதுகளை பாரன்போயிம் பெற்றுள்ளார்.
- 2014 ஆம் ஆண்டில் அவ்வாத், புரிதல், அகிம்சை மற்றும் மாற்றத்தை ஊக்குவிக்கின்ற ரூட்ஸ் என்ற உள்நாட்டுப் பாலஸ்தீனிய-இஸ்ரேலிய முன்னெடுப்பினை இதர பிறருடன் இணைந்து நிறுவினார்.

## UNIDROIT நிறுவனத்தின் நிர்வாகக் குழு

- இந்தியாவின் உமா சேகர் எனபவர் ரோம் நகரில் அமைந்துள்ள சர்வதேச தனியார் சட்ட ஒருங்கிணைப்பு நிறுவனத்தின் (UNIDROIT) நிர்வாகக் குழுவிற்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- இது இத்தாலியின் ரோம் நகரைத் தலைமையிடமாகக் கொண்ட மிகவும் சுயாதீன அரசுகளுக்கிடையேயான ஒரு அமைப்பாகும்.
- வணிக மற்றும் தனியார் சட்டங்களை நவீனமயமாக்குவதற்கான தேவைகள் மற்றும் முறைகள் உள்ளிட்ட பல்வேறு சட்ட சிக்கல்களை இது கையாள்கிறது.
- இந்த நிர்வாகக் குழுவானது புகழ்பெற்ற சட்ட வல்லுனர்கள் இடம் பெற்ற சுமார் 25 பதவிகளைக் கொண்டுள்ளது.

## அறிவியல் மற்றும் புதுமை மேலாண்மைக்கான 2023 ஆம் ஆண்டு ஃபாலிங் வால்ஸ் பரிசு




- அப்தௌளயே டையாபேட் அவர்களின் ஆராய்ச்சிப் பணிக்காக அறிவியல் மற்றும் புதுமை மேலாண்மைக்கான 2023 ஆம் ஆண்டு ஃபாலிங் வால்ஸ் பரிசு வழங்கப்பட்டது.
- மலேரியாவை உண்டாக்கும் பெண் கொசுக்களின் மரபணுக்களை மாற்றுவதன் மூலம் அவற்றை அழிக்கக் கூடிய ஒரு புதுமையான நுட்பத்தை அவர் உருவாக்கினார்.
- மலேரியா பொதுவாக பெண் அனாபிலிஸ் கொசுக்கள் கடிப்பதன் மூலம் பரவுகிறது.
- மரபணு இயக்கிகள் என்ற ஒரு தொழில்நுட்பத்தின் கீழ், மரபணு மாற்றப்பட்ட ஆண் கொசுக்களைச் சுற்றுச்சூழலில் விடுவதன் மூலம், பெண் கொசுக்கள் புதிய பெண் சந்ததிகளை உற்பத்தி செய்வதைத் தடுக்கின்றன.
- இது பெண் கொசுக்கள் குறைவதற்கு வழிவகுக்கும் என்பதால் இதன் மூலம் கண்டம் முழுவதும் மலேரியா ஏற்படுவதற்கான காரணங்கள் குறையும்.

- 2021 ஆம் ஆண்டில் உலகளவில் ஏற்பட்ட 619,000 உயிரிழப்புகளில் சுமார் 96 சதவிகிதப் பங்குடன், உலகின் மிகப்பெரிய மலேரியா பாதிப்பினை ஆப்பிரிக்கா கொண்டுள்ளது.
- உலக சுகாதார அமைப்பின் சமீபத்திய தரவுகளின்படி, அந்த 96 சதவீதத்தில், 80 சதவீத இறப்புகள் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் மத்தியில் ஏற்பட்டுள்ளன.

## ஷேக் நவாஃப் அல்-அஹ்மத் அல்-ஜாபர் அல்-சபா

- குவைத்தின் அமீர், எமிர் ஷேக் நவாப் அல் அகமது அல் சபா அண்மையில் காலமானார்.
- பட்டத்து இளவரசர் ஷேக் மெஷால் அல்-அஹ்மத் அல்-சபா, ஷேக் நவாப்பின் வாரிசாக நியமிக்கப்பட்டுள்ளார்.
- குவைத்தின் அமீருக்கு மரியாதை செலுத்தும் வகையில் டிசம்பர் 17 ஆம் தேதியன்று நாடு முழுவதும் அரச துக்கத்தை அனுசரிப்பதாக இந்தியா அறிவித்தது.

## சாகித்ய அகாடமி விருதுகள் 2023



- தமிழ் எழுத்தாளர் தேவிபாரதியின் நீர்வழி படூஉம் புதினம் 2023 ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாடமி விருதை வென்றுள்ளது.
- இது தமிழ்நாட்டின் கொங்கு மண்டலத்தில் உள்ள குடி நாவிதர் என்ற முடிதிருத்துநர் சமூகத்தினரின் வாழ்க்கையைச் சித்தரிக்கிறது.
- நீர்வழி படூஉம் என்பது சங்க கால இலக்கியப் படைப்பான புறநானூறு கவிதையின் ஒரு வரியாகும்.
- நீரின் பாதையில் பயணிக்கும் மிதவை என்று பொருள்படும் நீர்வழி படூஉம் "புனை போல் ஆறுயிர் முறைவழி படூஉம்" என்ற வரிகள், விதியால் கட்டமைக்கப்பட்ட ஒரு பாதையில் வாழ்க்கை பயணிக்கிறது என்பதைக் குறிக்கிறது.
- தெலுங்கு எழுத்தாளர் T. பதஞ்சலி சாஸ்திரி மற்றும் மலையாள இலக்கியவாதி E.V. இராமகிருஷ்ணன் ஆகியோர் 2023 ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாடமி விருதுகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் அடங்குவர்.
- ஒன்பது கவிதைப் புத்தகங்கள், ஆறு புதினங்கள், ஐந்து சிறுகதைத் தொகுப்புகள், மூன்று கட்டுரைகள் மற்றும் ஒரு இலக்கிய ஆய்வு ஆகியவை இந்த ஆண்டு சாகித்ய அகாடமி விருதுகளைப் பெற்றுள்ளன.
- 1954 ஆம் ஆண்டு மார்ச் 12 ஆம் தேதியன்று நிறுவப்பட்ட சாகித்ய அகாடமி, மத்திய கலாச்சார அமைச்சகத்தின் கீழான ஒரு தன்னாட்சி அமைப்பாகும்.

## யுனைடெட் எர்த் அமேசானியா பரிசு

- 2023 ஆம் ஆண்டிற்கான பசுமை நோபல் பரிசினைப் பெற உள்ள வெற்றியாளர்களுக்கு 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பிரேசிலின் மனாஸ் நகரில் உள்ள ஒபரா ஹவுஸில் வழங்கப்படும் என்று மார்கஸ் நோபல் அறிவித்தார்.
- யுனைடெட் எர்த் அமேசானியா பரிசு என்பது அமேசான் மழைக்காடுகளில் மேற் கொள்ளப் படும் சுற்றுச்சூழல் பணிகளை அங்கீகரிக்கும் "பசுமை நோபல்" விருது ஆகும்.
- மழைக்காடுகளைப் பாதுகாக்கவும் பராமரிக்கவும் மற்றும் அதன் பல்லுயிர்களைப் பாதுகாக்கவும் உதவும் முக்கியத் திட்டங்களுக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் ஆண்டுதோறும் பரிசு வழங்கப்படுகிறது.
- இது உலகளவில் பயன்படுத்தக்கூடிய வகையிலான புதுமையான அணுகுமுறைகள் மற்றும் நிலையான நடைமுறைகளுக்கு ஊக்கமளிக்கும் விருது ஆகும்.
- இது நோபல் அறக்கட்டளைக்குத் தொடர்பில்லாத ஒரு சுயாதீன சுற்றுச்சூழல் பாராட்டு பரிசு ஆகும்.
- 2023 ஆம் ஆண்டு பரிசினை வென்றவர்கள்
  - பிரேசிலைச் சேர்ந்த அலெஸாண்ட்ரா கோரப் முண்டுருகு
  - சாம்பியாவில் இருந்து சிலேக்வா மும்பா
  - இந்தோனேசியாவைச் சேர்ந்த டெலிமா சிலலாஹி
  - அமெரிக்காவைச் சேர்ந்த டயான் வில்சன்
  - பின்லாந்தைச் சேர்ந்த டெரோ மஸ்டோனென்
  - துருக்கியைச் சேர்ந்த ஜாஃபர் கிசில்காயா

## M.S. வீரராகவன்

- கொடைக்கானலின் ரோஜாப் பூ ஆர்வலர் M.S. வீரராகவன் (86) சமீபத்தில் காலமானார்.
- இந்தியாவின் மிகவும் ஆக்கப்பூர்வமான மற்றும் உற்பத்தி திறன் மிக்க ரோஜா வளர்ப்பாளர்களில் ஒருவராக இவர் கருதப் படுகிறார்.
- அவர் தனது மனைவி கிரிஜாவுடன் இணைந்து, 30 ஆண்டுகளுக்கும் மேலாக அவர்களால் உருவாக்கப்பட்ட ரோஜாவின் கலப்பினங்களைப் பற்றிய Roses in the Fire of Spring என்ற தலைப்பில் ஒரு புத்தகத்தை எழுதியுள்ளார்.

## யுனெஸ்கோ அமைப்பின் 2023 ஆம் ஆண்டு பிரிக்ஸ் வெர்செய்ல்ஸ் விருது

- பெங்களூரின் கெம்பேகௌடா சர்வதேச விமான நிலையம் ஆனது யுனெஸ்கோ அமைப்பின் 2023 ஆம் ஆண்டு பிரிக்ஸ் வெர்செய்ல்ஸ் விருது விழாவில் ஒரு மதிப்புமிக்க அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.
- பெங்களூரு விமான நிலையத்தின் 2வது முனையம் (T2) ஆனது, 'உலகின் மிக அழகான விமான நிலையங்களில்' ஒன்று என்ற சிறப்பைப் பெற்றுள்ளது.
- இது மதிப்புமிக்க 'சிறந்த உட்புறக் கட்டமைப்பிற்கான உலக பரிசு 2023' என்ற பரிசினைப் பெற்றுள்ளது.

- 2வது முனையம் ஆனது முன்னதாக இந்தியப் பசுமைக் கட்டிடக் குழுவின் மதிப்புமிக்க IGBC பிளாட்டினம் தரச் சான்றிதழைப் பெற்றது.



## யுனெஸ்கோ அமைப்பின் ஆசிய-பசிபிக் விருதுகள் 2023




- இந்தியாவின் ஆறு பாரம்பரியம் சார்ந்த திட்டங்களானது கலாச்சாரப் பாரம்பரிய பாதுகாப்பிற்கான மதிப்புமிக்க யுனெஸ்கோ ஆசிய-பசிபிக் விருதுகளைப் பெற்று உள்ளன.
- அமிர்தசரஸில் உள்ள ராம்பாக் நுழைவு வாயிலானது தனிச்சிறப்பு கொண்டவை என்ற பிரிவில் விருதினைப் பெற்றுள்ளது.
- இந்தியாவிலுள்ள ஹரியானாவின் குருகிராமில் உள்ள எபிபானி தேவாலயம், மும்பையில் உள்ள டேவிட் சாசூன் நூலகம் மற்றும் வாசிப்பு அறை; மற்றும் புது டெல்லியில் உள்ள பிகானேர் இல்லம் ஆகியவை சிறந்த தகுதி கொண்டவை என்ற விருதினைப் பெற்றுள்ளன.
- கேரளாவில் உள்ள குன்னமங்கலம் பகவதி கோயிலில் உள்ள கர்ணிகார மண்டபம் மற்றும் பஞ்சாபில் உள்ள குர்தாஸ்பூர் மாவட்டத்தின் பிபால் ஹவேலி ஆகியவை அதன் நிலையான மேம்பாட்டிற்காக இந்த விருதினைப் பெற்றுள்ளன.
- விருது வழங்கப்பட்ட 12 தளங்களில், ஐந்து சீனாவையும், ஆறு இந்தியாவையும், ஒன்று நேபாளத்தையும் சேர்ந்தவை ஆகும்.
- நடுவர் மன்றமானது 8 நாடுகளிலிருந்து மொத்தம் 48 திட்டங்களை மதிப்பீடு செய்து, இந்த மதிப்புமிக்க விருதிற்காக 12 திட்டங்களைத் தேர்வு செய்துள்ளது.

### தேமுதிக நிறுவனர் விஜயகாந்த்

- நடிகரும், தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் நிறுவனருமான விஜயகாந்த் சமீபத்தில் காலமானார்.
- இனிக்கும் இளமை படத்தின் மூலம் அறிமுகமான விஜயகாந்த், அதன் பிறகு 150க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார்.
- 2005 ஆம் ஆண்டு மதுரையில் தேசிய முற்போக்கு திராவிட கழகம் என்ற அரசியல் கட்சியை விஜயகாந்த் தொடங்கினார்.
- தொடங்கப்பட்ட ஒரு வருடம் கழித்து நடந்த 2006 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில், தேமுதிக 8.4% வாக்குகளைப் பெற்றது.
- 2011 சட்டமன்றத் தேர்தலில் தேமுதிக 29 இடங்களைப் பெற்று இரண்டாவது இடத்தைப் பிடித்ததோடு, அந்தக் கட்சியின் நிறுவனரான விஜயகாந்த் எதிர்க் கட்சித் தலைவராகவும் ஆனார்.




## விளையாட்டுச் செய்திகள்

### 13வது ஹாக்கி இந்தியா மூத்தோர் ஆடவர் தேசிய சாம்பியன்ஷிப் போட்டி 2023

- 13வது ஹாக்கி இந்தியா மூத்தோர் ஆடவர் தேசிய சாம்பியன்ஷிப் போட்டியில் (2023) ஹாக்கி பஞ்சாப் அணியானது ஹாக்கி ஹரியானா அணியினை வீழ்த்தி தங்கப் பதக்கத்தை வென்றது.
- இந்தப் போட்டியானது, தமிழ்நாட்டின் சென்னை மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி மைதானத்தில் நடைபெற்றது.
- தமிழக ஹாக்கி அணியானது ஹாக்கி கர்நாடகா அணியினை வீழ்த்தி வெண்கலப் பதக்கத்தை வென்றது.

### 17 வயதிற்குட்பட்டோருக்கான FIFA உலகக் கோப்பை போட்டி 2023

- ஜெர்மனி அணியானது முதல் முறையாக இந்தக் கோப்பையை வென்றுள்ளது.
- இந்தோனேசிஷியாவில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஜெர்மனி அணி பிரான்சு அணியினை வீழ்த்தியது.

- இந்தோனேசியா FIFA போட்டியை நடத்திவதும், 17 வயதிற்குட்பட்டோருக்கான FIFA உலகக் கோப்பை போட்டி தென்கிழக்கு ஆசியாவில் நடத்தப்படுவதும் இதுவே முதல் முறையாகும்.

## கேலோ இந்தியா பாரா விளையாட்டுப் போட்டிகள் 2023

- மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் சிங் தாக்கூர், முதல் கேலோ இந்தியா பாரா விளையாட்டுப் போட்டிகள் 2023 என்பதற்கான முத்திரை மற்றும் சின்னத்தை வெளியிட்டார்.
- முதல்முறையாக கேலோ இந்தியா பாரா விளையாட்டுப் போட்டிகள் புதுதில்லியில் நடைபெற உள்ளது.
- இதன் அலுவல்பூர்வ முத்திரை மற்றும் சின்னமாக, 'உஜ்வாலா' எனும் ஒரு சிட்டுக் குருவி சின்னமானது, இந்த விழாவின் போது வெளியிடப்பட்டது.
- இது 2018 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டதிலிருந்து, கேலோ இந்தியா 11 பதிப்புகளை வெற்றிகரமாக நடத்தியுள்ளது.
- இதில் 5 கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள், 3 கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள் மற்றும் 3 கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப் போட்டிகள் ஆகியன அடங்கும்.




## 79வது தேசிய ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் போட்டி - சென்னை

- டெல்லியைச் சேர்ந்த அனாஹத் சிங் (15), 2023 ஆம் ஆண்டு தேசிய ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் (மகளிர்) பட்டத்தை வென்ற இரண்டாவது இளம் நபர் ஆவார்.
- தமிழ்நாட்டைச் சேர்ந்த வேலவன் செந்தில்குமார் 2023 ஆம் ஆண்டிற்கான மூத்தோர் தேசிய ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் ஆடவர் பிரிவில் வெற்றி பெற்றார்.
- சென்னையைச் சேர்ந்த ஜோஷ்னா சின்னப்பா இந்தியாவின் இளம் சாம்பியன் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.
- அவர் 2000 ஆம் ஆண்டில் தனது 14வது வயதில் அவரது 19 தேசியப் பட்டங்களில் முதல் பட்டத்தினைப் பெற்றார்.




## படைப்பிரிவுகளுக்கு இடையேயான கடல்சார் பாய்மரக் கப்பல் பந்தயம் 2023

- இந்தியக் கடற்படையானது, படைப்பிரிவுகளுக்கு இடையேயான 2வது கடல்சார் பாய்மரக் கப்பல் பந்தயத்தினை (2023) கொச்சியில் உள்ள கடற்படைத் தளத்தில் தொடங்கியது.
- இந்தப் பந்தயம் ஆனது கொச்சியில் இருந்து கோவா வரை நடைபெற உள்ளது.
- இது புது டெல்லியில் உள்ள கடற்படைத் தலைமையகத்தில் அமைந்த இந்திய கடற்படை கடற்பயணச் சங்கத்தின் (INSA) கீழ் தெற்கு கடற்படைப் படைப்பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இந்தப் பந்தயத்தில் புல்புல், நீலகந்த், கடல்பூர் மற்றும் ஹரியால் என்ற நான்கு 40-அடி இந்தியக் கடற்படை பாய்மரக் கப்பல்கள் (INSVs) இடம் பெற்றுள்ளன.
- இதில் ஆண் மற்றும் பெண் ஆகிய இருபாலினத்தினைச் சேர்ந்த அதிகாரிகள் மற்றும் மாலுமிகள் ஆகியோரை உள்ளடக்கிய கலப்புக் குழு பங்கு பெறுவதால் இந்த ஆண்டு பந்தயம் முற்றிலும் வேறுபட்டது ஆகும்.
- இது பாலின மற்றும் சமத்துவ நடுநிலைமையை அடையாளப்படுத்தி, அனைவருக்கும் சமமான வாய்ப்பை வழங்குகிறது.

## ITF உலக வாகையர்

- நோவக் ஜோகோவிச் (ஆண்) மற்றும் அரினா சபலென்கா (பெண்) ஆகியோரின் மகத்தான 2023 ஆம் ஆண்டு டென்னிஸ் தொடர்களைத் தொடர்ந்து ITF உலக வாகையர்களாக அறிவிக்கப்பட்டனர்.
- 8வது ITF உலக வாகையர் பட்டத்துடன், 24 முறை கோப்பை வென்ற இவர் அதிக ITF உலக வாகையர் பட்டங்கள் பெற்றவர் என்ற சாதனையையும் முறியடித்தார்.
- இகா ஸ்வியாடெக் 2023 ஆம் ஆண்டின் பெண்கள் டென்னிஸ் சங்கத்தின் சிறந்த வீரராக அறிவிக்கப்பட்டார்
- 1977 ஆம் ஆண்டில் இவ்விருது அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து அடுத்தடுத்த வருடங்களில் இந்த விருதை வென்ற ஆறாவது பெண் என்ற பெருமையை ஸ்விடெக் பெற்றார்.

- கடைசியாக, செரீனா வில்லியம்ஸ் 2012 முதல் 2015 ஆம் காலக்கட்டத்தில் இந்தப் பட்டத்தினை அடுத்தடுத்து பெற்றுள்ளார்.



## கேலோ இந்தியா மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டிகள் 2023

- முதலாவது கேலோ இந்தியா மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டிகளில், ஹரியானா அணியானது 40 தங்கம், 39 வெள்ளி மற்றும் 26 வெண்கலப் பதக்கங்கள் என மொத்தம் 105 பதக்கங்களுடன் முதலிடத்தைப் பெற்றுள்ளது.
- 25 தங்கம், 23 வெள்ளி, 14 வெண்கலம் என மொத்தம் 62 பதக்கங்களுடன் உத்தரப் பிரதேச அணியானது இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.
- தமிழ்நாடு அணியானது 20 தங்கம், 8 வெள்ளி மற்றும் 14 வெண்கலப் பதக்கங்களுடன் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது.

KIPG 2023 medal winners

| Rank | State | Gold medals | Silver medals | Bronze medals | Total medals |
|---|---|---|---|---|---|
| 1 | Haryana | 40 | 39 | 26 | 105 |
| 2 | Uttar Pradesh | 25 | 23 | 14 | 62 |
| 3 | Tamil Nadu | 20 | 8 | 14 | 42 |
| 4 | Gujarat | 15 | 22 | 20 | 57 |
| 5 | Maharashtra | 12 | 7 | 16 | 35 |

## தேசிய விளையாட்டு விருதுகள் 2023

- இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகம் ஆனது, 2023 ஆம் ஆண்டு தேசிய விளையாட்டு விருதுகளை அறிவித்துள்ளது.
- இந்திய வேகப்பந்து வீச்சாளர் முகமது ஷமி மற்றும் 2023 ஆம் ஆண்டின் வில்வித்தைப் போட்டியின் திருப்புமுனை நாயகி அதிதி கோபிசந்த் சுவாமி உட்பட 26 விளையாட்டு வீரர்களுக்கு அர்ஜுனா விருது வழங்கப்பட உள்ளதாக உறுதி செய்யப்பட்டது.

- 2023 ஆம் ஆண்டிற்கான மேஜர் தியான் சந்த் கேல் ரத்னா விருது: சிராக் ஷெட்டி மற்றும் சாத்விக் சாய்ராஜ் ரங்கிரெட்டி (பேட்மிண்டன்).
- வழக்கமான பிரிவில் ஐந்து பயிற்சியாளர்கள் மற்றும் வாழ்நாள் பிரிவில் மூன்று பயிற்சியாளர்கள் துரோணாச்சார்யா விருதிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- சிறந்த பயிற்சியாளர்களுக்கான துரோணாச்சார்யா விருது (வழக்கமான பிரிவு): லலித் குமார் (மல்யுத்தம்), R.B. ரமேஷ் (சதுரங்கம்), மஹாவீர் பிரசாத் சைனி (மாற்றுத் திறனாளிகளுக்கானத் தடகளம்), சிவேந்திர சிங் (ஹாக்கி), கணேஷ் பிரபாகர் தேவ்ருக்கர் (மல்லர் கம்பம்).
- சிறந்த பயிற்சியாளர்களுக்கான துரோணாச்சார்யா விருது (வாழ்நாள் சாதனையாளர் பிரிவு): ஜஸ்கிரத் சிங் கிரேவால் (கோல்ப்), பாஸ்கரன். E (கபடி), ஜெயந்த குமார் புஷிலால் (மேசை பந்தாட்டம்).
- வாழ்நாள் சாதனைக்கான தியான் சந்த் விருது: மஞ்சுஷா கன்வார் (பேட்மிண்டன்), வினீத் குமார் சர்மா (ஹாக்கி), கவிதா செல்வராஜ் (கபடி).

| Sports awards in India | Awarded For |
|---|---|
| Major Dhyan Chand Khel Ratna Award | Awarded for outstanding performances in sports spanning over a period of four years. |
| Arjuna Award | Given out for consistent good performance over a period of four years. |
| Dronacharya Award | It is awarded to coaches for producing medal winners at prestigious international events. |
| Major Dhyan Chand Award | Presented for good performance and contributing towards the promotion of sports. |
| Maulana Abul Kalam Azad Trophy | Given to the university for top performance in inter-university tournaments over the last one year. |
| Rashtriya Khel Protsahan Puruskar | Awarded to organisations and individuals for playing a role in the area of sports promotion and development over the last three years. |
| Tenzing Norgay National Adventure Award | To recognise outstanding achievements in the field of adventure activities or sports on land, sea and air. |


## FIH ஹாக்கி நட்சத்திர விருதுகள் 2023

- இந்திய மகளிர் அணித் தலைவர் சவிதா புனியா மற்றும் ஆடவர் அணியின் துணைத் தலைவர் ஹர்திக் சிங் ஆகியோர் 2023 ஆம் ஆண்டு FIH ஹாக்கி நட்சத்திர விருதுகளைப் பெற்றுள்ளனர்.
- சவிதா இந்த ஆண்டின் மகளிர் கோல் கீப்பர் விருதைத் தொடர்ந்து மூன்றாவது முறையாக வென்றுள்ளார்.
- ஹர்திக் ஆண்டின் சிறந்த வீரராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- 2022 ஆம் ஆண்டின் சிறந்த வீரருக்கான ஹாக்கி இந்தியா பல்பீர் சிங் சீனியர் விருதும் அவருக்கு வழங்கப்பட்டது.




# முக்கிய தினங்கள்

### தேசிய மாணாக்கர் படை (NCC) – 75வது ஆண்டுவிழா




- 2023 ஆம் ஆண்டு நவம்பர் 27 ஆம் தேதியன்று, தேசிய மாணாக்கர் படை (NCC) அதன் 75வது ஆண்டு விழாவைக் கொண்டாடியது.
- இந்திய ஆயுதப் படைகளின் இளையோர் படைப் பிரிவாகச் செயல்படுகிற இதன் தலைமையகம் புது டெல்லியில் அமைந்துள்ளது.
- தேசிய மாணாக்கர் படை என்பது மத்தியப் பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தன்னார்வ இராணுவ மாணாக்கர் படையான இதில் பள்ளி மாணவர் மற்றும் கல்லூரி மாணவர்களுக்கும் இதில் இணைய அனுமதி உண்டு.

- 1917 ஆம் ஆண்டு இந்திய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட 'பல்கலைக் கழகப் படையில்' இருந்து தேசிய மாணாக்கர் படை உருவாக்கப்பட்டது.
- 1920 ஆம் ஆண்டில், இந்தியப் பிராந்தியச் சட்டம் நிறைவேற்றப்பட்டபோது, 'பல்கலைக் கழகப் படை'க்குப் பதிலாக பல்கலைக்கழகப் பயிற்சிப் படை (UTC) உருவாக்கப்பட்டது.
- அதைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட தேசிய மாணாக்கர் படை சட்டம் தலைமை ஆளுநரால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, 1948 ஆம் ஆண்டு ஜூலை 15 ஆம் தேதியன்று தேசிய மாணாக்கர் படை நடைமுறைக்கு வந்தது.

## உலக எய்ட்ஸ் தினம் 2023 – டிசம்பர் 01

- இத்தினம் 1988 ஆம் ஆண்டு முதல், பெறப்பட்ட நோயெதிர்ப்பு குறைபாடு நோய்க்குறி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது மனித நோயெதிர்ப்பு மண்டலத்தைப் பாதிக்கும் மனித நோயெதிர்ப்பு குறைபாடு வைரஸ் (HIV) தொற்று காரணமாக ஏற்படும் ஒரு தொற்றுநோயாகும்.
- இந்தியாவில் சுமார் 2.47 மில்லியன் மக்கள் HIV பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்டு உள்ளதோடு, கடந்த ஆண்டு சுமார் 66,000 புதிய பாதிப்புகள் பதிவாகியுள்ளன.
- டிசம்பர் 01 ஆம் தேதியன்று உலக சுகாதார அமைப்பு ஆனது, சமூகங்கள் மற்றும் பங்குதார அமைப்புகளுடன் சேர்ந்து "Let communities lead" என்ற கருத்துருவின் கீழ் 2023 ஆம் ஆண்டு உலக எய்ட்ஸ் தினத்தை நினைவு கூருகிறது.

## தேசிய மாசுக் கட்டுப்பாட்டு தினம் 2023 – டிசம்பர் 02

- ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 02 ஆம் தேதியானது தேசிய மாசுக் கட்டுப்பாட்டு தினமாக அனுசரிக்கப் படுகிறது.
- 1984 ஆம் ஆண்டு டிசம்பர் 02 மற்றும் டிசம்பர் 03 ஆம் தேதிகளில், மத்தியப் பிரதேசத்தின் போபால் நகரில் உள்ள யூனியன் கார்பைடு இந்தியா லிமிடெட் என்ற பூச்சிக்கொல்லி உற்பத்தி ஆலையில் இருந்து சில இரசாயனங்களோடு சேர்த்து மெத்தில் ஐசோசயனேட் என்ற தீங்கு விளைவிக்கும் இரசாயனம் வெளியானது.
- மத்தியப் பிரதேச மாநில அரசானது, தீங்கு விளைவிக்கும் வாயுக்களின் வெளிப்பாட்டால் 25000 பேர் இறந்ததாக அறிவித்தது.
- இந்த எதிர்பாராத சம்பவத்தால் உயிரிழந்த மக்களை நினைவு கூரும் வகையில் தேசிய மாசுக் கட்டுப்பாட்டு தினம் கொண்டாடப்படுகிறது.
- 2023 ஆம் ஆண்டு தேசிய மாசுக் கட்டுப்பாட்டு தினத்திற்கான கருத்துரு, "தூய்மையான மற்றும் ஆரோக்கியமான கிரகத்திற்கான நிலையான மேம்பாடு" என்பதாகும்.

## அடிமைத்தனத்தை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் 2023 – டிசம்பர் 02


- ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 02 ஆம் தேதியன்று கொண்டாடப்படும் அடிமைத் தனத்தை ஒழிப்பதற்கான சர்வதேச தினமானது, உலகில் இன்றும் நிலவி வரும் அடிமைத் தனம் குறித்த கவனத்தை ஈர்க்கிறது.
- ஐக்கிய நாடுகள் சபையின் கூற்றுப்படி, அடிமைத்தனம் உலகம் முழுவதும் 40 மில்லியனுக்கும் அதிகமான மக்களைப் பாதித்துள்ளது.

- 1949 ஆம் ஆண்டு டிசம்பர் 02 ஆம் தேதியன்று, ஐக்கிய நாடுகள் சபையானது தனி நபர்களின் கடத்தல் மற்றும் பாலியல் தொழிலில் ஈடுபடுபவர்கள் மீது மேற்கொள்ளப் படும் அத்துமீறல்கள் ஆகியவற்றை ஒடுக்குவதற்கான உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டது.
- 1985 ஆம் ஆண்டில், அடிமைத்தனம் தொடர்பான பணிக்குழுவின் ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையானது டிசம்பர் 02 ஆம் தேதியை அடிமைத்தனத்தை ஒழிப்பதற்கான உலக தினத்தினை அறிவிக்குமாறு பரிந்துரைத்தது.
- 1995 ஆம் ஆண்டில், இது உலகம் முழுவதும் அடிமைத்தனத்தை ஒழிப்பதற்கான சர்வதேச தினமாக அறியப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான அடிமைத்தனத்தை ஒழிப்பதற்கான சர்வதேச தினத்தின் கருத்துரு – மாறிவரும் கல்வியின் மூலம் இனவெறியின் அடிமைத்தன மரபினை எதிர்த்துப் போராடுதல் - என்பதாகும்.

## நாகாலாந்து மாநில தினம் 2023 – டிசம்பர் 01

- நாகாலாந்து மாநிலம் தனது 61வது மாநில தினத்தை 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 01 ஆம் தேதியன்று கோலாகலமாகக் கொண்டாடியது.
- இது நாகா மாநிலத்தவர்களின் குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது.
- இது 1963 ஆம் ஆண்டில் இந்திய ஒன்றியத்தின் 16வது மாநிலமாக மாறியது.

## உலக மாற்றுத்திறனாளிகள் தினம் அல்லது சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் 2023 – டிசம்பர் 03





- இது 1992 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தீர்மானத்தின் மூலம் பிரகடனப் படுத்தப்பட்டது.
- மாற்றுத்திறனாளிகளின் மரியாதை, உரிமைகள் மற்றும் நல்வாழ்வுக்கான ஆதரவைத் திரட்டுதல் மற்றும் மாற்றுத்திறனாளிகள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றிய புரிதலை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "மாற்றுத்திறனாளிகளுக்காக, அவர்களுடன் இணைந்து மற்றும் அவர்களால் நிலையான மேம்பாட்டு இலக்குகளை காப்பதற்கும் அடைவதற்கும் நடவடிக்கையில் ஒன்றுபடுவோம்" என்பதாகும்.

## உலக கணினி கல்வியறிவு தினம் 2023 – டிசம்பர் 02

- NIIT எனப்படும் இந்தியப் பன்னாட்டு நிறுவனத்தின் 20வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் இந்த நாள் தொடங்கப்பட்டது.
- உலக கணினி எழுத்தறிவு தினம் ஆனது முதன்முதலில் 2001 ஆம் ஆண்டில் கொண்டாடப் பட்டது.
- இது மக்களிடையே, குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளிடையே கணினி கல்வியறிவை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இந்தியக் கடற்படை தினம் 2023 – டிசம்பர் 04




- 1971 ஆம் ஆண்டு இந்தியா-பாகிஸ்தான் போரின் போது பாகிஸ்தானுக்கு எதிராக ட்ரைடென்ட் நடவடிக்கை தொடங்கப்பட்டதை நினைவு கூரும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 04 ஆம் தேதியன்று இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- சிந்துதுர்க்கில் நடைபெற உள்ள நிகழச்சியில் MiG 29K மற்றும் கடற்படையின் இலகுரக போர் விமானங்கள் உள்ளிட்ட 40 விமானங்களுடன் 20 போர்க்கப்பல்கள் பங்கேற்க உள்ளன.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "கடல்சார் களத்தில் செயல்பாட்டுத் திறன், தயார்நிலை மற்றும் பணியை நிறைவேற்றுதல்" என்பதாகும்.


## சர்வதேச வங்கிகள் தினம் 2023 – டிசம்பர் 04

- 2019 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை ஆனது டிசம்பர் 04 ஆம் தேதியை சர்வதேச வங்கி தினமாகக் அனுசரிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றியது.
- உலகளாவியப் பணவியல் மற்றும் நிதி அமைப்பின் பயன் மிகு செயல்பாட்டைப் பாதுகாப்பதில் வங்கிகளின் கூட்டு ஒத்துழைப்பிற்கு இது முக்கியத்துவம் அளிக்கிறது.
- "நிலையான மேம்பாட்டு இலக்குகளை அடைதல் மற்றும் உலகளாவிய நிதி கட்டமைப்பை மேம்படுத்துதல்" என்பது இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு ஆகும்.

## சர்வதேச சிவிங்கிப் புலிகள் தினம் 2023 – டிசம்பர் 04

- சிவிங்கிப் புலிகள் ஆனது, பூமியின் வேகமான நிலவாழ் விலங்குகள் மற்றும் பாலூட்டி இனம் எனப் புகழப்படுகிறது.
- வனங்களில் 7,000 சிவிங்கிப் புலிகள் மட்டுமே எஞ்சியுள்ளதையடுத்து சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியம் (IUCN) ஆனது, சிவிங்கிப் புலிகளை பாதிக்கப்படக் கூடிய இனமாக வகைப்படுத்துகிறது.
- இந்த தேதியானது, அமெரிக்காவின் டாக்டர் லாரி மார்க்கரால் வளர்க்கப்பட்ட கயாம் என்ற சிவிங்கிப் புலியின் பிறந்தநாளாகும்.
- கயாம் என்பது அமெரிக்காவின் ஓரிகான் என்ற மாகாணத்தில் உள்ள வனவிலங்கு காப்பகத்தில் மார்க்கரால் வளர்க்கப்பட்ட ஒரு சிவிங்கிப் புலிக் குட்டியாகும்.
- 1990 ஆம் ஆண்டில் சிவிங்கிப் புலிகள் பாதுகாப்பு நிதியம் (CCF) நிறுவப்பட்டதன் மூலம் சிவிங்கிப் புலிகளைப் பாதுகாப்பதற்கான உறுதிப்பாடு சிறப்பிக்கப் படுகிறது.

## உலக மண் தினம் 2023 – டிசம்பர் 05




- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'மண்ணும் நீரும், வாழ்வின் ஆதாரம்' என்பதாகும்.
- இத்தினம் சர்வதேச மண் அறிவியல் சங்கத்தின் (IUSS) முயற்சியால் நிறுவப்பட்டது.

- 2002 ஆம் ஆண்டில் சர்வதேச மண் அறிவியல் சங்கமானது, 2002 ஆம் ஆண்டில் மண்ணின் சிறப்பைக் கொண்டாடுவதற்காக ஒரு சர்வதேச தினத்தை நிறுவுவதற்குப் பரிந்துரைத்தது.
- தாய்லாந்து இராட்சியத்தின் தலைமைத்துவத்துடனும், உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் (FAO) ஆதரவுடனும், உலகளாவிய மண் கூட்டாண்மை கட்டமைப்பிற்குள் உலக மண் தினம் ஓர் உலகளாவிய விழிப்புணர்வுத் தளமாக உருவானது.
- தாய்லாந்து மன்னர் பூமிபால் அதுல்யதேஜ் அவர்களின் பிறந்தநாளை ஒட்டி டிசம்பர் 05 ஆம் தேதியானது இத்தினத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- 2013 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில், உணவு மற்றும் வேளாண் அமைப்பின் மாநாடு ஆனது, உலக மண் தினத்தை அங்கீகரித்து, பின்னர் 68வது ஐக்கிய நாடுகள் பொதுச் சபையை அணுகி அதனை அதிகாரப் பூர்வமாக ஏற்றுக் கொள்ள கோரியது.
- குன்மிங்-மாண்ட்ரியல் உலகப் பல்லுயிர் கட்டமைப்பானது, பல்லுயிர் இழப்பைத் தடுத்து நிறுத்துவதற்கும் அதனை மீட்டெடுப்பதற்குமான அவசர நடவடிக்கைகளை எடுப்பதற்கான ஒரு திட்டமாகும்.

## சர்வதேச தன்னார்வலர் தினம் 2023 – டிசம்பர் 05

- இது 1985 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் நிறுவப் பட்டது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "கூட்டு நடவடிக்கையின் சக்தி: எல்லோரும் தொண்டாற்றினால்" என்பதாகும்.
- இது தனிநபர்கள், அரசு சாரா நிறுவனங்கள், ஐக்கிய நாடுகள் சபையின் முகமைகள், அரசு அதிகாரிகள் மற்றும் தனியார் துறைகள் தன்னார்வத் தொண்டுகளின் மதிப்புகளைக் கொண்டாடுவதற்கும், ஊக்குவிப்பதற்கும் மற்றும் பகிர்ந்து கொள்ளச் செய்வதற்குமான ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்குகிறது.

## UNCTAD இணைய வர்த்தக வாரம் 2023 – டிசம்பர் 04 முதல் 08 வரை

- இது ஜெனீவா நகரில் அமைந்த சர்வதேச மாநாட்டு மையத்தில் (CICG) நடைபெற உள்ளது.
- வளர்ந்து வரும் உலகளாவிய எண்ணிமக் கட்டமைப்பின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கும் வகையில் இது இணைய வர்த்தக (eWeek) வாரம் என மறுபெயரிடப் பட்டது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "எண்ணிமப் பொருளாதாரத்தின் எதிர்காலத்தை வடிவமைத்தல்" என்பதாகும்.

## தேசிய நுண்ணலை கனலடுப்பு தினம் 2023 – டிசம்பர் 06

- சுயமாக திறன் பயிற்சிகளை கற்று தேர்ந்த பெர்சி ஸ்பென்சர் என்ற அமெரிக்கப் பொறியாளர், உணவைப் பாதுகாப்பான முறையில் வேகமாகச் சூடாக்குவதற்காக நுண்ணலைகளை வெகுவாகப் பயன்படுத்தும் ஒரு முறையை 1945 ஆம் ஆண்டில் கண்டுபிடித்தார்.
- நெருப்பில் கிண்ணங்கள் மற்றும் பாத்திரங்களைப் பயன்படுத்தும் பாரம்பரிய சமையல் முறையைப் போலல்லாமல், இந்த நுண்ணலை கனலடுப்புகள் மின்காந்தக் கதிர்வீச்சைப் பயன்படுத்துகின்றன.

- 1945 ஆம் ஆண்டு அக்டோபர் 08 ஆம் தேதியன்று ரெய்தியோன் நிறுவனத்தினால் இதற்கான காப்புரிமை தாக்கல் செய்யப்பட்டு முதல் நுண்ணலை கனலடுப்புகளுக்கு "ராடராஞ்" என்று பெயரிடப்பட்டது.

## மகாபரிநிர்வான் திவாஸ்

- டிசம்பர் 06 ஆம் தேதியானது, டாக்டர் B.R. அம்பேத்கர் அவர்களின் மகாபரிநிர்வான் திவாஸ் ஆகும்.
- டாக்டர் B.R. அவர்களின் நினைவு தினம் ஆனது ஆண்டுதோறும் டிசம்பர் 06 ஆம் தேதி அன்று அனுசரிக்கப்படுகிறது.
- அம்பேத்கர் அவர்கள் 1956 ஆம் ஆண்டில் டெல்லியில் உயிரிழந்தார்.
- பரிநிர்வாணம் என்பது பௌத்தத்தில் உள்ள ஒரு அடிப்படைக் கருத்தைப் பிரதிபலிக்கிறது.
- இது ஒருவரின் வாழ்நாளில் மற்றும் மரணத்திற்குப் பிறகும் நிர்வாணத்தை அல்லது விடுதலையை அடைவதைக் குறிக்கிறது.
- சமஸ்கிருதத்தில், மரணத்திற்குப் பின் நிர்வாணத்தை அடைவது அல்லது இறந்த பிறகு உடலிலிருந்து ஆன்மாவை விடுவிப்பது பரிநிர்வாணம் என்று குறிப்பிடப்படுகிறது.
- பாலி மொழியில் "பரினிபானா" என்ற சொல் நிர்வாணத்தின் அடைவதைக் குறிப்பிடச் செய்வதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

## ஆயுதப் படைகளின் கொடி நாள் 2023 – டிசம்பர் 07

- பாதுகாப்பு அமைச்சகம் ஆனது 1949 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 28 ஆம் தேதியன்று டிசம்பர் 07 ஆம் தேதி ஆயுதப்படைகளின் கொடி தினமாக கொண்டாடப்படும் என்று அறிவித்தது.
- இந்தியா நாட்டின் பெருமையைப் பாதுகாப்பதற்காக நமது நாட்டின் எல்லையில் வீரத்துடன் போராடிய, தொடர்ந்து போராடி வரும் தியாகிகள் மற்றும் சீருடை அணிந்த வீரர்களை கௌரவிக்கும் விதமாக இத்தினம் ஆனது கொண்டாடப்படுகிறது.
- ஆயதப் படைகளின் மேம்பாட்டிற்காக நிதி சேகரிப்பதற்காக இத்தினம் கொண்டாடப் படுகிறது.

## சர்வதேசப் பொது விமானப் போக்குவரத்து தினம் 2023 – டிசம்பர் 07

- இது 1944 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட சர்வதேசப் பொது விமானப் போக்குவரத்து அமைப்பு (ICAO) நிறுவப்பட்ட நாளையும், அதன் தனித்துவமானப் பங்கினையும் நினைவு கூருகிறது.
- ICAO என்பது ஐக்கிய நாடுகள் சபையின் ஓர் அங்கமாகும்.
- 1994 ஆம் ஆண்டு டிசம்பர் 07 ஆம் தேதியன்று, சிகாகோ உடன்படிக்கையின் 50வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், ICAO முதல் முறையாக சர்வதேசப் பொது விமானப் போக்குவரத்து தினத்தை அனுசரித்தது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "உலகளாவிய விமானப் போக்குவரத்து மேம்பாட்டிற்கான புதுமைகளை மேம்படுத்துதல்" என்பதாகும்.

## சார்க் அமைப்பின் சாசன தினம் - டிசம்பர் 08




- 1985 ஆம் ஆண்டு டிசம்பர் 08 ஆம் தேதியன்று டாக்காவில் நடைபெற்ற முதல் சார்க் (SAARC) உச்சி மாநாட்டில் கையெழுத்தான சார்க் சாசனம் ஆனது சார்க் அமைப்பு நிறுவப் பட்டதைக் குறிக்கிறது.
- அன்றிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 08 ஆம் தேதியன்று சார்க் சாசன தினமாக அனுசரிக்கப்படுகிறது.
- சார்க் அமைப்பு பற்றிய விழிப்புணர்வை ஊக்குவித்தல் மற்றும் அந்தப் பிராந்தியத்திலும் அதற்கு அப்பாலும் தெற்காசிய நாடுகளின் அடையாளம் மற்றும் ஒற்றுமையை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சார்க் சாசனத்தில் வங்காளதேசம், பூடான், இந்தியா, மாலத்தீவு, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய ஏழு தெற்காசிய நாடுகளின் தலைவர்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

## சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினம் - டிசம்பர் 09

- இத்தினம், ஊழல் எதிர்ப்பு மற்றும் அமைதி, பாதுகாப்பு மற்றும் மேம்பாடு ஆகியவற்றுக்கிடையேயான முக்கியமான தொடர்பை முன்னிலைப்படுத்த வேண்டி முயல்கிறது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது, 2003 ஆம் ஆண்டு அக்டோபர் 31 ஆம் தேதி அன்று ஐக்கிய நாடுகள் சபையின் ஊழலுக்கு எதிரான உடன்படிக்கையினை (UNCAC) ஏற்றுக்கொண்டது.
- இந்த நாளானது, முதன்முதலில் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் 09 ஆம் தேதியன்று அதிகார ப்பூர்வமாக அனுசரிக்கப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, '20வது ஆண்டில் UNCAC: ஊழலுக்கு எதிராக உலகை ஒன்றிணைத்தல்' என்பதாகும்.


## இனப்படுகொலையால் பாதிக்கப்பட்டோரின் சர்வதேச நினைவு மற்றும் மரியாதை செலுத்து தினம் - டிசம்பர் 09

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது, 1948 ஆம் ஆண்டு டிசம்பர் 09 ஆம் தேதியன்று தீர்மானத்தின் மூலம் இனப்படுகொலைக் குற்றத்தைத் தடுத்தல் மற்றும் தண்டித்தல் தொடர்பான உடன்படிக்கையினை ஏற்றுக் கொண்டது.
- 1948 ஆம் ஆண்டு இனப்படுகொலை உடன்படிக்கை ஆனது, சர்வதேச சட்டத்தில் முதன் முறையாக இனப்படுகொலை குற்றத்தைச் சேர்த்தது.

- இன்று வரை, 153 நாடுகள் இந்த உடன்படிக்கைக்கு அங்கீகாரமளித்துள்ளன.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, “உலக சமுதாயத்தில் இன்றும் உள்ள சக்தி: இனப்படுகொலை குற்றத்தைத் தடுத்தல் மற்றும் தண்டனை வழங்குதல் குறித்த 1948 ஆம் ஆண்டு உடன்படிக்கையின் மரபு” என்பதாகும்.

## மனித உரிமைகள் தினம் - டிசம்பர் 10

- இந்த ஆண்டு இத்தினத்தின் 75வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- பாலினம், தேசியம், இனம், மதம் அல்லது பின்புலத்தைப் பொருட்படுத்தாமல், ஒவ்வொரு தனி நபருக்குமான அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை ஊக்குவிப்பதையும் கொண்டாடுவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 1948 ஆம் ஆண்டில் மனித உரிமைகளுக்கான உலகளாவியப் பிரகடனத்தை (UDHR) ஏற்றுக்கொண்டது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'அனைவருக்குமான சுதந்திரம், சமத்துவம் மற்றும் நீதி' என்பதாகும்.




## நோபல் பரிசு தினம் - டிசம்பர் 10

- இந்த நாள் ஆல்ஃபிரட் நோபலின் நினைவு நாளைக் குறிக்கிறது.
- இவர் மனித குலத்திற்கு உதவிய சாதனைகளுக்காக தொடர் விருது வகைகளை உருவாக்கியதற்காக புகழ் பெற்றவர் ஆவார்.
- நோபல் பரிசானது மிகவும் மதிப்புமிக்க சர்வதேச விருதுகளில் ஒன்றாக கருதப் படுகிறது.
- இயற்பியல், வேதியியல், உடலியல் அல்லது மருத்துவம், இலக்கியம் மற்றும் அமைதி ஆகியவற்றில் சிறந்த முயற்சிகளை ஆற்றியவர்களுக்கு வேண்டி இந்த விருதானது வழங்கப் படுகிறது.





## யுனிசெஃப் அமைப்பின் உருவாக்க தினம் - டிசம்பர் 11

- ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகள் நிதியம் என்பது ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் 1946 ஆம் ஆண்டு டிசம்பர் 11 ஆம் தேதியன்று நிறுவப்பட்ட ஒரு மனிதாபிமான அமைப்பாகும்.
- உலகம் முழுவதும் உள்ள ஒவ்வொரு குழந்தையின் உரிமைகளையும் பாதுகாப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- யுனிசெஃப் அமைப்பானது, அதன் முழுப் பெயர் 1953 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகள் நிதியம் என மாற்றப்பட்ட பிறகும் UNICEF என்ற அதன் முதல் பெயர் சுருக்கத்தினையே தொடர்ந்து பயன்படுத்தியது.
- இது உலகளவில் தடுப்பூசிகளை வழங்கும் மிகப்பெரிய முகமை ஆகும்.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "அனைத்து குழந்தைகளுக்கும், அனைத்து உரிமைகளும்" என்பதாகும்.

## சர்வதேச மலை தினம் - டிசம்பர் 11

- மலைகளின் முக்கியத்துவம் மற்றும் அவற்றின் சுற்றுச்சூழல் அமைப்புகளை மீட்டெடுப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மலைகள் நம் வாழ்வில் வகிக்கும் முக்கியப் பங்கையும், அவற்றைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் இந்த நாள் எடுத்துக் காட்டுகிறது.
- இந்த ஆண்டு, மலைகளின் நெகிழ் திறன் மற்றும் பருவநிலை மாற்றத்திற்கு ஏற்றவாறான தன்மை ஆகியவற்றை மேம்படுத்தும் பல நடவடிக்கைகளில் கவனம் செலுத்தப் படுகிறது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "மலைகளின் சூழல் அமைப்புகளை மீட்டெடுத்தல்" என்பதாகும்.




## பொது சுகாதாரச் சேவை வழங்கீடு தினம் - டிசம்பர் 12

- பொது சுகாதாரச் சேவை வழங்கீட்டு (UHC) திட்டத்தின் முக்கியக் கருத்தாக்கம் என்ன என்றால், ஒவ்வொருவரும் அவர்களின் இருப்பிடம் அல்லது பொருளாதார நிலையைப் பொருட்படுத்தாமல், எந்தவித நிதிச் சுமைகளையும் எதிர்கொள்ளாமல் தரமான சுகாதாரப் பாதுகாப்பு சேவையை அணுக வேண்டும் என்பதாகும்.
- 2012 ஆம் ஆண்டு டிசம்பர் 12 ஆம் தேதியன்று, ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது பொது சுகாதார நலனை (UHC) அடைவதற்கான முயற்சிகளைத் துரிதப்படுத்துமாறு உலக நாடுகளை வலியுறுத்தும் வகையிலான தீர்மானத்தை நிறைவேற்றியது.
- 2017 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் சபை இந்த நாளை அதிகாரப்பூர்வமாக அறிவித்தது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, அனைவருக்குமான ஆரோக்கியம்: நடவடிக்கை எடுப்பதற்கான நேரம் என்பதாகும்.

## சர்வதேச நடுநிலைமை தினம் - டிசம்பர் 12

- சர்வதேச உறவுகளில் நடுநிலைமையினைப் பேணுவதின் மதிப்பு குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு நிலைகளை எழுப்புவதற்காக இத்தினம் அனுசரிக்கப் படுகிறது.
- நடுநிலைமை என்பது எந்தவொரு ஆயுத மோதலிலும் பங்கேற்க வேண்டாம் என்று அரசு முடிவெடுக்கும் போது எழும் சட்ட நிலை என வரையறுக்கப்படுகிறது.
- ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தின் 2 வது சட்டப் பிரிவு ஆனது, அதன் உறுப்பினர் நாடுகள் அமைதியான வழிகளில் தங்கள் தகராறுகளைத் தீர்ப்பதற்கு என்று அனுமதிக்கிறது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2017 ஆம் ஆண்டு பிப்ரவரி 02 ஆம் தேதியன்று இந்த நாளை அறிவித்தது.

## தேசிய எரிசக்திப் பாதுகாப்பு தினம் - டிசம்பர் 14

- ஆற்றல் வளங்களைப் பாதுகாப்பதன் பெரும் முக்கியத்துவம் குறித்த தகவலைப் பரப்புவதற்கும், ஆற்றல் செயல் திறன் மற்றும் பாதுகாப்பில் இந்தியா மேற்கொண்ட சாதனைகளை வெளிப்படுத்துவதற்கும் வேண்டி இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.

- 1991 ஆம் ஆண்டு டிசம்பர் 14 ஆம் தேதியன்று, தேசிய எரிசக்திப் பாதுகாப்பு விருதுகள் ஆனது முதல் முறையாக வெற்றியாளர்களுக்கு வழங்கப்பட்டது.
- ஆற்றல் வளங்களின் பயன்பாட்டைக் குறைப்பதற்கான கொள்கைகள் மற்றும் பல உத்திகளை வகுப்பதில், சட்டப்பூர்வ அமைப்பான எரிசக்தி செயல்திறன் வாரியம் ஒரு முக்கியப் பங்கினை வகிக்கிறது.

## விஜய் திவாஸ் - டிசம்பர் 16

- 1971 ஆம் ஆண்டில் பாகிஸ்தானுக்கு எதிராக நடைபெற்ற போரில் இந்திய இராணுவம் பெற்ற வெற்றியை இந்த நாள் கொண்டாடுகிறது.
- நாட்டிற்காக உயிர்த் தியாகம் செய்த வீரர்களுக்கு இத்தினம் அஞ்சலி செலுத்துகிறது.
- அப்போதையக் கிழக்கு பாகிஸ்தான் தொடர்பான இந்தியா-பாகிஸ்தான் போர் 1971 ஆம் ஆண்டு டிசம்பர் 03 ஆம் தேதியன்று தொடங்கியது.
- 1971 ஆம் ஆண்டு டிசம்பர் 16 ஆம் தேதியன்று பாகிஸ்தானுக்கு எதிராக நடைபெற்ற போரில் இந்தியா அபார வெற்றி பெற்றது.
- இது முன்னாள் கிழக்கு பாகிஸ்தானில் இருந்து வங்காளதேசம் உருவாக வழிவகுத்தது.
- வங்காளதேசமும் இந்த டிசம்பர் 16 ஆம் தேதியை 'பிஜோய் திபோஸ்' அல்லது வெற்றி தினமாகக் கொண்டாடுகிறது.





## பாலியல் தொழிலாளர்களுக்கு எதிரான வன்முறையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான சர்வதேச தினம் - டிசம்பர் 17

- இது அமெரிக்காவின் வாஷிங்டன் மாகாணத்தில் உள்ள சியாட்டில் நகரில் வாழ்ந்த கிரீன் ரிவர் கொலையாளியால் பாதிக்கப் பட்டவர்களுக்கான ஒரு நினைவுச் சின்னமாகவும் அது குறித்த விழிப்புணர்வு தினமாகவும் இது கருதப்பட்டது.

- இந்த நாள் உலகெங்கிலும் உள்ள பாலியல் தொழிலாளர்களுக்கு எதிரான வெறுப்பு சார் குற்றங்கள் மற்றும் சமூக இழிவு மற்றும் பாகுபாடுகளை அகற்ற வேண்டியதன் அவசியம் குறித்த கவனத்தினை ஈர்க்கிறது.
- சிவப்பு நிறக் குடையானது, பாலியல் தொழிலாளிகளின் உரிமைகளுக்கான ஒரு முக்கிய அடையாளமாகும் என்பதோடு அது சார்ந்த நிகழ்வுகளுக்கு இந்தச் சின்னம் பயன்படுத்தப் படுகிறது.

## இந்தியாவில் சிறுபான்மையினர் உரிமை தினம் - டிசம்பர் 18




- பல்வேறு சிறுபான்மையினர்கள் எதிர்கொள்ளும் சவால்களை சமாளிக்க உதவுவதன் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை மேம்படுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சிறுபான்மையினர் உரிமைகள் தினமானது 1992 ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் தேதி அன்று நிறுவப்பட்டது.
- இந்நாளில், சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்தச் செய்வதற்கும் வேண்டி தேசியம் அல்லது இனம், மதம் மற்றும் மொழிசார் சிறுபான்மையினரைச் சேர்ந்த நபர்களின் உரிமைகள் தொடர்பான பிரகடனத்தை ஐக்கிய நாடுகள் சபை ஏற்றுக் கொண்டது.
- ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனத்தை ஏற்றுக் கொண்டதன் ஒரு பகுதியாக, தேசிய சிறுபான்மையினர் ஆணையத்தை (NCM) இந்தியா நிறுவியது.
- தேசிய சிறுபான்மையினர் ஆணையச் சட்டத்தின் (1992) கீழ் மத்திய அரசு தேசிய சிறுபான்மையினர் ஆணையத்தினை நிறுவியது.
- இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், ஜோராஸ்ட்ரியர்கள் (பார்சிகள்) மற்றும் சமணர்களை சிறுபான்மை சமூகங்களாக அரசாங்கம் அறிவித்தது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'பன்முகத் தன்மை மற்றும் உள்ளடக்கத்தைக் கொண்டாடுதல்' என்பதாகும்.


## சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினம் - டிசம்பர் 18

- 2000 ஆம் ஆண்டு டிசம்பர் 04 ஆம் தேதியன்று, ஐக்கிய நாடுகள் பொதுச் சபை இந்த நாளை நியமித்தது.
- 1990 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் அனைத்து புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் நல உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சர்வதேச உடன்படிக்கையினை ஏற்றுக் கொண்டதை இந்த தேதி நினைவு கூருகிறது.
- 2020 ஆம் ஆண்டில், 281 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் சர்வதேச அளவில் புலம் பெயர்ந்தோர் ஆவர்.
- 2021 ஆம் ஆண்டின் இறுதியில், 59 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் உள்நாட்டில் இடம் பெயர்ந்துள்ளனர்.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, “பாதுகாப்பானப் புலம்பெயர்வை ஊக்குவித்தல்” என்பதாகும்.

## அரபு மொழி தினம் - டிசம்பர் 18

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது, 1973 ஆம் ஆண்டின் இந்த நாளில் அதன் ஆறாவது அதிகாரப் பூர்வ மொழியாக அரபு மொழியை ஏற்றுக் கொண்டது.
- இது தினமும் 400 மில்லியனுக்கும் அதிகமான மக்களால் பயன்படுத்தப்படுகிறது.
- இந்த நாள் 2012 ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்படுகிறது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "அரபு - கவிதை மற்றும் கலைகளின் மொழி" என்பதாகும்.

## கோவா மாநில விடுதலை தினம் - டிசம்பர் 19





- 1961 ஆம் ஆண்டு போர்த்துகீசிய ஆட்சியிலிருந்து அம்மாநிலம் விடுவிக்கப்பட்டதை நினைவு கூரும் வகையில் இது கொண்டாடப்படுகிறது.

- இந்திய ஆயுதப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட 'விஜய் ராணுவ நடவடிக்கையின்' வெற்றியைக் குறிக்கும் வகையில் இது கொண்டாடப்படுகிறது.
- கோவாவில் போர்த்துகீசியக் காலனி ஆதிக்கம் 1510 ஆம் ஆண்டில் தொடங்கியது.
- சுமார் 451 ஆண்டுகளாக கோவா போர்த்துகீசிய ஆட்சியின் கீழ் இருந்தது.
- கோவா மற்றும் இரண்டு முன்னாள் போர்த்துகீசியப் பகுதிகள் கோவா, டாமன் மற்றும் டையூ ஒன்றியப் பிரதேசமாக மாறியது.
- 1987 ஆம் ஆண்டு மே 30 ஆம் தேதியன்று, கோவா பிரதேசமானது பிரிக்கப்பட்டு இந்தியாவின் 25வது மாநிலமாக கோவா உருவாக்கப்பட்டது.

## சர்வதேச மனித ஒற்றுமை தினம் – டிசம்பர் 20

- வேற்றுமையில் ஒற்றுமை என்ற கொள்கையைக் கொண்டாடுவதும், ஒற்றுமையின் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களிடம் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இந்த நாளின் நோக்கமாகும்.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2002 ஆம் ஆண்டு டிசம்பர் 20 ஆம் தேதியன்று உலக ஒற்றுமை நிதியத்தை நிறுவியது.
- 2005 ஆம் ஆண்டு டிசம்பர் 22 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபை இந்த நாளை அறிவித்தது.

## தேசிய கணித தினம் – டிசம்பர் 22





- இது சிறந்த கணித மேதை சீனிவாச இராமானுஜனின் பிறந்த நாளைக் கொண்டாடுகிறது.
- அவர் புகழ்பெற்ற இந்திய கணிதவியலாளர்களில் ஒருவராக அறியப்படுகிறார். ராமானுஜன் அவர்கள் தீர்க்க முடியாததாக விளங்கிய கோட்பாடுகளுக்கு தீர்வு கண்டார்.
- தொடர் பின்னங்கள், ரீமான் தொடர்கள், நீள்வட்ட தொகையீடுகள், மீப்பெருக்கல் தொடர்கள் மற்றும் ஜீட்டா செயல்பாட்டின் செயல்பாட்டுச் சமன்பாடுகள் ஆகியவற்றில் அவர் ஆற்றியப் பணிக்காக அவர் அறியப்படுகிறார்.


- 2012 ஆம் ஆண்டில், அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் இந்நாளை அறிவித்தார்.
- 2012 ஆம் ஆண்டு தேசிய கணித ஆண்டாகவும் அழைக்கப்பட்டது.

## குளிர்கால நீண்ட இரவு நாள் – டிசம்பர் 21

- டிசம்பர் 21 ஆம் தேதியானது வட அரைக்கோளத்தில் ஆண்டின் மிகக் குறுகிய பகல் மற்றும் மிக நீண்ட இரவு நாளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- புவி அச்சின் சாய்வு ஆனது தோராயமாக 23.4 டிகிரி உள்ள நிலையில் சூரியனிலிருந்து வெகு தொலைவில் இருக்கும் ஒரு குறிப்பிட்ட தருணம் இதுவாகும்.
- வட துருவமானது, சூரியனிலிருந்து அதிகபட்ச தொலைவில் இருக்கும் வகையிலான கோணத்தில் உள்ளது என்று பொருள் ஆகும்.
- இது புவி அரைக்கோளத்தின் மீது சூரிய ஒளியை பரவலாகப் பரவச் செய்து வானத்தின் வழியாக குறுகிய பாதையை உருவாக்குகிறது.




## தேசிய கிசான் திவாஸ் – டிசம்பர் 23



- தேசத்தின் சமூக-பொருளாதார வளர்ச்சிக்கு விவசாயிகளின் பங்களிப்பு குறித்த விழிப்புணர்வைப் பரப்புவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது இந்தியாவின் ஐந்தாவது பிரதமரான சௌத்ரி சரண் சிங் அவர்களின் பிறந்த நாளைக் குறிக்கும் நாள் ஆகும்.
- அவர் 1979 ஆம் ஆண்டு ஜூலை 28-ஆம் தேதி முதல் 1980 ஆம் ஆண்டு ஜனவரி 14-ஆம் தேதி வரை நாட்டின் பிரதமராகப் பணியாற்றினார்.
- இந்தியாவிலும் வேளாண் துறை மற்றும் விவசாயிகளின் நலனை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்கான முன்னோடிமிக்க பணிகளுக்காக அவர் அறியப்படுகிறார்.
- அவர் விவசாயிகளுக்காக பல நலத்திட்டங்களை அறிமுகப்படுத்தினார்.
- சரண் சிங் அவர்கள், 1978 ஆம் ஆண்டில் கிசான் அறக்கட்டளையை நிறுவினார்.

## தேசிய நுகர்வோர் உரிமைகள் தினம் – டிசம்பர் 24




- 1986 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டு டிசம்பர் 24 ஆம் தேதியன்று குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றது.
- இந்த நிகழ்வினை நினைவு கூரும் விதமாக இந்த நாளில் இந்த தேசிய நுகர்வோர் உரிமைகள் தினமானது கொண்டாடப்படுகிறது.
- குறைபாடுள்ள பொருட்கள், அலட்சியமான சேவைகள் (கடமை மீறல்) மற்றும் நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளிலிருந்து நுகர்வோரைப் பாதுகாப்பதற்காக நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டது.
- பாதுகாப்பு உரிமை, தேர்வு செய்யும் உரிமை, தகவல் பெறும் உரிமை, வழக்கினைக் கருத்தில் கொள்ளும் உரிமை, தீர்வு கோரும் உரிமை மற்றும் நுகர்வோர் கல்விக்கான உரிமை ஆகியவை நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் ஆறு அடிப்படை உரிமைகள் ஆகும்.
- உலக நுகர்வோர் உரிமைகள் தினமானது ஒவ்வொர் ஆண்டும் மார்ச் 15 ஆம் தேதி அன்று கொண்டாடப்படுகிறது.

## சர்வதேசப் பல்லுயிர்த்தன்மை தினம் - டிசம்பர் 29





- இந்தத் தினமானது, 1993 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த உயிரியல் பன்முகத் தன்மை மீதான ஒப்பந்ததை நினைவுகூறும் வகையில் கொண்டாடப்படுகிறது.
- 1993 ஆம் ஆண்டு முதல் 2000 ஆம் ஆண்டு வரை உலகப் பல்லுயிர் தினமானது டிசம்பர் 29 அன்று கொண்டாடப் பட்டது.
- 2000 ஆம் ஆண்டு டிசம்பர் 20 ஆம் தேதி முதல், உயிரியல் பன்முகத் தன்மைக்கான சர்வதேச தினத்தைக் கொண்டாடுவதற்கான புதிய தினமாக மே 22 நியமிக்கப் பட்டது.

# இதரச் செய்திகள்

## பாம்ப்பே நோய்


- பாம்ப்பே நோய் பாதிப்பு இருப்பதாக கண்டறியப்பட்ட இந்தியாவின் முதல் நோயாளி, சுமார் ஆறு ஆண்டுகள் பகுதியளவு கோமா நிலையில் இருந்து வந்த நிலையில் சமீபத்தில் அவர் உயிரிழந்தார்.
- பாம்ப்பே நோய் ஆனது ஒரு மில்லியன் மக்கள்தொகையில் ஒரு குழந்தையைப் பாதிக்கும் ஒரு அரிதான மரபியல் சார்ந்த நோயாகும்.
- 2010 ஆம் ஆண்டில், பாம்ப்பே நோயால் பாதிக்கப்பட்ட ஒரு குழந்தையின் தந்தையான பிரசன்னா ஷிரோல், அரிதான நோய்கள்-இந்தியா (ORDI) என்ற அமைப்பினைத் தொடங்கினார்.
- ORDI என்பது அரிதான நோய்களுக்காக அர்ப்பணிக்கப்பட்ட நாட்டின் முதல் தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஆகும்.
- பாம்ப்பே நோய் கிளைகோஜன் சேமிப்பு நோய் வகை II என்றும் அழைக்கப்படுகிறது.
- இது ஆல்ஃபா-குளுக்கோசிடேஸ் (GAA) என்ற நொதி அமிலத்தின் குறைபாட்டால் ஏற்படும் அரிய மரபணுக் கோளாறு ஆகும்.

- செல் லைசோசோம்களுக்குள் கிளைகோஜனைக் குளுக்கோஸாக சிதைப்பதில் இந்த நொதி ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது.
- பாம்ப்பே நோய்க்கு தற்போது எந்த சிகிச்சையும் இல்லை என்றாலும், நொதி மாற்றுச் சிகிச்சை (ERT) ஒரு தரமான சிகிச்சையாக உள்ளது.




## யானை எண்டோதெலியோட்ரோபிக் ஹெர்பெஸ் வைரஸ்

- பரேலி நகரில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி சபையின் - இந்தியக் கால்நடை ஆராய்ச்சி நிறுவனம் (ICAR-IVRI) ஆனது, சமீபத்தில் யானை எண்டோதெலியோட்ரோபிக் ஹெர்பெஸ்வைரசின் (EEHV) உள் வகைகளின் துல்லியமான நிலையை கண்டறிந்துள்ளதோடு அதன் உள் வகைகள் இந்தியாவில் உள்ள ஆசிய யானைகள் மத்தியில் பரவி இருப்பதையும் கண்டறிந்துள்ளது.




- ஒரு வகை ஹெர்பெஸ் வைரசான EEHV என்பது இளம் ஆசிய யானைகளில் மிகவும் ஒரு ஆபத்தான இரத்தக்கசிவு நோயை ஏற்படுத்தும்.
- இது ஹெர்பெஸ்விரிடே குடும்பத்தினைச் சேர்ந்ததாக வகைப்படுத்தப்படும் ஈரிழைகள் கொண்ட டிஎன்ஏ வைரஸ் ஆகும்.

- பெரும்பாலான யானைகளும் இந்த வைரசினைப் பரப்புகின்றன.
- EEHV வைரஸ் செயல்பாடு தூண்டப்பட்டால், யானையின் உடலினுள் அதிகளவில் இரத்தப் போக்கு (வெளிப்படையாக தெரிவதில்லை) ஏற்பட்டு உயிரிழக்கும்.
- இந்த நோய் என்பது பொதுவாக 28 முதல் 35 மணிநேரம் என்ற குறுகிய காலப்போக்கில் உயிரினைப் பறிக்கும் அளவிற்கு ஆபத்தானது.

## DRESS நோய்




- இந்திய மருந்துக் குழுமம் (IPC) ஆனது, பெருமளவில் விற்கப்படும் மெஃப்தால் (Meftal) எனப்படும் வலி நிவாரணி குறித்த பாதுகாப்பு எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.
- இரத்த வெள்ளணுவுடனான மருந்து எதிர்வினை மற்றும் உள்ளமைப்பு அறிகுறிகள் (DRESS) எனப்படும் எதிர்வினையை ஏற்படுத்தும் திறனை இந்த மருந்து கொண்டுள்ளது.
- DRESS நோய் என்பது மிகை உணர்திறன் எதிர்வினையைக் குறிப்பிடுவதற்காக தற்போது பயன்படுத்தப்படும் ஒரு தீவிர எதிர்வினை சொற்கூறு ஆகும்.
- நிபுணர்கள் இதனை 4 ஆம் வகை மிகை உணர்திறன் வினையாக வகைப் படுத்தச் செய்கின்றனர்.
- தோல் மற்றும் பிற உறுப்புகளைப் பாதிக்கும் ஒரு மிகத் தீவிர மருந்து எதிர்வினையான இதில் இறப்பு விகிதம் 10% வரை இருக்கும்.

## இந்தியாவின் 2023 ஆம் ஆண்டு கூகுள் தேடல்கள்

- சந்திரயான்-3, IPL மற்றும் G20 ஆகியவை இந்தியாவில் பிரபலமான தேடல்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ளன என்று கூகுள் தெரிவித்துள்ளது.
- உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி மற்றும் இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா இடையிலான கிரிக்கெட் போட்டிகள் பற்றிய கேள்விகள் இந்த ஆண்டு அதிக எண்ணிக்கையில் தேடப்பட்டுள்ளது.
- இந்திய தேசிய கிரிக்கெட் அணியானது உலகளவில் சிறந்த பிரபலமான கிரிக்கெட் அணியாக தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.
- கூகுளின் உலகளாவிய விளையாட்டு அணிகள் பட்டியலில் இடம் பெற்றுள்ள ஒரே கிரிக்கெட் அணி இது தான்.

- சுப்மன் கில் மற்றும் ரச்சின் ரவீந்திரர் இந்தியா மற்றும் உலக அளவில் சிறந்த பிரபலமான கிரிக்கெட் வீரர்களாக உருவெடுத்துள்ளனர்.
- ஜவான் திரைப் படமானது சிறந்த உள்நாட்டுத் திரைப்படத் தேடல் மற்றும் உலகளவில் 3வது சிறந்த பிரபலமான திரைப்படத் தேடல் என்ற மதிப்பைப் பெற்றுள்ளது.




## செயிண்ட்-பெலெக் பலகை



- வடக்கு பிரான்சின் ஆராய்ச்சியாளர்கள், சில மறைக்கப்பட்ட பண்டைய தளங்களைக் கண்டறிய முடியும் என்ற நம்பிக்கையில் ஒரு வெண்கல காலப் பாறையில் காணப் படும் மர்மமான பதிவுகளைப் பகுப்பாய்வு செய்து வருகின்றனர்.
- இந்தப் பாறை தற்போது "புதையல் வரைபடம்" என்று வெகுவாக போற்றப்படுகிறது என்ற நிலையில் இது 4,000 ஆண்டுகளாக ஆய்வு செய்யப் படாமல் உள்ளது.
- வெண்கல காலப் பாறை செயிண்ட்-பெலெக் பலகை என்று அழைக்கப்படுகிறது.
- இந்தப் பண்டைய கால வரைபடமானது தோராயமாக 30 முதல் 21 கிலோமீட்டர் அளவு பரப்பளவைக் குறிக்கிறது.
- ஆராய்ச்சியாளர்கள் இது ஒரு "புதையல் வரைபடம்" என்றும், இதனை முழுவதும் பகுப்பாய்வு செய்ய 15 ஆண்டுகள் ஆகலாம் என்றும் கூறியுள்ளனர்.

## அகராதிகளின் 2023 ஆம் ஆண்டிற்கான சிறந்த சொற்கள்




- "Hallucinate" என்பது Dictionary.com அகராதியின் 2023 ஆம் ஆண்டிற்கான சிறந்த சொல் ஆகும்.
- ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதியின் 2023 ஆம் ஆண்டிற்கான சிறந்த சொல் 'Rizz' என்பதாகும்.
- காலின்ஸ் ஆங்கில அகராதி, "AI- செயற்கை நுண்ணறிவு" என்ற சொல்லினை 2023 ஆம் ஆண்டிற்கான சிறந்த சொல்லாக அறிவித்தது.
- கேம்பிரிட்ஜ் அகராதியும் அதன் 2023 ஆம் ஆண்டிற்கான சிறந்த சொல்லாக " Hallucinate" என்ற சொல்லினை அறிவித்துள்ளது.
- மெரியம்-வெப்ஸ்டெர் அகராதி, அதன் 2023 ஆம் ஆண்டிற்கான சிறந்த சொல்லாக "authentic" என்ற சொல்லினை அறிவித்துள்ளது.

## புற்றுநோய்க்கான அக்டோசைட் மாத்திரைகள்

- அணுசக்தித் துறை (DAE) மற்றும் பெங்களூரில் அமைந்த IDRS ஆய்வகங்கள் கர்ப்பப் பை வாய் புற்றுநோய்க்கு சிகிச்சையளிப்பதற்கான அக்டோசைட் மாத்திரைகளை உருவாக்க ஒன்றாக இணைந்துள்ளன.
- அக்டோசைட் மாத்திரைகள், குறிப்பாக கதிரியக்கச் சிகிச்சையால் தூண்டப்பட்ட சிஸ்டிடிஸ் (சிறுநீரில் இரத்தம்) அவதிப்பட்டு வரும் குறிப்பாக கர்ப்பப்பை வாய் புற்றுநோய் நோயாளிகளில் குறிப்பிடத்தக்க தீர்வுகளைக் காட்டியுள்ளன.
- இது சிறுநீர்ப்பையை அறுவை சிகிச்சை மூலம் அகற்ற வேண்டிய ஒரு தேவையை நீக்குகிறது.

## இந்தியாவின் முதல் சோடியம் அயனி மின்கல தொழில்நுட்பம்

- KPIT டெக்னாலஜிஸ் என்ற ஒரு நிறுவனமானது, அதன் சோடியம் (Na) அயனி மின்கலத் தொழில்நுட்பத்தை வெளியிட்டுள்ளது.

- ❖ தற்போதைய லித்தியம் அயனி மின் கலங்களுடன் ஒப்பிடும்போது, மின்சார வாகன மின்கலங்களின் விலையை 25 முதல் 30% வரை அளவிற்குக் குறைக்கும் வகையில் இத்தொழில்நுட்பம் அமைக்கப்பட்டுள்ளது.
- ❖ இது 3000-6000 சுழற்சிகளுக்கு 80% திறன் தக்கவைப்பு மற்றும் வேகமாக மின்னேற்றம் அடையும் திறன்களை கொண்டுள்ளது.
- ❖ லித்தியம்-அயனி மின் கலங்களுடன் ஒப்பிடுகையில், சோடியம் அயனி மின் கலங்கள் வேகமாக மின்னேற்றம் செய்ய உதவும்.
- ❖ இந்த சோடியம் அயனி மின்கலத் தொழில்நுட்பம், புவியில் ஏராளமாக உள்ள மூலப் பொருட்களை முழுமையாகச் சார்ந்துள்ளது.

## கைபேசி பயன்பாடு மற்றும் விந்தணு எண்ணிக்கை




- ❖ கைபேசி உபயோகத்திற்கும் ஆண்களின் விந்தணு எண்ணிக்கை குறைவதற்கும் இடையே சாத்தியமான தொடர்பு இருப்பதை சமீபத்திய ஆய்வு ஒன்று தெரிவித்து உள்ளது.
- ❖ கடந்த 50 ஆண்டுகளில், உலக மக்களின் விந்தணுக்களின் எண்ணிக்கை சுமார் 50 சதவீதத்திற்கும் அதிகமாக குறைந்துள்ளது.
- ❖ ஒரு நாளைக்கு 20 முறைக்கு மேல் கைபேசி பயன்படுத்துபவர்களுக்கு ஒட்டு மொத்த விந்தணு எண்ணிக்கை குறைவாக இருப்பதற்கான ஆபத்து 21 சதவீதம் அதிகம்.
- ❖ கைபேசியின் குறைந்த அளவிலான கதிரியக்க அதிர்வெண் மின்காந்தப் புலங்கள் (RF-EMF) சாத்தியமான உடல்நலப் பாதிப்புகள் பற்றிய கேள்விகளை எழுப்புகிறது.

## கவரிமா வளர்ப்பிற்கான பழமையான சான்றுகள்

- ❖ மனிதர்களால் கவரிமா (காட்டு எருது) வளர்க்கப்பட்டது பற்றிய மிகப் பழமையான சான்று திபெத்திய தன்னாட்சிப் பகுதியான பாங்காவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- ❖ யர்லுங்-சாங்போ (பிரம்மபுத்ரா) நதிக்கரையில் அமைந்துள்ள பாங்காவில் வாழ்ந்த மனிதர்கள் சுமார் 2,500 ஆண்டுகளுக்கு முன்பு டாரைன் என்ற வகையைச் சேர்ந்த பசுக்களையும், காட்டு எருதுகளையும் வளர்த்தனர்.

- பாங்கா கடல் மட்டத்திலிருந்து தோராயமாக 3,750 மீட்டர் (12,300 அடி) உயரத்தில் அமைந்துள்ளது.
- காட்டு கவரி எருதுகள் என்பவை தற்போது IUCN அமைப்பினால், "பாதிக்கப்படக்கூடிய இனங்களாக" பட்டியலிடப்பட்டுள்ளன.
- காடுகளில் 7,500 முதல் 10,000 எண்ணிக்கையிலான எருதுகளே தற்போது உள்ளதாக மதிப்பிடப் பட்டுள்ளது.



## ஜாய்நகர் மோவா

- ஜாய்நகர் மோவா தயாரிப்பாளர்கள், போலி தயாரிப்புகளை கண்டறிவதற்காக என்று தங்கள் தயாரிப்புகளைப் பட்டைக் குறியீடுகள் மற்றும் விரைவுத் தகவல் குறியீடுகள் கொண்ட பெட்டிகளில் விற்பனை செய்ய உள்ளனர்.
- மோவா என்பது டிசம்பர் முதல் பிப்ரவரி மாதம் வரை, பிரித்தெடுக்கப்படும் புதிய பேரிச்சம்பழம்-பனை வெல்லத்துடன் சேர்த்து உருவாக்கப்படும் ஒரு பொறி அரிசி உருண்டையாகும்.
- கொல்கத்தாவில் இருந்து சுமார் 50 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ஜாய்நகர் நகரம் முழுவதும் ஒத்ததாக இதனைத் தயாரிக்கும் பகுதியாக உள்ளது.
- இந்த இனிப்பு வகையானது 2015 ஆம் ஆண்டில் ஜாய்நகர் மோவா என்ற புவிசார் குறியீட்டினைப் பெற்றது.



## ஆண்ட்ரியாமெலோ குகை



- மேற்கு மடகாஸ்கரில் உள்ள ஆண்ட்ரியாமெலோ குகையில் தனித்துவமான, வரலாற்றுக்கு முந்தைய காலத்தினைச் சேர்ந்த பாறை ஓவியங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.
- இந்த வியத்தகு கண்டுபிடிப்புகள் ஆனது, சில குறிப்பிடத்தக்க கலாச்சார தொடர்புகள் பற்றிய குறிப்புகளைக் கொண்டிருந்தன.
- முதலாவதாக, சில இடங்களில் சித்தரிக்கப்பட்ட காட்சிகள் தாலமிக் காலத்தினைச் சேர்ந்த (கி.மு. 300-30) எகிப்திய மதக் கூறுகளுடன் நேரடியாக இணைக்கப் பட்டுள்ளன.
- இரண்டாவதாக, சின்னங்கள் மற்றும் சுவர்களில் எழுதப்பட்ட பிற கூற்றுகள் ஆகியவற்றில் இருந்து பெறப்பட்டத் தகவல்கள் எத்தியோப்பியன் மற்றும் ஆப்பிரிக்க-அரபு நாடுகளுடனான தொடர்பைக் காட்டுகின்றன.
- இறுதியாக கண்டறியப்பட்ட அடையாளங்கள் மற்றும் கலைக் கூறுகள் போர்னியோ பகுதியைச் சேர்ந்த இரண்டாயிரமாண்டு பழமையான குகைக் கலைப் பாணியைக் குறிக்கிறது.
- மடகாஸ்கரில் காணப்பட்ட மாபெரும் அசையாக் (தேவாங்கு) கரடி , யானைப் பறவைகள் மற்றும் ஒரு பெரிய ஆமை போன்ற பல நூற்றாண்டுகளாக அழிந்து விட்டதாகக் கருதப்படுகின்ற மூன்று விலங்குகள் சித்தரிக்கப்பட்டுள்ளது.
- இது சுமார் 2,000 ஆண்டுகள் பழமையானது. அதாவது கிளியோபாட்ராவின் காலம் அல்லது அதற்கு முந்தையது ஆகும்.


## உலகின் பழமையான அறியப்பட்ட கோட்டை

- சைபீரியாவின் தொலைதூரப் பகுதியில் 8,000 ஆண்டுகளுக்கு முந்தைய உலகின் மிகப் பழமையான கோட்டையைத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் குழு ஒன்று கண்டுபிடித்துள்ளது.
- வேட்டையாடி உணவு சேகரித்து வாழ்ந்த குழுவினர், முன்பு நாம் கருதிய கால கட்டத்திற்கு முன்னதாகவே சிக்கலானப் பாதுகாப்பு கட்டமைப்புகளை உருவாக்கி உள்ளனர் என்பதை இது குறிக்கிறது.
- இந்தத் தளம் மேற்கு சைபீரியாவிலுள்ள அம்னியா நதிக்கரையில் அமைந்துள்ளது.

- ஆங்காங்கே காணப்படுகின்ற, இந்த நிலத்தடியில் அமைக்கப்படும் சுமார் 20 குழி வீடுகள் அமைந்திருந்த பள்ளங்கள் அம்னியா I மற்றும் அம்னியா II என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.



## பண்டைய கால எரிமலை வெடிப்புகளிலிருந்து உருவான மாபெரும் படிவுகள்





- மத்தியத் தரைக் கடலின் அடிப்பகுதியில் உள்ள பண்டைய எரிமலை வெடிப்புகளிலிருந்து உருவான "மாபெரும் படிவுகளை" அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- சில ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை இப்பகுதியைத் தாக்கும் பல ஆயிரம் ஆண்டு காலப் பேரழிவு நிகழ்வுகளின் சான்றுகளை இது காட்டுகிறது.
- தற்போது கண்டறியப்பட்ட பழமையான படிவு அடுக்கு சுமார் 40,000 ஆண்டுகள் பழமையானது என்ற நிலையில், அதற்கு அடுத்தப் பழைமையான படிவு சுமார் 32,000 ஆண்டுகளும், மூன்றாவது படிவு 18,000 ஆண்டுகளும் பழமையானது ஆகும்.
- இளம் (சற்று சமீபத்திய) படிவு மையமானது சுமார் 8,000 ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்டது.


- மாபெரும் படிவுகள் என்பது எரிமலை வெடிப்புகள் போன்ற பேரழிவுகரமான இயற்கை நிகழ்வுகளின் காரணமாக கடல் படுகைகளில் உருவாகும் பொருட்களின் படிவுகளைக் குறிக்கிறது.

## பன்னிறம் கொண்ட அடர் மேகங்கள்

- பன்னிறம் கொண்ட மேகம் (முத்தொளி மேகம்) ஆனது, துருவப் பகுதிகள் மற்றும் படை அடுக்கு மண்டலத்தினுள் மிகவும் குளிர்ந்த சூழ்நிலையில், சுமார் 12 முதல் 19 மைல் உயரத்தில் (சாதாரண மேகங்களை விட அதிகமான உயரத்தில்) உருவாகிறது.
- -78Cக்குக் கீழான வெப்பநிலையில் மட்டுமே உருவாகும் துருவ படை அடுக்கு மண்டல மேகங்கள் அழகான வெளிர் ஒளி கொண்டவை ஆகும்.
- சிறிய பனி படிகங்கள் மீது சூரிய ஒளி பட்டு ஒளி விலகல் நடைபெறும் போது இது உருவாகச் செய்வதோடு இந்த நிகழ்வு மேகத்திற்கு முத்தொளி போன்ற நிறங்களை அளிக்கச் செய்வதால் இது முத்துகளின் தாய் என்று அழைக்கப்படுகிறது.
- இதற்குத் தேவைப்படும் உயரம் மற்றும் வெப்பநிலையின் அளவு காரணமாக இந்த மேகம் துருவப் படை அடுக்கு மேகம் என்றும் அழைக்கப்படுகிறது.




## ஆழ்கடலில் உள்ள பெரும்பல் சுறாவின் பல்



- ஆழ்கடலில் படிமமாக்கப்பட்ட வடிவிலான பெரும்பல் சுறாவின் பல்லானது ஒரு சிறிய கடல் ஆய்வாளர் குழுவினால் கண்டறியப்பட்டுள்ளது.
- வாயிலிருந்து பிரிந்து அது விழுந்த இடத்திலேயே பல் கண்டறியப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- பெரும்பல் சுறா, மிகப் பெரிய வேட்டையாடும் இனங்களில் ஒன்றாகக் கூறப்படுகிறது.
- இது 4 முதல் 20 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு கடல்களில் சுற்றித் திரிந்ததாகக் கூறப் படுகிறது.

## ஆரோக்கியத்தின் மீது தனிமை நிலையின் தாக்கம்

- ஒரு நாளைக்கு 15 சிகரெட்டுகள் புகைப்பதற்குச் சமமான இறப்பு விளைவினை ஏற்படுத்தும் அளவிற்கு உள்ளதால், தனிமை நிலையானது ஒரு உலகளாவிய சுகாதார அச்சுறுத்தலாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- உலக சுகாதார அமைப்பின் கூற்றின் படி, இளம் பருவத்தின் கடைநிலையில் உள்ளவர்களில், தனிமை நிலையானது மனச் சோர்வு ஏற்படுவதற்கான ஒரு பெரும் அபாயத்தினை 50 சதவீதமும், கரோனரி தமனி நோய் அல்லது பக்கவாத நோய் ஏற்படுவதற்கான ஒரு அபாயத்தினை 30 சதவீதமும் அதிகரிக்கும் என்றும் குறிப்பிட்டு உள்ளது.
- மேலும், 5% முதல் 15% வரையிலான இளம் பருவத்தினர் பெரும் தனிமை நிலையில் இருப்பதாக ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன.



## இந்தியாவின் இணைய சங்கேதப் பண உடைமைப் பட்டியல் 2023

- இந்தியாவின் மொத்த இணைய சங்கேதப் பண முதலீடுகளில் சுமார் 20%க்கும் அதிகமானவை, டெல்லி (9%), பெங்களூர் (8%) மற்றும் மும்பை (5%) ஆகிய மூன்று முக்கியப் பெருநகரங்களில் குவிந்துள்ளன.
- அதிக முதலீடு செய்யப்பட்ட நகரங்களின் பட்டியலில் பாட்னாவை அந்த இடத்திலிருந்து மாற்றி, காசியாபாத் நகரமானது 10வது இடத்தைப் பிடித்துள்ளது.
- இதில் முதலீடு செய்தவர்களில் 75% பேர் 35 வயதுக்குட்பட்டவர்கள் ஆவர்.
- டாக் காயின் (DOGE), பிட்காயின் (BTC), மற்றும் ஈத்தரியம் (ETH) ஆகியவை மொத்த மதிப்பில் 26% பங்களிப்பைக் கொண்டுள்ள அதிக அளவில் முதலீடு செய்யப்பட்ட இணைய சங்கேதப் பண வகைகள் ஆகும்.
- சொலானா (SOL) இந்தியாவின் உடைமைப் பட்டியலில் சிறந்த செயல்திறன் கொண்ட இணைய சங்கேதப் பணமாக உள்ளதோடு, இது தொடங்கப்பட்டது முதல் இன்று வரையில் 633% வளர்ச்சியைக் கொண்டுள்ளது.
- டெல்லி மற்றும் ஹைதராபாத் நகரங்கள் அதிக பெண் முதலீட்டாளர்களின் பங்களிப்பைக் கொண்டுள்ளன என்பதோடு, இந்தியாவின் இணைய சங்கேதப் பண முதலீட்டாளர்களில் 9% பெண்கள் உள்ளனர்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★